# பறவை உலகம்

இந்தியா—நாடும் மக்களும்

# பறவை உலகம்

ஸலீம் அலி
லயீக் ஃபதஹ் அலி

தமிழாக்கம் :
பேராசிரியர் எம். வி. இராசேந்திரன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

முதற் பதிப்பு : 1976 (சக 1897)

இரண்டாம் அச்சு : 1985 (சக 1907)

மூன்றும் அச்சு : 1991 (சக 1913)

© ஸலீம் அலி, லியீக் ஃ பதஹ் அலி, 1967

ரூ. 18.75

COMMON BIRDS *(Tamil)*

ஊக்குவிப்பாளர் : விநியோகிப்பாளர்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,

அம்பத்தூர், சென்னை-600 098.
வெளியிட்டவர் : டைரக்டர், நேஷனல் புக் டிரஸ்ட்,
இந்தியா, ஏ-5, கிரீன் க்ர்,பார் புது டில்லி-110 016.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | xv |
| | பறவை இயலும் பறவை நோக்குதலும் | 1 |
| | இனப் பெருக்கம் | 9 |
| | இடம் பெயர்தல் | 13 |
| | பறவைகளின் விளக்கம் | 18 |
| 1. | முக்குளிப்பான்<br>Little Grabe or Dabchick | 18 |
| 2. | சாம்பல் கூழைக்கடா<br>Grey Pelican | 19 |
| 3. | வழுவாங்கி<br>Darter or Snake bird | 20 |
| 4. | நீர்க் காகம்<br>Little Cormorant | 22 |
| 5. | பெருங் கொக்கு (சாம்பல் கொக்கு)<br>Grey Heron | 23 |
| 6. | சிறு வெண் கொக்கு<br>Small Egret | 24 |
| 7. | மஞ்சள் கொக்கு (மாட்டுக் கொக்கு)<br>Cattle Egret | 25 |
| 8. | குருட்டுக் கொக்கு<br>Pond Heron or Paddy Bird | 26 |
| 9. | மஞ்சள் மூக்கு நாரை<br>Painted Stork | 27 |
| 10. | அகன்ற வாய் நாரை (அகலவாயன்)<br>Openbilled Stork | 28 |
| 11. | பெரு நாரை<br>Adjutant Stork | 29 |
| 12. | கருந்தலை அரிவாள் மூக்கன் (கருமூஞ்சிக் குருகு)<br>Black Ibis | 31 |

பக்கம்

13. துடுப்பு வாயன் (துடுப்புக் குருகு) ... 32
Spoonbill
14. செங்கால் நாரை ... 33
Flamingo
15. வரித்தலை வாத்து ... 35
Barheaded goose
16. புள்ளி மூக்குத்தாரா ... 36
Spotbill or Grey Duck
17. சிறு சிறகி ... 37
Lesser Whistling Teal
18. குள்ளத் தாரா ... 38
Cotton Teal
19. கள்ளப் பருந்து ... 40
Pariah Kite
20. கருடன் ... 40
Brahminy Kite
21. வில்லேத்திரன் குருவி ... 41
Shikra
22. வங்காளக் கழுகு ... 42
Whitebacked or Bengal Vulture
23. திருக்கழுக்குன்றக் கழுகு (கோடாங்கிக் கழுகு) ... 43
White or Scavenger Vulture
24. வைரி ... 44
Shaheen Falcon
25. செந்தலை வல்லூறு ... 45
Redheaded Merlin
26. கருங் கௌதாரி ... 46
Black Partridge
27. சாதா கௌதாரி ... 47
Grey Partridge
28. கருநெஞ்சுக் காடை ... 48
Black breasted or Rain Quail
29. புதர்க் காடை (குறுங்காடை) ... 49
Jungle bush Quail

பக்கம்

30. வெள்ளைக் காட்டுக் கோழி ... 50
Grey Jungle Fowl
31. மயில் ... 51
Common Peafowl
32. சாரஸ் நாரை ... 53
Saras Crane
33. வெள்ளை நெஞ்சு நீர்க்கோழி (சம்புக் கோழி) ... 54
White breasted Waterhen
34. மயில் கால் கோழி ... 55
Purple Moorhen
35. இந்தியப்பெரும் ஒட்டகப் பறவை ... 56
Great Indian Bustard
36. தாமிர இறக்கை இலைக் கோழி ... 57
Bronze winged Jacana
37. ஆள்காட்டிக் குருவி ... 59
Redwattled Lapwing
38. சாதாக் உள்ளான் ... 60
Common Sandpiper
39. சிறு ஆள்காட்டிக் குருவி ... 61
Little Ringed Plover
40. நத்தைக் குத்தி ... 62
Stone Curlew
41. தவிட்டுத் தலைக் கடற்புறா ... 63
Brownheaded Gull
42. ஆலா ... 64
Indian Whiskered Tern
43. மணல் கோழி ... 66
Common Sandgrouse
44. பச்சைப் புறா ... 67
Common Green Pigeon
45. மாடப் புறா ... 68
Blue Rock Pigeon
46. மணிப் புறாவும், தவிட்டுப் புறாவும் ... 69
Spotted Dove and Red Turtle Dove

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 47. | சிவப்பு ஆரக்கிளி<br>Rose Ringed Parakeet | ... | 70 |
| 48. | குயில்<br>Koel | ... | 71 |
| 49. | செம்பகம் (செம்போத்து)<br>Crow Pheasant | ... | 72 |
| 50. | புள்ளி ஆந்தை<br>Spotted Owlet | ... | 73 |
| 51. | கொம்பு ஆந்தை<br>Great horned Owl | ... | 74 |
| 52. | சாவுக் குருவி<br>Indian Nightjar | ... | 75 |
| 53. | முன்னி வௌவால்<br>House Swift | ... | 76 |
| 54. | நீல மீன் கொத்தி<br>Small Blue Kingfisher | ... | 77 |
| 55. | கரும் புள்ளி மீன் கொத்தி<br>Pied Kingfisher | ... | 79 |
| 56. | பஞ்சிட்டான்<br>Small Green Bee-eater | ... | 80 |
| 57. | பனங் காடை<br>Indian Roller or Blue Jay | ... | 81 |
| 58. | கொண்டலாஞ் சிருவடி<br>Hoopoe | ... | 82 |
| 59. | மலபார் மரத்தலையன்<br>Malabar Pied Hornbill | ... | 83 |
| 60. | கன்னுன் பறவை<br>Coppersmith or Crimson breasted Barbet | ... | 84 |
| 61. | மராட்டிய மரங் கொத்தி<br>Mahratta Woodpecker | ... | 86 |
| 62. | மொட்டை வால் குருவி (காசிக் கட்டி)<br>Indian Pitta | ... | 87 |
| 63. | கொண்டை வானம்பாடி<br>Crested Lark | ... | 89 |

பக்கம்

64. சப்பட்டைக் குருவி ... 90
Blackbellied Finch Lark
65. செம்பிட்டத் தில்லான் ... 91
Redrumped Swallow
66. சாம்பல் பருந்துக் குருவி ... 92
Grey Shrike
67. மாம்பழக் குருவி, மஞ்சள் பாலா ... 93
Blackheaded Oriole
68. கரிக் குருவி ... 94
Black Drongo
69. சாதா மைனு ... 95
Common Myna
70. கறுப்பு வெள்ளை மைனு ... 97
Pied Myna
71. வீட்டுக் காக்கை—காகம் ... 97
House Crow
72. மாங்குயில் ... 99
Tree pie
73. செஞ்சிட்டு ... 99
Scarlet Minivet
74. அயோரா குருவி ... 100
Common Iora
75. பச்சைக் குருவி ... 101
Jerdon's Chloropsis
76. சிவப்பு மீசைக் கொண்டைக் குலாத்தி ... 102
Red Whiskered Bulbul
77. கொண்டைக் குலாத்தி ... 103
Redvented Bulbul
78. விசிறிவால் குருவி ... 104
Fantailed Flycatcher
79. வால் முனைத்தான் குருவி ... 105
Paradise Flycatcher
80. மஞ்சள் கண்ணி ... 106
Yellow-eyed Babbler

பக்கம்

81. காட்டுப் பூணியல் ... 107
Jungle Babbler
82. சிறு பூணியல் ... 108
Common Babbler
83. வாலாட்டிச் சிட்டு ... 109
Ashy Wren-Warbler
84. தையல் பாக்குச் சிட்டு (தையல் பறவை) ... 110
Tailor Bird
85. குண்டுக் கரிச்சான் (ராபின்) ... 111
Magpie Robin
86. சாமா ... 112
Shama
87. (கறுப்பு வெள்ளை) புதர்ச் சிட்டு ... 112
Pied Bushchat
88. இந்திய ராபின் ... 113
Indian Robin
89. மலபார் விசிலடிச்சான் குருவி (அக்காக் குருவி) ... 114
Malabar Whistling Thrush
90. வெள்ளைச் சிட்டு ... 115
Grey Tit
91. பாக்குச் சிட்டு ... 116
Chestnutbellied Nutthatch
92. சிறு வாலாட்டிக் குருவியும் கறுப்பு வெள்ளை வாலாட்டிக் குருவியும் ... 117
Grey Wagtail and Large pied Wagtail
93. தவிட்டுக் குருவி ... 119
Tree Pipit
94. பூக் கொத்திக் குருவி ... 120
Tickell's Flowerpecker
95. ஊதாச் சிட்டு ... 121
Purple Sunbird
96. வெள்ளைக் கண்ணி ... 122
White-eye

பக்கம்

97. அடைக்கலங் குருவி ... 123
House Sparrow
98. தூக்கணாங் குருவி ... 124
Baya Weaver Bird
99. செஞ்சில்லை ... 126
Red Munia
புள்ளியுடைச் சில்லை ... 126
Spotted Munia
100. ரோஜாச் சிட்டு ... 127
Common Indian or Hodgson's Rosefinch
101. கருந்தலைக் காட்டுச் சில்லை ... 128
Black headed Bunting
செந்தலைக் காட்டுச் சில்லை ... 128
Red headed Bunting

# முன்னுரை

முதுகெலும்புள்ள உயிர்ப் பிராணிகளை வெப்ப இரத்தப் பிராணிகள், குளிர் இரத்தப் பிராணிகள் என்று இரு பெரும் வகுப்புகளாகப் பிரிக்கலாம். முந்தியவை, வெளியிலுள்ள வெப்ப தட்ப மாறுதல்களால் பாதிக்கப்படாமல் தம் உடலின் வெப்பத்தை எப்போதும் ஒரே நிலையில் வைத்துக் கொள்ளும் இயல்புடையன. குளிர் இரத்தப் பிராணிகளாகிய மீன், தவளை, பாம்பு, பல்லிகள், ஆமை, முதலை, ஆகியவையோ, சுற்றுப்புற வெப்ப மாற்றங்களை ஒட்டி, தம் இரத்தத்தின் வெப்ப நிலையை மாற்றிக் கொள்ளும் இயல்புடையவை. வெப்ப இரத்தப் பிராணிகளை, குட்டி போட்டுப் பால் கொடுக்கும் **பாலூட்டிகள்** (மனிதன், குரங்கு, திமிங்கலம், வௌவால், ஆடு மாடுகள், புலி, பூனை இன்னும் பல), முட்டையிட்டு அடைகாக்கும் **பறவைகள்**, என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பாலூட்டிகளின் உடல் மயிர்களால் மூடப்பட்டிருக்கும். ஆனால் பறவைக்கோ சிறகு உடலை மூடியிருக்கும். பறவையின் உடல் வெப்ப நிலை, பாலூட்டிகளுடையதைவிட அதிகமாக இருப்பது, அவை முட்டைகளை உடல் வெப்பத்தாலேயே அடைகாத்துப் பொரிக்கச் செய்ய வசதியாயிருக்கிறது.

பறவை என்றால் என்ன என்று சுருங்க வரையறுப்பது எளிது. உலகிலேயே சிறகு உடைய பிராணி பறவை தான். மெலெழுந்த வாரியாகப் பார்த்தால் பறவைகளுள் அதிக வேற்றுமை இல்லாதது பால் தோன்றும். ஆனால் கூர்ந்து நோக்கினால், வேறுபாடுகள் மிக்க, ஒன்றுக்கொன்று மிகவும் மாறுபடுகிற பல்வேறு வகைகளின் தொகுப்பே பறவைகள், என்பது விளங்கும். நமது பெருவிரல் பருமனையுள்ள மிகச் சிறிய ரீங்காரப் பறவை (Humming bird) யிலிருந்து, குதிரையளவு உயர்ந்து நிற்கும் மிகப் பெரிய தீக்கோழி வரையில், இந்தத் தொகுப்பில் அடக்கம். ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து செல்லக்கூடிய பறவைகள் உண்டு; பெங்க்வின் போன்ற தரையிலிருந்து எழும்ப இயலாத பறவைகளும் உண்டு. நுணுக்கமான கூடுகள் வேயும் தூக்கணாங்குருவி போன்ற பறவைகள் உண்டு; வெறும் தரையிலேயே முட்டையிடும் பறவைகளும் உண்டு. கழுகு போன்ற சில பறவைகள் மாமிசந் தின்னிகள் ; சில தானியங்

களையே உணவாகக் கொள்பவை; காகம் போன்ற சில பறவைகளோ, உலோகத்தைத் தவிர வேறு என்ன கிடைத்தாலும் தின்னும். சில பறவைகள் வருடத்தில் இரு முறை இடப்பெயர்ச்சி செய்கின்றன; நீண்ட பயணங்களை மேற்கொள்ளுகின்றன. சில, ஒரு தோப்பைச் சுற்றியே தமது வாழ்நாள் முழுவதையும் கழித்துவிடும். கோழி போன்ற சில பறவைகளின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்த உடனேயே இரை தேடக் கற்றுவிடுகின்றன. காகம், கிளி, பருந்து போன்றவை குஞ்சுகளைக் கூட்டிலேயே வைத்து, உணவளித்துப் பல வாரங்கள் பராமரிக்கின்றன. மனிதனையே அண்டிப் பிழைக்கும் பறவைகள் உண்டு. தம் பிரதேசங்களை மனிதர்கள் வந்து ஆக்கிரமித்துக் கொள்ளும்போது விலகிச் சுருங்கி மறைந்து போகிற பறவை இனங்களும் உண்டு. இப்படி மாறுபட்ட குணாதிசயங்களின் ஒரு தாறுமாறான குவியலாகக் காணப்படும் பறவை இனத்தை, எந்த அடிப்படையை வைத்து நாம் வரிசைப்படுத்துவது ?

முதன் முதலாக அரிஸ்டாட்டில் தான் உயிரினங்களை வகைப் படுத்த முயற்சித்தார். அவருக்குப் பின் இந்தத் துறையில் சிறப்பாகப் பணியாற்றியவர் பதினெட்டாம் நூற்றாண்டில் ஸ்வீடன் தேசத்தில் வாழ்ந்திருந்த லின்னேயஸ் என்ற இயற்கை இயல் ஆய்வாளர். இன்று அவருடைய முறையே, சிறிது மாறுதல்களுடன், உலகெங்கும் பின்பற்றப்பட்டு வருகிறது.

பறவைகளை, அவற்றின் அமைப்பு, வளர்ச்சி ஆகியவற்றிலுள்ள மாறுதல்களை ஒட்டி 27 வம்சங்களாகப் பிரித்துள்ளார்கள். உதாரணமாக, **சிட்டு வம்சம்** (passeri formes) எனப்படுவது, மரங்களில் வாழும் பறவைகளைக் கொண்டது. இவ்வம்சத்தைச் சேர்ந்த பெரும்பாலான பறவைகள், நம்மில் பலர் அடிக்கடி பார்த்து வருபவை. **நாரை வம்சத்தில்,** (Ciconii formes) எல்லா வகையான கொக்குகளும் நாரைகளும் அடக்கம். **வாத்து வம்சம்** (Anseri formes) நீந்தும் பறவைகளாகிய அன்னம், வாத்து, தாரா போன்றவற்றைக் கொண்டது.

இத்தகைய ஒவ்வொரு வம்சமும், பல்வேறு குடும்பங்களாக மேலும் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு குடும்பமும், தனக்கே உரிய சில பிரத்தியேக இயல்புகளைக் கொண்டது. உதாரணமாக, **சிட்டு வம்சம்** ஈ உண்ணிகள் (Muscicabidae), காகங்கள் (Corvidae) தேன் சிட்டுகள் (Nectariniidae) போன்ற சுமார் 40 குடும்பங்களைக் கொண்டது. ஒவ்வொரு குடும்பமும், பரிணாம வரிசையில் ஒன்றையொன்று நெருங்கியிருப்பவையும், ஒத்த பழக்க வழக்கங்களையுடைய

வையுமான பறவைகளைக் கொண்டது. இந்தப் பழக்கவழக்கங்களை ஒட்டியே அவற்றின் அலகுகள், கால்கள், சில சமயங்களில் இறக்கைகள், ஆகியவற்றின் வடிவமும், மொத்த உடலமைப்பும் அசைவுகளும், அமைகின்றன. புதிதாகக் காணும் ஒரு பறவையை அதன் அமைப்பை வைத்து, இன்ன குடும்பத்தைச் சேர்ந்தது என்று இலகுவாகக் கூறிவிடலாம். வல்லூறு, பருந்து ஆகியவற்றின், மேல் அலகு கூர்மையாகவும் கீழ்நோக்கி வளைந்தும் இருக்கும். இதேபோல, தேன் சிட்டுகளின் அலகு மலர்களிலிருந்து தேனை உறிஞ்ச வசதியாக ஊசிபோல் நீண்டு, சிறித்து, சற்றே வளைந்து இருக்கும். அலகுகளும், உடலமைப்பும், பழக்க வழக்கங்களும், ஒரு பறவை எந்தக் குடும்பத்தைச் சேர்ந்ததென்று தீர்மானிக்கப் போதுமானவை. ஆயினும், சில சமயங்களில் ஒத்த அலகு அமைப்பு, உடலமைப்பு ஆகியவை வெவ்வேறு குடும்பங்களில் காணப்படலாம். உதாரணமாக, கிளி, பருந்து இரண்டுமே வளைந்த அலகுகளை உடையனவாயிருந்தாலும், அவை இரண்டும் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவை. ஒன்று பழத்தைக் கொத்துவதற்காகவும், இன்னொன்று மாமிசத்தைக் கிழிப்பதற்காகவும், தன் அலகைப் பயன்படுத்துகிறது. இதே போல, அமெரிக்க ரீங்காரப் பறவையையும் நம் நாட்டுத் தேன் சிட்டும் வெளித் தோற்றத்திலும் பழக்க வழக்கங்களிலும் ஒன்று போலத் தோன்றினாலும், அவையும் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவையே.

குடும்பத்துக்கு அடுத்த கீழ்ப் பிரிவு, இனத்தொகுப்பு (Genus) எனப்படுவது—நெருங்கிய தொடர்புள்ள பல இனங்களின் தொகுப்பு. லின்னேயஸ் இனத் தொகுப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். பறவைகளுக்கு விஞ்ஞானப் பெயர் சூட்ட இன்று கடைப்பிடிக்கப்படும் முறையை முதலில் வகுத்தவரும் அவர்தான். இந்த விஞ்ஞானப் பெயர் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதல் பாகம் இனத் தொகுப்பையும், இரண்டாவது பாகம் அந்தக் குறிப்பிட்ட பறவையையும் குறிப்பது. உதாரணமாக, காக்கை என்றால் நாட்டுக் காக்கை, அண்டங் காக்கை என்று இரு வகைகள் வருகின்றன. இவற்றை உள்ளடக்கிய இனத் தொகுப்பின் பெயர் கார்வஸ் (Corvus). கார்வஸ் ஸ்ப்ளெண்டென்ஸ் (Corvus splendens) என்பது நாட்டுக் காக்கையின் விஞ்ஞானப் பெயர். கார்வஸ் மாக்ரோரிங்கோஸ் (Corvus macrorhynchos) என்பது அண்டங் காக்கையின் பெயர். ஒரு இனத் தொகுப்பிலுள்ள எல்லாப் பறவைகளுக்கும், பெயரின் முதல் பாகம் ஒரே மாதிரியாக இருக்கும்.

பறவைகளின் பாகுபாட்டில் இறுதியான பிரிவு இனம் (Species) எனப்படுவது. ஒரு பறவையை எளிதில் அடையாளம் கண்டு கொள்ள உதவுவது அதனுடைய இனம்தான். அண்டங் காக்கை ஓர் இனம், மணிப்புரு ஓர் இனம், மாடப்புரு மற்ருேர் இனம். ஓர் இனத்தைச் சேர்ந்த பறவைகளே தமக்குள் உறவு கொண்டு முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கும். இருவேறு இனங்களைச் சேர்ந்த பறவைகள் கூடுவதும் முட்டையிடுவதும் இல்லை. சூழல் வேறு பாட்டாலும் வெப்ப நிலை வேறுபாட்டாலும் வெவ்வேறு இடங்களில் வாழும் ஒரே இனத்தின் பறவைகளுள் நிறம், பருமன் இவைகளில் சற்றே வேற்றுமைகள் இருக்கலாம். உலகின் வட பாகங்களில் வாழும் பறவை இனங்கள் தென் பாகங்களில் வாழும் அதே இனப் பறவைகளைவிடச் சற்று பெரிதாக இருக்கும். ஈரமான பிரதேசத்தில் உள்ளவைகள் வறண்ட பிரதேசங்களில் வாழ்பவைகளைவிட கருத்த நிறமுடையவையாயிருக்கும். ஒரே இனத்தினுள் இத்தகைய மாற்றங் கள் அதிகமாவும் தொடர்ந்தாற் போலவும் காணப்பட்டால், அந்த இனம் மேலும் கீழ் இனங்களாகவோ (Sub-species) நாட்டுவர்க்கங் களாகவோ (Geographical race) பிரிக்கப்படலாம். ஆனல் இந்தக் கீழ் இனங்களும் வர்க்கங்களும் தமக்குள் எப்படி வேண்டுமானலும் கூடி இன விருத்தி செய்யக் கூடியவை; ஒரே இனமாகக் கருதப்பட வேண்டியவை.

இவ்விதம் ஒவ்வொரு பறவையையும் அதன் வம்சத்திலிருந்து தொடங்கி, குடும்பம், இனத்தொகுப்பு, இனம் என்று பாகுபடுத்திக் கொண்டு போகலாம். இன்று உலகில் 8650 இனப் பறவைகள் இருக்கின்றன என்று கணித்திருக்கிருர்கள். இவை 27 வம்சங் களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முதல் வம்சம் முக்குளிப்பான் வம்சம். இது பறவைகளிலேயே பரிணும வளர்ச்சியில் மிகவும் கீழே யுள்ளதாகக் கருதப்படுவது. மற்ற வம்சங்கள், பரிணும வளர்ச்சிக் கேற்ப இந்த வம்சத்தின் மேல் அடுக்கிக்கொண்டு போகப்படு கின்றன. இவ்வாறு சிட்டு வம்சம் இறுதியாக வைக்கப்பட்டுள்ளது. இந்த வம்சங்களுக்குள்ளும் வெவ்வேறு இனங்கள் பரிணும அடிப் படையில் தாழ்ந்தது, உயர்ந்தது எனக் கிரமப்படுத்தப்படுகின்றன. இதில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. சிலர் சிட்டு வம்சத்தில் காகத்தை முதலில் வைப்பார்கள். சிலர், காட்டுச் சிட்டுகளை முதலில் வைப்பார்கள்.

இந்தியாவில் இன்று 1200 பறவை இனங்கள் இருக்கின்றன. இவை இருபது வம்சங்களின், 75 குடும்பங்களின் பிரதிநிதிகள்.

எண்ணிக்கையளவில் மட்டுமல்லாது வகையளவிலும் இது மிக அதிகமானது; பெருமை கொள்ளத்தக்கது. நம் நாட்டில் பல தரப்பட்ட சீதோஷ்ண நிலைகள் இருப்பதே இதன் காரணம். நூற்றுக் கணக்கான பறவை இனங்களின் தேவைகளைத் திருப்தி செய்யவல்ல பலவகைப் பிரதேசங்கள் இங்கே உள்ளன; அடர்ந்த காடுகள், அடர்த்தியில்லாத காடுகள், திறந்த வெளிகள், சாகுபடிக்குட்பட்ட நிலங்கள், கடற்கரைகள், ஆற்றுப் படுகைகள், உயர்ந்த மலைகள், கடற்பாறைக் குன்றுகள். ஒரு புறம் ஈரமும் கதகதப்பும்; ஒரு புறம் இமயத்தின் அடர்ந்த பனி; ஒரு புறம் ராஜஸ்தானின் வறண்ட பாலைவனம்; ஒரு புறம் மலைப் பிரதேசங்களின் இதமான குளுமை.

உலகெங்கிலுமுள்ள பறவை இனங்களின் பிரதிநிதிகள் இந்தியாவில் உள்ளன. சில, ஆண்டு முழுவதும் இங்கேயே வசிப்பவை. சில, குளிர்மாதங்களின்போது மட்டும் இடப்பெயர்ச்சி மேற்கொண்டு இங்கு வருபவை. அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பிரத்தியேகமான சில பறவை வம்சங்களும் குடும்பங்களும் மட்டும் நம் நாட்டில் காணப்படுவதில்லை. பெங்க்வின் போன்ற தென் துருவப் பிரதேசங்களுக்கே உரிய சில பறவைகளும் இங்கு கிடையாது.

# பறவையியலும் பறவை நோக்குதலும்

பிரிட்டிஷார் வருவதற்கு முன் இந்தியாவில் பறவை ஆராய்ச்சியே கிடையாது எனலாம். பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்ப காலந்தொட்டே ஆங்காங்கே பறவைகளைச் சேகரித்தலும் பாகு படுத்தலும் நடைபெற்று வந்ததென்ருலும் (முக்கியமாக பட்டாளத் திலும் உள்நாட்டு உத்தியோகங்களிலும் இருந்த பல பிரிட்டிஷ் காரர்கள் இவ்வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்), இந்தியாவில் முறை யான பறவை ஆராய்ச்சி டி. சி. ஜெர்டன் என்பவர் 'இந்தியப் பறவைகள்' என்ற தலைப்பில் 1862-64-ல் வெளியிட்ட நூலுக்குப் பின்னர் தான் தோன்றிற்று. டாக்டர் ஜெர்டன் ராணுவ வைத்திய ராக இருந்தவர். நம் நாட்டின் பல பாகங்களில் பல வருடங்கள் தங்கி ஆங்காங்குள்ள பறவைகளை வெகு ஆவலுடன் ஆராய்ந்து வந்தவர். அவருடைய நூல் அவருடையவும், அவருக்கு முன் பறவைகளை ஆராய்வதில் முனைந்து நின்ற பிரையன் ஹாட்சன், எட்வர்டு பிளைத், என்பவர்களின் ஆய்வுகளையும் திரட்டித் தந்தது. ஹாட்சன் நேபாள தேசத்தில் பிரிட்டிஷ் பிரதிநிதியாகவும், பிளைத் ஏஷியாடிக் சொசைட்டி என்ற நிறுவனத்தின் கல்கத்தா பொருட் காட்சிசாலையில் பிராணி பாதுகாப்பாளராகவும் இந்தியாவுக்கு வந்தவர்கள்.

ஜெர்டனுக்கு முன்பு மட்டுமல்ல, அண்மைக்காலம் வரை, இந்தியப் பறவை ஆராய்ச்சியாளர்களுக்கு, பறவைகளை வேட்டைக்காரர்கள் உதவியுடன் சேகரிப்பதும், பாகுபடுத்திக் காட்சி சாலைகளில் வைப்பதும்தான் பெரிய வேலையாக இருந்தன. பலவிதமான பறவை களைப் பற்றி அதிகமாக அறியப்படாத அக்காலத்தில், இவ்வித வேலைகள் தான் தேவைப்பட்டன. பொது மக்களிடம் பறவைகளை மறைந்திருந்து பார்த்து அவற்றின் இயல்புகளை அறிந்து கொள்ளும் ஆர்வமோ, அல்லது அவற்றின் கவர்ச்சியில் ஈடுபாடோ எழ வில்லை. நல்ல பைஞுக்குலர்களோ அல்லது படங்களுடன் கூடிய புத்தகங்களோ இல்லாதது அதற்கு ஒரு காரணம் எனக் கூறலாம். இவையின்றிப் பறவைகளைப் பாகுபடுத்திக் கூறுவது

கடினமாக இருந்தது. மேலும் பொருட்காட்சிச் சாலைகளைச் சேர்ந்த பிராணி நூலார், மறைந்து நின்று பறவைகளை ரசிப்பது சிறுபிள்ளைத் தனமான பொழுதுபோக்கு என்றும், சோம்பேறிப் பணக்காரர்களுக்கே உரியது என்றும், விஞ்ஞான முக்கியத்துவம் அற்றது என்றும் எண்ணினர். எனவே, பல ஆண்டுகளாக மாதிரிப் பறவைகளைச் சுடுவதும், முட்டைகளைச் சேகரித்து வைப்பதும்தான் பறவை ஆராய்ச்சியாளர்களின் வேலையாக இருந்தது. ஜெர்டனின் நூல் ஒரு நவீன சகாப்தத்தையே தோற்றுவித்தது. அவரது எளிய விளக்கக் குறிப்புகள், விஞ்ஞானியல்லாத சாதாரண மக்களும் பறவைகளை அடையாளங் கண்டுகொள்ள உதவின. இப்புத்தகம் பறவை ரசிகர்களுக்கு ஒரு உற்சாகத்தைக் கொடுத்தது மட்டுமின்றி, இயற்கை ஈடுபாடுடையவர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரிக்கச் செய்தது.

இந்தியப் பறவை ஆராய்ச்சியில் இரண்டாவது கட்ட முன்னேற்றம் எனக் குறிப்பிடக் கூடியது ஆலன் அக்டேவியன் ஹியூம் என்னும் சிறப்புமிக்க பிரிட்டிஷ் சிவில் சர்வீஸ் அதிகாரியின் மூலம் ஏற்பட்டது. இவர் பறவை ஆராய்ச்சியில் மிகவும் பெயர் பெற்றவர் மட்டுமல்ல, இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு அடிகோலிய இந்திய நேஷனல் காங்கிரசின் அமைப்பாளருள்ளும் ஒருவர். ஹியூம் நாடு முழுவதிலும் பல்வேறு பாகங்களிலிருந்து வரும் வேட்டையாடும் இயற்கை ரசிகர்களால் சூழப்பட்டிருப்பார். அதனால் அவருடைய செல்வாக்கால் நல்ல விதத்தில் பறவை ஆராய்ச்சி வளர ஆரம்பித்தது. அவர்களை அவர் பறவைத் தோல்களைப் பதனிட்டுப் பாதுகாத்து வைக்கவும் சூழ்நிலைக் குறிப்புகள் எழுதி வைக்கவும் ஊக்குவித்து வந்தார். பல பறவைகளைக் கண்டு பிடித்தவுடன் 'ஸ்ட்ரே ஃபெதர்ஸ்' (சிதறிக் கிடக்கும் சிறகுகள்) என்ற தலைப்பில் அவர் ஆரம்பித்து வைத்த இந்தியப் பறவை ஆராய்ச்சி கழகத்தின் சஞ்சிகையில் அவற்றைப் பற்றிய குறிப்புகள் எழுதி வந்தார். 1872 முதல் 1888 வரை வெளியான இந்தச் சஞ்சிகையின் இதழ்கள் இந்தியப் பறவைகள் பற்றிய பல அரிய தகவல்களைக் கொண்டு, இத்துறையில் ஆராய்ச்சிகள் நடத்துவோருக்கு மிகவும் பயனுள்ளவையாக விளங்குகின்றன.

1889 முதல் 1898 வரை வெளியான **பிரிட்டிஷ் இந்தியாவின் பிராணிகள் (Fauna of British India)** தொடரில் வந்த பறவைகளைப் பற்றிய நான்கு தொகுப்புகள், அடுத்த முன்னேற்றத்துக்கு அடிகோலியவை. இவை ஈ.டபிள்யு. ஓட்ஸ், டபிள்யு.டி.ப்ளாண் ஃபோர்ட்

என்ற இருவரால் எழுதப்பட்டவை. இருவரும் திறமை மிக்க பறவை ஆராய்ச்சியாளர்கள் என்ருலும், ஒருவிதத்தில் அமெச்சூர்கள். ஒருவர் பொது மராமத்து இலாகாவில் இஞ்சினியராகவும், மற்ருெருவர் அரசாங்கத்தில் நில இயல் ஆய்வாளராகவும் பணியாற்றி வந்தவர்கள் : ஹியூம் சேகரித்து எழுதி வைத்தவைகளை யெல்லாம் ஒன்று திரட்டியதுடன், பிரிட்டிஷ் இந்தியா என்று அழைக்கப்பட்ட பிரதேசத்தின் பல்வேறு பாகங்களிலும் கிடைத்த ஆராய்ச்சிகளையும் சேகரித்து, நவீன முறையில் பாகுபடுத்தி, தம் தொகுப்புகளில் இடம் பெறச் செய்தார்கள். சிந்து, காஷ்மீர், அஸ்ஸாம், வங்காளம், இன்றைய பங்களா தேசம், பர்மா, அந்தமான், நிக்கோபார், இலங்கை முதலிய பாகங்களின் பல பறவைகள் ஜெர்டன் காலத்தில் ஆராயப்படாமல் இருந்தன. இவை யாவும் ஃபாளு என்றழைக்கப்பட்ட இத்தொகுப்பின் முதல் பதிப்பில் இடம் பெற்றன. அதனுல் பறவை ரசிகர்களுக்கு இது ஒரு பெரும் வரப்பிரசாதம் போலாயிற்று. ; பறவை ஆராய்ச்சியையும் வேகமாக முன்னேறச் செய்தது. அடுத்துப் பறவைகளைப் பற்றிய செய்திகளை அவ்வப்போது கொடுத்து வந்தது பாம்பே நாச்சுரல் ஹிஸ்ட்டரி சொஸைட்டியின் காலாண்டுச் சஞ்சிகைதான். இன்றும் இச்சஞ்சிகை தன் சேவையைத் தொடர்ந்து வருகிறது; இந்தியப் பறவைகளைப் பற்றி ஆராய்வோர் புதிய தகவல்களை அறிந்து கொள்ளவும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் ஓர் இன்றியமையாத சாதனமாக விளங்குகிறது.

1920வது ஆண்டின் இறுதியில் ஃபாளுவை விரிவு படுத்திப் புதிதாகப் பதிப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இப்பதிப்பு நான்கு தொகுதிகளுக்குப் பதில் எட்டு தொகுதிகளைக் கொண்டதாயிருந்தது ; இதைத் தயாரிக்கப் பத்தாண்டு காலம் தேவைப்பட்டது. இப்பணியை மேற்கொண்ட ஸ்டுவர்ட் பேக்கர் என்பவரும் பறவை ஆராய்ச்சித் துறையில் ஒரு அமெச்சூர் தான். அஸ்ஸாமில் போலீஸ் அதிகாரியாகப் பணி புரிந்த இவர் அங்குள்ள பறவைகளை ஆராய்வதையும் முட்டைகள் கூடுகள் ஆகியவற்றைச் சேகரிப்பதையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தவர். இந்தப் புதிய தொகுதிகள் முந்தைய ‘ஃபாளு’வைவிட தரத்திலும் அளவிலும் மிக மேன்மையானவை. இவை மேநாட்டுப் பாணியை ஒட்டி நமது ஆய்வுக்களை மிக நவீன முறையில் வகைப்படுத்தித் தருகின்றன; எங்கெங்கு இந்தியப் பறவை ஆராய்ச்சிகளில் இடைவெளிகள் காணப்படுகின்றன என்பதையும் தெளிவாகக் காட்டினமையால் மேலும்

ஆராய்ச்சி முன்னேற வாய்ப்புக் கிடைத்தது. அதை நாம் பயன் படுத்தியுள்ளோம்.

புதிய 'ஃபானு' தொகுதிகள் பிரசுரமானதையடுத்த 35 ஆண்டு களில், இந்தியப் பறவைகளைப் பற்றி மிக விரிவான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுவரை ஆய்வுக்குட்படாத பல பிரதேசங்களில், பல புதிய பறவை இனங்களைப் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இவ்வேலையில் ஈடுபட்டவர்களுள் அதிகமான வர்கள் பிரிட்டிஷ்காரர்கள் தாம். என்றாலும், 1947-ல் இந்தியா சுதந்திரமடைந்த பின் இந்தியர்களும் மேலும் மேலும் அதிகமாக இத்துறையில் ஈடுபாடுடையவர்களாகி வந்திருக்கின்றனர். இருவர் பெயர்கள் இக்காலத்தில் பிரபலமானவை: ஹ்யூவிஸ்லர் (Hugh Whistler), மற்றும் கிளாட் டைஸ்ஹர்ஸ்ட் (Claude B. Ticehurst).

விஸ்லர், போலீஸ் அதிகாரி. மற்றவர் மருத்துவர். டைஸ்ஹர்ஸ்ட் முதல் உலக மகாயுத்த காலத்தில் இன்றுள்ள மேற்கு பாகிஸ்தான் பிரதேசத்தில், வெவ்வேறிடங்களில் பிரிட்டிஷ் படையில் மருத்துவ அதிகாரியாக வேலை பார்த்தார். அக்காலத்தில்தான் இந்தியப் பறவைகளைப் பற்றி அறியும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. இருவரும் புதிய 'ஃபானு' தொகுப்புகள் வெளி வருவதற்கு முன்பும், குறிப்பாக அதன் பின்பும், பறவைகளைப் பற்றிய பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டனர்.

இன்று பறவைகளின் தோல் சேகரிப்பது அவசியமல்ல. ஏற் கெனவே ஏராளமாகச் சேர்த்தாகிவிட்டது. மிக அபூர்வமாகக் காணப்படும் பறவைகளின் தோல்களே பொருட்காட்சிக்குத் தேவைப் படுகின்றன. பாகுபடுத்தும் கலைக்குத் தேவையான இந்தியப் பறவைகள் பல, உலகின் பெரிய பொருட்காட்சிச் சாலைகளில் ஏற் கெனவே உள்ளன. ஆராய்ச்சியாளர்களுக்கு அவை உதவுகின்றன. இன்றுள்ள தேவை பொருட்காட்சி சாலைகளையும் ஆய்வு சாலைகளை யும் விட்டு விட்டுப் பறவைகளை அவற்றின் இருப்பிடங்களிலேயே படிப்பது தான். அதாவது அவற்றின் பழக்க வழக்கங்கள், கூடு கட்டும் முறைகள், தூண்டுதல்களுக்கு ஏற்ப அவை தரும் மாறுதல்கள், இனப் பெருக்கம், இனக் கூட்ட எண்ணிக்கைகளின் திடீர் அதிகரிப்பு, இவை போன்ற சூழல் ஆராய்ச்சியே, பறவைகளின் உணவும், உணவுப் பழக்கங்களும் எவ்வாறு மனிதனுக்கு உதவியாக அல்லது இடைஞ்சலாக இருக்கின்றன என்று காட்டும். இவ்வித ஆராய்ச்சிகளே இன்றைய இந்தியாவுக்கு உண்மையான தேவைகள். காடு நிறைந்த, ஜனத்தொகை மிகுந்த விவசாய

நாடான நமது இந்தியா, அடிக்கடி உணவுப் பற்றுக்குறையினுல் தவிக்கிறது. அத்தகைய நாட்டிற்கு இந்த ஆராய்ச்சி மிகவும் முக்கியமும் தேவையும் ஆகும். இந்தத் தகவல் வெறும் தோல் சேகரித்து வைப்பட தால் கண்டு பிடிக்கக்கூடியது அல்ல.

பறவை இனங்களின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை முறை, இவை எவ்வாறு மற்றப் பிராணிகளுடன் தொடர்பு கொண்டுள்ளன, என்ற ஆராய்ச்சிகள் மிகக் கடினமானவை; நிறைய நேரம் எடுத்துக் கொள்பவை. இந்தியாவின் ஒரு சில பறவைகளின் வாழ்க்கைத் தகவல்களே இதுவரை அறியப்பட்டுள்ளன; அதுவும் மேலோட்ட மாகத்தான். பல பறவைகளின் பழக்க வழக்கங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் அரைகுறையாகவும் ஆரம்ப நிலையிலுமே உள்ளன. தேவையான நம்பிக்கையான தகவல்கள் இத்துறைக்கு முற்றிலும் புதியவர்களிடமிருந்துகூடக் கிடைக்கலாம். இவை சில சமயங் களில் பறவைகளின் வாழ்க்கை வரலாறுகளை கோர்க்க மிகவும் பயனுடையனவாகலாம்.

பறவைகளைப் பார்த்துப் படித்து ரசிப்பதின் முதற்படி ஒரு இடத்தில் வாழும் பறவைகளைப் பார்த்த மாத்திரத்தில் தவருது இனஞ் சுட்டிக் காட்டும் அறிவு. இந்த அறிவு இல்லையெனில் மேலே செல்வது கடினம். பறவையைப் பார்த்து, ரசிப்பதற்கு மூன்று முக்கிய கருவிகள் தேவை. 1. பைனுக்குலர் என்னும் தொலைநோக்கி 2. குறிப்புப் புத்தகம், 3. பறவைகளைக் கண்டு பிடிக்கும் கைநூல்.

$8 \times 30$ அல்லது $7 \times 50$ அளவில் உள்ள பைனுகுலர் மிகவும் எற்றது. அது தூக்கிச் செல்ல முடியாதபடி அதிக கனமானதாக இருக்கக் கூடாது. ஆனுல் நல்ல தூரத்தில் இருக்கும் பறவைகளைத் தெளிவாக, நெருக்கத்தில் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். பறவை யினங்களைப் படித்து ரசிப்பவர் முதலில் . சில நாட்களாவது உடனுக்குடன் பார்த்துத் தெரிந்து கொள்ளும் துணைநூல் ஒன்றை உபயோகிக்க வேண்டும். இந்தப் புத்தகம் இவ்விதம் தெளிவு பெற உதவுமென நம்புகிரேம். விஸ்லரின் 'இந்தியாவின் சாதாரணப் பறவைகளின் கைநூல்' (Popular Handbook of Indian Birds), மற்றும் சலீம் அலியின் 'இந்தியாவின் பறவைகள்,' இவ்வாறு உதவக்கூடிய வேறு இரு புத்தகங்கள். இறுதியில் கூறிய புத்தகம் நிறைய வர்ணப் படங்களுடன் பறவைகளின் சரியான பருமனையும் உடலமைப்பையும் கூறுவதால் பறவைகளை இலகுவாக இனஞ் சுட்ட உதவுகிறது.

ஒரு பறவையை இனஞ் சுட்ட வேண்டுமானால் நாம் பார்த்த பறவையின் பருமன், நிறம் இவை மனதில் நிற்க வேண்டும். நாம் பார்த்தது வெள்ளையும் கறுப்பும் கலந்த ஒரு சிறு பறவை என்று வைத்துக் கொள்வோம். எந்தப் பாகம் வெள்ளை — தலையா? இறக்கையா? வாயா அல்லது அடிப் பாகமா? அதன் அலகின் உருவம், நிறம் இவற்றை உடனே கூர்ந்து பார்த்துக் கொள்ள வேண்டும். அதுபோலவே அதன் காலின் நீளம், வாலின் அமைப்பு, தலையில் கொண்டை அல்லது எழும்பிய சிறகுகள் இவை எல்லாம் உடன் நோக்கிப் பதிய வைத்துக் கொள்வது அவசியம். ஒரு பறவை திடீரென இலைகளுக்குள் மறைந்து பறந்து விடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்போது அப்பறவையின் தோற்றம் பற்றிய எல்லா விவரங்களையும் நாம் கவனித்திருக்க மாட்டோம். எனவே ஒன்றிரண்டு முக்கியமான பண்புகளை மட்டுமே மனதில் பதித்துக் கொள்ள முயற்சிப்பது எப்போதும் நல்லது. சுருங்கச் சொல்லின், ஒரு பறவை கறுப்பு சிவப்பு நிறமாயிருந்தது, சற்று மர நிறமும் கலந்திருந்தது, என்று சொல்வதைவிட, அது மைனாவின் பருமன் இருந்தது, அதன் கால் சிவப்பாக இருந்தது, என்று ஞாபகப்படுத்திக் கொள்வது அதை இலகுவில் இனஞ்சுட்ட உதவி யாக இருக்கும். நாம் ஞாபகத்தில் பலவற்றையும் வைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கலாம். ஆனால் இரண்டு மணி நேரத்தில் பல நுண்ணிய குறிப்புகள்—நிறங்களின் பரப்பு, அவற்றின் கலப்பு போன்றவை—மனதை விட்டே மறைந்துவிடும். அதனால் உடனேயே குறிப்பு எழுதிக் கொள்வது மிக அவசியம். எப்பொழுதும் குறிப்புப் புத்தகமும் எழுது கருவியும் நம்முடன் இருத்தல் அவசியம்.

ஒரு பறவையை வெகுநேரம் கவனிக்க வாய்ப்பு கிடைத்தால் அதைப் பற்றிய பல குறிப்புகளையும் உடனே குறிப்பு ஏட்டில் குறித்துக் கொள்வது உசிதம். இக்குறிப்பில் பின் சொல்பவைகள் இடம் பெறவேண்டும். 1. பறவையின் பருமன் (இது நமக்குத் தெரிந்த பறவைகளுடன் ஒப்பிட்டு எழுதப்படலாம். எடுத்துக் காட்டாக "மைனா அளவு, அல்லது மைனாவைவிடச் சற்று பெரிது"). 2. பொதுவான நிறம். 3. குறிப்பிட்ட நிறங்கள், குறிப் பிட்ட இடங்களில். 4. அலகின் அளவு, வடிவம், நிறம், 5. கால் களின் அமைப்பு, நிறம். 6. வாலின் அமைப்பு, நிறம். 7. கழுத்தின் நீளம், நிறம். 8. (கூடுமானால்) கண்களின் அளவு, அமைப்பு, நிறம் முதலியன. 9. பறவை எங்கு காணப்பட்டது (தரையிலா?

கிளையிலா ? நீரிலா ? எவ்வித நிலத்தில் ? இலைகளுக்குள்ளா ? அது என்ன செய்து கொண்டிருந்தது ? போன்ற குறிப்புகள். 10. வேகமாக ஒரு படம் வரைந்து கொள்ள வேண்டும். இதில் எவ்வளவு நுணுக்கமாகக் கண்டவைகளைச் சேர்க்க முடியுமோ அவ்வளவுக்கு நலம். சில பறவைகள் தமக்கே உரிய விசேஷ பாணியில் பறப்பனவாகவோ, தத்துவனவாகவோ இருந்தால் இத்தன்மைகளை நிச்சயம் குறித்துக்கொள்ளவேண்டும். இவை அவற்றின் இனச் சுட்டலை இலகுவாக்கும். பறவையின் கூப்பிடு குரல் அல்லது பாடுந்தன்மை மற்றொரு அடையாளமாகும். ஆனால் இது எல்லாப் பறவைகளிலும் சுலபமாக எழுதக் கூடியதல்ல.

ஆயினும் ஏதோ ஒரு சிறு சாடை காட்டி விட்டாலும் அது அப்பறவையை இனஞ்சுட்டிக் கொடுக்க உதவலாம். எடுத்துக் காட்டாகச் சொல்வோம்—ஒரு நீண்ட விசில், குவாக், குவாக் என்னும் ஒலி, அல்லது பறக்கும் போது கிளிக் என்னும் ஒலி இவைகள் பறவையினங்களை வேறுபடுத்திக் காட்டுவதுடன் குறிப்பாக இன்ன பறவையாக இருக்கும் என்று சுட்ட உதவும். பறவையைக் கண்ட இடத்தின் தன்மை, கண்ட தேதி, இவையும் முக்கியமாகக் குறிப்பேட்டில் இடம் பெற வேண்டும். ஏனெனில் சில தேதிகளை வைத்து, சில ' இடம்-பெயர் ' பறவைகளைச் சுட்டி விடலாம். அல்லது இதுவரை நாம் கண்டு பழக்கமில்லாத சில அடைகாக்கும் காலங்களின் சிறகு நிறங்களாகவே அதைக் கண்டுகொள்ள வகை செய்யலாம்.

புத்தகங்களும் படங்களும் பறவைகளின் நிறங்களைத் தனியாகக் காட்டினாலும் முதல் முதல் பறவை பார்ப்பவர்கள் எல்லா நிறங்களையும் கண்டு கொள்வதில்லை. அதற்குப் பழக்கம் தேவை. பறக்கும் பறவைகளையும் மரத்தில் தாவித் தாவி அலையும் பறவைகளையும் ஒரு பார்வையில் முழுமையாகக் காணமுடிவதில்லை. மிகப் பிரகாசமான சூரிய வெளிச்சத்திலும், சில குறிப்பிட்ட கோணங்களிலிருந்தும், சில நிறங்கள் வேறு விதமாகக் காட்சியளிக்கலாம். அதனாலேயே நிறங்களை மட்டும் வைத்துப் பறவைகளை இனஞ்சுட்ட நினைக்காமல் வேறு ஒன்றிரண்டு பண்புகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அலகு, கால், கொண்டை, வால், இவற்றின் நிறம், அளவு முதலியனவும் குறித்துக் கொள்ளப்படவேண்டும்.

சிறிது பழக்கப்பட்ட பின் ஒரு பறவையைப் பார்த்த மாத்திரத்தில், அது தெரியாத பறவையாக இருந்தாலும் கூட, இன்ன குடும்பத்தை சார்ந்தது, என்று சொல்லி விட முடியும். எடுத்துக்காட்டாக நீண்ட

கழுத்தைப் பின் வளைத்து வைத்துப் பறக்கும் பறவை என்றால் அது கொக்கு இனம், தடித்து கூர்மையான நீண்ட அலகுடைய சிறு பறவை என்றால் அது மீன் கொத்தியினம், என்று கூறிவிடலாம். அது போலவே வைரி அல்லது வேட்டாளி இனப்பறவை, கிளி ஆகியவற்றின் அலகை வருணித்தாலே போதும்; அவை இன்ன இனத்தைச் சார்ந்தவையாக இருக்கும் என்று சொல்லிவிட முடியும். சில பறவை இனங்களை பறக்கும் வகையை வைத்தே கண்டு பிடித்து விடலாம். பறவை பார்த்துப் பழக்கப்பட்டவர்கள் புதிய பறவைகளையோ அல்லது அபூர்வமான பறவைகளையோ இனஞ் சுட்ட வேண்டின் பாம்பே நாச்சுரல் ஹிஸ்ட்டரி பொருட்காட்சி சாலைக்கோ அல்லது கல்கத்தா அகில இந்திய சர்வே பொருட்காட்சியகத்துக்கோ சென்று அங்குள்ள சேகரிப்புடன் ஒத்துப் பார்க்கலாம்.

ஒரு பறவை கூடு கட்டியிருப்பதைக் கண்டு விட்டால் பறவை ஈடுபாடுடையவர்களுக்கு அது பெரும் வரப்பிரசாதம் போல் தோன்றும். கூட்டைத் தொடாமலேயே மறைந்து இருந்து அதில் இருக்கும் பறவையை நன்றாகக் கவனிக்க முடியும். அதன் குஞ்சு அல்லது முட்டையை எடுத்துப் பார்க்கத் தூண்டும் ஆசையை வெல்ல வேண்டும். பறவை முட்டையையோ அல்லது குஞ்சையோ தொட்டால் தாய்ப் பறவை அவற்றைத் தள்ளிவிடும் என்று நினைப்பது தவறு. ஆனால் அவ்வாறு எடுப்பதால் குஞ்சுக்கோ அல்லது முட்டைக்கோ சேதம் ஏற்படலாம். காயமடைந்த பறவையை எடுக்க வேண்டும் என்றால் அதன் இறக்கைகளை நமது உள்ளங்கையில் சேர்த்து, பெருவிரலையும் மூன்றாவது விரலையும் அதன் கழுத்தைச் சுற்றி வளைத்து, மெதுவாகப் பிடிக்கவேண்டும். சில சிறிய பறவைகள் சற்றே அதிகமாக நெஞ்சில் விரல் அழுந்தினால் கூட இறந்துவிடக்கூடும், எனவே மிக எச்சரிக்கையுடனிருத்தல் அவசியம். ஒரு பறவையைச் சோதித்துப் பார்க்க எண்ணினால் மேற்கூறியவாறு கையில் எடுத்த பின் உள்ளங்கையில் அதை மலர்த்தி வைத்துக் கொள்ளலாம். விடும்போது பழைய நிலைக்கு அதைக் கொண்டு வந்து பறக்க விட்டு விடலாம்.

பறவையைப் பார்ப்பதில் ஈடுபடுகிறவர்கள் எல்லோருமே புதிய சாதனைகளை உண்டு பண்ணிவிட முடியும் என்று நினைப்பது தவறு. அது சாத்தியமல்ல. ஆனால் பலநாள் பறவை பார்ப்பதில் ஈடுபட்ட பிறகு பறவைகளின் பால் ஏற்படும் நெருக்கமும் ரசிக்கத் தன்மையுமே ஒரு நிலையான பரிசுபோல் ஆகி, மனதுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கிறது.

# இனப் பெருக்கம்

எல்லாப் பறவைகளுக்குமே ஒவ்வொரு ஆண்டும் முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரித்து குஞ்சுகளைப் பாதுகாத்துக் கொண்டு வருவது ஒரு பெரும் வேலை. இவ்வேலையில் ஈடுபடும் பறவைகள் வெகுதூரம் இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லனவாயின் இப் பொறுப்பு மிகவும் சிரமமானது மட்டுமல்ல, ஆபத்து நிறைந்ததுங்கூட எனலாம். பறவைக் குடும்பம் கூடு கட்டியிருக்கும்போது தான் அது ஆபத்து நிறைந்த ஒரு கட்டத்தில் இருக்கிறது எனலாம். எதுவும் நடக்கலாம். கூடே பிய்த்தெறியப் படலாம். குஞ்சுகளோ அல்லது முட்டைகளோ திருடப் படலாம். தாய்ப் பறவைகளே ஆபத்துக் குள்ளாகலாம். மேலும் இக்காலத்தில்தான் அது இரை அதிகமாகத் தேடவேண்டும். தனக்கு மட்டுமல்ல, வளரும் குஞ்சுகளுக்கும் தகுந்த அளவு உணவு தேவை. அதனால் உணவு தாராளமாகக் கிடைக்கும் காலத்திலேயே அவை கூடு கட்ட ஆரம்பிக்கின்றன. எடுத்துக் காட்டாக மழைக்காலம் ஆரம்பிக்கையில் நெல்லைக்கருகில் முன்நடைப்பிலோ, அல்லது வேடந்தாங்கலிலோ கூடு கட்டும். நீர்க் காகம், கூழைக் கடா, நாரை, கொக்கு இவைகளைப் பாருங்கள். அடை மழை பெய்யலாம்; காற்று உய்ய் என்று ஓசையுடன் கிளைகளை அசைத்தாட்டலாம்; ஆயினும் இதனால் வரும் ஆபத்துக் களைவிட உணவு இல்லாவிடில் வரும் ஆபத்தை நினைத்து, இப் பறவைகள் அருகிலுள்ள தடாகங்களிலும் நீர்நிலைகளிலும் மீன்கள் பலுகிவரும் இக்காலத்தையே விரும்பிக் கூடுகட்டுகின்றன. குளிர் நாடுகளில் வெப்பமான கோடை நாட்களே குஞ்சுகளுக்கு உணவு தாராளமாக கிடைக்கும் காலம். அதனால் அங்குக் கூடு கட்டுபவை அக்காலத்தைத் தெரிந்து கொள்ளும். ஒரே இடத்திலேயே பலவிதப் பறவைகள் சற்று முன்பின் கூடுகட்டுவதைக் காணலாம். அது அவை உண்ணும் உணவின் தன்மையைச் சார்ந்திருக்கும்.

ஒவ்வொரு இனமும் தனக்கு அதிகமான அளவு உணவு கிடைக்கும் காலத்தையும் குறைந்த அளவே சேதம் விளைவிக்கும் காலத்தையும் கூடுகட்டத் தெரிந்து கொள்ளும். சில பறவைகள் காலநிலை மோசமாக இருப்பின் கூடுகட்டுவதைப் பிந்திப் போடுவதும் உண்டு. எடுத்துக் காட்டாக கச் வளைகுடாவில் குஞ்சு பொரிக்கும் செங்கால்

நாரைகள் சில ஆண்டுகளில் மழையின் கொடுமையால் கூடு கட்டுவதே இல்லை.

கூடு கட்டும் பருவம் நெருங்க நெருங்கச் சில பறவைகள் தங்களது பழைய இறகுகளைக் களைந்து விட்டு அழகிய பலநிறப் புதிய ஆடைகளை அணிந்து கொள்வதுமுண்டு. மாடுகளின் பின் அலையும் வெள்ளைக் கொக்கு முட்டையிடுங் காலம் நெருங்குகையில் ஒருவித ஆரஞ்சு மஞ்சள் நிறமாகத் தோன்றுவதைக் காணலாம். சில பறவைகள் இத்தருணத்தில் பாடத் தொடங்கும், அல்லது வழக்க மாகவுள்ள கூப்பிடு தொனியுடன் சில அதிகப்படியான ஒலிகளை யாவது சேர்த்துக்கொள்ளும். சப்பட்டைக் குருவி என்னும் வானம் பாடியைப் பார்த்தால் இது நன்ருகப் புலப்படும். ஆண் பறவை ஒரு நீண்ட விசில் அடித்துக் கொண்டு செங்குத்தாக ஐம்பது அடிக்கும் மேல் உயரப் பறக்கும். பின் சற்று சாய்வாக இறங்கி வந்து பெண்முட்டையிட்டு அடைகாத்துக் கொண்டிருக்கும் கூட்டின் அருகில் வந்து நிற்கும். இவ்வாறு பாடும், அல்லது கத்தும் பறவைகள் ஒரு குறிப்பிட்ட முக்கியமான எண்ணத்துடனேயே செய்வதாக இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. முன்பெல்லாம் பறவை பாடுகிறது என்ருல் அது இனக் கலவிக்காகச் செய்கிறது என்று நினைத்தோம். ஆனுல் இது மட்டுமல்ல, ஒவ்வொரு இனமும் தான் வாழும் இடத்தின் எல்லையை நிர்ணயிப்பதற்கும் வேறு பறவைகள் அங்கு தலையிடாமல் இருப்பதற்கும்கூட இப்பாடல்கள் அல்லது ஒலிகள் உதவுகின்றனவாம். ஒருவித ஒலியும் எழுப்பத் தெரியாத ஆண் நாரைகள் கூட தங்கள் அலகுகளை அடித்து ஒலி எழுப்பு கின்றன. தங்கள் கூடு இருக்கும் எல்லைக்குள் வேறு பறவைகள் நுழைந்துவிடக் கூடாது என்றே இச்செயல்.

அநேக பறவைகளில் இனக் கலவி ஆட்டம் இருக்கும். ஆண் பல வகையிலும் ஆடியும் பாடியும் பெண்ணைச் சுற்றிப் பலமுறை கூவியும் தனது திறமையை எடுத்துச் சொல்வதுண்டு. பனங்காடை தன்னையே நோக்கி நிற்கும் பெண் பறவைக்கு முன் ஆகாயத்தில் பறந்து பறந்து கரணம் அடிக்கும். கிளிகளோ மாற்றி மாற்றி ஒற்றைக் காலில் நின்று கரகம் ஆடுவது போல் காட்டும். மயிலின் ஆட்டத்தை ரசிக்காதவர் யார்? மாடப்புருவின் கூவலைக் கேளாதவர் யார்? சில பறவைகள் தங்களது அழகு நிறங்களை விரித்துக்காட்டிய வண்ணம் பெண் முன் நிற்குமாம். ஆண் தூக்கணுங் குருவியோ கூடு கட்டு வதில் தனக்கு நிகர் யாரெனக் காட்டுவது போல் பெண்ணிடம் கூடு கட்டிக் காட்டும். சில பறவைகள் ஒரு புழுவையோ அல்லது

பழத்தையோ கொண்டு வந்து பெண்ணுக்குக் காணிக்கை செலுத்துமாம். கூடல் அழைப்பில் இது ஒருவகை. இவ்விதம் தரும் காணிக்கைகளைப் பெண் பறவைகள் விரும்பிப் பெற்றுக் கொள்ளும்; ஆண் பறவையின் இந்த மனப்போக்கைச் சாதகமாக்கிக் கொண்டு, பல சுவையான பதார்த்தங்களைக் கேட்டுப் பெறும்.

கூடலுக்கு அடுத்தது கூடு கட்டுதல். பெண் மட்டுமோ அல்லது ஆணும் பெண்ணும் சேர்ந்தோ கூடு கட்டும். பொதுவாக அவைகள் வாழும் சுற்றுப் புறங்களை ஒட்டியே கூடுகள் அமையும். நீர்க் காகம், நீர்க்கோழி, போன்ற நீர்வாழ் பறவைகள் நீர்க்கரைகளிலும் கூடு கட்டும். கழுகு உயரப் பறக்குமாதலின் உயரமான செங்குத்தான பாறைகளைக் கூடு கட்டத் தேர்ந்தெடுக்கும். மரங்களில் வாழும் பறவைகள் இலைகளுக்கு இடையே கூடுகட்டும். காடை, கௌதாரி போன்ற தரையில் வாழும் பறவைகள் தரையிலேயே கூடு கட்டும். எனினும் இவ்விதிக்கும் விலக்குகள் உண்டு. பஞ்சிட்டான் குருவி தரையில் வாழ்வதில்லை. ஆனால் அது ஒரு மேடான மணல் தரையைத் தேர்ந்தெடுத்து, நீண்ட வளைக்குள் கூடு கட்டும். அநேக வாத்து வகைகள் மரங்களில் கூடுகட்டுகின்றன.

கூட்டின் வடிவிலும் அமைப்பிலும் எவ்வளவு வேறுபாடுகள்! தரை வாழ் பறவைகளில் சில தரையை மேலாகக் கிளறிவிட்டு முட்டையிடுகின்றன. பெங்க்வின் கூழாங் கற்களுக்கு இடையில் தான் முட்டையை இடுகின்றது. நேர்மாறாக தூக்கணாங் குருவி மிக ஆடம்பரமானதும், பாதுகாப்பானதுமான கூடு கட்டுகின்றது. சில பறவைகள் மரப் பொந்திலும், வேறு சில மண் பொந்திலும் கூடு கட்டுகின்றன. தற்காப்புக்காகவே பல பெரிய நீர்ப் பறவைகள் கூட்டமாகக் கூடுகட்டி வாழ்கின்றன. ஆனால் அவற்றைவிட பல மற்ற மிகச் சிறிய பறவைகளாகிய தேன் சிட்டு, பாக்குச் சிட்டு அடைக்கலாங் குருவி, குண்டுக் கரிச்சான் போன்றவைகள் தனியாகவே கட்டுகின்றன. இவற்றில் பல கூடுகள் பளிச்சென்று பார்ப்பதற்குத் தெரிவதில்லை. இலை கிளையோடு ஒத்து அமைந்து, பறவைக்குப் பாதுகாப்புத் தருகின்றன. இவ்வாறு தனித்து அவை கட்டுவதற்கு ஒரு விளக்கம் கூற முடியும். சிறு பறவைகள் வெகு தூரம் பறந்து இரைதேடச் செல்ல முடியாது. அதனால் தங்கள் கூட்டுக்கு அருகிலேயே அவை போதுமான அளவு இரை கிடைக்கும் வகையில் நெருக்கம் இன்றி, போட்டியின்றி வாழவிரும்பலாம். பெரிய பறவைகள் வெகு தூரம் பறந்து சென்று குளங் குட்டைகளில் கூட்ட

மாகவே மேய்கின்றன. அவை இரைதேடுவதில் போட்டியிருப்பதையும் பொருட்படுத்துவதில்லை.

அடைகாக்கும் வேலையும் குஞ்சுகளுக்கு உணவளிக்கும் பொறுப்பும் பொதுவாக ஆண் பெண் பறவைகளுக்குள் பகிர்ந்து கொள்ளப் படுகின்றன. ஆனால் இனத்துக்கு இனம் இவ்வேலைகளின் பாகுபாடு வேறுபடுகின்றது. சில பறவைகளில் சரிபாதியாக இவ்வேலைகள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. சில இனங்களில் (இலைக் கோழி, உள்ளான்) ஆண் அதிக பளுவை ஏற்றுக் கொள்கிறது. எதுவாயினும் குஞ்சு பொரித்த பின் பறவைகளுக்குக் கடின உழைப்பு காத்திருக்கிறது. சிறு குஞ்சுகள் தினம் அவற்றின் நிறையைப் போல் இரு மடங்கு உண்ணும். தாய்ப்பறவைகள் சூரிய உதயம் முதல் மறைவு வரை இடைவிடாது இரை கொண்டு கொடுத்த வண்ணமாகவே இருந்தும் கூட குஞ்சுகள் திருப்தி அடைவதில்லை.

கூட்டில் குஞ்சுகளின் வாழ்க்கை அபாயம் நிறைந்ததே. இறுதியாகப் பொரிக்கும் குஞ்சு மற்ற குஞ்சுகளைவிட பலம் குறைந்ததாகவே இருக்கும். அதற்குப் போதிய உணவும் கிடைப்பதில்லை. மற்ற குஞ்சுகளால் மிதித்து நசுக்கப்படலாம். அல்லது கூட்டை விட்டே ஒதுக்கித் தள்ளிவிடப்படலாம். வெளியிலிருந்து வரும் ஆபத்துக்களும் உண்டு. பூனை, ஓணான், பல்லி, பாம்பு, எலி போன்ற பிராணிகளாலும், காகம் போன்ற பறவைகளாலும், காற்று, கல், மழை ஆகியவற்றாலும் பெரும் ஆபத்து விளையக்கூடும். இதனாலேயே பல பறவை இனங்கள் அடிக்கடி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தும் தொகை எண்ணிக்கையில் பெருக்கமில்லாமலேயே இருக்கின்றன. எனவே இலகுவில் விபத்துக்குள்ளாகும் இனப் பறவைகள் ஏராளமாக முட்டை இடுகின்றன, அல்லது ஓராண்டில் ஒரு தடவைக்கு மேல் இக்காரியத்தில் ஈடுபடுகின்றன. (வாத்துகள், பாடும் சிறு பறவைகள்). ஒரு கூட்டிலுள்ள முட்டைகளோ குஞ்சுகளோ எல்லாம் அழிந்து விட்டதும் பறவைகள் துக்கங் கொண்டாடுவதில் காலம் போக்குவதில்லை. உடனே புதிய கூடு கட்டவும் முட்டை இடவும் தொடங்குகின்றன. இனப்பெருக்கம் ஒரு பெரும் இயற்கைத் தூண்டுதல். அதனால் எல்லாவித தடைகளையும் மீறி இனப் பெருக்கம் செய்வதில் பறவைகள் முனைந்து நிற்கும்.

# இடம் பெயர்தல்

பறவை உலகத்தில் ' இடம் பெயர்தல் ' வியப்புக்குரிய ஒரு செயல். இதன் காரணங்களை எவ்வாறு விளக்கினும் இன்னும் விளக்கம் பெருத பல அம்சங்கள் கொண்டது, இப்பரம இரகசியம். ஆண்டுக்கு இரு முறை இலையுதிர் காலத்தும் இலேதுளிர் காலத்தும் பல்லாயிரக் கணக்கில் பலவிதப் பறவைகள் வடக்கும் தெற்குமாக சில மைல்கள் முதல் பல ஆயிரம் மைல் தூரத்துக்கப்பால் வரை இடப் பெயர்ச்சி செய்கின்றன. பரந்த கடல்களுக்கு மேலும் உயர்ந்த மலைகளுக்கு மேலும் இப்பயணம் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட இடத்தை அவை அடைகின்றன. இப்பயணம் மேற்கொள்ள அவற்றைத் தூண்டுவது எது? ஏன் இவ்வித ஆபத்துக்கள் நிறைந்த பயணம்? எந்த மார்க்கங்களில் போகவேண்டும், எவற்றின் வழி திரும்பவேண்டும், என்று எப்படித் தெரிகின்றது? இக்கேள்வி களுக்கு விடைகள் தரப் பலர் முயன்றிருக்கின்றனர். எனினும் எல்லா வற்றிற்கும் திருப்தியான பதில்கள் இன்னும் கிடைக்கவில்லை. பறவை களைப் பிடித்து வளையங்கட்டி விடுதல், சோதனைச் சாலைகளில் ஆராய்ச்சி நடத்தல், இவற்ருல் பல உண்மைகளை இன்று அறிந்திருக் கின்ரேம். எனினும் அடிப்படைக் கேள்விகளுக்கு முழுத் திருப்தி தரும் பதில் இன்னும் கிட்டவில்லை.

பறவைகளின் இடப்பெயர்ச்சியின் முக்கிய இயல்பு, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு பிரதேசத்திலிருந்து மற்ருெரு குறிப்பிட்ட பிரதேசத்துக்குப் போய்த் திரும்பி வருதல். வரும் நேரம், இடம் முதலியவை சிறிதும் மாறுவதில்லை; திட்டவட்ட மாகச் சொல்லக்கூடியதாக இருக்கின்றன. பறவைகள் எந்த இடத்தில் இருந்து கிளம்பியதோ கிட்டத்தட்ட அதே இடம், தோட்டத்திற்கு, பல ஆயிரம் மைல்கள் கடந்து திரும்பி வருகின்றன.

ஏன் சில இனப் பறவைகள் மட்டும் இடம் பெயர்கின்றன? என்பது ஒரு கேள்வி. இந்தப் பறவைகளுக்கு இடப் பெயர்ச்சி இயற்கையுடன் ஏற்படும் போராட்டத்தில் வெற்றியடைய அவசிய மாக உள்ளது, என்பதே பதில். சில பறவை இனங்களில் ஒரு கூட்டத்தில் ஒரு பகுதி மாத்திரமே இடம் பெயர, மற்ற பகுதி அங்கேயே இருப்பதுவும் உண்டு. முக்குளிப்பான், துடுப்புக் குருகு

இவை இவ்வகையைச் சார்ந்தவை. வட கோளத்தில் (பூமத்திய ரேகைக்கு வடக்கு) இலையுதிர் கால இடம் பெயர்தல், கூடு கட்டி இருக்கும் இடங்களிலிருந்து, வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும், மலை உச்சிகளிலிருந்து கீழ் நோக்கியும் இருக்கும். தென் கோளத்தில் பனிஉறையும் காலத்தில் கடுங் குளிரிலிருந்து தப்பவே இடப்பெயர்ச்சி மேற்கொள்ளப்படுவதால், நேர்மாறான திசையில், தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பறவைகள் இடம் பெயரும். திரும்பவும் அவற்றின் சொந்த நாடு குளிர் நீங்கி வெப்பமடைய ஆரம்பித்ததும் அவை வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் புறப்படும். திரும்ப அவைகள் வந்து சேரும்போது தகுந்த வெப்பம் திரும்ப வர, மரஞ் செடிகள் பூத்து, பூச்சி புழுக்களும், தானியங்களும் தாராளமாக உற்பத்தியாகி, பறவைக் குடும்பத்துக்குப் போதிய உணவு கிடைக்கும். வெப்ப காலத்தின் இறுதிக்குள், குஞ்சுகள் நன்றாகத் திடமடைந்து தானாக இரை தேடும் வன்மை பெற்று விடுகின்றன. குளிர் காலம் தொடங்குவதற்குள் குஞ்சுகள் தெற்குப் பயணத்துக்குத் தயாராகி விடுகின்றன. சிலவகைப் பறவைகள் குறைந்த அளவு நாட்களே குஞ்சு பொரிக்கும் இடங்களில் செலவழிக்கும். மத்திய ஆசியாவில் கூடு கட்டும் செஞ்சிட்டு மே மாதத்தில் இந்தியாவை விட்டு வடக்கு நோக்கிப் பறக்கிறது. ஆகஸ்டு மாதத்தில் திரும்பவும் இந்தியாவுக்கு வந்து விடுகிறது. பல பறவை இனங்கள் சற்று அதிக காலம் தங்குகின்றன. மார்ச் மாதத்தில் இந்தியாவை விட்டுச் செல்லும் பறவைகளில் பல செப்டம்பர் மாதந்தான் திரும்புகின்றன. மிகச் சிரமத்துடன் மேற்கொள்ளப்படும் இந்த இடம்-பெயர் பயணம் தேவையானது மட்டுமல்ல, பயன் தருவதும் கூட. ஆனால் நமக்கு வியப்பைத் தருவது, கிழக்கு மேற்கு இடம் பெயரும் செயல். சில பறவைகள் அதே ரேகையில் கிழக்கோ, மேற்கோ ஏறத்தாழ அதே வெப்ப நிலையுடைய இடங்களுக்குக் கூடு கட்டச் செல்கின்றன. சில பறவைகள் சில மைல் தூரமே இடம் பெயர்கின்றன. இவற்றால் இப் பறவைகளுக்கு என்ன லாபம் என்று நம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. உதாரணமாக பம்பாயில், மாம்பழக் குருவி என்னும் ஓரியோலும், பஞ்சிட்டான் என்னும் 'பீ'ஈட்டரும், நகரை விட்டு மத்திய இந்தியாவுக்குள் சில மைல் தூரமே மழைக் காலத்தில் இடம் பெயர்கின்றன. செப்டம்பர் முதல் வாரத்தில் மீண்டும் பம்பாய் நகருக்குள் வந்து விடுகின்றன. இவ்வாறு அருகே இடம் பெயர்தல் பெரிதும் நடக்கிறது என்பது நமக்குத் தெரியும். ஆனால் ஏன் என்பது அதிகமாக ஆராயப்படவில்லை. அதிக எண்ணிக்கையில்

பறவைகளை அடையாளம் கண்டு ஆராய்ச்சி செய்தால் ஒழிய இதற்குச் சரியான விளக்கம் கிடைக்காது.

இடம் பெயர்தலைப் பற்றி நமது அறிவைக்குழப்பும் ஓர் அம்சம் உள்ளது. பெரும்பாலான பறவைகள், சில சமயங்களில் சென்ற வழியிலன்றி மற்றொரு வழியில் திரும்பினுல் கூட, கிளம்பின இடத்துக்கே நேராகத் திரும்பி விடுகின்றன. ஆனுல் ஒருசில பறவைகள் மிக துணிச்சலான பயணங்களை மேற்கொள்கின்றன. அவை குஞ்சு பொரிக்கும் இடங்களுக்குச் சென்று தங்கள் வேலை முடிந்தபின் நேராகத் திரும்பி வராமல் ஏதோ உல்லாசப் பயணம் செய்வது போல் அங்கிருந்து வேறு இடத்துக்குச் சென்று, சில நாட்கள் தங்கி விட்டுத் திரும்புகின்றன. இது ஏன் ? குளிர்கால உறைவிடத்துக்குத் திரும்பு முன் மீண்டும் குஞ்சு பொரித்த இடங்களுக்குச் சென்று சில நாட்கள் தங்கிவிட்டுச் செல்கின்றன. ஆகையால் பறவை இடப்பெயர்ச்சி ஒரு வியக்கத்தக்க, சில சமயம் விளக்க முடியாத செயலாகும். ஆனுல் போய் திரும்பும் செயலும், ஒழுங்கும், இதன் முக்கிய இயல்பு களாகவும், வருடத்தின் வெவ்வேறு சீதோஷ்ண நிலைகளுக்கேற்ப வெவ்வேறு இடங்களில் சென்று வசித்தல் இதன் நோக்கமாகவும் விளங்குகின்றன.

இடப் பெயர்ச்சி ஆரம்பிப்பதற்குப் பல நாட்களுக்கு முன்னதாகவே பறவைகள் பயணத்துக்குத் தங்களை ஆயத்தப் படுத்திக் கொள் கின்றன. அதிகமாக உணவை உண்டு கூடுதலாக ஓர் அடுக்கு கொழுப்பு உடலில் சேர்த்துக் கொள்கின்றன. இதுதான் பறந்து செல்லும் பல நாட்களின் போது அவைகளுக்கு உணவாகும். சில பறவைகள் கூட்டமாக எப்படி அணிவகுத்துச் செல்வது என்று ஒத்திகைகள் கூடப் பார்க்கின்றன. சூரியன் உதிக்கும் நேரமும் அஸ்தமிக்கும் நேரமும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தையடைவதே அவற்றின் பயணம் துவங்க ஓர் அடையாளமாக அமைகிறது. சூரியனுடைய திசையையே அடையாளமாக வைத்துக் கொண்டு அவை பயணம் செய்கின்றன, என்று சோதனைகள் மூலம் இன்று கண்டு பிடித்திருக்கிருர்கள். மஞ்சுகளும் மூடுபனிகளும் பறந்து செல்லும் பயணிகளை ஓரளவு திசை திருப்பிவிடலாம். ஆயினும் வெளிச்சம் திரும்பியதும் அவை திரும்பவும் சரியான திசையைக் கண்டு கொண்டு, தவறியதைத் திருத்திக் கொள்ளும். தரையில் உள்ள சில அடையாளங்கள்—கோபுரம், நதி, கலங்கரை விளக் கங்கள், ஆகியவை—பெரிதும் பயன்பட்டாலும், அவற்றின் உண்மை யான கைகொடுப்பான்களாக இரவில் விண் மீன்களையும் பகலில்

பகலோனையுமே பெரிதும் பறவைகள் திசை அறியப் பயன்படுத்து-கின்றன. பயணிகள் அதிகமாக 600 மீட்டர் முதல் 1300 மீட்டர் உயரத்தில் பறந்து செல்வதால் தரையில் உள்ள குறிகளை அவை அதிகமாக நம்பிச் செல்ல முடியாது என்பது தெளிவாகிறது. மேலும் பல பறவை இனங்களில் பொரித்த குஞ்சுகள் வளர்ந்து முதல் தடவையாகத் தங்களது தாய் நாட்டுக்குப் பறந்து செல்லும்போது பெரிய பறவைகளுக்கு முன்னால் செல்கின்றன. இவை எவ்வாறு தரை அடையாளங்களை உபயோகிக்கும்? அதனால் இயற்கையான உள் தூண்டுதலே இவற்றைச் செலுத்துகின்றது, என்று உணரும் போது வியப்பு ஏற்படுகிறது.

அநேக பறவை இனங்கள் சிறுசிறு கூட்டங்களாகப் பறந்தாலும், சில, தனிப் பறவையாகவே செல்லும். பகலில் இரை மேயும் சிறு பறவைகளில் பல இரவிலே பயணஞ் செய்யும்; ஒருவேளை, அவை தங்களைத் தாக்கும் பறவைகளிடமிருந்து தப்புவதற்காக இவ்வாறு செய்கின்றன போலும். சிறு பறவைகள் பறந்து செல்லும் வேகம் சுமார் 30 கிலோ மீட்டர். ஒரு நாளைக்கு 250 கிலோ மீட்டர் தூரம் கடந்து செல்லும். பெரும் பறவைகளோ வெகு நிதானமாக 80 கிலோ மீட்டர் வீதம் செல்லும். அதனால் ஒரு நாளைக்கு அதிக தூரம் கடக்கும். கடல்களைக் கடக்கும்போது இறங்காமல் பறக்க நிர்ப்பந்தப் படுகின்றன. அப்போது பல கூட்டமாகப் பறக்கும் இனங்கள் 36 மணி நேரம் வரை நிற்காமல் பறக்கின்றன. புயலில் சிக்கிப் பறவைகள் தவிப்பதும் உண்டு. அப்படி அபாயம் நேரிட்டால் பல பறவைகள் சாவதுண்டு. சுருங்கச் சொல்லின் பறவைகளின் இடம் பெயர்தல் கடினமானது; ஆபத்து நிறைந்தது.

பறவைகளில் எத்தனை சதவீதம் இடம் பெயர்கின்றன என்று கணக்கெடுத்தல் முழுவதும் சாத்தியமல்ல. ஐரோப்பா, வட ஆசியாவில் 40 சதவிகிதம் பறவைகள் இடம் பெயரும் வகையைச் சேர்ந்தவைாகக் கணித்திருக்கின்றனர். பிரிட்டனின் 68 இனப் பாடும் பறவைகளுள் 22 தாம் இடம் பெயர்வன, இந்தியாவில் காணப்படும் 1200 இனப் பறவைகளுள் 300 இனம் மாரிக் காலத்தில் தூர நாடுகளிலிருந்து வருவன. பறவை பறக்கும் தூரங்களின் வகையைப் பார்க்கும்போது ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. ஆர்க்டிக் டெர்ன் என்னும் வட துருவ கவுட்டைவால் ஆலாப் பறவை வட துருவத்திலிருந்து தென் துருவத்துக்கும், பின் தென் துருவத்திலிருந்து வட துருவத்துக்கும் பறக்கிறது. இது சுமார் 35,000 கிலோ மீட்டர் தூரமாகும். பல ஆயிரம் மைல்கள் பறப்பது

பறவைகளுக்குச் சாதாரணம் போலும். ஐரோப்பாவில் கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கும் பல இனப் பறவைகள் தென் ஆப்பிரிக்கா வரை இடம் பெயர்ந்து செல்கின்றன. பல ஐரோப்பியப் பறவைகள் குளிர் காலத்தில் குளிரினின்று தப்ப மத்தியதரைப் பிரதேசங்களுக்குப் பறந்து வந்து விடுகின்றன.

இந்தியாவில் வந்து சேரும் பெரும்பாலான இடம்-பெயர் பறவைகளுக்கு இந்தியா அவைகளின் இடம்-பெயர் காலத்தின் இறுதிப் பாகமே. அப்போது அவை முட்டையிடுவதில்லை. கீழ் ஐரோப்பாவிலோ, வடக்கு மற்றும் மத்திய ஆசியாவிலோ, அல்லது ஹிமாலயப் பிரதேசத்திலோ கூடு கட்டும் பறவைகள் இந்திய தீபகற்பத்திற்கு மழைக் காலப் பறவைகளாக வந்து சேர்கின்றன. அதிகமாக வரும் இடம்-பெயர் பறவைகள் கடற்கரைகளிலும் ஆற்றின் கரைகளிலும் குளங்களிலும் வந்து விழும் கொக்கு, நாரை, வாத்து இனங்களே. இப்பறவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள இந்நூற்றுண்டில் கையாளும் முறைதான், பறவைக் காலில் அலுமினிய வளையங் கட்டிவிடுதல். இவற்றில் கட்டிவிடும் ஆளின் முகவரி தேதி யாவும் குறிப்பிடப்பட்டிருக்கும். கடந்த பத்தாண்டுகளில் பம்பாய் நேச்சுரல் ஹிஸ்ட்டரி சொசைட்டி இம்முறையைக் கடைப்பிடித்து இந்தியாவில் பல்வேறு பாகங்களிலிருந்து பிடிபட்ட பறவைகளை வைத்து ஏராளமான தகவல் சேகரித்துள்ளது. நம் நாட்டுக் காட்டு வாத்துக்களில் சில 4800 கிலோ மீட்டர்களுக்கப்பால் சைபீரிய நாட்டில் பிடிபட்டிருக்கின்றன. இவ்வளையங்களில் "பம்பாய் நேச்சுரல் ஹிஸ்ட்டரி சொசைட்டிக்குத் தெரியப்படுத்துங்கள்" என்ற வேண்டுகோளும் எழுதப்பட்டிருக்கும். இதைக் கொண்டுள்ள பறவைகளைப் பிடிக்கும் பறவை சங்கத்தார் தாங்கள் பத்திரிகைகளிலும் தினத்தாள்களிலும் செய்திகளை வெளியிடும்படிக் கோரப்படுகிறார்கள். இதன் விளைவாகக் கிடைக்கக் கூடிய தகவல் பரவுகிறது. பிற நாட்டிலிருந்து கட்டப்பட்ட வளையங்களுடன் நம் நாட்டில் பல பறவைகள் பிடிபடுகின்றன. இவை கொண்டுவரும் செய்திகளும் பம்பாய் சொசைட்டிக்கு அனுப்பப்பட வேண்டும். இப்படி பலரும் ஒத்துழைத்தால் தான் இந்தியாவில் பறவைகளின் இடப்பெயர்ச்சியைப் பற்றி முழுமையாக அறிய முடியும்.

# பறவைகளின் விளக்கம்

**முக்குளிப்பான் போன்றவை** (Order Podicipediformes)

இவை குட்டைச் சிறகுடைய வாலில்லா நீர்ப் பறவைகள். இவற்றின் கால்கள் உடலில் பின்னால் தள்ளி இருக்கும். முன் விரல்கள் மூன்றும் தரமாக வளர்ந்தவை. அவற்றின் இருபுறமும் தட்டையாக இலை போன்று அகன்ற பாகங்கள் உண்டு. இவை நீந்த உதவுகின்றன. எனவே, விரல் இலையின் நடு நரம்பு போல் அமைந்துள்ளது. நம் நாட்டில் இவ்வம்சத்தின் பறவையாக எங்கும் காணப்படுவது **முக்குளிப்பான்** Little grabe or chick (Podiceps ruficollis)—படம் 1—இது மப்பான நிறமுடைய, உருண்டு திரண்டிருக்கும், சிறிய நீர்வாழ் பறவை. இதன் அடிப்பாகம் பட்டுப்போல் இருக்கும். அலகு குட்டையானது; கூர்மையானது. வால் இல்லை. முட்டையிடுங் காலத்தில் தலையும் கழுத்தும், அடர்ந்த மாநிறம் கொள்ளும். வாயின் அடிப்பாகம் மஞ்சள் நிறமடையும். கிராமங்களில் உள்ள எல்லா குளங் குட்டைகளிலும் சிறு வாத்துப் போல் நீந்திக் கொண்டிருக்கும். அடிக்கடி நீருக்குள் மூழ்கி, சற்று தூரத்துக் கப்பால் எழுந்திருக்கும். சிறு குட்டைகளில் இரண்டு அல்லது மூன்றாகக் காணப்படும். இது பெரிய குளங்களில் ஐம்பதுக்கும் மேலாகச் சேர்ந்து திரிவதைக் காணலாம். மூழ்குவதில் இவை வல்லவை. நீர் மட்டத்தில் ஒரு சிறு அலைகூட எழும்பா வண்ணம் மூழ்கி விடும் இவற்றின் திறன் ஆச்சரியமூட்டுவது. சிறு துப்பாக்கியால் சுடும்போது ரவை அதைத் தொடுமுன் பறவை நீருக்குள் மூழ்கி மறைந்துவிடும். அதை விரட்டினாலும் தண்ணீரை விட்டு வெளியேறாமல் அங்கு மிங்கும் ஓடியும், மூழ்கியும் தப்பவே பார்க்கும். குட்டையான சிறகு இருப்பினும் முக்குளிப்பான் நன்றாகப் பறக்கக் கூடியது. குளத்தில் நீர் வற்றி விட்டால் வெகுதூரத்திலுள்ள மற்றொரு குளத்துக்கு அது பறந்து செல்லும். முக்குளிப்பான், சாதாரணமாக எழுப்புவது **கிச்கிச்** என்ற விசிலடிப்பது போன்ற பொடிச் சத்தம். மாலை வேளைகளில் தண்ணீர்ப் பரப்பில் ஒன்றையொன்று விரட்டிக் கொண்டு பாதி நீருக்கு மேல் எழும்பியும்

எழும்பாமலும் பறந்து இடும் சத்தம் இது. நீர்வாழ் பூச்சிகள், அவற்றின் லார்வாக்கள் (புழுப் பருவங்களும்) தவளைக் குட்டிகள், நத்தைகள், சிறு மீன்கள், சிறு தவளைகள், ஆகியவை இப்பறவைகளின் உணவுகள். இவற்றை அவை மிதக்கும் தாவரங்களுக்கிடையிலிருந்து கொத்தியுண்ணும். சிறு மீன்களை சில சமயங்களில் தண்ணீருக்கு அடியில் விரட்டிப் பிடிப்பதும் உண்டு. முக்குளிப்பானின் கூடு கசங்கிய புல்லாலும் செடிகளாலும் தண்ணீருக்கடியில் மூழ்கி நிற்கும் குத்துச் செடிகளின் மேல் கட்டப்படும். மூன்று முதல் ஐந்து முட்டைகள் இடும். இடும்போது வெள்ளையாக இருக்கும் முட்டைகள் சில நாட்களில் அழுக்கடைந்ததுபோல் நிறமாறிவிடுகின்றன. இதற்குக் காரணம் முக்குளிப்பான் இரை தேடவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கூட்டை விட்டு வெளியேறும்போது, அழுக்குப் புற்களால் முட்டைகளை மூடிவிட்டுச் செல்லும். சிறு குஞ்சுகள் வரிகளுடையன. அவை தாய்ப் பறவையின் முதுகில் ஏறி சவாரி செய்யும். தாய் அவற்றுடன் நீரில் மிதந்து செல்லும்.

**கூழைக்கடா போன்றவை** (Order PELECANIFORMES)

இந்த வம்சம் இந்தியாவிலே இரு குடும்பங்களால் நாட்டப்படுகிறது. ஒன்று கூழைக்கடாக் குடும்பம் (Family PELECANIDAE) மற்றொன்று **நீர்க்காக்கைக் குடும்பம்** (PHALACROCORACIDAE). **கூழைக்கடா** (படம் 2) பெலிக்கன் பார்வைக்கு வெகு கனத்தது போல் தோன்றும் பெரிய பறவை. இதன் கால்கள் குட்டை. நான்கு விரல்களும் முன் பக்கம் நிற்கும். நகம் வரை அவற்றைத் தோல் இணைக்கும். அதனால் அவை நீந்துவதற்கு ஏற்ற கால்கள். கழுத்து நீண்டு இருக்கும். அலகோ, அடி அகன்று முன் நீண்டு சிறுத்திருக்கும். கீழ்த்தாடையுடன் ஒட்டிய தோல் பெரிய பை போன்று தொங்குவதால், வலைபோட்டு அரிப்பது போல் கூழைக்கடா மீன்களை வாரி அள்ளி உண்ணும். பெருந் தோற்றமுடையதாயினும் இப்பறவை காற்று போல இருக்கும். இதன் எலும்புகள் யாவும் காற்று நிறைந்த வகையின. மேலும் இப்பறவை வெகுநேரம் ஆகாயத்தில் வெகு உயரத்தில் நிதானமாகப் பறந்து மிதந்து செல்லும். நல்ல சூரிய ஒளியுள்ள நாட்களில் கழுகு, நாரை முதலிய பெரிய பறவைகளுடன் இவை வெகு உயரத்தில் வெப்பக் காற்றுக்கு எதிராக சிறகு அசையாமல் மெதுவாக ஊர்ந்து செல்வது போல்

பொழுதைப் போக்கும் காட்சி ரசிக்கத் தகுந்தது. இந்தியாவில் காணப்படும் மூன்று வகை பெலிக்கன் அல்லது கூழைக்கடாக்களில், சாம்பல் நிறப் பெலிக்கன்—Grey Pelican (Pelecanus philippensis)—தான் நம் நாட்டிலேயே கூடு கட்டித் தங்குவது. மற்ற இரு வகைகளும் மாரி காலத்து வரும் பயன்களே. இவ்வகையில் மேல் தாடையில் பல பெரிய கருநீலப் புள்ளிகள் காணப்படும். கீழ்தாடைப்பை சற்று சிவந்த மா நிறமாக இருக்கும். தாய்ப்பறவை வெள்ளையாக இருந்தாலும் குஞ்சுகள் மாநிறமாக இருக்கும். பறக்கும் போதும் சிறகு விரிக்கும் போதும் கறுப்பான பெரிய இறகுகள் தென்படும். வால் சற்று வெளுப்பான மா நிறமுடையது. சிறு குளங்குட்டைகளில் சில பறவைகள் கொண்ட கூட்டமாக அமைதியாக நீரில் மிதந்து ஊர்ந்து வந்து கொண்டிருக்கும்; அல்லது கரையில் நின்று வால் முடிகளை உருவிக் கொடுத்துக் கொண்டிருக்கும். இவை மீன் பிடிக்கும் போது வட்டமாக வளைந்து வரிசையாக ஊர்ந்து கரையை நோக்கி சிறு மீன்களை இறக்கையை தண்ணீரில் அடித்து விரட்டும். கரையை அடைந்த உடன் மீன்கள் கூட்டங் கூட்டமாகத் திரும்பி ஆழமான நீருக்குள் பாயும். கூழைக்கடாக்கள் தங்கள் வாயை அகலப் பிளந்து சரித்துக் கொடுத்து வலையில் மீன்களை அள்ளுவது போல் வாரி எடுத்து விழுங்கும். அசுரத்தீனி தின்னும் பறவைகள், இவை. கூழைக்கடா நீரைவிட்டு சிரமமில்லாமல் எழும்பிப் பறக்கும், பறக்கும் போது கழுத்தை வளைத்து S மாதிரி வைத்துக் கொள்ளும். சிரமமாக அடிக்கும் இறக்கைகள் விசிலடிப்பதுபோல் ஓசையுண்டாக்கும். அமைதியாக மேலே பறந்து மிதக்கும் இப்பறவை நமக்கு பறக்கும் படகை நினைவூட்டும். இவை ஆந்திர நாட்டில் கோதாவரி தென் மாவட்டங்களில் ஆங்காங்கு சிறு குடும்பங்களாக கூடு கட்டி வாழுகின்றன. கூட்டமாகச் சேர்ந்து பனைமரம் அல்லது வேறு உயர்ந்த மரங்களில் கூடுகள் கட்டுகின்றன. கூடுகள் நீண்ட குச்சிகளால் கன்னுபின்னுவென்று அமைக்கப்பட்ட மேடைகள் போல் தோன்றும். ஒரே மரத்தில் பல கூடுகள் நெருக்கமாக ஒன்றையொன்று தொட்டுக் கொண்டும் இருக்கலாம். ஒரு பறவை சராசரியாக 3 முட்டைகள் இடும். ஆரம்பத்தில் சுண்ணாம்பு போல் வெள்ளையாக இருக்கும். முட்டை, அடைகாக்கக் காக்க நிறம் மங்கி அழுக்கான மாநிறமடையும்.

**நீர்க் காக்கைக் குடும்பம்:** (Family PHALACROCORACIDAE) நீர்க் காகம், (Cormorant) வழுவாங்கி (Darter or snake bird) ஆகிய

இருவகைப் பறவைகள் கொண்டது. வழுவாங்கி (Anhinga rufa) (படம் 3) கரிய நிறமுள்ள நீர்ப்பறவை. இதன் கழுத்து பாம்பு போல் நீண்டு வழுவழுப்பான மாநிறமாக இருக்கும். தலை சிறியதாயினும் அலகு நீண்டு கூர்மையாக இருக்கும். இதைத் தவிர முதுகில் பளபளப்பான சாம்பல் நிறக் கோடுகளும், நீண்ட, உறுதியான, மழுங்கிய நுனியுள்ள வாலும் இதை இனங்காண உதவும் அடையாளங்கள். வழுவாங்கி தனியாகவோ அல்லது பரந்து சிதறிய சிறு கூட்டமாகவோ கிராமங்களை ஒட்டிய குட்டைகளிலும், பெரிய குளங்களிலும், நீர்த் தேக்கங்களிலும் ஆறுகளிலும் நதி முகத்துவாரங்களிலும் காணப்படும். நீரின் மட்டத்தில் உடம்பு பாதி தெரியும் படியாகவோ அல்லது முழு உடம்பும் நீருக்குள் மூழ்கியோ பாம்பு போன்ற தலையும் கழுத்தும் மட்டும் மேலே தெரிய அங்கு மிங்கும் ஆட நீந்தும் போது தூரப் பார்வைக்கு பாம்பு போலவே தோன்றும். அதன் முக்கிய உணவு மீன்தான். நீர்க்குள் மூழ்குவதிலும் நீர்க் கடியில் நீந்துவதிலும் வெகு சாமர்த்தியமுடையது. ஈட்டி எறிபவன் எவ்வாறு கையைச் சிறிது விரித்துக் கொண்டு குறிபார்த்து எறிவானோ அதுபோல் வழுவாங்கியும் நீர்க்கடியில் இறக்கையைச் சிறிது திறந்த வண்ணம் கழுத்தை அசைத்து அசைத்து மீனைத் துரத்திச் செல்லும். அதன் கழுத்தில் முன்னெலும்பு அமைப்பு மீன்களைத் திடீரென மின்னல் வேகத்தில் தாக்குவதற்கு உதவியாக இருக்கிறது. தாக்கப்பட்ட மீன் அம்பு போன்ற கீழ்த்தாடையின் நுனியில் செருகிக் கொள்ள, பாம்புக் கழுத்தை நீருக்கு மேலே தூக்கி, தாடையை ஒரு உதறு உதறும். மீன் ஆகாயத்தில் எழும்பிக் கீழே வர, வாயைப் பிளந்து அதைக் கவ்வித் தலைமுதலாக விழுங்கும். தனது தலையையும் கழுத்தையும்விட மிகப் பெரிய மீன்களையும் இவ்விதம் இப்பறவை விழுங்கிவிடும். நீரிலேயே அதிக நேரம் இப்பறவை செலவு செய்தாலும் வாத்து போல இதன் இறகு அவ்வளவு நீர் தடுக்கும் சக்தி உடையதல்ல. அதனால் அடிக்கடி இது இறக்கையை உலர வைத்துக்கொண்டு தரையில் இருப்ப துண்டு. அல்லது மரக் கிளைகளில் பற்றி உட்கார்ந்து வெய்யில் காயும். வழக்கமாக அது கூப்பிடும் தொனி, ச்சி—கி, ச்சி—கி, என்ற வெங்கல ஓசை போன்ற இரு சொல் கூவல். பொதுவாக இது பறப்பதிலோ வேறு குணங்களிலோ நீர்க் காகத்தை ஒத்திருக்கிறது. நீர்க் காகங்கள் வழுவாங்கிகளுடன் கூடி வாழ்வதைக் காணலாம். இவை கொக்குகள் நாரைகளுடன் கலந்து மரங்களில் கூடு கட்டி வாழ்கின்றன. கூடு குச்சிகளான

ஒரு மேடைதான். இது அவ்வளவு ஒழுங்காகவோ அழகாகவோ இருக்காது. நீர்க் கரைகளில் உள்ள மரங்களில் அதிகமாகக் கூடுகள் கட்டப்படுகின்றன. வெளுத்த பச்சையில் வெள்ளைச் சுண்ணும்பு பூசியது போன்ற நிறத்தில் 3 அல்லது 4 ஒடுங்கி நீண்ட முட்டைகள் கூட்டில் காணப்படுகின்றன.

**நீர்க்காகம்** — Little Cormorant — (*Phalacrocorax niger*) (படம் 4): நீர்க் காகம் அண்டங் காக்கையைவிட சற்றே பெரிது. பளபளக்கும் சருமம்; ஆனால் பார்க்க அழகாயிராது. கருநிற வாத்துபோன்றே தோற்றமளிக்கும். அலகு சற்று ஒடுங்கி நீண்டு, நுண் கொக்கிபோல் கீழ் வளைந்து இருக்கும். தொண்டையில் ஒரு வெள்ளைப் பட்டையும் தலையின் பின் பாகத்தில் கொண்டையிருப்பது போன்ற ஒரு தோற்றமும் மற்ற அடையாளங்கள். வழுவாங்கி போலவே இதன் வாலும் விறைத்து நிற்கும்.

தனியாகவோ சிறு கூட்டமாகவோ சில சமயங்களில் பெருங் கூட்டமாகவோ குட்டைகளிலும், உள்நாட்டுக் குளங்களிலும் இது காணப்படும். சில சமயங்களில் உப்பளங்களின் ஓரங்களிலும் நதி முகத்துவார ஓடைகளிலும் கற்பாறைகளிலும் மீன் பிடிக்கும் படகு கட்டைகளிலும், கரை ஓர மரங்களிலும் இறக்கைகளை அகல விரித்த வண்ணமிருந்து வெயில் காயும் நீர்க் காகம். இவற்றின் முக்கிய உணவு மீனே. இவை மூழ்குவதிலும் நீருக்குள் நீந்துவதிலும் கை தேர்ந்தவை. மீன் பிடிப்பதெல்லாம் நீருக்குள்ளேயே. சில சமயம் கூட்டமாக இவை வேட்டையாடும். ஒன்றின் மேல் ஒன்று விழுந்து அடிபிடி போட்டுக்கொண்டு அவை மீன்களை விரட்டிப் பிடித்து அலகில் குறுக்கே கௌவிக் கொண்டு மேலே வரும். ஆகாயத்தில் தூக்கி எறிந்து மீனின் தலை முதலாக வாய்க்குள் வரப் பிடித்து விழுங்கும். உடனே அடுத்த மீனைத் தேடி மூழ்கும். பெரிய மீன்களையும் பிடித்து உண்ணும். இவற்றின் பசி இலகுவில் தீராது போலும். சாதாரண நீர்க் காகங்களுடன் சில சமயம் வேறு இரு வகை நீர்க்காகங்கள் காணப்படலாம். ஒன்று **பெரு நீர்க்காகம்** —Large Cormorant (P. Carbo). மற்றொன்று **கொண்டை நீர்க் காகம்** —Indian shag (P. Fuscicollis). முந்தியது ஒரு வாத்து அளவு பருமனுக இருக்கும். முட்டையிடுங் காலத்தில் தாடையில் பெரிய வெள்ளைப் புள்ளி இருக்கும். பிந்தியது மேற்கூறிய இரு வகைளுக்கு நடுவாந்திரமான பருமனுடையது. கண் பக்கத்தில் கொண்டைபோல் குத்தாக முடி நிற்கும். நீர்க் காகங்கள் எல்லாமே ஒரே மாதிரியான

கூடுகள் தாம் கட்டுகின்றன. நீர்க் கரையில் அல்லது குளங்களுக்குச் சற்று தூரத்தில் உள்ள மரக் கிளைகளில் மேடைபோன்று குச்சுகளை அடுக்கி முட்டையிட்டு அடை காக்கும். பெரும்பாலும் இவை நாரைகளும் கொக்குகளும் கூடு கட்டும் மரங்களிலேயே அவைகளுடன் சேர்ந்து கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரிக்கின்றன. 4 அல்லது 5 முட்டைகள் இடும். ஒவ்வொன்றும் பச்சை கலந்த நீல நிறத்தில் சுண்ணாம்பு பூசியது போலத் தோன்றும். மூன்று வகைகளும் ஒரு நிற முட்டையே யிடுகின்றன. அவற்றின் அளவின் வேற்றுமையை வைத்துத்தான் இன்ன வகையைச் சார்ந்த முட்டை என்று கண்டு பிடிக்க முடியும்.

**நாரை வம்சம்** (Order CICONIIFORMES)

இதில் அடங்கிய குடும்பங்கள், 1. கொக்குக் குடும்பம் (ARDEIDAE), 2. நாரைக் குடும்பம் (CICONIIDAE), 3. செங்கால் நாரைகள் (PHOENICOPTERIDAE), 4. அரிவாள் மூக்கன்கள் (THRESKIORNITHIDAE).

கொக்கு இனங்கள் நீண்ட காலுடையவை. இவற்றின் முன் கால்கள் ஓரளவு இறகுகளால் மூடப்பட்டவை. கால் விரல்கள் நீண்டவை. இடையில் சவ்வு இணைப்பற்றவை. கழுத்து நீண்டு வளைந்து கொடுக்குந் தன்மையுடையது. அலகு நீண்டு கூர்மையான ஈட்டி போன்றிருக்கும். நல்ல எடுத்துக் காட்டாக பெருங் கொக்கைச் சொல்லலாம் grey heron (Ardea cinerea) (படம் 5). இது நெட்டையான, நாரை போன்ற சதுப்பு நிலக் கொக்கு. இதன் கால்களில் இறகு இல்லை. உடல் சாம்பல் நிறத்திலிருக்கும். தலையில் கொண்டை போல் முடி தொங்கும். கழுத்தும் சற்று வெளுப்பாக இருக்கும். தலை உச்சியும் மார்பும் நீண்டு 'S' போல் வளைந்து மெலிந்து கழுத்தும் ஒடுங்கிய தலையும், தடித்த உறுதியான குத்து ஈட்டி போன்ற கூர்மையான அலகும் கொண்டது இக்கொக்கு. நீண்டு வளர்ந்து கறுத்த பிடரிக் கொண்டை முடியும் நெஞ்சில் நீண்ட கருவரியுடைய வெள்ளை முடியும், கண்ணைக் கவரும் கரும்புள்ளிகளாலான கோடு ஒன்று கழுத்தின் முன் பாகத்தில் இருப்பதுவும் மேற்கொண்டு தவருத அடையாளங்களாகும். பெண் கொக்கு இரு விதங்களில் ஆணிலிருந்து வேறுபடுகிறது. அதன் கொண்டை வளர்ச்சியடைந்திருக்காது. மார்பின் இறகுகளும் சிறியன. பெருங் கொக்கு தனியாக முழங்கால் அளவு தண்ணீரில் இறங்கிக் கழுத்தை தோள்களுக்கு இடையே வளைத்து வைத்துக் கொண்டு உறங்குவது

போல் நிற்பதைக் காணலாம். ஆனால் அது உண்மையில் நீரில் மீன் அல்லது தவளையின் ஓட்டங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்கும். ஏதாவது கண்ணில் பட்டவுடன் தலையை நீட்டி அசையாமல் தயாராக நிற்கும். திடீரென அலகு நீரில் மூழ்கும்: மீனுடன் வெளியே வரும். அதைத் தூக்கிப் போட்டுப் பிடித்துத் தலைமுதலாக வாய்க்குள் போட்டு விழுங்கும். பறக்கும் போது மடமடவென்று இறக்கையை அடித்து எழும்பிய பின் கிரமமாக இறக்கையை வீசிக் கழுத்தை தோள்களுக்கு இடையில் முன்னால் நீட்டி வைத்துக் கொண்டும் நீண்ட கால்களைச் சேர்த்து வாலுக்கு அடியில் நீட்டிக் கொண்டும் செல்லும். பொதுவாக இவ்வாறு பறப்பது கொக்கினங்களின் தன்மை. சாதாரணமாகப் பறக்கும் போது இடைக்கிடையே தொண்டை கட்டிக் காறியது போல் ஓர் ஒலி எழுப்பும். பெருங் கொக்கு வகைகளுடன் சேர்ந்து, நீர்நிலைகளினருகே மரங்களில் கூடு கட்டும். கூடு குச்சிகளாலான ஒரு மேடையானாலும் மையத்தில் சிறிது பள்ளமிருக்கும். இந்த இடம் காய்ந்த புற்களால் மூடப்பட்டிருக்கும். 3 முதல் 6 வரை, ஆழ்கடல் பச்சை நிறத்தில் முட்டைகள் இருக்கும்.

**செந்நீலக் கொக்கு** Purple heron (A. Purpurea) என்பது பெருங் கொக்கைவிடச் சிறியது. இது சதுப்பான நிலங்களில் காணப்படுகின்றது. பொதுவான குணங்களில் பெருங் கொக்கை ஒத்திருக்கும். இது நீல சாம்பல் அல்லது நீல சிவப்பு முதுகும், சிவந்த தலையும் கழுத்தும் பாக்கு நிறங் கலந்த கறுப்பு அடிப் பாகமும் கொண்டது.

**வெள்ளை கொக்குகள்** (White egrets) நம் நாட்டில் உண்டு. பெரும் வெண்கொக்கு—Large egret (Egretta alba), சிறு வெண் கொக்கு—Small egret (E. garzetta), நடுத்தர வெள்ளைக் கொக்கு—Median egret (E. Intermedia) என இவற்றின் பருமனை வைத்துத் தான் நாம் பாகுபாடு செய்ய முடியும். பெருங் கொக்குகள் காணப்படும் பிரதேசங்களில் இவைகளைப் பார்க்கலாம். பெரும் வெண் கொக்கு (Egretta alba) செந்நீலக் கொக்கின் பருமன் இருக்கும். தன்னந்தனியாக இரைமேயும். வெள்ளை வெளேரென்று இருக்கும். **நடுத்தர வெண் கொக்கு** (Egretta intermedia) சற்றுச் சிறியது. **சிறு வெண் கொக்கு** (Egretta garzetta) (படம் 6): நமது வீட்டுக் கோழியைவிட சிறியது. பின்னால் விவரிக்கப்பட்டுள்ள மாட்டுக் கொக்கும் இதுவும் ஒரே அளவு எனலாம். குஞ்சு பொரிக்கும்

காலத்தில் வெள்ளைக் கொக்குகளுக்கு முதுகில் லேஸ் போன்ற மிருதுவான வெள்ளை இறகுகள் முளைக்கின்றன. ஒருகாலத்தில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பெண்கள் இதை ஆடைகளில் அணியும் அழகுப் பொருட்களாக மதித்ததால் பெருமளவு இவ் இறகுகள் ஏற்றுமதியாயின. இதன் விளைவாக வெள்ளைக் கொக்கு களே அழிந்து போகுமோ என்ற பயம் ஏற்பட்டது. பெண்களின் மனமாற்றமும், நாட்டின் கடும் பாதுகாப்புச் சட்டங்களும் வெள்ளைக் கொக்கைக் காத்தன.

**மாட்டுக் கொக்கு**—Cattle egret (Bubulcus ibis) (படம் 7). இது வெண் கொக்கு போன்றே தோன்றினும் சாதாரண காலங்களில் (முட்டையிடாதபோது) இதன் அலகு மஞ்சள் நிறமாக இருக்கும். (வெள்ளைக் கொக்கின் அலகு கரு நிறமாக இருக்கும்.) அடை காக்கும் காலத்தில் இக் கொக்கின் வெள்ளை நிறம் மாறி இறகுகளில் ஆரஞ்சு அல்லது பொன்னிறம் தோன்றும். மேலும், வேறு சில கொக்குகளைப் போல இன்றி, இது தண்ணீரையே நம்பி நிற்காமல் வறண்ட பூமிகளிலும் மாட்டு மந்தைகளின் பின் நடந்து, மாடு செல்லும் அரவத்தால் அதிர்ந்து பறக்கத் தொடங்கும் பூச்சிக்களைப் பிடித்துத் தின்னும். மாட்டின் கால்களுக்கு இடையில் ஓடிப் பூச்சி களைத் துரத்துவதும், சில சமயங்களில் மாட்டின் முதுகில் சவாரி செய்தவாறு செல்வதும் இவற்றின் இயல்பு. மாடுகளில் ஒட்டும் இரத்தம் உறிஞ்சும் ஈக்களையும், உண்ணிகளையும், மாட்டின் முதுகு, வயிறு, காதுகளிலிருந்து கொத்தித் தின்னும். இவை கூட்டமாகக் கூடு கட்டும். ஒவ்வொரு ஆண்டும் வழக்கமாகக் கட்டும் சில மரங்களிலேயே வேறு கொக்கினங்களுடனும் வழுவாங்கி நீர்க்காகங் களுடனும், சேர்ந்தே கூடு கட்டுகின்றன. நீர் நிலைகளிலிருந்து சூரியன் அத்தமித்தபின் ஒன்றன் பின் ஒன்றாக சாய்வு கோடு களாகவோ அல்லது ஒழுங்கற்ற கூட்டமாகவோ கழுத்தை வளைத்துத் தலையைத் தோள்களுக்கிடையில் வைத்துக்கொண்டும் கால்களைப் பின்னுக்கி நீட்டிக் கொண்டும் கூடுகளுக்குத் திரும்பும். கூடு அவ்வளவு அழகில்லாமல் காக்கைக் கூடுபோல் சிறு குச்சுகளை வைத்துக் கட்டப்பட்டிருக்கும். நீர்க் கரையிலுள்ள மரங் களில் மட்டுமின்றி ஆள் நடமாட்டமுள்ள நெருக்கமான நகர, கிராமப் பிரதேசங்களிலும் இது மரங்களைத் தேர்ந்தெடுத்துக் கூடு கட்டுவதுண்டு. முட்டைகள் சற்று வைக்கோல் நிறங் கலந்த

பாவாடை நிறத்தில் இருக்கும். சராசரியாக 3 முதல் 5 முட்டைகள் வரை இடும்.

**குருட்டுக் கொக்கு, வயல் கொக்கு** Pond heron, Paddy bird (Ardeola grayii) (படம் 8) : இது பெட்டைக் கோழியை விடச் சற்று சிறிய கொக்கு. வயல் கரைகளிலோ அறுவடையான வயலிலோ அசையாது நின்று கொண்டிருக்கும் போது நம் கண்ணுக்கு உடன் புலப்படுவதில்லையாதலின், குருட்டுக் கொக்கு என்று பெயர் பெற்றது. நிலத்தில் அமர்ந்திருக்கும்போது வெளிர் மண் நிறத்திலிருக்கும்; ஆனால் திடீரெனப் பறக்கும்போது ஒளிரும் வெள்ளை நிற இறக்கையும் வாலும் பளிச்சென்று தெரியும். குஞ்சு பொரிக்கும் காலத்தில் முதுகு முழுவதும் பழுப்பு சிவப்பு நிற இறகுகளும் தலையில் நீண்ட வெள்ளைக் கொண்டையும் வளர்ந்து, குருட்டுக் கொக்கை இக்காலத்தில் மட்டும் ஒரு அழகுள்ள பறவையாக்குகின்றன. குருட்டுக் கொக்குத் தனியாகவோ அல்லது இரண்டு மூன்று சேர்ந்தோ சேறு நிறைந்த குட்டைகளிலும், வேறு எங்கெங்கு தவளைகளும் சேற்று மீன்களும் கூடுமோ அங்கெல்லாமும், நிற்பதைக் காணலாம். மீன் மற்றும் தவளைக் குஞ்சுகள் அதற்கு முக்கிய உணவு. முதுகை வளைத்து தலையை உள்ளே இழுத்து வைத்துத் தூங்கிக் கொண்டிருப்பது போல் அசையாமல் நிற்கும். ஆனால் உண்மையில் அது விழித்துக் கொண்டுதான் இருக்கும். ஏதாவதொரு அப்பாவி மீனோ தவளையோ தனது நீண்ட, கூரான, அலகு பாயக்கூடிய தூரத்துக்குள் வந்து விடாதா என்று கவனித்துக் கொண்டே இருக்கும். சில சமயங்களில் நீருக்குள் மிக மெதுவாகக் காலை ஒவ்வொன்றாகத் தூக்கி வைத்து நடந்து, தலையை உயர்த்தி, கழுத்தை வளைத்து முன் நீட்டி, மீனைக் கொத்தித் தூக்கத் தயாராகச் செல்லும், தொந்தரவுக்குட்படாத இடங்களில், நீர்க்கரைகளில் வண்ணான்களுக்கு அருகிலோ, பானை. குடங்களை நிரப்பிக்கொண்டிருக்கும் பெண்களுக்கு அருகிலோ கவலையற்று நின்று கொண்டிருக்கும். தொந்தரவு ஏற்படும்போது வெள்ளை இறகுகள் பளிச்சிடச் சரேலென்று எழும்பி, சீராக இறக்கை அடித்தவாறு பறந்து செல்லும். கூடு கட்டுகையில் பெருங் கூட்டமாகக் கூடு கட்டி வாழும். பெரும்பாலும் நகரின் அல்லது கிராமத்தின் உட்புறப் பகுதிகளிலேயே கூடு கட்டும். காக்கைக் கூடுகள் போலவே குச்சிகளை வைத்துக் கன்னா பின்னா என்று கட்டி 3 முதல் 5 வரை வெளிர் பச்சை—நீல நிற முட்டைகள் இடும். ஒரு முறை கூடு கட்டிய மரங்களிலேயே பல தடவை திரும்பத்திரும்பக் கூடுகட்டும்.

**நாரைக் குடும்பம்** — Storks (family CICONIIDAE) நாரைகள், பெருங் கொக்குகள் போன்ற நீண்ட கால்களும் நீண்ட கழுத்தும் கொண்டவை. முன் கால்களில் சிறிதளவு இறகுகள் இருக்கும். அலகுகள் கனத்து நீண்டு முன் ஒடுங்கிக் கூர்மையாக இருக்கும். நாரைகள் பறக்க ஆரம்பித்தவுடன் கழுத்தை கொக்கைப் போன்று வளைவாக அன்றி, நேராக முன் நீட்டிக் கொண்டு பறக்கும். நாரைகள் குரல் தசைகளற்றவையாதலால் பெரும்பாலும் அமைதியாயிருக்கும். ஆனால் அலகுகளை அடித்து, கைதட்டுவது போல் ஒலி உண்டாக்கும். கூடலின்போது ஆண் பெண் இரு பாலுமே இவ்வித அலகு ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும். இந்தியாவிலே நாரை இனத்தில் சாதாரணமாக எங்கும் காணப்படுவது **மஞ்சள் மூக்கு நாரை**—Painted Stork (Ibis leucocephalus) (படம் 9): கழுகு பருமனுள்ள இது தலை நிமிர்ந்து நின்றால் ஒரு மீட்டர் உயரம் இருக்கும். வெள்ளை நிற உடலின்மேல் ஒளிரும் நெருக்கமான பச்சை வரிகளும், மார்பின் குறுக்கே தெளிவான கரும் பட்டையும் கொண்டது. வாலடியும் இறக்கை நுனியும் ஊதா ரோஸ் நிறம் கலந்து வெள்ளையாயிருப்பது ஒரு தனி அழகு. முகம் முடியில்லாமல் வழு வழுப்பான மஞ்சள் நிறமாயிருப்பதுடன் நுனியில் கீழ் வளைந்து கனத்து நீண்ட அலகும் மஞ்சள் நிறமாகவே இருக்கும். குளங் குட்டைகளிலும் சதுப்பு நிலங்களிலும் சிறு கூட்டமாகவோ அல்லது பெரும் அணிகளாகவோ இவை நின்று மேயும். வேறு நாரைகளுடன் நாள் முழுவதும் அசையாமல் நின்றோ அல்லது அங்கு மிங்கும் நடந்து மீனையும் தவளைக் குஞ்சுகளையும் பிடித்துக் கொண்டோ நீருக்குள்ளேயே நேரம் போக்கும். இவற்றின் முக்கிய உணவு மீனுந் தவளையுமானாலும் நத்தைகள், நீர்ப் பூச்சிகள், நண்டுகளையும் இவை தின்னும். ஆழமற்ற நீரில் தலையை நீட்டித் தாழ்வாக வைத்துக் கொண்டே, திறந்த அலகுகள் பாதி நீரில் மூழ்கி இருந்த வண்ணம் மெல்ல முன்னேறியவாறு இரைதேடும். இவ்விதம் தலை அசையாது நிற்கும் போது ஒரு காலை அங்கும் இங்கும் அசைத்து நீரைக் குழப்பி, அதனை இரை திறந்த அலகுகளுக்கு இடையே ஓடச் செய்யும். சில சமயங்களில் கால அசைவை ஒத்து திடுமென அப்பக்கத்து இறக்கையை விரித்து அசைக்கும். இதுவும் இரையை வேகமாக அலகுகளை நோக்கி ஓடச்செய்யும் நோக்கத்துடன் தான். இவை கூட்டமாக கொக்கு, நீர்க் காகம் இவைகளுடன் சேர்ந்து நீருக்குள்ளோ அல்லது நீரைச் சுற்றிலுமோ உள்ள மரங்களில் கூடு

கட்டும். பறக்க ஆரம்பிக்கையில் தொடர்ச்சியாக இறக்கைகளை பலமாக அடித்து எழும்பிய பின், கப்பல் போல் மிதக்கும். சில சமயங்களில் கூட்டமாக வட்டமிட்டு மேலே சுழன்றுகொண்டு வெகு உயரப் பறக்கும். இவ்விதம் வெயில் நேரத்தில் வெகு உயரம் பறந்து நேரம் போக்குவது இவைகளின் இயல்பு.

கூடு மரக்குச்சிகளாலான தட்டையான மேடை போன்று இருந்தாலும் மத்தியில் ஒரு பள்ளமிருக்கும். அதில் நீர்ச் செடிகளாலும் சருகுகளாலும் மெத்தை விரிக்கப்பட்டிருக்கும். 3 முதல் 5 வரை அழுக்கான வெள்ளை முட்டைகள் கூட்டில் இருக்கும். முட்டைகளில் ஆங்காங்கு புள்ளிகள் அல்லது சிறு வரிகள் காணப்படலாம்.

இந்தியாவில் பல பாகங்களிலும் பரந்து காணப்படும் இன்னொரு நாரை **நத்தைக்குத்தி நாரை** அல்லது **அகலவாயன்**—Openbilled stork (Anastomus Oscitans) (படம் 10). இதன் உயரம் ஒரு மீட்டருக்கு உட்பட்டதே. தூய வெண்மை நிறம் அல்லது சிறிது மங்கலான வெண்மை நிறம் கொண்ட இந்நாரையின் இறக்கையின் நுனியில் கரு நிறம் கலந்திருக்கின்றது. தூரப் பார்வைக்கு வெளி நாடுகளிலிருந்து வரும் வெள்ளை நாரை போல் தோன்றும். ஆனால் கருஞ் சிவப்பு நிறத்தில், மத்தியில் சிறிது இடைவெளி விட்டு வளைந்து நுனியில் சேர்ந்துள்ள இதன் அலகுகளைப் பார்த்தவுடன் இதுதான் அகலவாய்க் கொக்கு என்று சொல்லிவிடலாம். குட்டைகளிலும் சதுப்புகளிலும் இரண்டு மூன்று பறவைகள் மேய்ந்து கொண்டிருக்கும். சில சமயங்களில் சிறு கூட்டங்களாயும் நிற்கும். பொதுவான பண்புகளில் இது மற்ற நாரைகளையே பெரிதும் ஒத்திருக்கிறது; எனவே நடுவில் இடைவெளியுள்ள அலகுகளின் பயன் என்ன வென்று நாம் சரியாக கண்டு கொள்ள முடியவில்லை. ஒருவேளை பெரிய நத்தைகளையே இது விரும்பி உண்பதால் அதற்கு இவ்வித அலகு உதவியாக இருக்கலாம்.

நத்தையின் மேலோட்டை அலகின் இடைவெளியில் நுழைத்து அழுத்தி உடைத்து, நத்தையின் மெதுவான உடலை அழகாக வெளியேற்றி விழுங்கிவிடுகிறது, இந்நாரை. மீன், தவளை, நண்டு, பூச்சிகள், வேறு சில்லான் போன்ற சிறு ஓடுள்ளன், பல்லி இவையும் இதன் உணவாகும். அகலவாயன்கள் மற்ற சதுப்பு நிலவாழ் பறவைகளாகிய, பெருங் கொக்குகள், அரிவாள் மூக்கன்கள், நீர்க் காகங்களுடன் மரங்களில் கூடு கட்டும். இவை பெருங்கூட்டமாகக் கூடு கட்டி வாழும். கூடு குச்சிகளாலான வட்ட மேடை போல்

இருக்கும். ஆனால் மத்தியில் பள்ளமிருக்கும். இது இலைகளாலும் நீர்ச் செடிகளாலும் வளையப்பட்டிருக்கும். பொதுவாக குட்டைகளின் ஓரத்திலோ, நடுவிலோ நிற்கும் மரங்களை இவை விரும்பும். இம்மரங்கள், கிராமங்களின் அருகிலேயும் இருக்கலாம். மூன்று அல்லது நான்கு முட்டைகள் இடும். முட்டையின் நிறம் அழுக்கு வெள்ளை. அதில் புள்ளிகள் இரா.

**பெருநாரை**—Adjutant stork (Leptoptilos dubius) (படம் 11): பெருநாரை உண்மையிலேயே இந்தியாவின் நாரைகளில் மிகப் பெரியது. இது ஒன்றரை ($1\frac{1}{2}$) மீட்டர் உயரமுடையது. இது கனத்த நாரை. உடலின் மேல்ப்பாகம் அழுக்குக் கரு நிறமும், முன் பாகம் அழுக்கு வெள்ளை நிறமுமுடையது. இதன் நான்கு பக்கங்களுடைய ஆப்பு வடிவிலமைந்த மஞ்சள் நிற அலகும், முடியில்லாத செந்தலையும், 30 சென்டி மீட்டர் நீளத்தில் மார்பிலிருந்து நீண்டு தொங்கும் சிவந்த பையும் தவறு அடையாளங்கள். காய்ந்து வரும் சதுப்புகளிலும் நகராட்சி எருக் கிடங்குகளிலும் தனியாகவோ அல்லது சிறு கூட்டமாகவோ பெருநாரை காணப்படும். அட்சுட்டண்ட் என்னும் ஆங்கிலப்பெயர், இதன் ராணுவ நடையை வைத்துக் கொடுக்கப்பட்ட பெயராகும். இது சிப்பாய் போல துடுக்காக காலைத் தூக்கி வைத்து அங்குமிங்குமாக நடந்து இரை தேடும். தொங்கும் பை, பலர் நினைப்பது போல, இரை சேகரிக்கும் பை அல்ல. ஆனால் மூக்குத் துவாரத்துடன் சம்பந்தப்பட்ட காற்றுப் பையேயாகும். இதன் உபயோகம் என்னவென்று தெரியாது. பெருநாரை சில சமயம் கழுகுகளுடன் சேர்ந்து பிணந் தின்ன வரும். செத்துக் கிடக்கும் தவளை பாம்பு, பல்லி போன்ற சிறிய பிராணிகளையும், வெட்டுக் கிளி முதலிய பெரும் பூச்சிகளையும் பிடித்துத் தின்னும். பறக்க ஆரம்பிக்கும்போது அது சிரமப்பட்டு சத்தத்துடன் பறக்கும். இறக்கையை ஓங்கி அடித்துக்கொண்டு சிறிது தூரம் ஓடி உயரக் கிளம்பும். பிற நாரைகளைப் போலவே ஆகாயத்தில் காற்று ஓட்டத்திற்கு ஏற்பப் பறப்பதிலும், வெயில் நாட்களில் ஆகாயத்தில் உயர வட்டமிட்டவாறிருப்பதிலும் இது விருப்பமுள்ளது. இது இளைப்பாறும்போது பரிதாபமாகத் தோற்றமளிக்கும். படத்தில் பின் புலத்தில் காட்டியுள்ளதுபோல் கால்களை மடக்கி அமர்ந்து தலையைப் பின்னால் மடக்கித் தோள்களுக்கு இடையில் வைத்து உறங்கும். இதன் கூடு குச்சிகளாலான பெரிய தட்டு. இது பாறைகளின் கொடுமுடியில் அல்லது மிக வளர்ந்த மரங்களில் தனியாக, அல்லது

நெருக்கமில்லாமல் பரந்து கிடக்கும் கூட்டமாகக் கூடுகட்டி வசிக்கும். அழுக்கடைந்த மூன்று அல்லது நான்கு வெள்ளை முட்டைகள் கூட்டில் இருக்கும்.

பெருநாரை இனத்தில் சிறிய அட்சுட்டண்ட் நாரை ஒன்று இருக்கிறது—Lesser Adjutant (Leptoptilos javanicus) இது இந்தியாவின் பல பாகங்களில் ஆங்காங்கு ஒன்றிரண்டு காணப்படும். இதன் முதுகுப்புறம் ஒளிரும் கருமை நிறத்திலும், அடிப்புறம் வெள்ளையாகவும் இருக்கும். இதற்குத் தொண்டையில் தொங்கும் பை கிடையாது.

**அரிவாள் மூக்கன் குடும்பம்** (Family Threskiornithidae), ஐபிஸ் என்னும் அரிவாள் மூக்கன், ஸ்பூன்பில் என்னும் துடுப்பு வாயன் இவைகளைக் கொண்டது. **வெள்ளை அரிவாள் மூக்கன்**—(The White Ibis (Threskiornis melanocephala) ஒரு நாட்டுக் கோழியின் பருமன் இருக்கும் வெள்ளை சதுப்பு நிலப் பறவை. இதன் தலையும் கழுத்தும் முடியில்லறியும் கரு நிறமாயும் அலகு கரு நிறமாய் கனத்து நீண்டு கீழ் வளைந்தும் இருக்கும். அடைகாக்கும் காலத்தில் தோள்பட்டையிலும் இறக்கை நுனியிலும் சிலேட்டு நிறம் காணப்படும்; கழுத்தில் நீண்ட அழகிய இறகுகளும் முளைக்கின்றன. இப்பறவை இனம் பெருங்கூட்டமாகவோ அல்லது சிறு சிறு கூட்டங்களாகவோ சதுப்பு நிலங்களிலும் குளங் குட்டையோரங்களிலும் காணப்படும். துடுப்புவாயன் (Spoon bill), நாரை, முதலிய பறவைகளுடன் மிகச் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் நடக்கும். சதுப்பு நிலச் செடிகளுக்குள்ளும் நீர் தேங்கிய அறுவடையான நெல் வயல்களிலும், குறடு போல இலேசாகத் திறந்த அலகுகளால் துழாவியவாறு இரைதேடும். ஆழமில்லா நீரில் இரை தேடுகையில் சில சமயம் தலை முழுவதும் நீருக்குள் மூழ்கி விடும். இதன் முக்கிய உணவு நண்டு, நத்தை, பூச்சி புழுக்கள், தவளைகள்; சில சமயம் மீன்களையும் பிடித்துத் தின்னும். இவை மரங்களில் அடையும். பறக்கும்போது வேகமாகவும், நேராகவும் பறக்கும். நாரையைப் போலவே தலையும் கழுத்தும் முன்னே நீண்டு நிற்கும். கால்கள் வாலுக்கடியில் நீண்டு நிற்கும். பறக்கும் போது இடையிடையே இறக்கையைத் தொடர்ச்சியாக அடித்துப் பின் சற்று அமைதியாக மிதந்து செல்லும். வாத்துக்களைப் போல் இவை 'V' போன்ற அமைப்பில் பறக்கும். அல்லது ஒரே சாய்வுக்கோடு போல் செல்லும். நாரைகள் போல் இவற்றிற்கும் ஒலி எழுப்பும் தசைகள் இல்லை.

ஆயினும் அடைகாக்கும் பறவைகள் அடித் தொண்டைக்குள்ளேயே பேசுவது போன்ற ஒரு தனி ஒலியுண்டாக்கும். ஒரு கூட்டம் கூட்டி லிருக்கும் பறவைகள் ஒலி எழுப்பிக் கொண்டிருப்பதைத் தூரத்தில் நின்று கேட்டால், ஏதோ பல ஆட்கள் கூடி மெதுவாகப் பேசிக் கொண்டிருப்பது போல் தோன்றும். இதன் கூடு குச்சிகளால் கட்டப் பட்ட தட்டையான மேடை. இலையோ, புல்லோ இதில் இருக்காது. கூடுகள் தண்ணீருக்குள்ளோ அல்லது கரையிலோ இருக்கும் மரங் களில்—சில சமயம் கிராமத்தின் ஓரங்களில் உள்ள மரங்களில்—நீர்க் காகம், வழுவாங்கி, ஆகியவற்றின் கூடுகளுடன் காணப்படும். சராசரியாக 2—4 முட்டைகள் இடும். முட்டைகள் பச்சை அல்லது நீலங் கலந்த வெள்ளை நிறத்தில், புள்ளிகளுடனே அல்லது புள்ளிகள் இல்லாமலோ இருக்கும். புள்ளிகள் உள்ளபோது அவை மாநிறத்தில் இருக்கும்.

**கருந்தலை அரிவாள் மூக்கன்**—Black Ibis (Pseudibis Papillosa) (படம் 12): இது வெள்ளை அரிவாள் மூக்கன் பருமனுள்ள கரு நிறப் பறவை. இதன் கால்கள் செங்கல் நிறச் சிவப்பு. தோளின் அருகே பளிச்சென்று தோன்றும் வெள்ளைப் பட்டையும், முடி யில்லாத கருந்தலையும், தலையுச்சியில் முக்கோண வடிவிலமைந்த சிவந்த மனுக்களும் இதன் இதர அடையாளங்கள். விவசாயத்துக் காகப் பண்படுத்தப்பட்ட நிலங்களை யொட்டி திறந்த வெளியில் மூன்றிலிருந்து பத்து வரையுள்ள கூட்டங்களாக நின்று மேய்வதைப் பார்க்கலாம். வெள்ளை அரிவாள் மூக்கனைப் போலன்றி நீர்க் கரைகளை இவை அதிகம் நம்பி வாழ்வதில்லை. இவற்றின் முக்கிய உணவு தானியங்களும் பூச்சிகளுமே. எனினும் பல்லி, பாம்பு, பூரான் முதலியவைகளையும் இவை சுவைத்து உண்ணும். இவைகள் இரவில் தமக்குப் பிரியமான சில பிரதேசங்களில், சில மரங்களிலே அடையும். பறக்கும்போது 'V' அமைப்பில் பறக்கும். மற்ற இனத் தைப் போலவே மாறிமாறி சிறகை அடித்தும் அமைதியாக மிதந்தும் பறக்கும். இவை அதிக சப்தம் செய்வதில்லை. ஆயினும் பறக்கும் போது இரண்டு அல்லது மூன்று கட்டை சுருதியில் அழு குரல் போன்ற ஒலி எழுப்பும். மற்றப் பறவைகள் போல் கருந்தலை அரிவாள் மூக்கன் கூட்டமாகவோ, வேறு பறவைகளுடனே சேர்ந்து கூடு கட்டி வாழ்வதில்லை. ஆனால் ஒரே மரத்தில் தன் இனத்தின் வேறு இரண்டு, மூன்று பறவைகளுடன் கூடு கட்டுவதுண்டு. கூடு குச்சியால் கட்டப்பட்டாலும் கிண்ணம் போல் அமையும் அதன்

உட்புறத்தில் வைக்கோலும் சிறகுகளும் மெத்தைபோலக் குவிக்கப் பட்டிருக்கும். கூடுகள் மரங்களின் உயர்ந்த கிளைகளில் அல்லது பனை மரங்களில், நீரில்லாப் பிரதேசங்களில், கட்டப்படும். சில சமயங்களில் கழுகுகள் கட்டிவிட்டுச் சென்ற பழைய கூடுகளையும் இவை பயன்படுத்தும். 2 முதல் 4 வரை நல்ல வெண்பச்சை நிறத்தில் இருக்கும் முட்டையில் சிறு மாநிறக்கோடுகளோ, புள்ளிகளோ இருக்கலாம்.

**துடுப்பு வாயன்**—Spoonbill (Platalea leucorodia) (படம் 13): அரிவாள் மூக்கன்களின் நெருங்கிய உறவென்ருலும், துடுப்பு வாயனுக்கு அலகுகள் வேறுவகையில் அமைந்துள்ளன. கரு மஞ்சள் நிறத்தில் நுனி அகன்று தட்டையாகத் துடுப்பு போன்று இருக்கும், இதன் அலகுகள். இப்பறவை வீட்டுத் தாராவை விடப் பெரிது. 45 சென்டி மீட்டர் உயரம் உடைய துடுப்புவாயன் நீண்ட கால்கள் உடையது. இதன் கழுத்தும் நீண்டது; பனிக்கட்டி போல் வெண்மையானது. முட்டையிடும் காலத்தில் மங்கலான மஞ்சள் நிறத்தில் நீண்ட கொண்டை இறகும் முன் கழுத்தின் அடிப்பாகத்தில் மஞ்சள் புள்ளியும் காணப்படும். சதுப்பு நிலங்களிலும், நதிக் கரையிலும், முகத்துவாரங்களில் மண் மேடுகளிலும் குட்டைகள் ஓரத்திலும் தனியாகவோ அல்லது வேறு பறவைகளுடனே, 10 முதல் இருபது வரை சிறு சிறு வட்டங்களாகவோ இவை இரை மேயும். ஆழமற்ற நீர்க் கரைகளில் காலையிலும் பொழுது போகும் நேரத்திலும் துரிதமாக இரை தேடும். மதிய நேரம் மணல் திட்டுகளில் இளைப்பாறும். இரை மேயும் இடத்திலிருந்து அடையும் இடத்திற்கு சாய்வான கோட்டிலோ அல்லது அமைப்பிலோ மெதுவாக ஒரே அளவாக இறக்கை அடித்து கழுத்தும் காலும் நாரை போல் நீட்டி உயரத்தில் பறந்து செல்லும், துடுப்பு வாயன்கள். இவற்றின் முக்கிய உணவு தவளையின் தலைப்பிரட்டைகள், நத்தைகள், மற்றும் நீர்ப் பூச்சிகள் என்ருலும், ஓரளவு தாவர உணவும் இவை தின்னும். குட்டைகளின் ஓரத்தில் கூட்டமாக நின்று கொண்டு இவை தலையை நீட்டித் துடுப்பு வாயைப் பிளந்து கொண்டு நீருக்கடியில் சகதியினுள் பக்கவட்டமாக இடப்புறமும் வலப்புறமும் அலசிக் கொண்டு கிட்டத்தட்ட அரிவாளைச் சுழட்டுவது போல வேகமாக முன்னேறும். இவை ஒலி எழுப்புவதில்லை. ஆனல் சில சமயங்களில் மெதுவாக காருவது போன்று தொண்டைக்குள்ளேயே ஒலி எழுப்பும். துடுப்பு வாயன்கள், குளக்கரையிலோ அல்லது குளத்துக்குள்ளோ நிற்கும்

மரங்களில்—பெரும்பாலும் கிராமங்களின் ஓரத்தில் நிற்கும் மரங்களில்—கூட்டமாகக் கூடு கட்டும். இக்கூட்டம் தனிப்பட்டதாகவும் இருக்கலாம்; நீர்க் காகம் மற்றும் கொக்குகளும் சேர்ந்ததாகவும் இருக்கலாம். கூடு குச்சிகளாலான மிக அகன்ற மேசை போன்றது. அழுக்குப் படிந்த வெள்ளை முட்டைகள் நான்கு கூட்டில் இருக்கும். சிவந்த தவிட்டு நிறப் புள்ளிகள் அங்குமிங்குமாக முட்டையில் இருக்கும்.

**செங்கால் நாரைக் குடும்பத்தின்** (family PHOENICOPTERIDAE) ஒரே பிரதிநிதியாக இந்தியாவில் இருப்பது **செங்கால் நாரையே**—Flamingo (Phoenicopterus roseus) (படம் 14). நம் வீட்டில் வளரும் வாத்தின் பருமனுடைய இப்பறவைக்கு நீண்ட முடியற்ற சிவந்த கால்களும், நீண்டு வளைந்த கழுத்தும், குறுகிய 'பனங்கிழங்கு பிளந்தன்ன' அலகும் இருக்கின்றன. நிமிர்ந்து நின்றால் இப்பறவை 1½ மீட்டர் உயரம் இருக்கும். கால் விரல்கள் வாத்துக்கு இருப்பதுபோல் சவ்வால் இணைந்திருக்கும். ரோஸ் நிறம் கலந்த வெள்ளையுடலும் கரு நிறமான இறக்கை ஓரமும் கொண்ட இப்பறவைகள் கூட்டமாகப் பறந்து உயரச் செல்லும் காட்சி மனதைக் கவரும் தன்மையது. செங்கால் நாரைகள் சேறுபடிந்த கடற்கரை மேடுகளிலும், உப்புக் கலப்புள்ள அகன்ற நீர்த் தேக்கங்களிலும், ஆழமில்லாக் குளங்களிலும் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. செங்கால் நாரைகள் இந்தியாவின் பல பகுதிகளில் இடம் பெயராது வாழ்வன. என்றாலும் சிறிதளவு உள்நாட்டுக்குள்ளேயே இடப்பெயர்ச்சி நடக்கிறது. இவை சிறு சிறு கூட்டங்களாகவோ பெருங் கும்பல்களாகவோ வாழும். சில கும்பல்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பறவைகளும் இருக்கலாம். ஆழமற்ற நீரில் இறங்கி வரிசையாக நின்று, தலையை நீருக்குள் ஆழ்த்தித் தனக்கே உரிய வித்தையான மேல் அலகைத் தரையில் படும்படி கவிழ்த்துவைத்து முன்னே இழுத்துக் கொண்டு சேற்றைக் கலக்கிய வண்ணம் நடக்கும். இந் நிலையில் மேல் அலகு கிண்ணம் போலமைந்து, சேற்று நீர் அதில் சேகரிக்கப்படுகிறது. சதைப்பற்றுள்ள நாக்கு இந்நீரினுள் ஒரு மத்துப் போலக் கடைந்தவாறு, பூச்சி புழுக்களை அலசும். சீப்பு போன்ற அலகு ஓரங்களின் இடைவெளிகள் வழியே நீர் வெளியேற, பூச்சி புழுக்கள் அலகிலேயே தங்கிவிடும். செங்கால் நாரைகள் சிரமமில்லாமல் நீந்தும். சற்று ஆழமான நீரில் இரைதேடும்போது வால் மட்டும் நீருக்கு வெளியேயும், உடல் முழுவதும் நீருக்குள்ளும்

இருக்க, அந்த முக்குளித்த நிலையிலேயே புழுக்களை அரித்து உண்ணும். சிறு நண்டு, கூன் விரால்கள், பூச்சிகள், புழுக்கள், நிலப் புழுக்கள், நீர்த் தாவரங்களின் விதைகள், அழுகிப் படிந்த பொருட்கள் இவை செங்கால் நாரையின் முக்கிய உணவுப் பொருட்கள். செங்கால் நாரைகள் வாத்து பறப்பது போன்ற அமைப்பிலோ அல்லது அலையலையான நீண்ட சாய்வு கோடுகளாகவோ வேக மாகச் சிறகுகளை அடித்துப் பறந்து செல்லும். ஒடுங்கிய கழுத்தை நீட்டிப் பறக்கையில் சிவந்த கால்களைச் சேர்த்து, பின் நீட்டிக் கொள்ளும். செங்கால் நாரைகள் சப்தமிடுவதில்லை. ஆனாலும் சில சமயங்களில் வாத்து கத்துவது போல் 'ரஹான்ங்கி' என ஒரு ஒலி எழுப்பும். இரை மேயும்போது கூட்டத்திலுள்ள அத்தனை பறவை களும் தொடர்ச்சியாகப் பிதற்றிக் கொண்டிருப்பது போல் தோன் றும். இந்தியாவில் செங்கால் நாரைகள் கூடு கட்டும் இடம் கட்சி வளைகுடா. அக்டோபரிலிருந்து மார்ச் முடிய ஏராளமான பறவைகள் அங்கு கூடுகின்றன. அப்பொழுது நீரின் நிலவரமும் அவற்றுக்கு ஏற்றதாக இருக்கின்றது. சுமார் ஒரு லட்சம் பறவைகள் அப்போது கூடும். செங்கால் நாரை நகரம் என்று வர்ணிக்கத் தக்கதாகத் தோன்றுகிறது இப்பிரதேசம். அச்சமயத்தில் உலகிலேயே செங்கால் நாரைகள் குஞ்சு பொரிக்கும் கூட்டங்களில் இது மிகப் பெரிது என்னலாம். ஈரக் களிமண்ணால் உயரமாகக் கூப்பி வைக்கப்பட்ட கிண்ணம் தான் அதன் கூடு. இது சுமார் 30 சென்டி மீட்டர் உயர மிருக்கும். சூரிய வெப்பத்தில் உலர்ந்து கெட்டியான கூடு, அடுப் பில் வைத்துச் சுட்ட பாத்திரம் போல் இருக்கும். இதன் உச்சி யிலுள்ள குழிவில், சராசரியாக ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் இடப்படும். அடைகாக்கும் நாரை இதன் மேல் காலை மடக்கி கொண்டு தான் உட்காரும். பலர் நினைப்பதுபோல, நின்று கொண்டு கூட்டுக்கு இரு புறமும் காலை விரித்து அடைகாப்பதில்லை.

**வாத்து வம்சம்** (Order ANSERIFORMES)

இதில் அடங்கியவை யாவர்க்கும் பழக்கமான வாத்து, தாரா, அன் னம் ஆகியவையே. புரு பரிமாணம் உள்ள சிறகி அல்லது குள்ளத் தாராக்களும் இக்கூட்டத்துள் அடங்கும். அவை பெயரளவிலே தான் வேறுபடுகின்றனவே யன்றி உருவத்தில் சிறு வாத்துத் தான். அன்னப் பறவைகள் குளிர் மிக அதிகமாகி விடும் ஆண்டுகளில் மட்டும் அவை வாழும் வட துருவப் பிரதேசத்தில் உள்ள ஐரோப் பிய நாடுகளிலும் ஆசிய நாடுகளிலுமிருந்து இடம் பெயர்ந்து இந்தியா

வுக்கு வரும். அவற்றைப் பற்றி இங்கு விளக்க வேண்டியதில்லை. வழக்கமாகக் குளிர்காலத்தில் இந்தியாவுக்கு வரும் ஒரு சில வாத்து இனங்களுள் வரித்தலை வாத்து முக்கியமானது—Bar headed Goose (Anser indicus) (படம் 15). பருமனில் இது நமது சிறு வீட்டு வாத்தை ஒத்தது. வெள்ளையில் தவிட்டு நிறம் கலந்தது. வெள்ளைத் தலையும், கழுத்துப் பக்கங்களும், மஞ்சள் அலகும், தலையின் பின் புறம் குறுக்கே இருக்கும் பட்டையும் தவறு அடையாளங்கள். ஆறு களிலும் ஆழமில்லாக் குளங்களிலும் கூட்டங் கூட்டமாகக் காணப் படும். பயறு, கடலை முளைக்கும் வயல்களிலும், கோதுமை விதைத்த வயல்களிலும் சில சமயம் சிறு சிறு கூட்டங்களாக மேயும். மதிய வெயில் நேரம் ஆற்றோரமுள்ள மணல் திட்டுகளில் இளைப்பாறும். வேட்டைக்காரர்களுக்குப் பயந்து இவை அதிகமாக இரவில் இரை தேடப் புறப்படுகின்றன. சூரியன் அடையும் நேரம் கும்பல் கும்ப லாக இவை V அமைப்பிலோ, சாய்வான கோடுகளாகவோ தங்களது மேய்புலன்களை நோக்கி விரைந்து பறந்து போவதைக் காணலாம். இவ்வாத்தும் மற்ற வாத்துக்களை போலவே நடந்து கொண்டே மேயும். அல்லது ஆழமற்ற தண்ணீருக்குள் வால் வெளியே தெரிய தலைகீழாக மூழ்கி நிற்கும். இவற்றின் உணவுகள் இளந்தளிர்கள், தானியங்கள், தேங்கிய நீரில் வளரும் செடிகளின் கிழங்குகள் முதலியன.

இப்பறவைகளின் கூப்பிடு ஒலி மிக அழகானது. ஒளிந்திருக்கும் வேட்டைக்காரனின் தலைக்குமேல் பறந்து செல்லும் போது 'ஆங், ஆங்' என்று பலவித ஸ்வரங்களில் ஒலி எழுப்பிக் கொண்டு இவை செல்வது சிலிர்ப்பு ஏற்படுத்தும் காட்சி. வரித்தலை வாத்து தந்திர முள்ளது. எப்போதுமே எதிரிகளின் நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் பறவையாதலின் இதனை வீழ்த்துவது சற்று கடினம். அவை சில ஊர்களில் வேட்டையாடப்படுவதில்லை என்று தெரிந்து வைத்திருக்கின்றன. அவ்விடங்களில் (உதாரணமாக புத்த திபேத் தில்) அவை நாம் ஆச்சரியப்படும்படி எருமை அடைக்கும் தொழுப் பக்கம் வரை உலாவித்திரிகின்றன. இந்தியாவில் அவை கூடு கட்டி வாழும் இடம் லடாக். கூடுகள் ஏரிக்கரைகளில் அடர்த்தியாக வளர்ந்த புதர்களுக்குள் செடிகளை வளைத்துத் தாழ்த்தி, மெல்லிய இறகுகளை ஓரமாகக் கொண்டு அமைந்திருக்கும். தந்தம் போன்ற வெண்மையான 3 அல்லது 4 முட்டைகள் ஒரு சமயத்தில் இடப் படுகின்றன.

வழக்கமாக இடம் பெயர்ந்து இங்கு வரும் இன்னொரு வாத்து **சாம்பல் வாத்து**—Greylag (Anser anser) இதுதான் - -வீட்டில் வளரும் வாத்து வகைகள் யாவற்றுக்கும் மூதாதை என நம்பப் படுகிறது. அதன் உருவம் பருமன் எல்லாமே நமது வீட்டு வாத்தை ஒத்திருக்கும். வால் புறம் சாம்பல் நிறத்தில் இருக்கும். அலகோ, சிவந்த மாமிச நிறத்தில் இருக்கும். வரித்தலை வாத்துக்களைப் போல் இது ஆற்றுப் பக்கம் போகாது. குளங் குட்டைகளிலேயே இவை கூட்டமாக கிடக்கும்.

சுமார் இருபது வகை வாத்துக்களில் இந்தியாவிலேயே கூடு கட்டி வாழும் வாத்து இனங்கள் ஐந்து அல்லது ஆறு தான். மற்றவை யெல்லாம் முக்கியமாக சைபீரியாவிலிருந்து இடம் பெயர்ந்து வரு பவையே. நம் நாட்டில் வாழும் வாத்தினங்களுள் பரவலாகப் பல இடங்களிலும் காணப்படுவது **புள்ளி மூக்கன்** என்னும் மண்வெட்டித் தாரா—Spotbill or grey duck (Anas porcilor hyncha) (படம் 16). நாட்டுத்தாராவின் பருமனுடைய இப்பறவை பழுப்பு நிறமும் தவிட்டு நிறமும் கலந்த இறகுகளையுடையது. மூன்று நிறங்களைக் கொண்ட (வெள்ளை, கறுப்பு, ஒளிரும் பச்சை) இறக்கைப் பட்டைகள் வைத்தே இத்தாராவை அடையாளங் கண்டு பிடித்து விடலாம். வேறு தவறு அடையாளங்கள், மஞ்சள் நுனியுடைய கருநிற அலகு, அதனடியில் பக்கத்துக் கொன்றாக பளிச்சென்று தெரியும் சிவந்த புள்ளிகள். இவை இணை இணை யாகவோ அல்லது சிறு கூட்டமாகவோ நாணல் நிறைந்த ஆழ மில்லாக் குளங்களில் காணப்படும். ஆயினும் ஒரு குளத்திலாவது வெளிநாட்டிலிருந்து வரும் வாத்துக்கள் போல் பெருங் கூட்டம் காணப்படுவதில்லை. இது இரை தேடும் முறையே அலாதியானது. அறுவடையாகி நீர் நிறைந்த வயலிலும் சதுப்பு நிலங்களிலும் நடந்து நடந்து, தலையை நீருக்குள் ஆழ்த்தி பூச்சி புழுக்களை அரிக்கும். அல்லது குறைந்த நீர்த் தேங்கிய குளக்கரைகளில் தலை கீழாக நின்று வால் மட்டும் நீருக்கு வெளியே இருக்க, காலை அடித்து, தரையைக் கிண்டிப் புழுக்களை அரிக்கும். என்றாலும் இதன் முக்கிய உணவு தானியங்கள், சதுப்பு நிலத் தாவரங்களின் தளிர்கள், கோரைக் கிழங்குகள் ஆகியவையே. நத்தைகள், நீர்ப் பூச்சிகள் மற்றும் அதன் லார்வாப் புழுக்களையும் அவ்வப்போது தின்னும். நன்றாகப் பறக்கக் கூடிய இவ்வாத்து, வேட்டைக்காரர் களால் இதன் கெட்டிக்காரத்தனத்துக்காகவும் அதிக ருசியான இறைச்சிக்காகவும் விரும்பப்படுகிறது. பொதுவாக சத்தம் செய்யாது.

ஆனால் திடீரென பயத்தில் பறக்க ஆரம்பிக்கையில் 'குவாக்' என்று பெண் பறவை அலறும். ஆண் பறவை உஸ்ஸ் என்று பலத்த ஒலி எழுப்பும். கூடு குளக்கரையில் செடிகளுக்கிடையில் மறைவாகப் புல் மெத்தை போல் கட்டப்பட்டு உள்ளே மெல்லிய தூவிகளாலும் இறகுகளாலும் வளையப்பட்டிருக்கிறது. 7 முதல் 12 வரை முட்டைகள் இடப்படலாம். அவை வெண் பச்சை நிறமாக இருக்கும் அல்லது சற்று தவிட்டு நிறமாக இருக்கும். புள்ளிகள் இரா.

**சிறு சிறகி**—The Lesser Whistling Teal (Dendrocygna javanica) (படம் 17): மண் வெட்டித் தாராவை விடச் சிறிய லாத்து இனப் பறவை சிறு சிறகி. உடல் முழுவதும் ஒரே பாக்கு நிறம். அதனால் வேறு தாராவுடன் இருந்தாலும், உடன் அடையாளம் கண்டு கொள்ள முடியும். இது கூட்டமாகப் பறந்து செல்லும்போது விசிலடிப்பது போல் கேட்கும் சத்தம் இன்னொரு தவறு அடையாளம். 10 அல்லது 15 பறவைகள் சிறு சிறு கூட்டமாக நாணல் நிறைந்த அல்லது மிதக்கும் நீர்ச் செடிகள் கொண்ட ஆழமில்லாக் குளங்களிலும் குட்டைகளிலும், நீர் நிறைந்துள்ள நெல் வயல்களிலும் காணப்படும். ஓரங்களில் அதிக மரங்கள் கொண்ட குளங்களை இவை விரும்புவதுடன், மரக்கிளைகளிலும் சாதாரணமாகத் தங்குவதால் இது **மரத்தாரா** என்றும் அழைக்கப்படுகிறது. குளங்கள் வற்றினால் இப்பறவைகள் வேறு குளங்களுக்குப் பறந்து செல்லும். இவ்வாறு உள்நாட்டுக்குள்ளே குளம் விட்டுக் குளம் மாறிக் கொண்டேயிருக்கும். பறக்கும்போது சிறகடித்து மெதுவாக எழும்பும். இலைக் கோழியும் இவ்வாறே பறக்கிறது. பறக்கும்போது 'உஸ், உஸ்' என்று விசிலடிக்கும் சப்தம் போன்ற ஒலி எழுப்பிக் கொண்டே செல்லும். இது வாலாட்டிக் குருவியின் கூப்பிடு ஒலி போல் கேட்கும். இவை நன்றாக நடக்கும். நன்றாக நீரில் மூழ்கும். இவற்றின் உணவு தவளை, நத்தை, மீன், புழுப் பூச்சிகள், தானியங்கள், இளந்தளிர்கள். கூடு நீர்க்கரைகளில் தரையிலேயே, இலை, புல் அல்லது தழைகளால் கட்டப்படலாம். அல்லது மரக்கிளைகளின் கவுட்டைக் கிடையில் குச்சிகளால் கட்டப்படலாம். சில சமயங்களில் மரப் பொந்துகளிலும் கட்டப்படலாம். இம்மரங்கள் நீர்க் கரையோரந்தான் இருக்க வேண்டும் என்ற நியதியுமில்லை. இன்னும் சில வேளைகளில் பருந்துகளும் காக்கைகளும் விட்டுச் சென்ற பழைய கூட்டையே உபயோகப்படுத்திக் கொள்கிறது சிறகி. முட்டைகள்

7 முதல் 12 வரை இருக்கலாம். சாதாரணமாக 10 இருக்கும். பால் போன்ற வெண்மை நிறமுடைய இம்முட்டைகள் நாளடைவில் அடைகாக்கும் பறவையால் அழுக்காகிப் பழுப்படைகின்றன.

**பெருஞ் சிறகி**—The large whistling teal (D. bicolor): நம் நாட்டில் தங்கி வாழும் பறவையாலும், இது ஆங்காங்கே சில இடங்களில் தான் காணப்படுகிறது. இது குணங்களில் சிறு சிறகியை ஒத்ததே யெனினும் நிறத்தில் வேறுபாடுடையது. உடல் முழுவதும் பாக்கு நிறமாயினும் வால்புறம் வெள்ளை நிறமுடையது. பருமனிலும் முந்தியதைவிடச் சற்று பெரிது.

நம் நாட்டில் தங்கி வாழும் வாத்து இனங்களில் மிகவும் சிறியது, **குள்ளத்தாரா**—Cotton Teal (Nettopus coromandelianus) (படம் 18). பருமனில் சிறிய நாட்டுக் கோழி போன்றது. ஆண் தாரா உடம்பின் மேற்பாகம் ஒளிரும். கருநிற இறகுகள் கொண்டது. தலை வெள்ளை நிறம். கழுத்து உடலின் அடிப்பாகமும் வெள்ளை நிறம் கொண்டது. கழுத்தில் அகலமில்லாத கருங் கழுத்து வளையம் இருக்கும். பறக்கும்போது இறக்கையில் வெள்ளைப் பட்டை யொன்று தெளிவாகத் தோன்றும். பெண் வாத்து வெளுத்த பாக்கு நிற முடையது. கழுத்து வளையமோ இறக்கையில் வெண் பட்டையோ கிடையாது. கூடல் நடைபெறாத காலத்தில் ஆண் வாத்தும் பெண் வாத்து போன்று அழகற்றுத் தோன்றும். ஆனால் வெள்ளை இறக்கைப் பட்டை மட்டும் அதை வேறு படுத்திக் காட்டும். நம் வாத்து இனங்களுள் சிறியதான இது, இந்தியாவின் பல பாகங் களிலும் பரவி இருக்கிறது. இத்தன்மையில் இது மண்வெட்டித் தாராவை ஒத்தது எனலாம். பொதுவாக 5 முதல் 15 வரை சிறு கூட்டமாகக் காணப்பட்டாலும் சில சமயங்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட பெருங்கூட்டமாகவும் குள்ளத் தாராக்கள் குளங்களில் கிடக்கும். மிதக்கும் நீர்ச் செடிகள் கிடந்தால் போதும்; அது எவ்வித நீர் நிலையாயினும் குள்ளத் தாரா அதில் இறங்க தயங்கு வதில்லை. கிராமங்களின் அருகிலுள்ள குளங் குட்டை, சாலையோரக் குழிகள், நெல் வயல்கள் எதுவாயினும் பரவாயில்லை. சில அடி தூரங்களிலேயே வண்ணார்கள் துவைத்துக் கொண்டிருப்பார்கள்; ஆடு மாடுகளைக் கழுவிக் கொண்டிருப்பார்கள். எதையுமே பொருட் படுத்தாமல் குள்ளத்தாராக்கள் நடமாடும். இதன் உணவு முக்கிய மாகத் தானியங்களும், செடிகளின் தளிர்களுமே. என்றாலும் நத்தைகள், நீர்ப் பூச்சிகளையும் இது உண்ணும். தப்புவதற்காக

வேகமாகவும், துடுக்காகவும் பறக்கும். அதுபோலவே சிறகு உதிர்க்கும் காலத்தில் வேகமாக நீருக்குள் மூழ்கவும் செய்யும். இத்தாரா பறக்கையில் ஒரு தனிப்பட்ட கொக்கரிப்புடன் பறக்கும். இதுதான் குள்ளத்தாராவின் கூப்பிடு ஒலி. இதன் கூடு, நீருக்கருகில் இருக்கும் பெரிய மரங்களில் சுமார் 2 முதல் 10 மீட்டர் உயரத்தில் இருக்கும் பொந்துகளே. இப்பொந்துக்குள் 6 முதல் 12 வரை முட்டைகள் இடும். முட்டை தூய தந்தம் போன்ற வெண்மை நிறமாக இருக்கும். பொரித்த குஞ்சுகள் பிறந்த முடி கழியாத சிறு குஞ்சுகளாக இருக்கும்போது அங்கிருந்து சிறகடித்து நீருக்குள் வந்து விழுந்து நீந்தும்.

**வைரி வம்சம் (Order FALCONIFORMES)**

இவை மாமிசந் தின்னும் பறவைகள். இவை இரு குடும்பங்களாகப் பகுக்கப்படும். 1. வில்வேத்திரன் குடும்பம் (Accipiteridae) — இதில் வில்வேத்திரன், கழுகு, கருடன், பருந்து, மலைக்கழுகு ஆகியவை அடங்கும். 2. வைரிகள் குடும்பம் (Falconidae)—வைரி அல்லது இராசாளி வல்லூறு. இவ்விரண்டு குடும்பங்களிடையே திட்டமாக வரையறுக்கக் கூடிய வேறுபாடுகள் எதுவுமில்லை. மாமிசத்தைக் கிழித்து உண்ண ஏற்ற வளைந்த கூர்மையான அலகுகளும், கூர்மையான நகங்களுடைய வலுவான விரல்களும் வேகமாகப் பறக்க வல்ல வலுவான இறக்கைளும் இரண்டு குடும்பங்களுக்கும் பொதுவான பண்புகள். எனினும், இரண்டாவது குடும்பத்தினர் முக்கியமாக வேட்டையாடுபவைகள். ஆகாயத்தில் நின்று கீழ்நோக்கி வேகமாகப் பறந்து வந்து பிராணிகளைப் பிடித்துக் கொண்டு எழும்புபவை; எனவே திறந்த வெளிகளில் வாழுபவை. இவற்றின் இறக்கைகள் நீண்டவை; குறுகலாகவும் நுனியில் சிறுத்தும் அமைந்தவை. வில்வேத்திரன் இனத்தவை மரஞ் செடிகள் அடர்ந்த காடுகளில் வாழும். இவற்றின் இறக்கைகள் சற்று வட்டமாக முடியும். வைரி குடும்பத்தினரைப் போலன்றி, இவை மறைவிடம் ஒன்றில் ஒளிந்திருந்து அங்கிருந்து இரை மேல் திடீரெனப் பாயும் இயல்புடையவை. எனவே மரங்களடர்ந்த பிரதேசத்தை அதிகம் விரும்புகின்றன.

இவை யாவும் ஒரு கூட்டமாக மக்களால் வெறுக்கப்படும் பறவைகள். ஏனெனில் அவை களவு செய்கின்றன என்ற எண்ணம் எல்லோருடைய மனதிலும் வேரூன்றி விட்டது. உண்மையில் இப்பறவைகளின் உணவுப் பழக்கத்தைக் கவனித்தால் நமக்குத் தீங்கு

விளைவிக்கும் எலிகள், பூச்சிக்களையே அதிகமாக இவை வேட்டை யாடுவது தெரியும். இறந்த பிணங்களைத் தின்று சுற்றுப்புறங்களைச் சுத்தப்படுத்துகின்றன. இவை செய்யும் கெடுதலைவிட நன்மைகள் தாம் அதிகமாதலின் இவை காப்பாற்றப்பட வேண்டும்

**கள்ளப் பருந்தும் கருடனும் :** The Pariah and Brahminy kites : (படம் 19, 20) : இவை இரண்டும் சாதாரணமாக எல்லோருக்கும் அறிமுகமானவை. இவை மனித சமுதாயம் உண்டாக்கி வைத்த செயற்கை வாழ்க்கையுடன் இணைந்தவையாதலின் மனிதனையே மிகவும் நம்பி வாழ்வன. **கள்ள பருந்து**—The Pariah kite (Milvus-migrans) தவிட்டு நிறமுடையது. பறக்கும்போது அதன் வால் பிளவுபட்டுத் தோன்றும். இது இதைப் போன்ற பிற பறவை களிலிருந்து இதை வேறுபடுத்திக் காட்டும் ஒரு அடையாளம். ஆடு மாடு அறுக்குமிடங்களிலும் மீன் கடைகள் பக்கமும், மீன் பிடிக்கும் இடங்களிலும் இவ்வினத்தின் பல பறவைகள் வட்டமிட்டுக் கொண்டு கிடக்கும். சிறு துண்டுகளையும் திருடிக் கொண்டு அலைவதைப் பார்க்கலாம். நெருக்கமான சிறு தெருவிலும், பாதசாரிகளுக்கும் தெருவில் ஓடும் வண்டிகளுக்கும் இடையில் விரைவாகத் தலை கீழாகப் பாய்ந்து, வீசி எறியப்பட்ட எலியையோ, மாமிசத் துண்டையோ காலால் பற்றிக் கொண்டு கீழுள்ள வண்டிகள், மனிதர்கள் மீதோ, மேலேயுள்ள தந்திக் கம்பிகள், மின்சாரக் கம்பங்கள் மீதோ மோதாமல் இவை லாகவமாக உயர எழும்பிச் செல்வது நமது ஆகாய விமான வீரர்களுக்குப் பாடம் கற்றுக் கொடுப்பது போல் தோன்றும். ஆனாலும் குஞ்சு பொரித்திருக்கும் பருந்து தனது பிள்ளைக்கென்று கோழிக் குஞ்சைத் திருடிக் கொண்டு போவது கோழி வளர்ப்பவர்களுக்கு வயிற்றெரிச்சலைக் கொடுக்கத் தான் செய்யும். அதனுடைய இசைக்கும் குரல் பட்டணவாசி களுக்குப் பரிச்சயமானதொன்று.

**கருடன்** — The Brahminy kite (Haliastur indus) : இது கள்ளப் பருந்து பருமனையுடையது. ஆயினும் அதைவிட அழகானது. உடலின் மேல்பாகம் ஒளிரும் செந்துரு நிறமானது. தலையும், கழுத்தும் நெஞ்சும் வயிற்றின் அடிப்புறமும் வெள்ளை நிறம். இளம் பறவை பாக்கு நிறத்தில் இருப்பதால் கள்ளப் பருந்துபோல் தோன்றும். ஆயினும் பிளவுபடாத வட்ட வால் நுனி இதற்கு ஒரு நல்ல அடையாளம். கருடன் உள்நாட்டில் ஆறு, குளங்களின் கரைகளில் காணப்பட்டாலும், கடற்கரைகளில் மீனைக் கரை

சேர்க்கும் படகுகளைச் சுற்றியும் மீன் காயப்போட்டிருக்கும் இடங்களிலும் துறைமுகங்களிலும் அதிக எண்ணிக்கையில் காணப்படும். மாரிக் காலத்தில் மழையால் வயல்கள் நிரம்பி வெள்ளம் பரவலாக இருக்கும்போது கருடன் வயற்கரைகளிலும் காணப்படுகிறது. கழிவுப் பொருட்களும், செத்த எலி முதலியவைகளும், மீன்களும் இதன் உணவு. இது பாம்பையும் பிடிக்கும். கள்ளப் பருந்துடன் இது சுற்றித் திரிவதால் அதற்குள்ள திருட்டுப் புத்தியைப் பெற்று, வீட்டுக்குள் வந்து கோழிக் குஞ்சு திருடுகிறது. ஆயினும் தண்ணீர் மட்டத்திலிருந்து உணவுப் பொருட்களை வாரி எடுத்துக் கொண்டு போவதை இது விரும்புகிறது. அதனாலேயே மீன்பிடி துறைகளும் கப்பல் துறைகளும் இதன் தேவைக்கேற்ற தகுந்த இடங்களாக அமைகின்றன. கிராமப் புறங்களில் கருடன், பல்லி, மீன், தவளை, வயல் நண்டு, சிறு பாம்புகள், ஓணான், சில பூச்சிகள் ஆகியவற்றைத் தின்னும். கள்ளப் பருந்தைப் போலவே கருடன் ஈசல்களைத் தின்பதில் தனிப் பிரியங் காட்டுகிறது. இதன் கூப்பிடு தொனி, தொண்டைப் புண்ணால் அவதிப்பட்டு கத்துவது போன்ற விசிலடிக்கும் அழுகைத்தொனி. கள்ளப் பருந்தும், கருடனும் மரங்களில் குச்சிகளால் மேடை போல் கூடு கட்டுகின்றன. கருடன் நீர்க்கரையில் உள்ள மரங்களை விரும்புகிறது. அவற்றின் முட்டைகள் சற்று சிவந்த வெண்ணிறமானவை; சிவந்த தவிட்டு நிறப் புள்ளிகள் உள்ளவை.

**வில்லேத்திரன் குருவி**—Shikra (Accipiter badius) (படம் 21): வில்லேத்திரன் வல்லூறு போன்ற சிறிய பறவை. இது ஒரு மாடப் புருவைவிடச் சிறியது. இதன் முதுகுப் பக்கம் சாம்பல் பழுப்பு நிறமாகவும் அடிப்பாகம் வெள்ளையாகவும் இருக்கும். ஆனால் இடைக்கிடையே துரு நிறத்தில் குறுக்குக் கோடுகள் இருக்கும். வாலடியில் கரும் பட்டைகள் காணப்படுகின்றன. பெண் பறவை ஆணைவிடப் பெரியது. தவிட்டு நிறமுடையது. குஞ்சுகள் தவிட்டு நிறமும் செந்நிறமும் கலந்த முதுகுடையன; இவற்றின் அடிப்பாகம் தவிட்டுக் கோடுகள் இல்லாமல் அகன்ற தவிட்டு நிறப் பட்டைகள் உடையதாயிருக்கும். இவை இணை இணையாய் அடர்ந்த காடுகளிலும் மரங்கள் நெருங்கியுள்ள கிராமப் புறங்களிலும் காணப்படும். வில்லேத்திரன் குருவியின் உணவு தவளை, ஓணான், வெட்டுக்கிளிகள், எலி முதலியன. இதன் வேட்டையாடும் யுக்தியே எதிர்பாராதிருக்கும்போது திடீரெனத் தாக்குவதுதான். இலைமறைவாய்

மரக் கிளைகளில் நிமிர்ந்து அமர்ந்து, கூர்மையாகப் பிராணிகளின் அசைவை எதிர்நோக்கியிருக்கும். இரையைக் கண்டவுடன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நகங்களால் பற்றித் தூக்கிக்கொண்டு போய் அலகால் கிழித்து உண்ணும். இவ்விதமாக அது பூணியல், மைனு, தவிட்டுப்புரு போன்ற சிறு பறவைகள் மீதும் திடீரெனப் பாய்ந்து, துரத்திக் காலால் பற்றி அடித்துக் கொன்று தின்னும். குஞ்சு பொரித்திருக்கும் நாட்களில் வில்லேத்திரன் கோழிக் குஞ்சுகளைத் திருடுவதிலும் கண்ணுக இருக்கும். அவற்றைத் தன் குஞ்சுகளுக்கு இரையாகக் கொடுப்பதற்காக. அதனுல் கோழி வளர்ப்பவர்களுக்குப் பெருந் தொந்தரவாக இது விளங்குகிறது. அதனுடைய கூப்பிடு தொனி நரிக் குருவியின் சத்தம் போன்று, ஆனுல் கனத்த ஒலியாக இருக்கும். குஞ்சு பொரிக்குங் காலை இப்பறவைகள் இணையாக வெகு இரைச்சலிட்டுக்கொண்டு ஒன்றையொன்று விரட்டிக் கொண்டும், ஒன்றின் மேலொன்று விழுந்தடித்துக் கொண்டும் பல ஆகாயச் சேட்டைகள் புரியும். வில்லேத்திரன் காகம் கூடு கட்டுவது போல் குச்சிகளால் இலை அடர்ந்த மரத்தின் உச்சியில் கூடு கட்டும். அது கிராமங்களை அடுத்த சோலைகளிலுள்ள மரங் களையே கூடுமானவரை தேர்ந்தெடுக்கும். 3 அல்லது 4 முட்டைகள் கட்டியிருக்கும். அவை இலேசாக நீலம் பாரித்த வெண் நிறத்தி லிருக்கும். சில சமயங்களில் முட்டைகளின் மீது இலேசான தவிட்டு நிறப் புள்ளிகள் காணப்படலாம்.

நம் நாட்டில் பறந்து திரியும் கழுகுகளுள் அதிக அளவில் எங்கும் காணப்படுவது **வங்காளக் கழுகு** (Bengal Vulture) அல்லது **வெள்ளை முதுகுக் கழுகு**—White Backed Vulture (Gyps bengalensis) (படம் 22). இது ஒரு கனைத்த, பார்த்தால் வெறுப்பூட்டும் தோற்றமுடைய கழுகு. இதன் தலையும், கழுத்தும் முடியின்றி. தோல் சுருக்கம் விழுந்து இருக்கும். தலைக்குமேல் பறக்கும்போது இதன் இறக்கைகளின் அடிப்புறத்தில் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரையில் நீண்ட வெண்கோடு தெரியும். இடையிலுள்ள உடல் பகுதி மட்டும் கருநிறத்திலிருக்கும். குஞ்சுகள் ஒரே தவிட்டு நிற மாயிருக்கும்; வெள்ளை நிறம் இருக்காது. அதனுல் இவை நீள மூக்குக் கழுகு என்ற இன்னொரு சாதாரணமாகக் காணப்படும் கழுகு போல் தோன்றும். வெள்ளை முதுகுக் கழுகு இந்தியாவின் பல பாகங்களிலும் காணப்படுகிறது. இலங்கையில் இல்லை. மிகவும் நீர்ப் பசையுள்ள நிரந்தரப் பச்சைக் காடுகளை இது விரும்புவதில்லை. ஆகாயத்தில் வெகு உயரக் கிளம்பி இறக்கை அடிக்காமலே விரித்த

வண்ணம் மணிக்கணக்கில் மிதந்து கொண்டிருக்கும். அதன் கண் களெல்லாம் ஊர்க் கரையில் ஆடு மாடுகள் அல்லது வேறு பிராணி களின் பிணங்கள் மேல் தான். ஆகாயத் தோட்டிகளாக இவை மனிதனுக்குப் பெரும் உதவி செய்கின்றன. இதன் கண் பார்வை மிகக் கூர்மையானது. மோப்பம் பிடிக்கும் சக்தி குறைவு தான். அறவே இல்லை என்று கூடச் சொல்லலாம். செத்த மாட்டை ஊருக்கு வெளியே கொண்டு போட வேண்டியது தான். ஆகாயத் தைப் பார்த்தால் நிர்மலமாகத் தோன்றும்; ஆனால் எங்கிருந்து இவை வந்தன என்று கூற முடியாமல் ஒரு கூட்டம் கழுகுகள் வந்து கூடிவிடும். அவை அந்த மாட்டைக் காலி பண்ணும் சுருக்கும் வியப்பூட்டுவது. மாமிசத்தை கிழித்து இழுத்துக் கொண்டும் துண்டு துண்டாக்கிக் கொண்டிருக்கும்போதும் தங்களுக்குள் சண்டை யிட்டுக் கொண்டிருப்பது போல் முழு நேரமும் கத்திக் கொண்டும் அங்குமிங்கும் குதித்துக் கொண்டும் இருக்கும். இக்கழுகு ஊர்க் கரைகளிலோ நெடுஞ்சாலைக் கரைகளிலோ உள்ள பெரிய மரங்களில் உயரத்தில் கூடு கட்டும். கூடுகள் மிகப் பெரிய மேடைகள் போல் இலையுடைய சிறு கிளைகளாலும் காய்ந்த குச்சிகளாலும் செய்யப் பட்டிருக்கும். ஒரே ஒரு முட்டைதான் இடுகிறது. இது சுத்த வெள்ளை நிறமாக இருக்கும். முட்டையின் மீது சில சமயம் செந்த விட்டு நிறத்தில் புள்ளிகள் இருக்கும்.

இன்னொரு சிறிய கழுகு **வெள்ளைக் கழுகு** அல்லது **திருக்கழுக் குன்றக் கழுகு**: White or Scavenger vulture or Pharaoh's chicken (Neophron percnopterus) (படம் 23): இது சற்று மங்கலான வெள்ளை நிறக் கழுகு. தோற்றத்தில் பெரிய பருந்து போல் தோன்றும். இறக்கையின் பெரிய இறகுகள் கறுப்பாக வும் தலையும் மூக்கும் முடியின்றி மஞ்சள் நிறமாகவும் இருக்கும். இதன் குஞ்சு கள்ளப் பருந்து போல் தோற்றமளித்தாலும் பறக்கும் போது ஆப்பு போன்ற, பிளவுபடாத வாலைப் பார்த்து வேறு பாட்டைக் கண்டு கொள்ளலாம். ஊர்ப் புறங்களிலும், நகர்ப்புறங் களையடுத்தும் இரண்டு அல்லது மூன்று பறவைகளாகக் காணப்படும். தரையில் நடக்கும் போது துடுக்காகக் காலைத் தூக்கிவைத்து நடக்கும். உயரப் பறக்கும்போது பார்ப்பதற்கு அழகாக ஆகாயத்தில் மிதந்து போவது போல் இருக்கும். இது உண்மையிலேயே தோட்டி தான். குப்பை களங்களில் கிடக்கும் எல்லாவித கழிவுப் பொருட் களையும் மலங்களையுங் கூட விரும்பித் தின்னும். சென்னைக் கருகில் திருக்கழுக்குன்றம் என்னும் ஊரில் கோவில் இருக்கிறது. அது

இப்பறவைகளால் பெயர் பெற்றது. இக்கோவில் குருக்கள் கொடுக்கும் உணவை குறிப்பிட்ட நேரத்தில் வாங்குவதற்காக இரு கழுகுகள் தினம் காசியிலிருந்து வருகின்றன என்றும், இவை சாகா வரம் பெற்றவை என்றும் இந்துக்கள் நம்புகிறார்கள். கவுட்டை போன்ற மரக் கிளைகளிலோ, நீட்டிக் கொண்டிருக்கும் உயர்ந்த பாறையிலோ, அல்லது பாழ்பட்ட பெரிய வீடுகளில் நீண்டு நிற்கும் சுவர் விளிம்பிலோ இவை கூடு கட்டும். கூடு கட்ட உபயோகிக்கும் பொருட்கள், பழைய, கிழிந்த கந்தைத் துணிகள், சாக்குத் துண்டுகள், ஆடு மாடுகளின் தோல் துண்டுகள், முடிகள் ஆகிய பலவகைக் கழிவுப் பொருட்கள். முட்டைகள் இரண்டு இட்டு அடைகாக்கும். இவை வெகு அழகாக இருக்கும். வெள்ளை நிறத்திலிருந்து வெந்த செங்கல் நிறச் சிவப்பு வரையுள்ள இவற்றில் செந்தவிட்டு நிற அல்லது கடுஞ் சிவப்பு நிறப் புள்ளிகள் இருக்கும்.

**இராசாளி**—Shaheen Falcon (Falco Peregrinator) (படம் 24): கூர்மையான இறக்கையுடைய பருந்தினத்துக்கு நல்ல எடுத்துக் காட்டு இராசாளி. இது **வைரி** (Peregrine Falcon) எனப்படும். குளிர் காலத்தில் நம் நாட்டுக்கு வரும் 'பைரி' எனும் பறவையின் உள்நாட்டுப் பிரதிநிதி போன்றது. அண்டங் காக்கையின் பருமன் இருக்கும் இராசாளி வலுவுடைய பறவை. அதன் தோள் அகன்றது. உடலின் மேற்பாகம் கடுஞ் சாம்பல் நிறம். தலை கறுப்பு. கன்னப் பாகங்களில் கறுப்புப் பட்டைகள் இருக்கும். அடிப்பாகம் வெள்ளையும் செந்துரு நிறமும் கலந்து இருக்கலாம். சில பறவைகள் அடி வயிற்றுப் பாகத்தில் கரும் பட்டைகள் கொண்டதாக இருக்கும். பெண் பறவை ஆணைவிட உருவத்தில் பெரிது. இராசாளி உச்சிகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த மலைப் பிரதேசத்தில் வசிக்கிறது. உயர்ந்த பாறைகளில் நின்று கொண்டு அடிவாரத்தில் அதன் உணவாகும் பறவைகள் பறந்து வராதா என்று பார்த்த வண்ணம் இருக்கும். அங்கிருந்து பாய்ந்து கீழே வரும். அது நாம் பிரமிக்கும் அளவு பறக்கும் ஆற்றல் படைத்தது. தொடர்ச்சியாக ஐந்தாறு தடவை அதன் கூர்மையான நுனியுடன் இறக்கையை அடிக்கும்; பின் வேகமாக மிதந்து பாயும். ஆகாயத்திலேயே அதன் இரைப் பறவைகளைக் கூர்மையான கால் நகங்களால் கௌவிப் பிடித்து, பழக்கமான பாறை உச்சியில் கொண்டு போய் இறகுகளைப் பிய்த்து எறிந்து விட்டு உடலைக் கிழித்துத் தின்னும். முட்டையிடுங் காலத்தில் அவை கூடு கட்டும். மலையுச்சியைச் சுற்றி ஆணும்

பெண்ணும் மூச்சுத் திணறடிக்கும் வேகத்தில் ஆகாயத்தில் ஒன்றை ஒன்று விரட்டிக்கொண்டு வட்டமிட்டுக் கூடி விளையாடும். இக் காட்சி கவர்ச்சியாக இருக்கும். மனிதன் ஏறமுடியாத கொடுமுடியில் அவை கூடு கட்டி 3 அல்லது 4 முட்டைகள் இடும். முட்டைகள் சற்று வெளுத்த செங்கல் நிறச் சிவப்பாக இருக்கும். முட்டையின் மேல் செந்தவிட்டு நிறத்தில் புள்ளிகளும் இருக்கும். பல ஆண்டுகள் ஒரே இடத்திலேயே அவை கூடு கட்டும். உபத்திரவம் இல்லாமல் இருப்பின் அவ்விடமே அதற்கு நிரந்தரமாகி விடுகிறது.

**செந்தலை வல்லூறு** — Red headed Merlin (Falco chicquera) (படம் 25) : இது காட்சிக்கினிய சிறிய வல்லூறு. இதன் இறக்கை கூர்மையான நுனியுடையது. முதுகுப்புறம் சாம்பல் நிறமாயும் அடிபாகம் நெருக்கமாகக் கருநிற வரிகள் கொண்ட வெண்மை நிறமாயுமிருக்கும். செம்பாக்கு நிறத்திலிருக்கும் அதன் தலையும், பிடரியும், கண்ணுக்கு முன்னும் கீழுமாகச் செங்குத்தாக ஓடும் ஒரு பாக்கு நிறக் கோடும் நல்ல அடையாளங்கள். பறக்கும்போது வாலின் குறுகிய வெள்ளை ஓரமும் அதற்கு மேல் ஓர் அகன்ற கரும் பட்டையும் மற்றொரு அடையாளம். இவ்வல்லூறுகள் இணை இணையாய் உயர்ந்த பாறைகளிலோ அல்லது மரத்திலோ உட்கார்ந் திருக்கும். இவை அடர்ந்த காடுகளை விரும்புவதில்லை. சில சமயங்களில் அவை வேலி உயரத்தில் அதி வேகமாகப் பறந்து கொண்டிருக்கும். அப்படிப் பறக்கும்போது கண் எல்லாம் இரைப் பொருள்களான சிறு பறவைகள், எலி, அணில், ஓணான், வெட்டுக் கிளி போன்றவற்றின் மீதே இருக்கும். சில சமயங்களில் அந்தி மயங்கும் வேளையில் வௌவால்கள் தாங்கள் அடைந்திருக்கும் குகைகளைவிட்டு வெளியேறும்போது பளிச்சென்று மின்னல் வேகத் தில் பறந்து விழுந்து இவற்றில் சிலவற்றைக் கடித்துக் கொண்டு போகும். ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து வேட்டையாடும் போது ஒரு வல்லூறு பறவைகளை விரட்டிக் கொண்டு வரும்; மற்றொன்று ஒதுங்கி இருந்து சமயம் பார்த்துப் பறந்தடிக்கும், பின் இரு பறவைகளும் சேர்ந்து பங்கு போட்டுக்கொள்ளும். பெண் பறவை ஆணைவிடப் பெரியது. இதை வேட்டைக்காரர்கள் பழக்க வைத்து மைனா, காடை, கௌதாரி போன்ற பறவைகளை அடிப்பதற்கு உபயோகப்படுத்துகின்றனர். இது பறக்கும் போது வில்லேத்திரன் போலவே விறைவாக இறக்கையை அடித்து அம்பு போல் செல்லும். இதன் கூப்பிடு தொனி உச்சத் தொனியில் கீச்சிடுவது போலிருக்கும்.


முட்டையிட்டு அடைகாக்கும் காலத்தில் இவை இன்னும் அதிக தைரியசாலியாகி, காக்கை, பருந்து போன்ற பெரிய பறவைகளையும் கூடுகளுக்கு அருகில் வரவிடாமல் விரட்டியடிக்கும். கூடு இலையடர்ந்த உயர்ந்த தனி மரத்தின் உச்சியில் குச்சிகளால் உருவான மேடை போல் இருக்கும். 3-4 முட்டைகள் கூட்டில் இருக்கும். முட்டையின் நிறம் மங்கலான சிவந்த வெளுப்பு. அதன் மேல் செந் தவிட்டு நிறத்தில் அடர்த்தியாகப் புள்ளிகள் இருக்கும்.

**கோழிகள் வம்சம்** (Order GALLIFORMES)


நம் நாட்டில் இவ்வம்சத்தின் பிரதிநிதிகளாக விளங்குபவை, வேட்டைப் பறவைகள் குடும்பம் (Family PHASIANIDAE) என்று சொல்லப்படும் காடை, கௌதாரி, காட்டுக் கோழிகள் ஆகியவை களடங்கிய குடும்பம் இப்பறவைகளுக்குக் காலில் பின்விரலுக்குமேல் முள் இருக்கும். இது ஆண் பறவைகளில் அதிகமாக வளர்ந்து இருக்கும். முக்கியமாக இவை தானியங்களையே விரும்பும். தரையைக் கிளறி மேய்வதற்கேற்ற நகங்கள் கொண்ட வலுத்த விரல்கள் இப்பறவைகளுக்குண்டு. அலகும் தடித்து உறுதியாகவும் குட்டையாகவும் இருக்கும்.

**கருங் கௌதாரி**—Black Partridge (Francolinus francolinus) (படம் 26) : இது சாதா கௌதாரியளவு இருக்கும். ஆணுடைய நிறந்தான் கறுப்பு. தவிட்டு நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் புள்ளிகளும் வரிகளும் கொண்டது. இப்பறவைகளின் உடல் கனத்தும் வால் உருண்டு குட்டையாயுமிருக்கும். இவ்வழகிய பறவை அஸ்ஸாமிலும் வட இந்தியாவில் பச்சைப் புதர்கள் நிறைந்த காடுகளிலும் நீண்டு வளர்ந்த புல்லுடைய காறுைற்றின் கரைகளிலும் தனியாகவோ, ஜோடியாகவோ காணப்படும். கரும்புத் தோட்டம், மக்காச் சோளக் கொல்லைகள், தேயிலைத் தோட்டம் ஆகியவற்றிலும் இவை இரை மேயச் செல்லும். அதிகாலையிலும் சூரியன் அடைந்த பின்னும் சுறுசுறுப்பாக அலைவதைப் பார்க்கலாம். அவ்வாறு அவை கிண்டிக் கிளறி கறையான்களையும் வேறு பூச்சிகளையும் மேயும்போது குட்டையான வாலின் நுனி சம்புக் கோழியின் வால் போல் மேல் நிமிர்ந்து நிற்கும். இத்தன்மை தென்இந்திய சாதா கௌதாரியில் காணப்படுவதில்லை. இவை அதிவேகமாக நடக்கக் கூடியவை எவ்வித ஆபத்துக்களிலும் இறக்கைகளைவிடத் தங்கள் கால்களையே அதிகம் நம்புகின்றன. திடீரென பறக்க நிர்ப்பந்தப்படுத்தப்பட்டால்


1




2





3
1
18
16
17
15
INCHES
MM



19
20
21
24
25
23
0 1 2 3 4 5 6 7 8 INCHES
0 100 200 MM
K.P. JADAV

5






6
35
31
32
22
12
0 12 24 INCHES
0 300 600 MM
K.P. JADAV

7





8




57
44
46
46a
45
47
0 1 2 3 4 INCHES
0 25 50 75 100 MM
KPJADAV


10







53
60
56
54
61
55
58
0 1 2 3 INCHES
0 20 40 60 80 MM


12





13
84
83
87
94
96
95
90
91
92
92a
93
0 1 2 3 INCHES
0 25 50 75 MM
K.P.JADAV



77
76
75
67
74
73
69
70
0 1 2 3 4 INCHES
0 25 50 75 100 MM
K.P. JADAV


79
81
78
82
86
80
88
89
85
0 1 2 3 4 INCHES
0 25 50 75 100 MM
K.P.JADAV


100
98
99a
99
101
102
97
0 1 2 3 INCHES
0 25 50 75 MM
K.P.JADAV

சுமார் இரு மீட்டர் தூரத்துக்கு மேல் ஒரேயடியாய்ப் பறப்பதில்லே. அப்படிப் பறக்கும்போது வேகமாகச் சிறகடித்து விரைவாக, நேராக சுமார் ஐந்து மீட்டருக்கு மேல் எழும்பாமல் தரைக்குச் சமீபமாகவே பறந்து செல்லும். இதன் உணவு: தானியம், புல், இளந் தளிர்கள் முதலியன. கறையான்களையும் புழுப் பூச்சிகளையும் விரும்பி மேயும். ஆண் பறவையின் கூப்பிடு தொனி மிக உற்சாகமாக உச்சத் தொனியில் கர்ண சுடூரத்தன்மையும் இசைத்தன்மையும் மாறி மாறி அமைந்து எழும்பும். சிக், சீக், சீக், கெதேகேக் என்னும் பல ஒலிகள் கலந்த தொனி இது. இதைக் காது கொடுத்துக் கேட்பவர்களின் கற்பனைக்கு ஏற்றவாறு வார்த்தைகள் அமையும். இதன் கூடு தரையிலேயே புல்வால் வளையப்பட்ட ஆழமற்ற பள்ளமாகும். இப்பள்ளம் புல்வெளிகளில் அடர்த்தியான புல் மூட்டில் இருக்கும். முட்டைகள் 6 முதல் 8 வரை இருக்கலாம். நிறத்திலும், சாக்கலேட் நிறத்திலிருந்து வெளுத்த ஒலிவ நிறம் வரை தவிட்டு நிறத்தில் வேறுபாடுகள் இருக்கலாம்.

**சாதா கௌதாரி**—Grey Partridge (Francolinus Pondicerianus) (படம் 27): இது நன்ருக வளர்ந்த வீட்டுப் பெட்டைக் கோழியின் பாதி பருமன் வரை உருண்டு வளரும். இந்தியாவின் பல பாகங்களிலும் வறண்ட காடுகளில் காணப்படும் இக் கௌதாரி பார்வைக்குக் கருங் கௌதாரி போலவே வால் அமைப்பும் உடல் அமைப்பும் உருவமும் கொண்டது. வெளிருந் தவிட்டு நிறமுடைய பறவை இது என்ருலும், ஆங்காங்கு அழகான மெல்லிய கருங் கோடுகளும், வாலில் சிவந்த பாக்கு நிறமும் இருக்கும். தொண்டை கருஞ்சிவப்பு நிறமாக இருக்கும், முன்புறத்தில் உடைந்த கறுப்பு வரி ஒன்றும் இருக்கும். ஆண் கௌதாரி பெண்ணைவிடக் கனத்தது. காலில் வளர்ந்த முள்ளுடையது. கிராமங்களின் அருகிலும் நெருக்கமில்லாத திறந்த புல் வெளியுடைய புதர்க் காடுகளிலும் இது காணப்படும். எக்காளமாகக் நாட்டுப் புறங்களில் அடிக்கடி ஒலித்துக் கொண்டேயிருக்கும். கூடுங் காலங்களில் இவை இணையாகத் திரியும். மற்றக் காலங்களில் நாலு முதல் ஆறு வரை சிறு சிறு கூட்டங்களாக கழுத்தை நீட்டித் தலையை உயர்த்திக் கொண்டு அங்குமிங்கும் ஓடி இரைதேடும். இதன் உணவு தானியங்கள், பூச்சிகள், சில பழங்கள், கறையான்கள், ஈயின் வளர் புழுக்கள். இப் புழுக்களுக்காக இது மனிதனின் உலர்ந்த மலத்தையும் மாட்டுச் சாணத்தையும் கிண்டிக் கிளறித் திரியும். சிறு சந்தடி கேட்டாலும்

உடனே ஓடி ஒளிந்து கொள்ளும். கட்டாயமாகப் பறக்க நேரிட்டாலொழிய இக் கௌதாரி பறக்க விரும்புவதில்லை. அப்படிப் பறந்தாலும் நாலா பக்கமும் சிதறி ஒன்றிரண்டாக நூறு மீட்டர் தூரம் விரைந்து, சிறகடித்து நேராகத் தரையை ஒட்டியே பறந்து பூமியில் விழுந்ததும் ஓடி மறையும். இரவிலே முள் செடிகளிலே அடையும். ஆண் கௌதாரியின் கூப்பிடு தொனி எக்காளமான வட்டத் தொனியாகும். தொடர்ந்து 3 அல்லது 4 முறை கட்டீட்டார், கட்டீட்டார் என்றோ அல்லது பட்டீலா, பட்டீலா என்று மேலும் மேலும் உச்சத்தில் எழும்பிக் கேட்கும். இளம் பறவைகளை நன்றாகப் பழக்கி விடலாம். வளர்ப்பவர்களைப் பின் பற்றி நாய்க்குட்டிகள் ஓடுவதுபோல் இவையும் பின்னால் வரும். ஆண் கௌதாரிகளைச் சண்டை போடப் பழக்கிப் பந்தயத்துக்கு விடுவார்கள். இவ்வாறு கௌதாரிகளின் போட்டிச் சண்டை சில கிராமங்களில் ஒரு பொழுது போக்கு. விடுமுறை நாட்களில் பலர் பெரும் போட்டிப் பந்தயங்களில் கலந்து கொள்வர். வெற்றி மாலை சூடும் பறவை நல்ல விலைக்குப் போகும். இக்கௌதாரியின் கூடு வறண்ட தரையில் முட்செடிகளுக்கிடையில் தரையில் புல்லால் வளையப்பட்டிருக்கும். 4-8 முட்டைகள் இடப்பட்டிருக்கலாம். சுத்த மஞ்சள் கலந்த தவிட்டு நிறத்தில் (எவ்விதப் புள்ளியோ, கோடோ இல்லாமல்) இருக்கும்.

**கருநெஞ்சுக் காடை**—Black breasted or Rain Quail (Coturnix coromandelica) (படம் 28): இது கௌதாரியில் பாதியளவும் கௌதாரியின் உருவமும் கொண்ட சிறு பறவை. இதன் இறகுகளின் பெரும்பகுதி தவிட்டு நிறமாக இருக்கும். மேற்பாகத்தில் இடையிடையே வெளுத்த கோடுகளும் கரும் புள்ளிகளும் காணப்படுகின்றன. ஆண் காடைக்கு நெஞ்சின் முன்புறத்திலும் அடி வயிற்றிலும் கருநிற இறகுகள் உண்டு. தொண்டையிலும் கறுப்பும் வெள்ளையும் கலந்த கோடுகள் உண்டு. பெண் பறவைக்கு இவை இல்லை.

**வெண் காடை**—Grey quail or Common quail (Coturnix coturnix) இது கரு நெஞ்சுக் காடையை விடப்பெரிது. ஆண் பறவைக்குத் தொண்டையில் கரு நிறத்தில் நங்கூர அடையாளம் இருக்கும்; அடிவயிற்றிலும் மார்பிலும் கருப்புப் புள்ளி கிடையாது. பெண் பறவை கரு நெஞ்சுக் காடையைப் போன்றிருக்கும், ஆனால் உருவத்தில் பெரிது. இறக்கையின் வெளியோரமாக முதல் பெரும் இறகு

களில் தவிட்டு நிறத்திலும் மங்கவான மஞ்சள் நிறத்திலும் கோடுகள் இருக்கும். மேற்சொன்ன காடை வகைகள் இரண்டும் ஒரேவிதப் பழக்க வழக்கங்கள் கொண்டவை. தரையிலே வாழும் இப்பறவை கள் அதிக நேரம் புல்களுக்குள் அல்லது இளஞ் செடிகளுக்குள் மறைந்தே இரை தேடும். இவை வேகமாக ஓடும்; கட்டாயப் படுத்தப் பட்டாலன்றி பறக்க விரும்புவதில்லை. அப்படிப் பறந்தாலும் புல் தரையை ஒட்டியே பறக்கும்; நூறு மீட்டர் பறக்கும். முன் தரையில் இறங்கிவிடும். இவை வேகமாக, விரைவாக இறக்கைகளை அடித்து, நேராகப் பறக்கும். தானிய மணிகள், புல் மணிகள், முக்கியமான உணவான போதிலும், கறையான், சிறு பூச்சிகளையும் அவ்வப்போது உண்ணும். கருநெஞ்சுக் காடையின் கூப்பிடு தொனி விச்விச்...விச்.விச். என்னும் இராகமான இரட்டை விசில். இத்தொனி முட்டையிடுங் காலத்தில் காலையிலும் மாலையிலும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். மப்பு மந்தாரமான நாளில் இரவும் பகலும் கேட்கும். வெண்காடையின் தொனி இதிலிருந்து வேறுபட்டது; பலத்த விசில் சத்தத்தைத் தொடர்ந்து இரு கட்டைத் தொனியுடன் முடியும். இரு இனங்களின் கூடுகளும் வளர்ந்த புல்களுக்குள் அல்லது பயிர்களுக்குள் மறைவாகத் தரையிலேயே புல்லை வளைத்துக் கட்டப்பட்டிருக்கும். 6 முதல் 8 வரை சற்று தவிட்டு நிற முதல் வைக்கோல் நிறம்வரை மாறுபடும் நிறங்களில் முட்டைகள் இடும். அவற்றின் மேல் மங்கலான மஞ்சள் நிறப் புள்ளிகள் இருக்கும். உருவத்தில் பிந்தியதின் முட்டை சற்று பெரிது.

**புதர்க்காடை**—Jungle Bush Quail (Perdicula asiatica) (படம் 29): காடைகளின் உருவமும் பண்புகளும் உடையது புதர்க்காடை. ஆண் பறவையின் முதுகுப்புறம் சற்று சிவந்த தவிட்டு நிறமாகவும், வயிற்றுப் புறம் வெண்மையாகவும் இருக்கும். மேலே கரும்புள்ளி களும் அடிப்பாகத்தில் நெருக்கமாகக் கருங்கோடுகளும் இருக்கும். பெட்டைப் பறவையின் அடிப்பாகத்தில் இளஞ் சிவப்பு கலந்திருக் கும். இரு பாலிலும் தலையிலிருந்து கழுத்தின் இருபுறமும் பாக்கு நிறக் கோடு ஓடிவரும். தொண்டையின் மீது ஒளிரும் பாக்கு நிறத்தில் அகன்ற புள்ளியும் இருக்கும்.

இதைப் போன்ற இன்னொரு காடை **மலைக்காடை**—Rock Bush Quail (P. argoondah) இது புதர்க் காடையுடன் சேர்ந்து மேய்வதை அடிக்கடி காணலாம். இவ்வினத்தின் ஆண் பறவைக்குக் கழுத் துப் பெரும் புள்ளி மங்கலான பாக்கு நிறத்தில் இருக்கும். பெண்

பறவைக்கு கழுத்துப் புள்ளியே இருக்காது. இது புதர்க் காடுகளிலும் இலையுதிர்க்கும் மரங்கள் கொண்ட திறந்த புல்வெளிகளிலும் அதிகமாகக் காணப்படும். 5 முதல் 20 வரை சிறு சிறு கூட்டங்களாகக் கூடி வாழும். பகலில் புதர்க்கடியில் தங்கும் போதும் இரவில் அடையும் போதும் கூட்டத்திலுள்ள பறவைகள் வெளிப்புறம் பார்த்த வண்ணம் அடையும். சிறு தொந்தரவு வந்தாலும் உடன் எல்லாப் பறவைகளும் திடீரென விரைவாகச் சிறகடித்து நாலா பக்கமும் பறந்து கொஞ்ச தூரத்தில் இறங்கி ஓடி மறைந்து கொள்ளும். சற்று நேரத்தில் அவை வீ.வீ.வீ. என்று விசில் அடித்துக் கொண்டு ஒரே இடத்தில் கூடிவிடும். காலையிலும் மாலையிலும் நீர் நிலைகளுக்குத் தண்ணீர் குடிக்க வரும்போது ஒரு குறிப்பிட்ட சிறு ஒற்றடிப் பாதையையே பல நாளாகப் பயன்படுத்தும். அவை ஒற்றை வரிசையில் ஒன்றன் பின் ஒன்ருக வந்து நீர் அருந்தும். இவற்றின் முக்கியமான உணவு புல் மணிகள், வேறு தானியங்கள், இளந் தளிர்கள். இவையன்றி எறும்பு, கறையான், பூச்சி புழுக்களும் இரையாகும். முட்டையிடும் காவங்களில் ஆண் பறவைகளுக்குள் கடுமையான சண்டை நடக்கும். கூடு புதர்களுக்குள் தரையில் புல்லால் வனையப்பட்டிருக்கும். 4-8 முட்டைகள் இடும். இவை வைக்கோல் நிறங் கலந்த வெண்மையானவை. புள்ளிகள் இரா. இத்தன்மையில் இவை கரு நெஞ்சுக் காடையின் முட்டையிலிருந்து வேறுபடுகின்றன.

**வெள்ளைக் காட்டுக் கோழி**—Grey Jungle Fowl (Gallur Sonnaratii) (படம் 30): ஆணும் பெண்ணும் நாட்டுக் கோழி போலவே இருக்கும். சேவலுக்கு வெள்ளைக் கோடுகள் உடலின் மேற் பாகத்தில் உண்டு. வால் ஒளிரும் கரு நிறத்தில் வளைந்த அரிவாள் போன்ற அமைப்புடையது. பெட்டைக் கோழியின் உடலின் மேற்பாகம் பாக்கு நிறத்திலும், அடிப்பாகம் செதில்கள் போல் கரு நிறங் கலந்ததாக ஆனால் முக்கியமாய் வெள்ளையாகவும் இருக்கும். மூங்கில் காடுகளிலும் காடுகள் அழிந்து புதர் வளரும் இடங்களிலும் உண்ணிச் செடிகள் நிறைந்த் புதர்களிலும் தனித்தனியாகவோ இணையாகவோ, நாலைந்தாகவோ இவை நடமாடுவதைக் காணலாம். இந்தியாவில் மேற்கு மலைப்பாகங்களை ஒட்டியே இவை காணப்படுகின்றன. மூங்கில் காய்த்து மணிகளாக உதிரும் போது இவை கூட்டமாக வந்து மேய்வதைக் காணலாம். காட்டுக் கோழிகளில் இன்னொரு இனம் சிவப்புக் காட்டுக் கோழி. இவ்விரண்டுமே ஒதுங்கி வாழுந்

தன்மையன; தைரியமற்றவை. திறந்த வெளியில் காலையிலும் மாலையிலும் கிண்டி மேயவரும். அப்போதும் அவை மறைந்திருக்கும் புதர்களிலிருந்து தூரத்தில் செல்வதில்லை. சிறு சந்தடி கேட்டாலும் விரோதிகள் வருவதாகச் சந்தேகப்பட்டு தலையை முன் நீட்டியும் வாலை கீழே போட்டுக் கொண்டும் அடித்துப் புரண்டு ஓடி மறையும். அவற்றின் உணவு, தானியங்கள், இளந் தளிர்கள், உண்ணிப் பழங்கள் (lantana) போன்ற சிறு பழங்கள் முதலியன. நன்ருகப் பழுத்து, காற்றடித்தால் உதிரும் ஆலம் பழம், அத்திப்பழம், அரசம் பழம் போன்றவைகளை விரும்பி உண்ணும். காட்டுச் சேவலின் கூவல் தொனி கூக்கயா-கயாகூக் என்று பலத்த குரலில் இருக்கும். தொடர்ந்து க்யுக்குன் க்யுக்குன் என்று அருகில் உள்ள பறவை களுக்கு மட்டும் கேட்கும்படி மெல்லிய முத்தாய்ப்புடன் இது முடிவுறும். கூவ விரும்பும்போது சேவல் ஓர் உயர்ந்த மேட்டிலாவது, விழுந்து கிடக்கும் மரத்தின் அடி மரத்திலாவது அல்லது ஏதாவது வேறு உயர்ந்த இடத்திலாவது நின்று கொண்டு இறக்கையைப் பலமுறை உயர்த்தி உடம்பில் அடித்துக் கொள்ளும். ஒரு சேவலின் கூவல் கேட்டவுடன் சுற்று வட்டாரத்தில் இருக்கும் மற்ற சேவல் களும் கூவும்.

காட்டுக் கோழிகள் ஒரு பெண்ணும் ஒரு ஆணுமாகச் சேர்ந்தே இருக்குமா அல்லது பல பெட்டைக் கோழிகளுடன் ஒரு ஆண் உறவு கொள்ளுமா என்று தெரியவில்லை. கோழியின் கூடு தரையில் காலால் கிளறப்பட்ட சிறு பள்ளமே. இது அடர்ந்த புதருக்குள் இருக்கும். 4 முதல் 7 முட்டைகள் வரை ஒரு கூட்டில் இருக்கலாம். நாட்டுக் கோழியின் முட்டை போலவே இவை இருக்கும்.

**சிவப்பு காட்டுக் கோழி—Red Jungle fowl** (G. gallus) இது நம் நாட்டு வீட்டுக் கோழிகளின் மூதாதை ஆகும். இவை முக்கியமாக இமயமலையடிவாரத்திருந்து தெற்கு நோக்கி மத்தியப் பிரதேசம் வரை பரவியிருக்கின்றன. சேவலும், பெட்டைக் கோழியும், நம் நாட்டுக் கோழியில் பான்டம் வகை (Bantam breed) என்று அழைக் கப்படும் ஒரு வகையைப் போலவே இருக்கும். சேவல் கூவுவதும் நாட்டுக் கோழி கூவுவது போலவே இருக்கும்.

**மயில்—The Common Peafowl** (Pavo cristatus) (படம் 31): நம் நாட்டின் கோழி இனங்களில் மிகவும் கவர்ச்சியானது மயில். இது நம் தேசீயப் பறவையும்கூட.

மயில் எல்லோரும் அறிந்த பறவையாதலால் இதை விவரிக்க வேண்டியதில்லை. ஆயினும் ஆண் மயிலின் அழகான கண்கள்

கொண்ட நீண்ட தோகை, அதன் வால் அல்ல, வாலுக்கு மேலுள்ள வாலடி அடுக்கு இறகுகளே என்பதைத்தெரிந்தவர்கள் மிகச் சிலரே. இவ்வடுக்கு இறகுகள் வேறு பறவைகளில் மிகச்சிறியவையாக தட்டுத் தட்டாக அடுக்கி நிற்கும். பெண்ணுக்கு நீண்ட தோகை இல்லை. அதன் நிறமும் கம்மி. மயில்கள் ஆணும் பெண்ணும் கலந்த சிறு சிறு கூட்டங்களாக மலையடிவாரங்களிலும் அடர்த்தியான சமவெளிகளிலும் மேயக் காணலாம். மாலையிலும் காலையிலும் அடர்ந்த செடிகளுக்குள் இருந்து வெளிப்பட்டு, மேய்வதற்காகத் திறந்த வெளிக்கு வரும். குஜராத், ராஜஸ்தான் போன்ற சில பிரதேசங்களில் மயில்கள் மதநம்பிக்கையைச் சார்ந்த உணர்ச்சியால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதப் பிரதேசங்களில் மயில்கள் பயமின்றி சாதுவாக மக்கள் நடமாட்டமுள்ள இடங்களிலும் வாழ்கின்றன. ஆனால் உண்மையில் காட்டு மயில் மிகவும் தந்திரமுடையது. அதன் கண்ணும் காதும் கூர்மையானவை. சிறு சந்தடியைக் கேட்டவுடனே, ஓர் சிறு அசைவைக் கண்டவுடனே அவை அடர்ந்த புதர் வழியே தப்பித்துவிடும். திடீரென அவற்றின் மேல் பாய்ந்தால் பெருஞ் சத்தத்துடன் ராக்கட்போல் செங்குத்தாய் எழும்பி விடும். நீண்ட தோகை இடையூறாக இருப்பதில்லை. பறக்கும்போது வேகம் கூடிக்கொண்டே போகும். இரவில் உயர்ந்த மரங்களில் அடையும். அதிகாலையில் காடு முழுவதும் இவற்றின் சகிக்க இயலாத **மே ஆவ்** என்று உரத்த குரலால் நிரம்ப எதிரொலித்து நிற்கும். ஆண் மயிலின் இத்தொனி, அதன் அழகுக்கு நேர் எதிரிடையாக இருக்கிறது. அதன் முக்கிய உணவு தானியங்கள், கிழங்குகள், தளிர்கள், என்றாலும் மயில் எல்லா உணவையும் உண்ணும் பறவை. பூச்சிகளும் பல்லி வகைகளும், சிறு பாம்புகளும் அதற்கு உணவாகும். தாம் துன்புறுத்தப்படாத கிராமங்களில் இவை துணிச்சலாக வயல்களில் நுழைந்து, கடலை, காணம், பயிறு முதலிய பயிர்களை நாசப்படுத்தும். கூடு தரையிலேயே காலால் கிளறப்பட்ட பள்ளம். இதைச் சுற்றி குச்சிகளும், இலைகளும் வளையப்படும். அடர்ந்த புதருக்குள்ளேயே யார் கண்ணும் படாத வண்ணம் முட்டையிடும். சாதாரணமாக ஒரு கூட்டில் 3 முதல் 5 முட்டைகள் வரை இருக்கலாம். முட்டை வெண்ணெய் நிறமாக அல்லது சற்றுச் சிவந்த நிறமாக இருக்கும்.

**நாரை வம்சம்**—(Order GRUIFORMES);

நம் நாட்டில் பல குடும்பங்களிலுள்ள நீர்ப்பறவைகள் இவ்வம்சத்தில் அடங்கும். முக்கியமான குடும்பங்கள் மூன்று. 1. **நாரைக்**

குடும்பம் (Gruidae) **2. நீர்க் கோழிக் குடும்பம்** (Rallidae) **3. ஒட்டகப் பறவைக் குடும்பம்** (Otididae).

நாரைகளின் பிரதிநிதியாக நம் நாட்டில் விளங்குவது **சாரஸ் நாரை**—Saras Crane (Grus antigone): (படம் 32): கழுகு பருமனுள்ள சாம்பல் நிறப் பெரிய நாரை சாரஸ் என வட மொழியில் வழங்கப்படுகிறது. இது ஒரு மனிதனின் உயரம் வளரும். இரண்டு இரண்டாக இணையாக சதுப்பு நிலங்களிலும் பயிர் ஏற்றியிருக்கும் நிலங்களிலும் இரை தேடித் திரியும். இவை சிறு கூட்டங்களாக அதிகமாகக் காணப்படுவதில்லை. நூற்றுக்கு மேற்பட்ட பறவைகள் ஒருபோதும் கூடியதில்லை. ஆணும் பெண்ணுமாக இணை இணையாய் மேயும். இவை வாழ்நாள் முழுவதும் பிரியாமல் வாழ்கின்றன. இவற்றின் இப்பாசம் வட நாட்டின், கிராமியக் கதைகளில் இடம் பெற்றுவிட்டது. மக்கள் இவற்றிற்கு பக்தியுள்ள மரியாதை கொடுத்து வருவதால் இவை கிராமாந்திரங்களில் பயமின்றி நடமாடுகின்றன. ஆனால் நேர்மாறாக வெளிநாட்டிலிருந்து வருகின்ற வேறு நாரைகளை மக்கள் வேட்டையாடி விரும்பி உண்ணுகின்றனர். சாரஸ் தரையை விட்டு மேலே எழும்பும் போது மிகச் சிரமப்பட்டுத்தான் கிளம்பும். ஆனால் போதிய உயரம் எழும்பியதும் அது வேகமாகவும் வலுவுடனும் பறக்கும். ஒரே சீராக இறக்கைகளை அடித்துப் பறக்கும். கழுத்தை முன் நீட்டியும், கால்களைப் பின்னால் நீட்டி இழுத்துக்கொண்டும் பறக்கும். அவற்றின் கூவல் எக்காளம் ஊதுவது போன்று உரக்கவும் இசைமயமாகவும் இருக்கும். முட்டையிடுங் காலத்தில் ஆணும் பெண்ணும் அழகாக நடனமாடியும், தலை வணங்கியும் இறக்கைகளை விரித்தும் ஆகாயத்தில் குதித்துத் தாவியும் விளையாடிக் கூடி குலாவும். இவற்றின் உணவு தானியங்கள், பூச்சிகள், பல்லி, பாம்பு, தவளைகள், இளந் தளிர்கள், சில சமயங்களில் மீனையும் பிடிக்கும். புதிதாக முளைக்கும் நிலக்கடலை, தானியங்கள் இவற்றையும் தின்பதால் வயல் தோட்டங்களில் இவை புகுந்தால் நாசம்தான். இதன் கூடு தண்ணீருக்குள் மூழ்கிக் கிடக்கும். நெல் வயலின் நடுவே, அல்லது புல் நிறைந்த வரப்பு, சதுப்பு நிலத்தில் ஓர் திட்டு; இவற்றில் வைக்கோல் புல் நாணல் இவைகளால் வளையப்பட்ட கூடைபோல் இருக்கும். முட்டைகள் சற்று சிவந்த வெள்ளை நிறமுடையன. இவற்றில் தவிட்டு நிறத்தில் புள்ளிகள் இருக்கும். சராசரியாக நாரை இரண்டு முட்டைகள் இடுகிறது.

மாரிக் காலத்தில் நம் நாட்டுக்கு வேறு இரு நாரைகள் ஏராளமாக வருகின்றன. இவற்றில் சிறியது **கருங் கழுத்து நாரை**—Demoiselle

crane (Anthropoides virgo) இதற்குத் தலையில் சிறு இறகுகள் உண்டு. கழுத்தும் நெஞ்சும் கன்னங்கரேரென்று இருக்கும். மற்றது வழுக்குத் தலைநாரை—The Common Crane : (Grus grus) இதற்குத் தலை வழுக்கையாகவும் கருப்பாகவும் இருக்கும். கன்னத்தில் சிவப்புப் பட்டையும் இருக்கும்.

**நீர்க் கோழிக் குடும்பம்** (Rallidae) : சதுப்பு நிலத்தின் ஓரங்களில் மறைந்து ஒளிந்து இரைதேடும் பறவைகள் இவை. உருவத்தில் சிறியவை முதல் நடுத்தரம் வரை காணலாம். ஓர் நல்ல உதாரணம், **வெள்ளை நெஞ்சு நீர்க் கோழி, சம்புக் கோழி :** White breasted Water hen : (Amaurornis Phoenicurus) (படம் 33) : இது கௌதாரி பருமன் இருக்கும். காலில் இறகற்ற கூழைவால் சிறு கோழி. இதன் உடல் சாம்பல் நிறமாயிருந்தாலும் முகமும் நெஞ்சும் வெள்ளை வெளேரென்று இருக்கும். எழும்பி நிற்கும் குட்டை வாலுக்கடியில் இரும்புத்துரு போன்ற செந்நிறம். இவை இதனைக் காணும் அடையாளங்கள். பொதுவாக இது தனியாகவோ அல்லது இணையாகவோ கோரைகளை ஒட்டி அல்லது நாணல்களுக்கு இடையில் குளங்குட்டைகளுக்குள் காணப்படும். மாரிக் காலத்தில் மழை பெய்து குட்டைகள் நிரம்ப நீர்ப் பரவிக் கிடக்கும் போது இப்பறவைகள் தாராளமாக பாதையின் ஓரங்களிலும் வேலி ஓரங்களிலும் நடமாடும். அவ்வாறு காணப்படும் போது யாரையாவது பார்த்து விட்டால் உடனே பதுங்கி ஒளியும். அதன் குட்டை வால் அடிக்கடி உயர எழும்பி எழும்பி அடியில் இருக்கும் துரு சிவப்பைக் காட்டும். பொதுவாக இது வெகு வெட்கப்படும் பறவை. அதனால் பிறரால் பார்க்கப் படுவதையே விரும்புவதில்லை. தன்னைக் கூர்ந்து பார்க்கிறார்கள் என்று சந்தேகப்பட்டதும், புதர்களுக்குள் மறைந்து விடும். ஆனால் யாரும் துன்புறுத்தமாட்டார்கள் என்று தெரிந்ததும் தாராளமாக வெளியே வந்து தோட்டங்களுக்குள் புகுந்து கம்பீரமாகக் கவலையின்றித் திரியும். இதன் உணவு, பூச்சிகள், நத்தைகள், புழுக்கள், தானியங்கள், தளிர்கள். பொதுவாக இப்பறவை ஒலி எழுப்புவதே இல்லை. ஆனால் மழைக் காலம் தொடங்கியதும் (அப்போது இது முட்டையிடுகிறது) இது கத்த ஆரம்பிக்கிறது. தூரத்தில் இருந்து கேட்பவர்களுக்கு ஏதோ செக்கு எண்ணெய் ஓடத்தொடங்கியிருப்பதுபோல் தோன்றும். ஆபத்தில் சிக்கிய கரடி அலறுவது போலவும் தோன்றும். வெங்கலத் தொனியுடன் **கிர்ர்-குவ்வாக் குவாக் கிர்ர் குவாக் குவாக்** என்று துவக்கி கல்லான் பறவை கத்துவது போல்

**கூக். கூக். கூக்.** என்று உரத்த உச்சத் தொனியில் முடியும். சுமார் 15 நிமிடங்களுக்குத் தொடர்ச்சியாகக் கத்திய பின் விட்டு விட்டு நாள் முழுவதும் கத்திக்கொண்டு திரியும். இதன் கூடு ஓர் அழகிய தட்டு போன்றது. தரையிலேயே நீர்க் கரையில், நீரிலிருந்து ஒன்றிரண்டு மீட்டர் உயரத்தில் குச்சிகளையும், கொடிகளையும் வைத்து வளையப் பட்டிருக்கும். அடர்ந்த புதர் கூட்டை மறைத்து நிற்கும். 6 அல்லது 7 முட்டைகள் உண்டு. முட்டைகள் சற்றுச் சிவந்த வைக்கோல் நிறத்தில் செந்தவிட்டு நிறக் கோடுகளும் புள்ளிகளும் கொண்டிருக்கும்.

**மயில் கால் கோழி**—Purple moore hen (Porphyrio Porphyrio) காணுங்கோழி வகைகளுள் அழகான ஆனால் வடிவ அமைப்பு இல்லாத பறவை மயில் கால் கோழி. இது வீட்டுக் கோழியைவிட சற்றே சிறியது. இறகு அற்ற நீண்ட விரல்களுடைய நெடுங்காலும் வழுக்கையான சிவந்த நெற்றியும், கனத்த சிவந்த அலகும், அழகான ஊதா நீல நிற உடலும் குட்டையான மேல் வளைந்த வாலும் அதற்கடியில் இருக்கும் வெள்ளை நிறமும் இதற்கு அடையாளங்கள். நாணல் நிறைந்த சதுப்பு நிலங்களில் இவை கூட்டமாக வாழ்கின்றன. நாணல்களுக்கு இடையில் புகுந்து உணவாகக் கொள்ளும் பூச்சிகளையும் நத்தைகளையும் தேடும்போது, காட்டு கோழிகளுக்குண்டான பண்பாகிய வாலை எழுப்பிக் காட்டுதலைக் காணலாம். தாமரை இலைகள் மேலும், வேறு நீர்ச்செடிகள் மேலும் நடந்து திரியும். சிறு தொந்தரவு ஏற்பட்டாலும் உடனே ஓடி ஒளிந்து கொள்ளும். ஆனால் கட்டாயப்படுத்தப்பட்டாலன்றி பறக்க விரும்புவதில்லை. நீண்ட செங்கால்களைப் பின்னால் தொங்க விட்டுக் கொண்டு பறப்பது அவ்வளவு அழகாக இருக்காது. ஆனால் வெகு தூரம் விரைவாகப் பயணம் செய்யும். மயில் காலின் உணவு நெல் தழை, மற்றும் சதுப்பு நிலச் செடிகளின் தளிர்கள். அதனால் நெற்பயிர் முளைக்குங் காலை, இக் கோழிகளால் சேதம் விளைவதுண்டு. முக்கியமாக மேகம் சூழ்ந்திருக்கும் காலம் இப்பறவைகள் இருக்கும் நாணல்களுக்குள்ளிருந்து (அடித் தொண்டையிலிருந்து எழும்புவது போன்ற கொக்கரிப்பும் கத்தலுமாய்) பலவித தொனிகள் கேட்கும். முட்டையிடுங் காலம் வெகுவாக இரைச்சல் கேட்டுக் கொண்டே இருக்கும். ஆண் பறவை பல நகைப்புக் கிடமான கலவி விளையாட்டுக்கள் செய்வதைக் காணலாம். ஆண் பறவை நீர் செடியை வாயில் கௌவிக் கொண்டு பெண்ணைப் பார்த்து வணங்கிய வண்ணம்

கொக்கரித்துக் கொண்டேயிருக்கும். சிறந்த வேட்டைக்காரர்கள் இக் கோழியை வேட்டையாட விரும்புவதில்லை. ஆயினும் நாட்டுப் புறத்தவர்கள் இதன் இறைச்சியை விரும்பி உண்பர். அதனுல் கிராமப்புற வேட்டைக்காரர்கள் இதைச் சுட்டுத் தள்ளுகின்றனர். இதன் கூடு நீரில் மிதக்கும் நாணல்களுக்குள், நீர்ப் பாசிகளையும் வைக்கோலையும் வளைந்து கட்டப்பட்ட ஓர் பெரும் தட்டு போன்றிருக்கும். 3 முதல் 7 வரை முட்டையிடும். வைக்கோல் நிறம் முதல் மங்கலான மஞ்சளுடன் சிவப்பு கலந்த நிறம் வரை வேறுபடலாம். செந்தவிட்டு நிறத்தில் பொட்டுகளும் புள்ளிகளும் இருக்கும்.

ஒட்டகப் பறவை குடும்பத்தில் நம் நாட்டில் காணப்படும் பறவைகளில் முக்கியமானது **இந்தியப் பெரும் ஒட்டகப் பறவை — Great Indian Bustard:** (Choriotis nigriceps) (படம் 35): கழுகு பரிமாணம் உள்ள பெரிய தரை வாழும் பறவை, இந்திய ஒட்டகப் பறவை. ஒரு மீட்டர் உயரம் உடைய இது 15 கிலோ கிராம் எடை வரை இருக்கும். பார்வைக்கு ஒரு சிறிய தீப்பறவை போல இருக்கும். இப்பறவையின் உடல் ஒரே மட்ட நிலையில் நீளவாட்டமாக இறக்கையில்லா கனத்த கால்களில் அமர்ந்திருப்பதுபோல் இருக்கும். மேலிறகு மஞ்சள் கலந்த செந்நிறத்தில், சிறு புழுப் போன்ற நெளியுடைய கருநிறக் கோடுகள் கொண்டிருக்கும். அடிப்பாகம் வெள்ளையாயிருக்கும் ஆனுல் அடி மார்பின் குறுக்கே கரு நிறத்தில் திட்டு உண்டு. இறக்கை அகன்றது. இப்பறவை பறக்கும் போது இறக்கையின் நுனியில் வெள்ளைப் பட்டை தெளிவாகத் தோன்றும். பெண், ஆண் பறவை போலவே இருக்கிறது. ஆனுல் ஆணைவிட சற்று சிறிது. ஒட்டகப் பறவை ஒண்டியாக அல்லது இரண்டு மூன்ருகத் திறந்த வெளியில் மேயும். ஒரு காவத்தில் 25 அல்லது 30 பறவைகள் வரை அங்குமிங்குமாக நின்று மேய்ந்தனவாம். வட நாட்டில் பாலைவனமாகிக் கொண்டிருக்கும் திறந்த புதர்க் காடுகளில் ஒட்டகப் பறவை காணப்படுகிறது. இது மனிதர்களைக் காணக் கூச்சப்படும். அதனுல் இலகுவில் அகப்படுவதில்லை. என்ருலும் ஜீப் கார்களில் வேட்டைக்காரர்கள் சென்று துப்பாக்கியால் சுட்டு விடுகின்றனர். இன்று இப்பறவையைக் கொல்லக்கூடாதென்று தடுப்புச் சட்டம் இருந்துங்கூடக் கள்ளத்தனமாக வேட்டையாடுபவர்கள் இருக்கிருர்கள். இவர்களால் இப்பறவை அநேகமாக அழியுந் தருவாயில் இருக்கிறது. ஒட்டகப் பறவை பறக்க எழும்பும் போது மிகச் சிரமப்பட்டுத்தான் கிளம்புகிறது. ஆனுல் உயர எழும்பினபின் வேகமாகப் பறக்கிறது; அதிக உயரம் பறப்பதில்லை என்ருலும் இறக்கையை

அடித்துக் கொண்டே பல கிலோ மீட்டர்கள் ஒரேயடியாகப் பறக்கும். இதன் உணவு வெட்டுக்கிளி, விட்டில் வண்டுகள், தானியங்கள். தளிர்கள் முதலியன. பாம்பு, பல்லி பூரான்களையும் தின்னும். பொதுவாக ஒன்றையொன்று எச்சரிக்கும் போது குரைப்பது போல் ஹூக் என்று ஒலி எழுப்பும். ஆண் பல பெண் பறவைகளுடன் கூடிக் குலாவும் போது வான்கோழி போல் சிறகடித்தும் பெண்கள் முன் கூத்தாடும். அப்போது நீண்ட அழுகுரல் போல் கத்தும். தரையிலே ஏதாவதொரு புதரின் நடுவேயுள்ள பள்ளத்தில் ஒன்று அல்லது மிக அரிதாக 2 முட்டைகள் இடப்பட்டிருக்கும். இவை தவிட்டு நிறத்தில் சற்று சாம்பல் கலந்த நிறமுடையதாக இருக்கும். முட்டையின் மேல் செந் தவிட்டு நிறப் புள்ளிகள் மங்கலாகக் காணப்படும்.

**உள்ளான் வம்சம்**—(CHARADRIIFORMES)

இது பலதரப்பட்ட பண்புகளுடைய, நீர்ப் பறவைகளும் நீர்க் கரைகளில் வாழும் பறவைகளும் அடங்கிய 13 குடும்பங்கள் கொண்ட பெரிய வம்சம். இதில் நிலைத்து இந்தியாவிலேயே இருக்கும் பறவைகளும் இடம் பெயர்ந்து வேறு நாடுகளிலிருந்து வரும் பறவைகளும் உண்டு.

**இலைக்கோழி குடும்பம்:** (Jacanidae): ஜக்காறு அல்லது தாமரைக் கோழிகளில் இரு இனங்கள் நம் நாட்டில் உண்டு.

**(i) தாமிர இறக்கை இலைக்கோழி**—Bronze winged Jacana: (Metopodius indicus) (படம் 36): பொதுவாகப் பார்த்தால் இது மயில் கால் கோழி போல் தோன்றும். மினு மினுக்கும் கறுப்புத் தலையும். கழுத்தும் மார்பும், தாமிர நிறத்தில் இறக்கையும் முதுகும், களிப் பாக்கு நிறத்தில் சிவந்த குட்டை வாலும் உடையது. இறகற்ற நீண்ட கால்களும், நீண்ட விரல்களும் உடைய இது சாதா கௌதாரியின் பருமன் இருக்கும். கண்ணிலிருந்து முகவாய்க் கட்டைக்கு ஓடும் வெள்ளைக் கோடு, இப்பறவை இலை மறைவில் ஒளிந்திருந்தாலும் காட்டிக் கொடுக்கும். குஞ்சுகள் முக்கியமாக வெள்ளை, செந்நிறம் அல்லது பாக்கு நிறமாக இருக்கும். இப்பறவையின் உணவு நீர் வாழ்ப் பூச்சிகள், நத்தைகள், நீர்ச் செடிகளின் விதை, வேர் முதலியன. இவ்வுணவைத் தேடி நீர்ச் செடிகள் நிறைந்த தடாகங்களில் தாராளமாக செடிகளின் மேல் நடந்து திரிவதற்கே பறவையின் விரல்கள் நீளமாக அமைந்

துள்ளன ; அதன் பாரம் சுற்றிலும் சமமாகப் பரவ இது உதவுகிறது. அதை உபத்திரவப் படுத்தாத இடங்களில் இலைக் கோழி பழகி விடுகிறது. பயமின்றியும் நடமாடுகிறது. கிராமப் புறங்களில் பெண்கள் குளத்தில் வரிசையாய் வந்து தண்ணீர் எடுத்துக் கொண்டும் பேசிக்கொண்டும் போகும்போது, இப்பறவை வெகு அருகிலேயே பயமின்றி மேய்ந்து கொண்டிருக்கும். இரு வகை இலைக் கோழிகளும் நன்ருக நீரில் மூழ்கும். சில சமயம் நீந்தவும் கூடும். ஆனல் அவை வேகமாகப் பறப்பதில்லை. விரைவாக இறக்கையை அடித்து எழும்பி தலையை முன்னே நீட்டிக் கொண்டும் அலங்கோலமாகக் கால்களை நீட்டித் தொங்கவிட்டுக் கொண்டு மெதுவாகப் பறக்கும். தாமிர இலைக் கோழியின் கூப்பிடு தொனி விசில் அடிப்பது போல் தொனியில், ஸீக், ஸீக், ஸீக் என்று அமைந் திருக்கிறது. முட்டையிடும் காலத்தில் அவை சத்தம் இட்டுக் கொண்டும் சண்டை போட்டுக் கொண்டும் இருக்கும். பெட்டைக் கோழி கொக்கரிப்பது போல் ஒரு சத்தமும் கொடுக்கும்.

**(ii) நீள வால் இலைக் கோழி**—Pheasant tailed Tacana (Hydrophasianus chirurgus) இது இந்தியாவில் நிலைத்து நிற்கும் மற்ருெரு இலைக் கோழி. இரண்டு வகைகளும் ஒரே மாதிரியான பழக்க வழக்கங்களும் இட நடமாட்டங்களும் உடையன. இரண்டும் ஒரே குளம் அல்லது குட்டையில் காணப்படலாம். இது வெள்ளையும் தவிட்டு நிறமும் கொண்ட இறகுகள் உடையது. பன்னருவாள் போன்று நீண்டு வளைந்த வாலுடையது. இவ்வாலிலிருந்தே இதைக் கண்டு கொள்ளலாம்.

இரு இனங்களிலும் பெண் பறவை பல ஆண் பறவைகளுடன் சேரும். ஒரு ஆணுடன் சேர்ந்து முட்டையிடும். அம் முட்டைகளை அவ்வாண் பறவையே அடைகாத்து குஞ்சு பொரிக்கும். அதற்கு பின் பெண் வேறு ஒரு ஆணுடன் சேர்ந்து முட்டையிடும். இவ் வாறு முட்டையிடும் காலத்தில் பல கணவர்களுடன் ஒருவர் பின் ஒருவராய் தொடர்பு கொள்கிறது. கூடு, மிதக்கும் குவளைச் செடி யில் நீர்க் கொடிகளால் சுருட்டி வைக்கப்பட்ட சிறு கடை போன்றி ருக்கும். தாமிர இலைக்கோழி நான்கு முட்டைகள் வரை யிடும். ஒவ்வொன்றும் வெகு அழகான தவிட்டு நிறத் தாமிர வர்ணத்தில் கன்னு பின்னு வென்று வலைபோல் கருங்கோடுகள் கொண்டிருக்கும். நீள வால் இலைக் கோழியின் முட்டை ஒளிரும் செந்தவிட்டு நிறத்

தில் அல்லது. பச்சை கலந்த தாமிர நிறத்தில் இருக்கும், புள்ளி களோ, கோடுகளோ இரா.

**ஆள்காட்டி குருவி**—The Redwattled Lapwing (Vanellus indicus) (படம் 37): கௌதாரி பருமன் உள்ள இப்பறவை சாதாரணமாகத் திறந்த வெளிகளிலும் உழுது போட்ட வயலிலும் காணப் படும். இடம் பெயராத இக்குருவியின் முதுகுப் புறம் தாமிர நிறம் வயிற்றுப் பக்கம் வெள்ளை, நெஞ்சுப் பக்கம் கறுப்பு, தலையும் கழுத்தும் கறுப்பு. கண்ணுக்கு முன் இரத்தச் சிவப்பு நிறத்தில் ஓர் தொங்கு தசை இருக்கும், கண்ணுக்குப் பின் புறமிருந்து ஒரு அகலமான வெள்ளைப்பட்டை கழுத்துப் பக்கமாக ஓடி, வயிற்றடி வெள்ளைப் பாகத்துடன் சேர்கிறது. இரண்டு இரண்டாக அல்லது 3 அல்லது 4 கொண்ட சிறு கூட்டங்களாகப் பரவலாக நின்று இவை மேயும். இவை மேயும் இடம் பெரும்பாலும் சிறு குட்டை அல்லது குளத்தின் கரையிலுள்ள, சற்றே ஈரமான உழுத நிலங்கள், அல்லது மேய்ச்சல் நிலங்கள். ஏழெட்டடி ஓடி ஓடித் தலைகுப்புற குனிந்து, இரவும் பகலும் சுறுசுறுப்பாக இரை தேடும். எச்சமயத்திலும்-இரவிலும்கூட விழிப்புடனிருக்கும் பறவைகள், இவை. தான் இருக்குமிடத்தருகே ஆளோ, அல்லது பறவை பிடிக்கும் மிருகங்களோ வந்தால் பயந்து அலறுவது போல் கத்திக்கொண்டு அங்கு மிங்கும் ஓடும். சாதாரண கூப்பிடு தொனி டிட்-யீ-டு-டிட் என்று இரண்டு, மூன்று தடவை அல்லது பல தடவை சேர்ந்தாற்போல் அலங்காரமாகக் கேட்கும். கூடோ அல்லது முட்டையோ களவு போவது போல் இருந்தால் ஆணும் பெண்ணும் அமைதியற்று தலைக்கு மேலே ஆளைக் கொத்துவது போல் பறந்து அலறும். இவற்றின் உணவு பூச்சிகள், வண்டு, லார்வாக்கள், நத்தைகள். சாதாரணமாக மெதுவாகத் தான் அளவுடன் சிறகடித்துப் பறக்கும். சிறிது தூரம் பறந்து சென்றவுடன் தரையில் இறங்கிவிடும். தரையைத் தொட்டவுடன் சற்று ஓடித் தான் நிற்கும். ஆள்காட்டி கூடு கட்டுவதில்லை. தரையிலேயே சற்றுக் கிளறிப் பள்ளமாக்கி முட்டையிடுகிறது. சில சமயம் கூழாங் கற்களைக் கூட்டைச்சுற்றிலும் வட்டமாகச் சேர்த்து வைத்திருக்கும். காய்ந்து வரும் குளங்கள், அல்லது காய்ந்து கிடக்கும் வயல்கள் இவற்றையே சாதாரணமாக முட்டையிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கும். ஆயினும் வழக்கத்துக்கு மாறாக ஒரு பங்களாவின் மொட்டைமாடி, பழக்கத்திலேயே இருந்துவரும் ரெயில் பாதையை யொட்டிய கற்கள் பாவிய தரை இவைகளிலும் சில சமயங்களில்

முட்டையிடும். முட்டைகள் சாதாரணமாக 3 முதல் 4 வரை இருக்கும்; வெளுத்த தவிட்டு நிறத்தில் கரு நிறப்புள்ளிகள் கொண்டவை. முட்டைகளும் புதிதாகப் பொரித்த குஞ்சுகளும் அருகில் இருப்பவர்களுக்கே தெளிவாகப் புலப்படாது. அவ்வளவு நேர்த்தியாக இயற்கையுடன் ஒன்றி நிற்கும்.

**சாதா உள்ளான்** - Common Sandpiper (Tringa hypaleucos): (படம் 38): உள்ளான் வகைகள் என்று அழைக்கப்படும் சிறு நீர்க் கரைப் பறவைகளுள் இது எங்கும் காணப்படும் வகைப் பறவை. காட்டு உள்ளான் என்று இன்னொரு வகையுமுண்டு. அது கூட்டங் கூட்டமாக வந்து இரை மேயும். இவ்வுள்ளான் ஒன்றிரண்டு பறவை களாகவே திரியும். சிறு காடையின் பருமனுள்ள இப்பறவை சற்று பச்சை கலந்த தவிட்டு நிற முதுகும் வெள்ளையான அடிப்பாகமு முடையது. முன் கழுத்தில் சில கருங்கோடுகள் இருக்கும். நெஞ் சின் ஓரம் சற்று அழுக்கடைந்தது போல் தோன்றும். பறக்கும்போது தவிட்டு நிற வாலும் வாலடியும் வெள்ளை நிற இறக்கைப் பட்டையும் இதைக் காட்டு உள்ளானிலிருந்து வேறுபடுத்திக் காட்டும். கார்வால் காஷ்மீர் பிரதேசங்களில் கூடு கட்டும் இப்பறவை நம் நாட்டுக்கு மற்ற பறவைகள் இடம் பெயர்ந்து வருமுன்னேயே வந்துவிடும். சில முட்டையிடாத உள்ளான்கள் மறுபடி இடம் பெயர்ந்து செல்லாமல் இந்தியாவிலேயே தங்கி விடுகின்றன. தனித்தனியாக இப்பறவை குளக்கரையிலும் ஆற்றின் கரைகளிலும் சுறு சுறுப்பாக ஓடி ஓடி தலை யைத் தாழ்த்தி தாழ்த்தி வாலை ஆட்டிக்கொண்டு இரை மேய்வதைக் காணலாம். உபத்திரவம் கொடுக்கப்பட்டால் வேகமாக இறக்கையை அடித்து நீர் மட்டத்துக்குச் சற்று மேலேயே விரைந்து பறந்து டீ டீ டீ என்று மெல்லிய தொனியில் கத்திக்கொண்டு போகும். இப்பறவை இளைப்பாறும் போது இடைக்கிடையே **வீ விட் வீ விட்** என்று கூப்பிடுவதைக் கேட்கலாம். இவை பழக்கமான இடங்களி லேயே தினம் சுற்றிக் கொண்டே இருக்கும். இவற்றின் உணவு மற்ற உள்ளான்களுடையது போலவே, நீர்க் கரையில் வாழும் பூச்சிகள், சிறு நத்தைகள், புழுக்கள். ஆற்றின் கரையில் கூழாங் கற்கள் குவிந்திருக்கும் இடங்களிலோ அல்லது திட்டுகளிலோ கூடு கட்டும். கூடு இலைகளால் சூழப்பட்ட ஒரு சிறு பள்ளம். இதனுள் 4 முட்டைகள் இருக்கும். சற்று சிவந்த மஞ்சள் நிறமுடைய இம் முட்டையில் தவிட்டு நிறப் புள்ளிகள் இருக்கும்.

**காட்டு உள்ளான்** - The Wood or Spotted Sandpiper (Tringa glareola) இது மாரிக்காலத்தில் சைபீரியாவிலிருந்து இந்தியாவுக்கு கூட்டங்கூட்டமாக வரும் இடம்பெயர் சிறு பறவை. சாதா உள்ளான் போலவே தோன்றும். இப்பறவை எப்போதும் கூட்டமாகவே இரை மேயும். கூட்டமாகவே பறந்து செல்லும். பறக்கும் போது பளிச்செனத் தெரியும் இதன் வெள்ளை வாலும் வாலடியும் **சிவ், சிவ், சிவ், சிவ்,** என்று கத்திக்கொண்டு பறப்பதும், சாதா உள்ளானிலிருந்து இதை வேறு படுத்தும் பண்புகள்.

**சிறு ஆள் காட்டிக் குருவி**- The little Ringed Plover (Charadrius dubius) (படம் 39) : காடையைவிடச் சற்றே சிறிய இப்பறவை ஆள் காட்டிப் பறவை போலவே அமைப்பில் இருந்தாலும் உருவத்தில் உள்ளான் போன்றது. முதுகில் தவிட்டு நிறமும் வயிற்றுப் பக்கம் வெள்ளையும் தடித்த உருண்டைத் தலையும், புரு அலகு போன்ற தடித்த அலகும் இறகற்ற மெல்லிய கால்களும் கொண்டது இப் பறவை. இதன் நெற்றி வெள்ளை நிறம்; ஆனால் உச்சியின் முன் பாகமும், கண்ணைச் சுற்றியும், காது மூடும் இறகுகளும், கறுப்பாக இருக்கும். கழுத்தைச் சுற்றியும் ஒரு கறுப்பு ஆரம் கிடக்கும். இதற்குப் பின்னால் முதுகிலிருந்து கருநிற ஆரத்தைப் பிரிக்கும் வெள்ளை ஆரம் ஒன்று தெரிகிறது. இதைப்போலவே இன்னொரு ஆள் காட்டிக் குருவியும் இங்கிலாந்தில் உண்டு. அது கென்ட் பிளோவர் (C. laexandrianus) எனப்படும். அது பறக்கும் போது இறகில் வெள்ளைப்பட்டை தெரியும். அப்பட்டை நமது பிளோவருக்குக் கிடையாது. இவ்வ இரண்டு இரண்டாக இரை மேயும். அல்லது சிறு கூட்டமாகப் பறவைகள் பரவலாக தனித்தனியே நின்று ஈரமான குளக் கரைகளிலும், ஆற்றின் கரைகளிலும் உப்பளங்களிலும் மேடுகளிலும் மேயும். குடுகுடு வென்று குறுநடை போட்டு ஓடி, நின்று நின்று குனிந்து, இரையைப் பொறுக்கும். மிருதுவான சகதியில் நின்று மேயும் போது, கால்களை அடித்து ஓசை செய்யும். அவ்வாறு செய்யும் போது சிறு துள்ளுப் புட்டான்களும், நண்டுகளும் வெளியேறும். அவற்றை இப்பறவைகள் உண்ணும். அவைகள் வாழும் இடங்களில் ஓடாமல் நிற்குமானால் அவற்றைக் கண்டு பிடிப்பது கடினம். அவ்வளவு அழகாக இயற்கையுடன் அவை ஒன்றிவிடும். பரவலாக நின்று இரை மேய்ந்தாலும் ஏதாவது ஒரு பறவை அபாய அறிவிப்புக் கொடுத்தாலே போதும், எல்லாப் பறவைகளும் சிறகடித்து ஒன்றித்துப் பறந்துவிடும். பறக்கும்போது வெகு

வேகமாக 4 அல்லது 5 மீட்டர் உயரத்துக்குள்ளேயே நெளிந்தும், திரும்பியும் செல்லும். அப்போது இடைக்கிடையே அவற்றின் அடிப்பாகத்தின் வெள்ளை ஒன்று போல் எல்லாப் பறவைகளிலும் ஒளிரும். முட்டைகளை சிறு கூழாங்கற்களுக்கு இடையிலேயே, காய்ந்த தரையில், ஆற்றங்கரையில் இடும். நான்கு முட்டைகள் பம்பர உருவத்தில் மஞ்சள் கலந்த செந்நிறக் கூழாங்கல் போன்று அல்லது சிறிது பச்சை கலந்த வைக்கோல் நிறமாக இருக்கும். அவற்றில் ஊதா அல்லது சிவப்புப் புள்ளிகள் இருக்கும். அவை சுற்றுப் புறத்துடன் அழகாக ஒன்றி விடுவதால் தூரத்தில் நின்று அவற்றைச் சுட்டிக்காட்ட முடிந்த பின்னும் அருகில் வந்ததும் கூர்மையாகச் கலனித்தால்தான் கண்டுபிடிக்க முடியும்.

**நத்தைக் குத்தி குடும்பம்**—FAMILY BURHINIDAE **நத்தைக் குத்தி** (TONE CURLEW) (Burhinus oedic emus) (படம் 40): இது ஆள் காட்டிக் குருவி போன்ற நிறமுடையதாயினும் தவிட்டு நிறத்தில் கோடுகளாக கிடக்கும். கௌதாரியை விடச் சற்றுப் பெரியது. கால்களும் சற்று திரண்டு மூட்டு வீங்கி நீண்டவை. தலை தடித்து உருண்டு இருக்கும். கண்கள் உருண்டு பெரியதாக மஞ்சள் நிறத்தில் இருக்கும். திறந்த வெளியுடைய புதர்க் காடுகளிலும் தரிசாகக் கிடக்கும் நிலங்களிலும் உழுது போட்டிருக்கும் நிலங்களிலும் மேய்கிறது. சில சமயங்களில் கிராமப் புறங்களில், மாந்தோப்பு களிலும் இலையுதிர் மரங்கள் நிறைந்த காடுகளிலும் காணப்படுகிறது. இரண்டு இரண்டாய் இவை மேயலாம். அல்லது நான்கு ஐந்து பறவைகள் பரவலாக ஒரு இடத்தில் இரை தேடலாம். நத்தைக் குத்தி மாலை மயங்கும் வேளை அல்லது அதிகாலையில் அல்லது இரவில் சுறுசுறுப்பாய் இரை மேயும். நண்பகலில் அது சோம்பேறி யாய் நின்று கொண்டிருக்கும். ஆள் யாராவது வரக் கண்டால் உடனே தலையைத் தாழ்த்திக்கொண்டு, கழுத்தை உடல் மட்டத் திலேயே முன்னால் நீட்டியவாறு, மெதுவாக அடியெடுத்து வைத்து அருகிலுள்ள செடிகளுக்குள் மறைந்து ஒளிந்து கொள்ளும். அப் போது அது தரையோடு தரையாகப் படுத்துக் கொண்டு கழுத்தை நீட்டிக் கண்ணை உருட்டிக் கொண்டு வந்தவரின் நடமாட்டத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும். இந்நிலையில் அதன் உடல் நிறம், சுற்றுப்புறத்துடன் ஒன்றி விடுவதால் அருகில் நின்றிருந்தும் அதைக் கண்டு கொள்வது கடினமாகிவிடும். அதன் முக்கியமான உணவு நத்தை, பூச்சி, புழுக்கள், பல்லிகள், பாம்புகள். இவைகளுடன்

ஓரளவு பொடிப் பரல்களும் சேர்ந்து உட்கொள்ளப்படுகின்றன. நத்தைக் குத்தியின் கூப்பிடு தொனி அதிகாலையிலும் அந்தியிலும் கேட்பதுடன் நல்ல நிலாவுள்ள இரவில் இரவு முழுவதும் கேட்கும். தொடர்ச்சியாக உச்சத்தொனியில் விசில் அடிப்பது போல் **பிக் பிக் பிக் பிக் விக்-பிக்-விக்** என்று கூப்பிடும். இத் தொனி அநேகருக்கு கேட்டுப் பழக்கமாயிருந்துங் கூட இப்பறவை தான் கூப்பிடுகிறது என்பது தெரியாது. சரள தரையில் இலேசாகக் கிளறிய பள்ளந் தான் இதன் கூடு. இது ஆற்றங் கரையிலோ, திறந்த காட்டில் புதர்க் கடியிலோ, மாந்தோப்பிலோ, இருக்கலாம், 2 முட்டைகள் கூட்டிலிருக்கும். மஞ்சள் நிறம் முதல் பச்சை கலந்த மஞ்சள் நிறம் வரை வேறுபடலாம். இவற்றின் மேல் தவிட்டு நிறம் அல்லது செந் தவிட்டு நிறத்தில் பெரும் புள்ளிகள் இருக்கும். தாயைப் போலவே சூழ்நிலையுடன் ஒன்றிப் போவதால் இவை கண்ணுக்குப் புலப் படுவதில்லை.

**ஆலாக் குடும்பம்**—(LARIDAE): நம் நாட்டின் விரிவான கடற்கரை களில் இக் குடும்பம் வியாபித்திருக்கிறது. புருக்களும் ஆலாக்களும் அடங்கிய இக் குடும்பத்தில் இடம் பெயர்ந்துவரும் பறவைகளும், நிலைத்து நிற்கும் வகைகளும் உள்ளன.

**கடற் புருக்கள்**—(Gulls) ஆலாக்களிருந்து (terns) கனைத்த உடம்பு, அகன்ற அதிகக் கூர்மையற்ற இறக்கை, இவற்றால் வேறுபடும். **தவிட்டுத் தலைக் கடற்புரு** (Brown headed Gull) (Larus brunnicephalus) (படம் 41): சாதாரணமாக எங்கும் காணப்படுவது. இது அண்டங் காக்கையைவிடச் சற்று பெரிது; மேலே சாம்பல் நிறமும் அடிப்பாகம் வெள்ளை நிறமுடையது. வேனிற் காலத்தில் தலை கறுப் பாக மாறும். மாரிக் காலத்தில் இந்தியாவுக்கு வரும்போது தலை தவிட்டு நிறமாகும்; சில சமயம் காதுக்குப் பின் பிறைச் சந்திரன் வடிவில் கரு நிறம் இருக்கும். இதை விடச் சற்றே சிறிய **கருந்தலைக் கடற் புருவிலிருந்து** Black headed gull (Larus ridibundus) இதை வேறுபடுத்திக் காட்டுவது, இறக்கைகளின் பெரும் இறகுகளில் முதல் இறகின் நுனியில் இருக்கும் கண்ணாடி போன்ற வெள்ளை வட்டம். கருந்தலை வகையில் முதல் பெரும் இறகு வெண்மையாக, ஓரங்களிலும் நுனியிலும் கருமையாக, இருக்கும். இரு இனத்திலும் இளங்குஞ்சு களுக்கு வாலின் நுனிக்கு அருகில் கறுப்புக் குறுக்குப் பட்டை இருக்கும். இரண்டுமே கடற்கரையில் அதிகமாகக் காணப்படும். உள் நாட்டிலும் ஆற்றோரங்களில் அபூர்வமாகக் காணப்படும். இக்

கடற் புருக்கள் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் வடக்கிருந்து இந்தியாவுக்கு வருகின்றன. ஏப்ரல் இறுதிக்குள் எல்லாம் திரும்பி விடுகின்றன. துறைமுகங்களையும், படகு நிற்கும் இடங்களையும், மீன் பிடிக்கும் கடற்கரைக் கிராமங்களையும் அடிக்கடி சுற்றி அலையும். கருடன், கள்ளப் பருந்துகளுடன் இவையும் சேர்ந்து, கப்பல்கள், படகுகள் ஆகியவற்றிலிருந்து செத்த மீன்கள், சமையலுக்குப் பின் எஞ்சிய கழிவுப்பொருள்கள், ஆகியவற்றைத் தின்னும். தலைகுப்புற இறங்கி வந்து சிறு அலையுடைய நீரில் வாத்து போல் அமர்ந்து மிதந்து, அங்குமிங்கும் மிதக்கும் கழிவுப் பொருட்களைக் கொத்தித் தின்னும். உள்நாட்டில் இவை பூச்சிகளையும், வண்டின் இளம் வளர் உயிர்களையும், கனி வகைகளையும் உண்ணும். தவிட்டுத் தலையனின் கூப்பிடு தொனி காகங் கரைவது போல் கீயா என்று கேட்கும். இந்தியாவில் லடாக் போன்ற மிக உயர்ந்த இடங்களின் குளங்களில் தான் இவை கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கின்றன. கூடு ஒரு கூடை போன்று பாதி மிதக்கும் தன்மையுடையது. நீர்க்களைகளால் வனையப்பட்ட இக் கூடைகள் கூட்டமாக இருக்கும். கூட்டில் 2 அல்லது 3 முட்டைகள் இருக்கும். வெண் பச்சை முதல் இள மஞ்சள் நிறம் வரை நிற வேறுபாடுகள் உண்டு. முட்டைகளின் மேல் செந்தவிட்டு நிறத்தில் பெரும் புள்ளிகளும் நெளிவுகளும் காணப்படும்.

**ஆலா** (Tern) வுக்கு ஒரு நல்ல உதாரணம், **இந்திய மீசை ஆலா**— Indian whiskered tern: (Chlidonias hybrida) (படம் 42): இது ஒல்லியான, அழகிய, வெள்ளிபோல் வெளுத்த பறவை. புரு போன்றிருப்பினும் புருவை விட மெல்லியது. இது சதுப்பு நில ஆலா (marsh tern) என்ற வகையைச் சேர்ந்தது. இவ்வகைக்கு வால் பிளவு அதிகமில்லாமல் மட்டமாக இருப்பது போல் தோன்றும். அலகு சிவப்பு அல்லது கருஞ் சிவப்பாக இருக்கும். சும்மா உட்கார்ந்து இருக்கும் போது அதன் இறக்கை நுனிகள் வாலுக்கும் பின்னால் நீண்டு நிற்கும். வேனிற் காலத்தில் முட்டையிடும். அப்போது ஆணும் பெண்ணும் தலையில் கறுப்புத் தொப்பி அணிந்தது போல் தோற்றமளிக்கும். வயிற்றுப் பாகமும் கறுப்பாகிவிடும். இப் பறவை சதுப்பு நிலங்களுக்கு மேலேயும் தண்ணீரில் மூழ்கிய நெல் வயல்களுக்கு மேலும் கடற்கரையில் அலையடியாத சகதி அடைந்த ஓரங்களின் மேலும் அலங்காரமாக கூர்மையான சிறகை இடித்து அங்குமிங்குமாகத் திரியும். அப்போது அதன் அலகும் கண்ணும்

கூர்ந்து கீழ் நோக்கி இருக்கும். இருந்தாற்போலிருந்து திடீரெனச் சாய்வாகக் கீழே பறந்து ஒரு நண்டையோ அல்லது தவளைக் குஞ்சையோ, அல்லது பூச்சியையோ நீரிலிருந்து கௌவிக்கொண்டு மேலெழும்பும். மீன் பிடித்துத் திரும்பிய படகுகள் கடற்கரைக்கு வந்ததும், அதிலிருந்து சிறு மீன்கள் அல்லது வேண்டாத நண்டையோ நத்தையையோ தூக்கி எறிய மாட்டார்களா என்று பார்த்துக் கொண்டு வட்டமிடும். கால் விரல்களுக்கிடையில் சவ்வு இருந்தும், கடற் புறாக்கள் போல் நீந்த முடியுமெனினும், அவற்றைப் போல் கடல் நீரில் உட்கார்ந்து மிதப்பதில்லை. வாழ்க்கையில் அதிக நேரம் இவை பறந்தே செலவு செய்யும். சற்று இளைப்பாறத் தரையில் வந்து உட்காரும். பறக்கும் போது இதன் கூப்பிடுந் தொனி **க்ரீரிக் க்ரீரிக்** என, உச்சத் தொனியில் இருக்கும்.

அடிக்கடி காணப்படும் வேறொரு ஆலா **ஆற்று ஆலா** River Tern (Sterna aurantia). இது ஆற்று ஓரங்களில் அதிகமாகத் திரியும். இதுவும் வெண்மையும் சாம்பல் நிறமும் கொண்டது. தலையிலும் பொட்டுப் பொட்டாக தவிட்டு நிறம் கிடைக்கும் முந்திய ஆலாவை விடச் சற்றுப் பெரியது. அலகும் மஞ்சள் நிறமுமாக இருக்கும். வாலும் கவுட்டையாகப் பிளவுபட்டிருக்கும். அடை காக்குங் காலம் தலைக் குல்லாவும் கன்னங்கரே லென்று மாறிவிடும். அடிப் பாகம் வெள்ளையாகவே இருக்கும்.

மீசை ஆலா வட இந்தியாவிலும் காஷ்மீரிலும் கூடு கட்டுகிறது. கூடு நாணல்களாலான மிகச் சிறிய வட்ட மேடு. அது பாதி நீரில் மூழ்கியிருக்கும்; பாசிக் கூட்டத்தில் மிதக்க விடப்பட்டிருக்கும். சாதாரணமாக 2 அல்லது 3 முட்டைகள் இருக்கும். இவை வெண் பச்சை முதல் தவிட்டு நிறம் அல்லது நீர் நிறம் வரை வேறுபடும். அவற்றின் மேல் செந்தவிட்டு நிறத்தில் அல்லது கரு ஊதா நிறத்தில் புள்ளிகள் கிடைக்கும்.

**புறா வம்சம்** (COLUMBIFORMES) :

நம் நாட்டில் மாடப் புறாக்களும் மணிப்புறாக்களும், மணற் கோழிகளும் இவ்வம்சத்திலுள்ளவை. புறாக் குடும்பம் (family COLUMBIDAE), மணற் கோழிக் குடும்பம் (PTEROCLIDAE), இவை இரண்டிலும் வேட்டைக்காரர்கள் விரும்பும் பல பறவைகள் உள. கோழிகள் தண்ணீர் குடிக்கும் போது அலகைத் தண்ணீருக்குள் முக்கிய பின் தலையை மேலே தூக்கிக் குடிக்கும். ஆனால் இவ் வம்சத்தைச் சேர்ந்தவைகள் மாடு நீர் குடிப்பதுபோல் தண்ணீருக்குள் அலகை

வைத்து உறிஞ்சி ஒரே மூச்சாகக் குடிக்கும். **மணற் கோழிகள்** மேற்பார்வையில் புறுவைப் போல் தோன்றினாலும் குட்டையான கழுத்தும் குட்டையான கால்களும் நீண்ட கூர்மையான முடியும் வாலுமுடையன. திறந்த, வரண்ட காடுகளிலும் தரிசாகப் போடப் பட்ட புஞ்சை நிலங்களிலும் கூட்டமாக மேயும். இவை குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நீர் நிலையங்களில் வந்து நீர் அருந்தும் பழக்கம் உடையன.

**சாதா மணற் கோழி**—Common sand grouse (Pterocles exustus) (படம் 42): இது புறுவை விட சற்று சிறிது. மணல் போன்ற மஞ்சள் கலந்த தவிட்டு நிறமுடையது. வால் ஊசி போன்று கூர்மையானது. அடி வயிற்றிலும் நெஞ்சிலும் குறுசிய கரும் பட்டை குறுக்கே ஓடும். அடிப்பாகம் கருந் தவிட்டு நிறமுடையது. தொண்டை, கன்னம், நாடி யாவும் அழுக்கு மஞ்சள் நிறமாக இருக்கும். பெண் பறவை உடல் முழுவதும் கருங் கோடுகளும் புள்ளிகளும் உடையது. மார்புக் கரும் பட்டையும் அதற்குண்டு. தலைக்கு மேல் பறக்கும் போது அதன் ஊசி போன்ற வாலும் கூர்மை யாக முடியும் இறக்கைகளும், செவியைத் துளைக்கும் குட்-ரோ என்னும் இரட்டைச் சுரமும் அதை இனம் சுட்டும். சுமார் 12 பறவைகளுக்கு மேல் கூட்டமாக, பயிர் செய்யாது காய்ந்து கிடக்கும் நிலத்தில் மேயும். தரையின் நிறத்தோடு இப்பறவைகள் ஒன்றி விடுவதால் தூரத்திலிருந்து பார்த்தால் அவைகளைக் கண்டு கொள்வது கடினம். இவை கூட்டமாக நீர்க் கரையிலிருந்து வெகு தூரத்திலேயே மேய்ந்தாலும் காலையும் மாலையும் குறிப்பிட்ட தூரம் தாகந் தீர்க்க ஒரு குறிப்பிட்ட குட்டைக்கு நாலா பக்கங்களி லிருந்தும் பறந்து வரும். இவ்வாறு வரும் போது வேட்டைக்காரர்கள் பதுங்கி இருந்து சுடுவார்கள். வெகு வேகமாகப் பறக்கும் பறவை இது; கண்களுக்குப் புலப்படும் முன்னேயே அதன் தொனி கேட்கும்—'குட்ரோ, குட்ரோ' என்னும் இரட்டை ஸ்வரக் கூவல், உணவு: புல், புல் மணிகள், இலைத் தளிர்கள் இவற்றுடன் சிறிதளவு சிறு பரல்களையும் உண்ணும். வெறுந் தரையில் சிறிது காலால் கிளறிய இடத்தில் முட்டையிடும். 3 முட்டைகள் கூட்டில் இருக்கும். இவை மஞ்சள் அல்லது பச்சை மஞ்சள் நிற கூழாங் கற்கள் போல் இருக்கும். குஞ்சுகளுக்கும் பீமுடி தரை நிறத்திலேயே இருக்கும். அதனால் விரோதிகளின் கண்களுக்கு உடன் புலப்படா. முட்டையில் இருந்து, பொரித்த உடன் வேகமாக ஓடும். ஆண்

பறவை தண்ணீர் குடிக்கும்போது வயிற்று இறகுகளை நனைத்துக் கொண்டு வரும். அதில் இருக்கும் நீரைக் குஞ்சுகள் நக்கிக் குடிக்கும்.

வாத்து, காட்டு வாத்து இவைகளுக்குள் அதிக வேற்றுமை இல்லாதது போலவே புருவுக்கும் மணிப் புருவுக்கும் அதிக வேற்றுமை கிடையாது. உருவத்தில்தான் அது சிறியது. சில புரு வகைகள் தனியே பழங்களையே தின்னும். அவ்வகையில் ஒரு இனத்தைச் சேர்ந்தது தான் **பச்சைப்புரு**.

**சாதா பச்சைப் புரு**—Common green pigeon (Treron Phoenicoptera) (படம் 44): இது நம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகிறது. நாட்டுப் புருவின் பருமன் இருக்கும். இப்புருவின் உடல் மஞ்சள் ஊதாப் பச்சை, சாம்பல், வெளுப்பு இவை கலந்த நிறமுடையது. இயற்கையில் தோள் பக்கமாக இளஞ் சிவப்பு வட்டப் பட்டை இருக்கும் (பெண்ணில் இது மங்கலாக இருக்கும்). கரு நிற இறக்கையின் குறுக்கே மஞ்சள் பட்டை பளிச்சிடும். கால்கள் மஞ்சள் நிறம். மற்ற பச்சைப் புருக்களில் கால்கள் சிவப்பு நிறம். இது கூட்டமாக காடுகளில் நகர்ப் புறங்களின் பழத் தோட்டங்களிலும் (அவைகளுக்கேற்ற சிறு பழங்கள் அங்கு இருப்பின்) காணப்படும். கூடி வாழ்வதுடன் மரங்களிலேயே வாழ்வதும் இப் பறவைகளின் இயல்பு. தரைக்கு அதிகமாக வருவதில்லை. சாமர்த்தியமாக இவை சிறு மரக் கிளைகளிலும் ஏறித் தலை கீழாகக் கூடத் தொங்கி அரசு, அத்திப் பழங்களைப் பறித்துத் தின்னும். ஏதாவது அபாயம் வருகிறது என்று தெரிந்தால் அவை அப்படியே அசைவற்று இலைகளோடு இலையாய் மறைந்துவிடும். உடல் பெரியதாயினும் அவை அசைவற்று நின்று விட்டால் அவற்றைக் கண்டு பிடிப்பது மிகக் கடினம். அவ்வளவு நேர்த்தியாக உடலின் நிறம் இலைகளோடு ஒன்றி விடுகிறது. துப்பாக்கிச் சத்தம் கேட்டு ஓர் ஆலமரத்திலிருந்து பறந்தடித்து ஓடும் புருக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இத்தனை இருந்தனவா என்று பிரமித்து விடுவோம். இரை தேடும் நேரத்துக்குப் பின் ஒரு கூட்டம் புருவும் கிளைகளின் உச்சியில் அமர்ந்து இளைப்பாறும். அதிகாலையில் சூரியோதயத்தின் போதும் மாலை சூரியன் அடையும் போதும் இவை உடலின் இறகுகளை எழுப்பிக் கொண்டு வெய்யில் காயும். இவை வேகமாயும், வலுவாகவும் நேராகவும் பறக்கும். பறக்கும்போது வெண்கலத்தில் அடித்தாற் போல் இறக்கை அடி ஒலி கேட்கும்.

அவற்றின் கூப்பிடு தொனி இனிமையானது. மெதுவானது. சுர ஏற்ற இறக்கம் உடையதால் மனிதரின் குரல் போன்றுமிருக்கும். கூடு ஒரு சில குச்சிகளால் ஆன தட்டு. இது நடுத்தர உயரமான மரங்களின் கிளைகளில் இலைகளுக்கிடையில் மறைந்து இருக்கும். இரு முட்டைகளே கூட்டில் இருக்கும். அவை வெள்ளை வெளே ரென்று பளபளப்பாக இருக்கும்.

**மாடப் புரு**—The Blue Rock Pigeon (Columba livia) (படம் 45): இது யாவரும் அறிந்த, கற் பலகை போன்ற சாம்பல் நிறப் புரு. இதன் கழுத்தும் முன் மார்பும் ஒளிரும் பச்சை நீல நிறம். இறக்கையில் இரு கரும் பட்டைகளும் வாலில் ஒரு அகன்ற கரும் பட்டையும் இருக்கும். இது காட்டுப் புருவே. நமது நாட்டில் வளரும் பல வகை வீட்டுப் புருக்களின் மூதாதை, இது. உயர்ந்த பாறைகள் கொண்ட திறந்த வெளிக் காடுகளில் இவை வாழும். நெருக்கமான காடுகளை இவை விரும்புவதில்லை. அநேக இடங் களில் காட்டுப் புருவே வீட்டுப் புருக்களுடன் சேர்ந்து மாடங் களிலும், கோபுரங்களிலும் உயர்ந்த வீடுகளின் மோடுகளிலும் கூடு கட்டி வாழ்வதுடன் அச்சமின்றிக் கீழிறங்கி மக்கள் வாழும் பகுதிகளிலும் வயல்களிலும் தானியங்களை மேய்கின்றன. அநேக மாக இந்தியாவின் ஒவ்வொரு நகரிலும் தங்கி வாழும் மாடப் புரு இனக் கூட்டம் உண்டு. இவை வீட்டுப் புருக்களுடன் தாராள மாகக் கலந்து மனிதனுடன் ஒட்டி வாழும் பறவையாகிவிட்டது. சகலவிதச் சந்தடிகளையும் பொருட்படுத்தாமல் எல்லாவிதச் சலுகை களையும் பெற்று ஒரு தொந்தரவுக்கும் உட்படாமல் வாழும் பறவை யாகி, வீடுகளுக்குள் அடைவதும் கூடு கட்டுவதும் பழக்கமாகி விட்டது. ரெயில்வே குட்ஸ் ஷெட், பெரிய கோயில்களின் சாரப் பொந்து, மசூதிகள் இவைகள் இப் பறவைகள் விரும்பும் இடங் களாகி விட்டன. காட்டில் வாழும் புருக்கள் பாறை இடுக்குகள், கிணற்றுப் பொந்துகள், பழைய மலைக் கோட்டைகள், பாழடைந்த காட்டு அரண்மனை மோடுகள் இவற்றில் கூடு கட்டும். காட்டில் விதைக்கும் தானியங்களை உண்டு வாழும். இவற்றின் கூப்பிடுதொனி எல்லோருக்கும் பழக்கப்பட்டதுதான். **கூட்ர்—கூ கூட்ர்—கூ** என்று ஆண்பறவை கழுத்து முடியைச் சிலுப்பிக் கொண்டு சோடிப் புருவிடம் குனிந்து, நிமிர்ந்து அதன் முன் சுற்றும்போது கூவும். கூடு சிறிதளவே குச்சிகளையும் வைக்கோலையும் வைத்து வனையப் பட்ட தட்டு. இரண்டு புள்ளியற்ற வெள்ளை முட்டைகள் கூட்டில் காணப்படும்.

**மணிப்புரு**—Spotted Dove (Streptopelia Chinensis) (படம் 46) மேலே: இது மைனாவை விடப் பெரிது. ஆனால் மாடப்புருவைவிடச் சிறியது. புருப்போன்ற ஆனால் மெலிந்த உருவமும் தவிட்டு நிறத்தில் வெள்ளைப் புள்ளிகள் கொண்ட மேற்பாகமும், வெள்ளைப் புள்ளிகள் நெருங்கி நிறைந்த கரு நிறப் பின்கழுத்தும் உடையது. இணை இணையாய் அல்லது சிறு கூட்டமாக பசுமையாக உள்ள நெருக்கமற்ற காட்டுப்பாங்கான இடங்களிலும், நீர்ப்பாங்கான பிரதேசங்களிலும், புஞ்சைக் காடுகளிலும் இரைமேயும். தொந்தரவு கொடுக்கப்படாத இடங்களில் ஆட்கள் பழக்கங்களையும் பொருட்படுத்தாது வீட்டுத் தோட்டங்களிலும் வீட்டுத் தாழ்வாரங்களிலும் கூடு கட்டி வாழும். இதன் கூப்பிடு தொனி கேட்க இனிமையாக, ஆனால் சோகமானதாகத் தோன்றும்: க்ரு-க்ருக் - க்ருக் - க்ரு. .க்ரு - க்ரு-க்ரு என்ற தொனி. 'க்ரு'க்களின் எண்ணிக்கை மூன்று முதல் ஆறு வரை இருக்கும். கூடு சிறு மரக்கிளையில் அல்லது குத்துச்செடியில் சில துரும்புகளை வைத்து வளையப்பட்ட சிறு தட்டு. சில சமயங்களில் பங்களாவில் நீண்டு நிற்கும் விளிம்பில் கூடு கட்டியிருக்கும். இரண்டு வெள்ளை முட்டைகள் கூட்டில் இருக்கும்.

மைனாவை விடச் சற்று பெரிய மற்றொரு புரு **தவிட்டுப் புரு** Red Turtle Dove (Streptopelia tranquebarica) (படம் 46 அடியில்): பெண் புரு ஆண் புருவிலிருந்து வேறுபடும். படத்தில் காட்டியிருக்கும் ஆண் புருவின் கழுத்தில் செங்கல் நிறச்சிவப்பு ஆரம் கிடக்கிறது. பெண்ணில் இது மங்கலான தவிட்டு நிறத்தில் இருக்கும். இப்புருவும் வறண்ட பாலைவனப் பிரதேசம் போன்றிருக்கும் புஞ்சைக் காடுகளிலும் அறுவடையான வயற்புறங்களிலும் காணப்படும். இது மணிப் புருவைப் போல் மனித சஞ்சாரமுள்ள இடங்களை அண்டுவதில்லை. இதன் கூப்பிடு தொனியும் அவ்வளவு இனிமையற்ற தொடர் தொனி. 'க்ரு குர்ர் கூ, - க்ரு - குர்ர் - கூ' என்று பல தடவை விரைவில் திரும்பத்திரும்ப எழுந்தொனி. மூன்று முதல் 6 மீட்டர் வரை உயரத்தில் சிறு மரக் கிளைகளில் சில துரும்புகளை வைத்து வளையப்பட்ட கூட்டில் 2 வெள்ளை முட்டைகள் இட்டிருக்கும். கூட்டின் வழியே முட்டை கிடப்பதைப் பார்க்கலாம்.

**கிளி வம்சம்** (ORDER PSITTACIFORMES)

இவ்வம்சம் ஒரே ஒரு குடும்பம்-கிளிக் குடும்பம் family PSITTACIDAE)—மட்டும் கொண்டது. கிளிகள் எல்லாவற்றிற்கும் குட்டையான தடித்த வெகுவாக உள்வளைந்த அலகும், குட்டையான

கால்களும், கிளைகளைப் பிடித்து ஏறும் பாதங்களும் உண்டு. கால் விரல்கள் இரண்டு முன்னோக்கியும் இரண்டு பின்னோக்கியும் அமைந்துள்ளன. கிளிகள் முக்கியமாகப் பச்சை நிறமுடையன. அவைகளால் விவசாயிகளுக்கு தீமைகள் அதிகமே ஒழிய நன்மையே இல்லை.

**சிவப்பு ஆரக்கிளி** Rose Ringed Parakeet (Psittaculakrameri) (படம் 47): இது மைனாவை விட சற்றுப் பெரியது. இதன் வால் நீண்டு கூர்மையாக முடிகிறது. புல் போன்ற பச்சை நிறமும் வளைந்த சிவந்த மூக்கும், கறுப்பும் இளஞ் சிவப்பும் கலந்த கழுத்து வளையம் போன்ற ஆரமும் உடையது, இக்கிளி. பெண் கிளிக்கு ஆரம் இல்லை. அது மற்ற எல்லாப் பண்புகளிலும் ஆணைப் போன்றே இருக்கும், காகம், மைனா, சிட்டுக் குருவிகள் போன்று, சாதாரண மாகப் பலருக்கும் பழக்கமான பறவை இது. பயிரிடப்படும் கிராமப் புறங்களில் பெருங்கொள்ளை கூட்டமாகச் சென்று வளர்ந்து நிற்கும் தானிய செடிகளின் கதிர்களில் உட்கார்ந்து தாங்கள் தின்பதுடன் நில்லாமல் தின்பனதவிட அதிகமாக வீணாக்கி விவசாயிகளுக்குப் பெருந் துன்பம் உண்டாக்கும். கொந்தளிப்பான பட்டணங்களின் மத்தியிலும், வீட்டுத் தோட்டங்களில் பெரிய மரங்களிலும் காலையும் மாலையும் பெருங் கூட்டமாக இவை பறந்து செல்வதும் தோட்டக் காடுகளிலிருந்து திரும்பி வருவதும் மக்களுக்குப் பழக்கமான காட்சி யாகும். கிளைகளில் அமர்ந்திருக்கும் போதும் பறந்து செல்லும் போதும் அவைகளின் கீச்சிட்ட கூப்பிடு தொனி கீக்-கீக்-கீக் எனக் கேட்கும். இதுவும் இதைப் போன்ற பெரிய **பச்சைக் கிளியும்** கூட்டுப் பறவைகளாக வளர்க்கப்படுகின்றன. ''சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை'' என்பது பழமொழி. இவை மனிதர் பேசுவதைக் கேட்டு, அல்லது அதற்குச் சொல்லிக்கொடுக்கும் வார்த்தைகளைக் கேட்டுத் திரும்பச் சொல்லுந் திறமையுடையன. சர்க்கஸ்களில் கிளியைப் பழக்கி சில விளையாட்டுக்கள் விளையாடக் கற்று கொடுத்திருக்கிறார்கள். சிறு வேடிக்கைக் கைத்துப்பாக்கி யைச் சுடுவது, பொம்மை வண்டி இழுப்பது, மணியடிப்பது, வளையத்தில் விளையாடுவது போன்ற விளையாட்டுக்கள் விளையாடும், இவை. 4 முதல் 6 முட்டைகள் இடும். இவை வெள்ளை நிறமும், நீண்ட உருண்டை வடிவமும் உடையன. மரங்கொத்தி அல்லது கன்னான் பறவை துளைத்துக் கூடு கட்டி, விட்டுப் போன பழைய துவாரங்களிலும், வீட்டுப்பொந்துகளிலும், மலையுச்சியில் இடை

வெளிகளிலும் இது முட்டையிடும். கூட்டமாகப் பல இணைகள் அடுத்தடுத்து இருந்து முட்டையிடுவதும் உண்டு.

**பெருங்கிளி**—Large Indian Parakeet or Alexandrine Parakeet (Psittacula eupatria): இது மற்றக் கிளிகளை விடப் பெரியது. பச்சைக் கிளியேயாயினும் ஆண் பறவையின் தோள் பட்டையில் பெரிய பழுப்புச் சிவப்புப் பட்டை கிடக்கும். அலகும் பெரிதாக இருக்கும். ஆணுக்கு மட்டும் கறுப்பும், இளஞ் சிவப்புங் கலந்த ஆரமும் உண்டு இது அதிகமாகக் காடுகளில் காணப்படுகின்றது. இரு வகைகளின் குஞ்சுகளும், பறவைச் சந்தைக்கு விற்கக் கொண்டு வரப்படுகின்றன.

**குயில்** வம்சம் (CUCULIFORMES)

குயில் வகைகள் இவ்வம்சத்தில் அடங்கும். இவ் வினப் பறவைகள் உலகம் முழுவதும் பரவியிருக்கின்றன. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலிய நாடுகளில் உள்ள குயில்கள், வேறு பறவைகளின் கூட்டில் முட்டையிட்டுக் குஞ்சுகளை அப் பறவைகள் வளர்க்கச் செய்வதில் பெயர் போனவை. இவ் வகையில் பழமையானது ஐரோப்பிய நாட்டுக் குயில். இது காஷ்மீர், மேற்கு இமாலய மலை வரை பரவியுள்ளது. மேலும் அஸ்ஸாம் மாநிலத்தில் இதில் ஒருவகை இடம் பெயராது தங்கிவிட்டது. ஆயினும் மிகவும் சாதாரணமாக இந்தியாவில் எங்கும் காணப்படுவது **இந்தியக் குயில்** Koel (Eudynamys scolopacea) (படம் 48) : காகத்தைப் போல் இருக்கும் இக் குயில் சற்று மெலிந்து, நீண்ட வாலுடையது போல் தோன்றும். ஆண் ஒளிரும் கறுப்பு. அலகு மட்டும் மஞ்சளாக இருக்கும்; கண் இரத்தச் சிவப்பு; பெண் தவிட்டு நிறமும் வெள்ளைப் புள்ளிகளும் உடையது. குயில் தோட்டங்களில் அதிகமாகப் பறந்து திரியுமாயினும் அதைப் பார்த்தவர்களை விடக் கேட்டவர்களே அதிகம். அது மரங்களிலேயே வாழ்கிறது. தரைக்கு வருவதே யில்லை. மாரிக் காலத்தில் அது கூப்பிடுவதில்லை. அதனால் அது கோடை காலத்தில் இடம் பெயர்ந்து வந்ததாகச் சிலர் நினைக்கிறார்கள். கோடை சமீபம் வர அதனுடைய முட்டையிடுங் காலமும் நெருங்கவே அதன் தொனியும் எழும்பும். தாழ்வான குவூ விலிருந்து ஆரம்பமாகி மெதுவாக மேலெழும்பி அடுத்தடுத்து குவூ குவூ குவூ என்ற தொனி கிராமப் புறங்களில் எல்லாம் இரவிலும் வெகு நேரம் வரை கேட்கும். குவூ ஆறு ஏழு தடவை எழும்பிய பின் திடீரென உச்சத்தில் போய் நின்றுவிடும். திரும்பவும் விரைவில்

ஆரம்பிக்கும். இவ்வாறு தொடர்ந்து கேட்கும். அதனாலே அதை fever bird (மூளைச் சூடேறிய பறவை) என்று அழைப்பர். பெண் குயில் கூப்பிடாது. அது மெதுவாக கிக் கிக் கிக் என்று கொம்பு தாவும் போது கூப்பிடும். உணவுக்காக முக்கியமாக, ஆல், அத்திப் பழங்களையே தின்னும். ஆயினும் பலவிதச் சிறு பழங்களையும், பட்டாம் பூச்சி புழுக்களையும் தின்னும். இது முட்டையிடுங் காலத்தில் காகங்களும் முட்டையிடுகின்றன. மற்ற ஒட்டிவாழுங் குயில்கள் போலவே இதுவும் கூடு கட்டுவதில்லை; சொந்தக் கூட்டில் முட்டையிடுவதில்லை. காக்கைக் கூட்டில் முட்டையிடும் முட்டைகள் பல காக்கைக் கூடுகளில் இடப்படும். முட்டையின் நிறம் சற்று வெளுப்பான பச்சை. அதன்மேல் பொட்டுகளும். புள்ளிகளும் செந்தவிட்டு நிறத்தில் இருக்கும். காக்கை முட்டை போலவே இருந்தாலும் அதை விடச் சற்று சிறியது.

சொந்தமாகவே கூடு கட்டி வாழும் குயில் வகையைச் சேர்ந்தது **செண்பகம் அல்லது செம்போத்து** Crow Pheasant or Coucal (Gentropus sinensis) (படம் 49): அண்டங் காக்கைப் பருமன் உள்ள செம்போத்து, கண்ணைக் கவரும் நிறம் உடையதாயினும் அழகுடைய பறவை அல்ல. செம் பாக்கு நிற முடைய இறக்கையும் ஒளிரும் கருநிற உடலும் கரு நிறத்தில் பாக்கு நிறக் குறுக்குக் கோடுகள் கொண்ட வாலுமுடையது செம்போத்து. நிறைய புதர்ச் செடிகளும் உடை மரங்கள் போன்ற சிறு மரங்களும் இதற்கிடையே திறந்த புல்வெளிகளும் உள்ள சிறு காடுகளில் அடிக்கடி இது காணப்படுகிறது. கிராமப் புறங்களில் வீடுகளுக்கு அருகிலும் பயமின்றி நடமாடுவதுடன் தாராளமாக வீட்டுத் தோட்டத்திற் குள்ளும் சுற்றித் திரிகிறது. செடிகளுக்கிடையில் உணவு தேடி நடமாடும் போது வாலைத் தரையில் இழுத்துக் கொண்டும் இடைக் கிடையே இறக்கைகளை பக்கவாட்டமாக விரித்து உடம்பில் அடித்துக் கொண்டும் செல்லும். இப்படிச் செய்வதால், புதர்களுள் பதுங்கியுள்ள பல்லி, பாம்பு பூச்சிகள் வெளியேறும். இதை தேடித் திரியும்போது குத்துச் செடிகளுக்குள் சுலபமாக நுழைவதுடன் மரக் கிளைகளில் தாராளமாகத் தத்திச் செல்லும். அதன் கூப்பிடு தொனி ஊக் என்னும் அலறுந் தொனி. இது முக்கியமாக வேனிற் காலத்தில் அடிக்கடி விட்டு விட்டுக் கேட்கும். சில சமயங்களில் ஒரு வேறுபாடு இருக்கலாம். அப்போது அது ஒரு விநாடிக்கு 2 அல்லது 3 '**கூப்**' என்னும் தொனிவீதம், இருபது வரை கேட்கும். இத்தொனி கேட்டு தூரத்தில் அல்லது சமீபத்தில் வேறு ஒரு பறவை

தொனியை எழுப்பும். இவ்விதம் மாறி மாறி இரு குரல் எழுப்பும். அடை காக்குங் காலத்தில் ஆண் பறவை பெண்ணின் முன்னுல் நின்று வாலை விசிறி போல் விரித்து முதுகிற்கு கொண்டு வந்தும் இறக்கையை விரித்துத் தரையில் பட இழுத்தும் விசித்திர பாணியில் ஆட்டம் ஆடும்.

செம்போத்து அதிக தூரம் பறக்காது. சிறிது தூரமும் சிரமப் பட்டுத்தான் பறக்கிறது. உணவு: வயல் சுண்டெலி, பல்லி, சிறு பாம்புகள், பூச்சிகள், பூச்சியின் லார்வாப் புழுக்கள். வேறு சிறு பறவைகளின் முட்டைகளையும் குஞ்சுகளையும் திருடித் தின்பதில் இது கெட்டிக் காரத்தனமாக முறையாகச் செயல்படும். நாட்டு வைத்தியர்கள் செம்போத்தின் மாமிசத்தை காச நோய்களுக்கு மருந்தாக உபயோகப்படுத்துகின்றனர். இது மற்றக் குயில்கள். போலன்றித் தானே கூடு கட்டும். அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். கூடு பெரும்பாலும் ஏதாவது முட்செடியில் தரைக்குச் சற்று மேலேயே ஒரு பெரிய கூடை போல் இலைகளாலும் குச்சிகளாலும் வனையப்பட்டிருக்கும். கூட்டுக்குள் நுழைவழி பக்கவாட்டமாக அமைந்திருக்கும். 3 அல்லது 4 சுண்ணும்பு போன்ற மேற் பரப் புடைய வெள்ளை முட்டைகள் வீட்டில் காணப்படும்.

**ஆந்தை வம்சம்**—(Order STRIGIFORMES) :

இது இரு குடும்பங்கள் உடையது. கூகை அல்லது கோட்டான் குடும்பம்—Tytoninae (கூகை), மலையாந்தைக் குடும்பம்—STRIGIDAE (உண்மையான ஆந்தைகள்). முந்தியது குரங்கு போன்ற முக முடையது. எடுத்துக் காட்டாக நமது கூகை அல்லது கோட்டான்—Barn Owl (Tytoalba). இது உலகம் முழுதும் பரவி யுள்ளது. பிந்திய குடும்பம் உருண்ட பெரிய தலையுடையது. முன்னுல் நோக்கும் கண்கள் உடையது; கண்களுக்கு மேல் கொம்புகள் போல் இறகுகள் எழுப்பிக் கொண்டிருக்கும். இக் குடும்பத்தில் சாதாரணமாகக் காணப்படுவது **சிறு புள்ளி ஆந்தை** Spotted Owlet (Athene brama) (படம் 50): மைனுவின் பருமன் இருக்கும் இது ஒரு குள்ளமான தடித்த சிறிய ஆந்தை. இதன் கண்கள் இரண்டும் முன்னேக்கியே மூடாமல் விழித்திருக்கும். திறந்த வெளிகளிலும் மலையடிவாரங்களிலும் கிராமப் புறங்களிலும் இது காணப்படும். இது வீடுகள் மத்தியிலும் வந்து பழகியிருக்கும். பழைய மாமரம், ஆலமரம் போன்ற பெரிய மரங்களின் பொந்து களில் ஜோடி ஜோடியாக (ஆணும் பெண்ணும்) கூடு கட்டி

வாழும். மரத்தில் அடியில் தட்டினால் போதும், பொந்துக்குள் இருக்கும் இவை வெளியே வந்து உற்றுப் பார்க்கும். பக்கத்துக் கிளையில் பறந்து போய் அருகிலேயே ஒன்றையொன்று ஒட்டி உட்கார்ந்திருக்கும். கோமாளித்தனமாக தலையை தூக்கித் தூக்கி வருபவர் யார் என்று உற்றுப் பார்க்கும். சில சமயம் தலையை முழுவதும் அப்படியே பின் திருப்பிப் பார்க்கும். அந்தி மயங்கும் வேளை பொந்துகளிலிருந்து வெளியேறித் தந்திக் கம்பம், வேலிக்கம்பு, ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளை, ஒரு கம்பத்திலிருந்து மற்றொரு கம்பம், என்று மாறி மாறி உட்கார்ந்தவாறிருக்கும். பறக்கும் போது சந்தடி செய்யாமல் பறக்கும். வண்டுகள், தத்துக் கிளிகள் தரையில் செல்வதைக் கண்ணுற்றதும் சத்தமின்றி கீழே பாய்ந்து கொத்தித் தின்று விட்டு அருகிலிருக்கும் கம்பத்திலோ தோட்டத்து வேலித் தூணிலோ உட்கார்ந்து கொள்ளும். சில சமயம் பறந்து செல்லும் ஈசலைப் பிடிக்க ஆகாயத்திலே பறந்து பாயும். அல்லது விளக்குத் தூணைச் சுற்றிப் பறக்கும் வண்டுகளைக் காலால் பற்றிக் கொண்டு தூணுக்குக் கொண்டு போய், கிளிகள் கொட்டை உடைத்துத் தின்பது போல், அலகுக்குத் தூக்கிக் காலால் பிடித்திருப்பதைப் பிய்த்துத் தின்னும். சில சமயம் உயரப் பறந்து, வைரி போல ஒரே இடத்தில் சிறகடித்து நின்று கீழே நகரும் பிராணிகளைக் கவனிக்கும். உணவு பூச்சி, ஈசல், பல்லி, ஓணான், சிறு பாம்புகள், சிறு குருவிகள், எலிக் குட்டிகள். புள்ளி ஆந்தை வெகு இரைச்சல் போடும் பறவை. பலவித நாராசம் போன்ற தொனிகளை எழுப்பவல்லது. இப் பறவைகள் சேர்ந்து மாறி இரைச்சலிடுவதும் உண்டு. 3 அல்லது 4 முட்டைகள் பொந்துகளுள் இடப்பட்டிருக்கும். சில புல்களையும் இறகுகளையும் இலேசாகச் சுற்றி வைத்திருப்பது தான் இதன் கூடு. முட்டைகள் வெள்ளையாகவும் சற்று நீண்ட உருண்டையாகவும் இருக்கும்.

**கொம்பு ஆந்தை**—The Great Horned Owl (Bubo bubo) (படம் 51) : கள்ளப் பருந்தை விட கனமுடைய இவ்வாந்தை கருந்தவிட்டு நிறமுடையது. மேனி நிறைய மெல்லிய கருங் கோடுகள் நீள வட்டமாகக் கிடைக்கும்; இரு கொம்பு போன்ற கரு நிற இறகுகள் காதுக்கு மேல் உயர்ந்து நிற்கும். இதை **மீன் பிடிக்கும் தவிட்டு நிற ஆந்தை** (Bubo zeyloneisis) என இலகுவில் மதித்துக் குழம்பி விடக் கூடும். ஆனால் மீன் **ஆந்தை** கருஞ் சிவப்பு கலந்த தவிட்டு நிறமுடையது. மேலும் **அதன் கால்களில்** இறகு அற்ற பாகங்கள் உண்டு. கொம்பாந்தைக்கு **கால்கள்** பாதம் வரை இறகு அடர்ந்து

இருக்கும். பகலில் இவ்வாந்தை புதர்களுக்குள் பதுங்கித் தரையில் படுத்துக் கிடக்கும். அல்லது ஆற்றங்கரையோரம் நீண்டு நிற்கும் பாறைகளுக்கு அடியில் நிழலில் பதுங்கி இருக்கும். மீன் ஆந்தையைப் போல் முழு நேரமும் பகலில் வெளிவராமல் இருப்பதில்லை. சில சமயம் பகலிலும் காணப்படும். பொதுவாக சூரியன் அடைந்த பின் அடைந்திருக்கும் பொந்தை விட்டு ' பூபோ ...' என்று (' போ ' வை நீட்டிக் கத்திகொண்டு) வெளியேறும். வெளியேறிய பறவை, ஒரு பாறையிலோ, கல் தூணிலோ நின்றுகொண்டு ஒருவிதக் கடின முயற்சியுமின்றி சுலபமாகப் பறந்து செல்லும். சில சமயம் வெகு தூரம் பறந்து வழக்கமாக இரை தேடும் இடத்துக்குச் செல்லும். உணவு, சிறு பாலூட்டிகள், எலி, சுண்டெலி, பூச்சிகள், சில சமயம் மீன்களும் நண்டுகளுங் கூட. விவசாயம் செய்யப்பட்ட இடங்களில் இப்பறவை அதிகமாகச் சுவைத்து உண்பது எலிகளைத்தான். இப்படிச் செய்து பெருகி வரும் எலிகளை ஓரளவு தடுத்து வைப்பதால் இப்பறவை விவசாயிகளுக்கு அதிக நன்மை செய்து வருகிறது. இப்பறவை வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். முட்டைகள் 3 அல்லது 4 வெறுந் தரையில் இடப்பட்டிருக்கும். ஒருவிதக் கூடும் கிடையாது. கற்பாறைகளுக்கு இடையிலோ மண் கரைகளிலோ இயற்கையாகவே அமைந்துள்ள இடுக்குகள், பள்ளங்கள் முட்டைகள் இடப் பட்டிருக்கும். இவை சற்று வைக்கோல் நிறத்தில் வெண்மையாக இருக்கும்.

**சாவுக் குருவி வம்சம்**—(Order CAPRIMULGI FORMES)

இதில் முக்கியமானது சாவுக்குருவிக் குடும்பம் (CAPRIMULGIDAE) **சாவுக் குருவி**—Indian Nightjar (Caprimulgus asiaticus) (படம் 52) இரவில் இரை தேடும் பறவை. இதன் இறகுகள் ஆந்தையின் நிறத்தில் இருப்பதுடன் மிருதுவாகவும் இருக்கும். தரையுடன் இக் குருவி படுத்துவிட்டால் இதன் நிறமும் தரையும் ஒன்றிவிடும். இதன் கால்கள் வெகு குட்டையானவை, வலுவற்றவை. பறக்கும் பூச்சிகளைப் பிடிப்பதற்கு வசதியாக வாய் அகலம் அமைந்திருக்கும். இது மைனாவின் பருமன் இருக்கும். இறக்கையில் இருக்கும் வெள்ளைப் புள்ளிகள் அது பறக்கும்போது தெளிவாகத் தெரியும். பகலில் புதர்க் காடுகளில் இறக்கையைத் தரையில் ஊன்றிப் படுத்திருக்கும். அந்தியில் உயரப் பறக்கும் பூச்சிகளைப் பறந்து பிடிக்கும். இரவில் வெறும் மண்ரோட்டில் வந்து உட்கார்ந்திருக்கும். சாவுக் குருவியின் உணவு பூச்சிகளே. அந்திப் பூச்சியும் வண்டுகளும் பெரும்

பான்மையான உணவாகும். சாவுக் குருவி பறப்பதில் வெகு சாமர்த்தியம் உடையது. சத்தமின்றி பட்டாம் பூச்சி போல் சிறகடித்துப் பறக்கும். வட்டமிட்டும், மிதந்தும், திடீரெனக் கரண மடித்துத் திரும்பியும் பூச்சிகளை விரட்டிப் பிடிக்கும். மோட்டார் காரின் முன் விளக்குகள் ஒளியில் இதன் கண்கள் மாணிக்கங்கள் போல் சிவந்து எரியும். கார் சமீபம் வரும் வரை அசையாது நின்று கிட்ட வந்ததும் பறவை திடீரெனப் பறந்து எழும்பித் தப்பித்து விடும்.

இதன் கூப்பிடு தொனி பலரும் கேட்டு இருப்பர் ; ஆனால் பறவையைப் பார்த்து இருக்க மாட்டார்கள். சக்-சக்-சக்-சக்-ர்-ர்-ர்-ர் என்று கல் உரசுவது போல் நாராசமான சத்தம்; அந்தியிலும் இரவிலும் கேட்கும். சில சமயம் இரு பறவைகள் சற்று தூரத்துக்கு அப்பால் நின்று கொண்டு மாறி மாறிக் கத்தும். முட்டையிடும் காலத்தில், முக்கியமாக நிலா இருக்கும் போது, இவை அதிகமாகக் கத்தும். இவை கூடு கட்டுவதில்லை. இரு முட்டைகள் சிறு குத்துச் செடிகள் உள்ள காட்டில் வெறுந் தரையில் இடப்படும். முட்டைகள் நீண்ட உருண்டை வடிவமுடையவை—இளம் ஊதா முதல் தீர்த்த செம்பொன் நிறம்வரை மேலெல்லாம் செந் தவிட்டுப் புள்ளிகள் கொண்டதாக இருக்கும்.

### முன்னி வௌவால் வம்சம் : (Order Apodiformes)

இதில் முன்னி வௌவால்கள் (Swifts) அடங்கும். இவை நீண்டு ஒடுங்கி அம்பு போன்ற அமைப்புடைய உடலுடையவை. அதிக வேகமாக ஆகாயத்தில் அம்பு போல் பறக்கும். பகலில் பெரும் பகுதியைப் பறந்து சென்றே செலவிடும். இப்பறவை ஆகாயத்திலேயே கொசுக்கள், சிறு மணல் ஈக்கள், அந்திப் பூச்சிகள், ஈக்கள் ஆகிய பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். முன்னி வௌவால்களின் கால்கள் மிகக் குட்டையானவை. நான்கு விரல்களும், முன் நோக்கியே நீண்டு நிற்கும். இப்பறவைகள் கூர்மையான நகங்களைக் கொண்டு சுவர்களில் அல்லது சாய்ந்த மேற் பரப்பில் தொத்தித் தொங்கும்.

**வீட்டு முன்னி வௌவால்**—House Swift (Apus affinis) (படம் 53 அடியில்) : இது சிட்டுக் குருவியைவிடச் சற்று சிறியது. வெள்ளைக் கழுத்தும் வெள்ளை பிட்டமும் (பின் பகுதியும்) புகை நிறக் கறுப்பு உடலும் கொண்டது. வால் குட்டையாகவும், சதுரமாகவும்

இருக்கும். இறக்கை நீளமானது, கூர்மையானது. பழைய கோட்டைகள், கைவிடப்பட்ட மசூதிகள், பழைய கோவில்கள், ஆள் குடியேற்றமில்லாத பாழடைந்த பங்களாக்கள் முதலியவை, இப்பறவை விரும்பி வாழும் இடங்களாகும். சிறு கூட்டங்கள் நாள் முழுவதும் ஒன்ருக அங்குமிங்கும் பறந்து சிறு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். இடைக்கிடையே மகிழ்ச்சி பொங்க டிட், டிட், டிட் என்று தொனியும் கொடுத்துக் கொள்ளும், நீண்ட ஒல்லியான இறகு காற்று தடை செய்யாமல், அதி விரைவில் பறப்பதற்கு உதவு வதால், தொடர்ச்சியாக அதிக வேகமாக இப்பறவை பறந்து கொண்டே இருக்கும். பெரிய கும்பல் ஒரு ஒழுங்கு வரிசையின்றி வட்டமிட்டும். வளைந்து நெளிந்தும் மகிழ்ந்து தொனி எழுப்பியும் ஆகாயத்தில் பறந்து கொண்டிருப்பதைச் சில நாட்களில் பார்க்க லாம். மிகச் சந்தடியான கடைத் தெருவிலுங் கூட, பழைய கட்டிடங்களின் மூலைகளில் நெருக்கமாகக் கூட்டமாக இப்பறவைகள் கூடு கட்டியிருப்பதைப் பார்க்கலாம். கூடுகள் அழகற்ற வட்டக் கிண்ணக்கள். இவை வைக்கோல், இறகுகள், இவற்றைப் பறவையின் உமிழ் நீரால் ஒன்று சேர்த்து ஒட்டப்பட்டு உரு வானவை. நுழைவாசல் கூட்டுக்கும் சுவருக்கும் இடையேயுள்ள ஓர் இடைவெளியே. 2 முதல் 4 முட்டை வரை கூட்டில் காணப் படும். ஒவ்வொன்றும் சுத்த வெள்ளை நிறத்தில் நீண்ட கோள வடிவத்தில் இருக்கும். தொந்தரவு கொடுக்காமல் இருந்தால் ஒரே இடமே ஒவ்வொரு ஆண்டும் கூடு கட்டும் இடமாகி விடுகிறது. கூடுகளின் எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டே போகிறது.

**காடை வம்சம்:** (Order CORACIIFORMES)

இவ்வம்சத்தின் மீன் கொத்திகள் (Kingfishers) பஞ்சிட்டான்கள் (Bee eaters) மரத்தலையன்கள் (Horn bills) மற்றும் பனங் காடைகள் (Rollers) அடங்கும்.

**மீன் கொத்திக் குடும்பம்** (Alcedinidae) இதில் மூவகை மீன் கொத்திகள் உண்டு.

(i) **சிறு நில மீன் கொத்தி** (Small Blue Kingfisher) (Alcedo atthis) (படம் 54): இது ஒரு சிட்டுக் குருவியை விடச் சற்று பெரிது. உடலின் மேல் பாகம் நல்ல நீல நிறமும் பச்சையும் கலந்தது. கெட்டி யான துரு நிற பாகமும், அடர்த்தியான குட்டை வாலும், நீண்ட நேரான கூர் அலகும் கொண்டது இம் மீன் கொத்தி. குளங் குட்டை

கிணறு அல்லது ஆற்றங் கரையில் தனியாக ஒரு கல் மேலோ, அல்லது கீழே தொங்கும் மரக் கிளையிலோ அமர்ந்து இருக்கும். நீருக்கு மேலே சற்று உயர ஒரே இடத்தில் நின்று சிறகடித்துக் கொண்டிருந்து திடீரென நீருக்குள் விழுந்து மீனைக் கௌவிக் கொண்டு பறந்தோடும். ஆற்றங்கரையில் நீருக்குச் சற்று மேலேயே வேகமாகப் பறந்து போய்க் கொண்டிருக்கும். சில சமயங்களில் பாறைகளுள்ள கடற்கரையிலும் காணப்படும்.

இப்பறவை கிளையிலோ, கள்ளியிலோ உட்கார்ந்திருக்கும்போது அடிக்கடித் தலையை எழுப்பி எழுப்பி உடலை ஆட்டிக் கொண்டு, கிளிக் என்று மெதுவாக ஒவ்வொரு எழுச்சியின் போதும் கூப்பிடும். அதே நேரம் அதன் கண்ணெல்லாம் கீழே உள்ள தண்ணீரில் ஏதாவது மீன் அல்லது தலைளைக் குஞ்சு மேலே வருகிறதா என்று பார்த்துக் கொண்டேயிருக்கும். இரையைக் கண்டதும் பாய்ந்து தண்ணீருக்குள் தலைகுப்புற விழுந்து இரு அலகுகளுக்கும் இடையில் குறுக்கே பிடித்துக் கொண்டு வெளியேறி அருகிலுள்ள பாறையில் அமர்ந்து இரையைக் கொன்று விழுங்கும். ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலையில் பறந்து உட்காரும்போதும் பறந்து ஓடும்போதும் ***சீச்சீ-சீச்சீ*** என்று உச்சத் தொனியில் கத்திக் கொண்டு பறந்தோடும். உணவு, மீன் மற்றும் தலைளைக் குஞ்சு. இதைத் தவிர இச்சிறு மீன் கொத்தி நீர்ப் பூச்சிகளையும் அவற்றின் லார்வாக்களையும் வண்டுகளையும் உண்ணும். அது கூடு கட்டும் இடம் ஆற்றின் கரை அல்லது குளக் கரையிலுள்ள மணல் திட்டுகளில் ஒரு மீட்டர் நீளம் நேராக வளை தோண்டிய பின் உள்ளே அகன்ற முட்டை அளவு உண்டாக்குகிறது. இதன் சுவர்களில் மீன் முள்களும் வண்டுகளின் மேற்ஓடுகளும் ஒட்டப்பட்டிருக்கும். கூட்டில் சாதாரணமாக 5 முதல் 7 வரை முட்டைகள் இருக்கும். முட்டைகள் தனி வெள்ளை நிறம் ஒளிரும். சற்று நீண்டு ஒரு முனை குவிந்த உருண்டையாக இருக்கும்.

(ii) **வெள்ளை நெஞ்சு மீன் கொத்தி**— White breasted king fisher (Halcyon smyrnensis): இது தண்ணீர்க் கரையில் இல்லாமலும் பிழைத்துக் கொள்ளும். ஏனெனில் அது தனது முக்கிய உணவாகத் தரையில் வாழும் பூச்சி இனங்களைக் கொண்டது. மைனாவின் பருமன் இருக்கும். முதுகில் வெகு நேர்த்தியான பைந் நீல வர்ணமும், அழுத்தமான சாக்லேட் நிறத்தில் தலையும் கழுத்தும் நெஞ்சும் இருக்கும். அடி வயிறு வெள்ளை வெளேரென்று இருக்கும். அலகு

சிவப்பு, நீளம், கூர்மையானது. கருமையான இறக்கையில் ஒரு பெரிய வெள்ளைப் புள்ளி, பறக்கும்போது புலப்படும்.

**கரும்புள்ளி மீன் கொத்தி**—Pied Kingfisher (Ceryle rudis) (படம் 55): மைனாவைவிட சற்றுப் பெரியது இம் மீன் கொத்தி, கறுப்பிலும் வெள்ளையிலும் புள்ளிகளும் வரிகளும் நிறைந்த சிறகுகளுடையது. கொத்தியின் அலகு தடித்து உடைவாள் போன்று இருக்கும். ஆண் பறவை பெண் பறவை போன்று தான் இருக்கும். ஆனால் ஆணுக்குக் கழுத்தைச் சுற்றி ஆரம் போன்று உள்ள கூரிய கோடுகள் இரண்டு இருக்கும். பெண்ணுக்கு (படத்தில்) இத்தகைய கோடு ஒன்றுதான்: அதுவும் நடுவில் பிளவுபட்டிருக்கும் தனிப் பறவையாகவோ அல்லது இரண்டு இரண்டாகவோ. இவை கிராமப் புறத்து ஆறு, ஓடை, குளங் குட்டைகளுக்கருகில் மரங்களில் அல்லது பாறைகளில் உட்கார்ந்து வாலை எழுப்பி எழுப்பி தலையை அங்கு மிங்கும் அசைத்துக் கொண்டு இருக்கும். அது பறக்கும் போது காதைத் துளைக்கும் வண்ணம் கீச்சிடும் தொனியில் சீர்க்ருக் சீர்க்ருக் என்று கத்திக் கொண்டு போகும். ஒருமுறை இத் தொனி கேட்டு இப்பறவையினுடையது தான் என்று தெரிந்து விட்டால், பிறகு அதை எப்போது கேட்டாலும் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ளலாம். மிகவும் கண்ணைக் கவரும் இதற்குரிய தனிப் பண்பு என்று கூறப்படுவது, அது மீன் பிடிக்கும் முறையே. தண்ணீருக்கு மேலே பறந்து கொண்டு தலையைத் தொங்கவிட்டு தண்ணீருக்குள் மேல் மட்டத்துக்கு ஏதாவது மீன் வருகிறதா என்று பார்த்துக் கொண்டே வரும். ஏதாவது மீன் தென்பட்டால் உடன் மேற் செல்லாது அப்படியே நின்று விடும். சிறகை வேகமாக அடித்த வண்ணம், வானில் நிற்பது போல் அந்தரத்தில் அப்படியே செங்குத்தாக நின்று கொண்டு, அலகைத் தயார் செய்து கொள்ளும். வேட்டைப் பொருள் மேல் மட்டத்துக்கு வந்ததும் இறக்கைகளை மடக்கிக்கொண்டு ஆறு ஏழு மீட்டர் உயரத்திலிருந்து குண்டு விழுவதுபோல் வேகமாகப் பாய்ந்து நீருக்குள்ளேயே போய் விடுகிறது. சிறிது நேரத்தில் மீனை அலகுகளுக்கு இடையில் குறுக்கே கௌவிக் கொண்டு, நீரை விட்டு எழும்பி, அருகிலிருக்கும் தங்கு மிடத்துக்குச் சென்று மீனை அடித்துக் கொன்று, வாய்க்குள் செலுத்தச் சரியானபடி தூக்கிப் பிடித்துத் தலை முன்வர விழுங்குகிறது. உணவு முக்கியமாக மீன் என்றாலும் தவளைகளையும் நீர்ப்பூச்சிகளையும் கூட விரும்பி உண்ணுகிறது. கூடு ஆற்றங் கரையில் மணல்

மேட்டில் நேராக—படுக்கையாகவே—தோண்டப்பட்ட சுரங்கம். இதன் சுவர்களில் ஒளி தரும் பொருள்களாக வண்டுகளின் மேல் தோடுகள், மீன் எலும்புகள் இவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். முட்டைகள்—5 அல்லது 6—சுத்த வெள்ளை நிறத்தில், பளபளக்கும் மேல் தோற்றமும் நீள உருண்டை வடிவமும் கொண்டவை.

**இமாலயக் கரும்புள்ளி மீன் கொத்தி**—Himalayan Pied Kingfisher (Ceryle lugubris) : இது முன் கூறப்பட்ட வகையை விட மிகப் பெரியது. தலையிலும் கொண்டை இருக்கும். இமாலய மலையில் 800 மீட்டர் உயரத்துக்கு மேல் இதைக் காணலாம். அங்கு சிறிய கரும் புள்ளி மீன் கொத்தி கிடையாது.

**சிறிய பஞ்சிட்டான்**—Small Green Bee-eater (Merops orien talis) (படம் 56) : புல் போன்ற பச்சை நிறம் கொண்ட இப்பறவை யின் உடல் மிக ஒடுங்கியது. சிட்டுக் குருவியின் பருமன் இருக்கும். இதற்குத் தலையும் கழுத்தும் செந்தவிட்டு நிறம் கலந்த பச்சை. வால் இறகில் மத்தியில் இருக்கும். இரு இறகுகள் வால் மட்டத்துக்கும் பின்னால் மொட்டை ஊசி போல் நீண்டு நிற்கும். ஒல்லியான, சற்று வளைந்த, கூர்மையான கருநிற அலகும், கழுத்தில் ஆரம் போன்ற கரு நிறமும் இதை இனஞ் சுட்டும் வேறு தவறாத அடையாளங்கள். திறந்த வெளிப் பிரதேசங்களில் இரண்டு இரண்டாக அல்லது சிறு கூட்டமாகக் காணப்படும் பஞ்சிட்டான் முக்கியமாகக் காடுகள் வெட்டி அழிக்கப்பட்டுள்ள இடங்களிலும், கிராமப் புறங்களில் மேய்ச்சல் நிலங்களிலும், வயல் வெளிகளிலும் இரை தேடும். தந்திக் கம்பிகளில் உட்கார்ந்து கொண்டு, ஈசல்கள் போன்ற இறக்கையுள்ள பூச்சிகள் பறந்து செல்லும் போது அழகாக இறக்கையை விரித்துப் பாய்ந்து போய் அதைக் கௌவிப் பிடித்துக் கொண்டு, உட்கார்ந் திருந்த இடத்துக்கே திரும்பவும் சுற்றிப் பறந்து மிதந்து வந்து உட்காரும். இப்படி ஒவ்வொரு பூச்சியைப் பிடித்தவுடன் திரும்பி வந்து உட்காரும். பின் வாயில் துடித்துக்கொண்டிருக்கும்பூச்சியைக் கொன்று தின்னும். பறக்கும் போது கேட்பதற் கினிய கூவல் தொனி எழுப்பும். 'டிற்-டிற்' அல்லது 'ட்ரீ, ட்ரீ, ட்ரீ' என்று புல்லாங் குழல் ஓசை போல் இது தொனிக்கும். சூரியன் அடைந்த பின் இவை கூட்டமாக இலையடர்ந்த மரத்தில் அடையும். அவ்வாறு அடைவதற்கு முன்பாகச் சற்று நேரம் மரத்தைச் சுற்றிச் சுற்றி காரணமேயின்றிப் பரபரப்பாகச் சத்தமிட்டவாறு பறந்து கொண் டிருக்கும். பின்னர் தான் ஒன்றொன்றாக அடையும். கிளைகளில் சிறு

சிறு கூட்டங்களாக நெருங்கி அமர்ந்து தூங்கும். தூங்கும் போதும் தலையை இறக்கைக்குள் மடக்கி வைத்துக் கொண்டு தூங்கும். மற்றப் பறவைகளுடன் ஒப்பிடும் போது இவை பிந்தி எழும் பறவைகள்; சூரியோதயத்துக்கு வெகு நேரத்துக்குப் பிறகுதான் எழுந்திருக்கும். இவற்றின் உணவு தட்டான் பூச்சி முதலிய பறக்கும் பூச்சிகள். பஞ்சிட்டான்கள் சில சமயம் தேன் கூடுகள் வைத்திருப்பவர்களுக்குச் சேதம் விளைவிக்கும் வண்ணம் தேனீக்களைப் பிடித்துத் தின்னும். இவை கூட்டமாகக் கூடு கட்டும். மணல் மேட்டில் படுக்கை வசமாக ஒரு மீட்டருக்கும் அதிகமான நீளமுள்ள சுரங்கம் தோண்டி, முடிவில் அகலப் படுத்தி முட்டையிடும். 5 முதல் 7 வரை, சற்று நீண்ட உருண்டை வடிவத்தில் வெள்ளை முட்டைகள் இடும்.

இதற்கு நெருங்கிய சொந்தமுடையது **நீலவால் பஞ்சிட்டான்**—Bluetailed Bee-eater (Merops philippinus). இது முந்தியதைவிட உருவத்தில் பெரிது. கண் வழியே கறுப்புக் கோடு ஒன்று ஓடும். தொண்டை பாக்கு நிறத்தில் இருக்கும். வால் நீலமாக இருக்கும். இது குளங் குட்டைகளின் கரையில் காணப்படும். இந்தியாவுக்குள்ளேயே இடம் பெயரும் பறவை இது. இதன் இடப் பெயர்ச்சி இன்னும் சரியாக விளங்காமலிருக்கும் ஒன்று.

**பனங்காடைக் குடும்பம்**—(family CORACIIDAE) : மிகவும் பழக்கமான பனங்காடை என்னும் பறவை—Indian Roller or Blue Jay (Coracias benghalensis)—(படம் 57) இக் குடும்பத்தைச் சேர்ந்தது. ஒரு புறாவின் பரிமாணம் உள்ள ஆக்ஸ்போர்டு-கேம்பிரிட்ஜ் நீல வண்ணமான இப்பறவை, பெரிய தலையும், கனத்த அலகும், மார்பில் செந்தவிட்டு நிறமும், அடி வயிற்றிலும், வாலுக்கு அடியிலும் வெளிர் நீல நிறமும் கொண்டது. வெளுத்த நீலமும், கரு நீலமும் மாறி மாறிக் கிடப்பது, இது பறக்கும் போது இயற்கையில் வெகு அழகாகக் காட்சியளிக்கும். பனங்காடை அதன் பெயருக்கு ஏற்ப பனை மரம் இருக்கும் சரல் காடுகளிலும் திறந்த வெளிப் பிரதேசங்களிலும் காணப்படும் பறவை. தாலாபுறங்களிலும் பார்வையை ஓட்ட வசதியாக, ஒரு மொட்டை மரத்தின் மீதோ தந்திக் கம்பியிலோ அமர்ந்திருக்கும். அவ்விடங்களிலிருந்து அவ்வப்போது பறந்து பாய்ந்து இறங்கி ஒரு பூச்சியைப் பிடித்துக் கொண்டு, மீண்டும் பழைய இடத்துக்கே கொண்டு போய், இரையை அடித்துக் கொன்று தின்னும். வெட்டுக் கிளிகள், தத்துக் கிளிகள், வண்டுகள், மற்றும்

வேறு பூச்சிகள் இதற்கு இரையாவதால், காடை விவசாயிகளுக்கும் நன்மை செய்யும் பறவை. சில சமயங்களில், பல்லி அல்லது சுண்டெலி கிடைத்தாலும் பிடித்துத் தின்னும். பனங்காடையின் கூப்பிடு தொனி பலவேறு விதமாக அமையும். முட்டையிடும் காலத்தில் அதிக இரைச்சலிடும் பறவை இது. அக்காலம் ஆகாயத்திலேயே கவர்ச்சிகரமான காதல் களியாட்டத்தில் ஈடுபடும். வேகத்தில் உயர எழும்பி, கரணங்கள் போட்டும், சிறகை விசிறி அடித்தும், தலைகுப்புற மூழ்குவது போல் விழுந்தும், இறக்கையின் பலவித நிறங்கள் சூரியவொளியின் ஒளிர, பெண்ணை மயக்கும். இவ் வேலைகள் நடக்கும் போது அது கரகரப்பான அடித் தொண்டைச் சத்தம் கொடுக்கும். கூடு, வைக்கோல்கள், மிருதுவான இறகுகள், கந்தைத் துணிகள் ஆகியவற்றின் சேர்க்கை. இயற்கையாக அமைந்த மரப் பொந்துக்குள் இது இருக்கும். முட்டைகள்—4 அல்லது 5—ஒளிரும் வெண்மை நிறத்தில், நீண்ட உருண்டை வடிவத்தில், இருக்கும்.

காஷ்மீர் பிரதேசத்தில், தென்னாட்டின் பனங்காடைக்குப் பதில் **காஷ்மீர்காடை** Kashmir Roller (Coracias garrulus) என்ற ஒரு வகை இருக்கிறது. இது ஆப்பிரிக்காவிற்கு, சிந்து, வட குஜராத் வழியாக, செப்டம்பர், அக்டோபரில் இடம் பெயரும் பறவை. பறக்கும்போது பளிச்செனத் தெரியும் இதன் கருநீல இறகுகள் இதை எளிதில் அடையாளம் காண உதவுகின்றன. (சிறிய படம்) அடிப் பாகம் முழுதும் வெளிர் நீல நிறத்திலிருக்கும்.

கொண்டலாத்திக் குடும்பத்தின் (family Upupidae) பிரதி நிதியாக நம்மிடையே ஒரு பறவையே உண்டு. அதுவே புழுப் பொறுக்கி என்னும் விசிறிக் கொண்டையுடைய கொண்டலாத்தி —Hoopoe (Upupaepops) (படம் 58): கவர்ச்சியான தலையில் விசிறி போன்ற அமைப்பில் சுருங்கக் கூடிய கொண்டை இருக்கும். மைனாவின் பருமன் உள்ள இப்பறவைக்கு நீண்ட மெல்லிய உள் வளைந்த அலகும் உண்டு. முதுகிலும் இறக்கையிலும் வாலிலும் கறுப்பு வெள்ளை வரிகள் இருக்கும். இப்பறவை இரண்டு அல்லது நான் கைந்தாகச் சேர்ந்து, கிராமப் புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் இரை மேயும். இதன் நடை காடை, கௌதாரி நடைபோல் இருக்கும். விழுந்து அழுகிக் கிடக்கும் இலைகளுக்குக் கீழ் அலகுகளைக் கொடுத்து நீக்கி புழுக்கள் இருக்கின்றனவா என்று பார்க்கும். அப்போது அதன் கொண்டை சுருங்கி பின்புறம் கொத்தன் (Pick axe) போல் தோன்றும். பயப்படும் போதும், கோபப்படும் போதும் கொண்டை

சிறகு விசிறி போல் விரியும். இப்பறவை ஒருவித நெளிவு கோட்டில் செல்வது போல் பறக்கும். பறந்து சிறிது தூரத்துக்கு அப்பால் போய் உட்காரும். இதன் கூப்பிடு தொனி அழகான இனிமையான ஹூ-போ, ஹூ-போ-போ என பலமுறை திருப்பித் திருப்பி எழும் ஓசை. இது பத்து நிமிடங்களுக்கு மேல் ஒலிக்கும். கூப்பிடும் போது தலையைக் கீழே தாழ்த்தி அலகை நெஞ்சுடன் சமமாக வைத்துக் கொண்டு குரலெழுப்பும். வேறு சமயங்களில் ஒவ்வொரு தரம் கூப்பிடும் போதும் தலையை முன்புறம் நோக்கித் தூக்கியவாறும், கொண்டைச் சிறகை அவ்வப்போது திறந்து திறந்து மூடியவாறும் இருக்கும். கொண்டஞ்சிருவடியின் உணவு, விவசாயத்துக்குத் தீமை விளைவிக்கும் பூச்சிகள் தாம். இதனால் இது மனிதருக்கு அதிகம் பயன்படும் பறவை. இதன் கூடு மரப் பொந்து, அல்லது வீடுகளில் சாரப் பொந்து, ஓட்டுச் சாய்ப்புக்குள் வரும் இடைவெளிகள் இவற்றில் அமைந்திருக்கும். இறகுகள், கந்தைத் துணிகள், கழிவுத் துணிகள், முடி, வைக்கோல் யாவற்றையும் வைத்து அழகற்ற ஒரு பந்து போல் கட்டியிருக்கும். கூட்டிலிருந்து பலத்த துர்நாற்றம் வீசும். 5—6 வெள்ளை முட்டைகளையிட்டு அடை காக்கும். நாளாக நாளாக முட்டைகள் அழுக்கடையும்.

இவ்வம்சத்தின் இறுதியான குடும்பம் **மரத்தலையன் குடும்பம்**—(Bucerotidae, The Horn Bills) இவை யாவும் பழந் தின்னும் பெரும் பறவைகள். இவைகளின் அலகு மிகப் பெரியது. மரத்தலையனுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, **மலபார் வெள்ளை கறுப்பு மரத்தலையன்**—Malabar Pied Horn bill (Anthracoceros coronatus) (படம் 59): கள்ளப் பருந்தைவிடப் பெரிய இப்பறவை, வெள்ளையும் கறுப்பும் முக்கிய நிறங்களாகக் கொண்டது. அகன்று நீண்ட வாலின் இடப்புறம் வலப்புறம் உள்ள நீண்ட இறகுகள் முழுதும் வெள்ளையானவை. கனமான மஞ்சளும் கறுப்பும் கலந்த கொம்பு போன்ற அலகின் மேலே தட்டையாகவும் முன்புறம் கூர்மையாகவும் உள்ள பேழை போன்ற பாகம் கண்ணைக் கவருவது. இதுவே இதைப் போன்ற இன்னொரு **மரத்தலையனாகிய** பெரும் மரத் தலையனிலிருந்து (A. malabaricus) இதை வேறுபடுத்துகிற அடையாளம். பெரும் மரத்தலையனுக்கு வாலின் வெளிப் புறங்கள் கரு நிறமாகவே இருக்கும். நுனி மட்டும்தான் வெள்ளையாக இருக்கும். மேலும் பேழையின் மேற்பாகம் தட்டையாயில்லாமல் குவிந்து இருக்கும். இது குமாஹூன், அஸ்ஸாம் முதலிய வடக்குப் பிரதேசங்களிலேயே அதிகம் காணப்படுகிறது. மலபார் வகையின் பெண்

பறவையின் கண்ணைச் சுற்றி இருக்கும் தோல் வெள்ளையாக இருக்கும். எல்லா மரத்தலையன்களுக்கும் ஒரேவிதப் பழக்க வழக்கங்கள் உண்டு. யாவும் ஆல், அத்தி, அரசு நிறைந்த அடர்த்தியான காடுகளில் வாழுகின்றன. இம் மரங்களின் பழங்கள் இவற்றின் முக்கிய உணவு. சில சமயம் பல்லி, பறவைக் குஞ்சுகள், எலிகள் முதலியவற்றையும் தின்னும். சிறு குழுக்களாக ஒரு தலைவனைப் பின்பற்றி ஒவ்வொன்றும் சுற்றி வளைந்து வளைந்து பறந்து தாவிச் செல்லும் வழக்கம் இவற்றிற்கு உண்டு. கரகரப்பான கனத்த குரலில் கத்துவதும் கீச்சுக் குரலில் அலறுவதும் எல்லா மரத் தலையன்களுக்கும் பொதுவான பண்பு. பறக்கும் போது, வேகமாக இறக்கையை நான்கைந்து முறை அடித்தாலே எழும்பிவிடும். பின் இறக்கையை அடிக்காமல் விரித்த வண்ணமே மிதந்து சென்று குப்புறக் கீழே இறங்கும். இவை கூடு கட்டும் பழக்கமே தனி ரகமானது. ஒரு மரத்தில் இயற்கையாக உள்ள பெரிய துவாரத்தை ஆண் பறவை தன் விட்டைகளை வைத்தே அலகால் ஒட்டி சுவர் போல் அமைத்து, பெண் பறவையை உள்ளே வைத்து அடைத்து ஒரு சிறு துவாரம் மட்டும் விட்டு வைத்து விடுகிறது. முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் வரை ஆண் பறவையே பெண்ணுக்கு இத்துவாரத்தின் வழியே உணவு அளிக்கிறது. குஞ்சு பொரித்தவுடன் பெண் பறவை கூட்டின் சுவரை உடைத்து வெளிவருகிறது. பிறகு ஆணும் பெண்ணும் சேர்ந்தே குஞ்சுகளை பராமரிக்கின்றன. மார்ச்சு முதல் ஜூன் வரை இதற்கு இனப் பெருக்க காலமாகும். முட்டைகள் 2 முதல் 4 வரை இடப்படும். அவை வெள்ளையாக இருக்கும். அடை காக்கக் காக்க அவை அழுக்கடையும்.

**மரங் கொத்திப் பறவை வம்சம்**—(Order PICIFORMES)

இதில் இரு பெரும் குடும்பங்கள் அடங்கும். **கன்னான் பறவைக் குடும்பம்**—CAIPTONIDAE (Barbets) மற்றும் **மரங் கொத்திப் பறவை குடும்பம்**—PICIDAE (Woodpeckers). கன்னான் பறவைகள் மரங்களில் பழங்களைத் தின்று வாழும் சிறு பறவைகள். இவை பளிச்சென்ற நிறம் கொண்டிருந்தும் உடல் அமைப்பு அவ்வளவு அழகாக இராது. அலகுகள் கனத்தவை; பெரியவை. அவற்றின் அடியில் குத்தும் மீசை போல் சுற்றிலும் நிமிர்ந்து சிலிர்த்து நிற்கும். இறகுக் குச்சிகள் இருக்கின்றன. நம் நாட்டில் இக்குடும்பத்தின் பிரதிநிதியாக இருப்பது **கன்னான் பறவை**—Crimson breasted barbet or **coppersmith (Megalaima haemacephala)** (படம் 60). இது

அடைக்கலங் குருவியை விடச் சற்றுப் பெரியது. கட்டை வாலுடையது.

இது கனத்த அலகுடன், புல் நிறப் பச்சை உடலும், இரத்தச் சிவப்பு நிற மார்பும், முன் தலையும், மஞ்சள் கழுத்தும், பச்சைக் கோடுள்ள மஞ்சள் நிற அடிப்பாகமும் உடையது. குட்டையான கூர்மையற்ற வால், குருவி பறக்கும் போது முக்கோண வடிவுள்ள தாகத் தோன்றும். சந்தடியுள்ள பட்டணத்தின் நடுவிலும் நடுக் காட்டில் இருப்பது போலவே சாதாரணமாகப் பழகும் இப்பறவை; அதற்கு வேண்டியது பெரிய பழுத்த ஆல், அரசு, அத்தி மரங்கள். இம்மரங்களில் சில சமயம் கன்னுன் பறவைகள் ஏராளமாகக் கூடி வந்து, சேர்ந்துவிடும். மைனு, கொண்டைக் குலாத்தி (புல்புல்), காகம், புரு, மரத்தலையன் இவற்றோடு கலந்து இருந்து பழந் தின்னும். அந்திப் பூச்சிகளும், ஈசல்களும் பறக்கும்போது அவை களையும் பறந்து பிடித்துத் தின்னும். கன்னுன் பறவை என்ற பெயரே இதன் கூப்பிடு தொனியை வைத்து அமைந்ததுதான். வெண்கலப் பாத்திரம் செய்யும் இடத்தில், அண்டா செய்யும்போது அடிக்கும் சுத்தியல் சத்தத்தையும்விட மிக உரத்த குரலில் டக், டக் டக் என்று இரண்டு விநாடிகளுக்கு ஒருமுறை விடாது சத்தம் எழுப்பும். இதைத் தொடர்ந்து கேட்டால் அலுப்பு உண்டாகி விடும். இது கிராமப் புறங்களில் மிகவும் பழக்கமான பறவைச் சத்தங்களில் ஒன்று. இத்தொனி எழுப்பும்போது இப்பறவை, பல குரல் கொடுப்பவன் தொண்டையைத் தீட்டிக் கொள்வது போல் ஒருவித அசைவுடன் தலையைத் தூக்கி அங்குமிங்கும் பக்க வாட்டில் அசைத்துக் கொண்டு கத்தும். கன்னுன் பறவை மிருதுவாகவுள்ள முள் முருங்கை, முருங்கை, போன்ற மரங்களில் பட்டுப்போன கிளை களில் தாமே அலகால் தோண்டிய பொந்துக்களில் முட்டையிடும். முட்டைகள் ஒளியின்றித் தூய வெள்ளையாக இருக்கும்.

மற்றொரு கன்னுன் பறவை **பெரிய பச்சைக் கன்னுன்**—Large Green Barbet (M. zeylanica) இது பச்சையாக இருப்பதால் அதிக மாகக் கேட்கப்படுகிறதேயன்றி காணப்படுவதில்லை. மைனுவின் பருமன் உடைய இப்பறவை முழுவதும் பச்சை நிறமுடையது. தலை சற்று தவிட்டு நிறமாக இருக்கும். கண்ணைச் சுற்றி ஆரஞ்சு நிறத்தில் இறகற்ற சருமப்பகுதி இருக்கும் காடுகளில் இதன் யுத்தக் கூப்பிடு தொனியாகிய குட்ரூ-குட்ரூ-குட்ரூ நிரம்பி எதிரொலித்து நிற்கும்.

மரங்கொத்தி வகைகள் இந்தியாவில் நல்ல பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. இவை வனப் பாதுகாப்புக்கு மிக்க உதவியாக இருக்கின்றன. ஏனெனில் இவை மரங்களைத் துளைத்து நாசமாக்கும் பூச்சிகளின் லார்வாப் புழுக்களை வெளியேற்றித் தின்கின்றன. இவ் வேலைக்கு இதன் நீண்ட நுனி முள்ளுடன் கூடிய, ஈட்டி போலுள்ள நாக்கு வசதியாக அமைந்திருக்கிறது. இந் நாக்கு அலகை விட வெகு நீளம் வெளியே தள்ளக்கூடியது. அதிகமாகக் காணப்படும் மரங் கொத்திகளுள் ஒன்று, **மராட்டிய மரங் கொத்தி** Mahratta woodpecker (Picoides ahmrattensis) (படம் 61).

இது கொண்டைக் குலாத்தி அல்லது புல்புல் பருமனுள்ள சிறிய மரங்கொத்தி. கூர்மையான அலகுடன், உருவத்தில் நீண்டு கனத்து, வால், ஆப்பு போன்று கூர்மையாகவும் உறுதியாகவும் இருக்கும். இம்மரங் கொத்தியின் மேல் பாகம் கறுப்பு வெள்ளைப் புள்ளிகளாகத் தோன்றும். தலை மஞ்சள் கலந்த தவிட்டு நிறம். உச்சி இரத்தச் சிவப்பு அடிப்பாகம் வெள்ளை. நெஞ்சிலும் பக்க வாட்டிலும் தவிட்டு நிறக் கோடுகள் இருக்கும். வயிற்றிலும் வாலடியிலும் இரத்தச் சிவப்பில் பெரும் புள்ளிகள் இருக்கும். பெண் பறவையில் தலையின் உச்சியிலுள்ள இரத்தச் சிவப்பு நிறம் கிடையாது. இப்பறவை மாந் தோப்பு, இலையுதிர் மரங்கள் கொண்ட காடுகள், அரை குறைப் பாலை நிலம் முதலியவைகளில் காணப்படும். இப்பறவைகள் ஜோடி ஜோடியாக ஒரு மரத்தின் அடிமரத்தில் இருந்து இன்னொரு மரத்தின் அடிமரத்துக்குத் தாவும். மரத்தில் மிகத் தாழ்வான இடத்தில் அமர்ந்து வாலை மூன்ருவது கால் போல் உபயோகப்படுத்திக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தத்தித் தத்தி மேலேறும். இதன் உணவரான புழுக்களையும், எறும்புகளையும் முள் முனை கொண்ட நீட்டக் கூடிய நாக்கின் உதவியால் கொத்தி எடுத்து உண்கிறது. கூப்பிடு தொனி, **கிளிக் கிளிக்** அல்லது **க்ளிக்ர்ர்ர்...'**. இம் மரங் கொத்தி மற்ற மரங் கொத்திகள் போலவே வேகமாகவும் மேலும் கீழுமாக வளைவாகவும் பறந்து செல்லும். இது மட மட வென்று இறக்கைகளை அடித்து, இடையில் நிறுத்தி, திரும்பவும் இறக்கையை அடித்து, சற்று தூரஞ் சென்ற பின் திரும்பவும் நிறுத்தி.பறக்கும். கூடு: இப்பறவைகள் உளுத்துப்போன மரக் கிளைகளில், அதிக உயரத்தில் போகாமலே, துளைத்துச் சுரங்கம் உண்டு பண்ணி அதில் முட்டையிடும். சராசரியாக மூன்று முட்டைகள் இடும். அவை உருண்னடயாகவும் பள பளப்பாகவும் இருக்கும். தெற்கே மிகவும் சாதாரணமாகக் காணப்படுவது **தங்கமுதுகு மரங்**

**கொத்தி**—Golden backed woodpecker: (Dinopium benghalense). தமிழ்நாட்டில் மரங் கொத்தி என்றால் இது தான். இது மராட்டிய மரங் கொத்தியை விடச் சற்று பெரியது. முதுகு தங்க நிறத்தில் மினுக்கும்; இடையிடையே கறுப்பும் கலந்திருக்கும். அடிப்பாகம் வெளுத்த மஞ்சள் நிறம். இதிலும் கறுப்பு நேர்க் கோடுகள் நிறைய இருக்கும். ஆண் பறவைக்குத் தலை உச்சியும் பிரடிக் கொண்டையும் முழுதும் இரத்தச் சிவப்பு நிறத்தில் இருக்கும். பெண் பறவையில் ஓரளவுக்குத் தான் இந்தச் சிவப்பு நிறம் இருக்கும். இது கிராமப் புறத்தோப்பு களிலும், தோட்டங்களிலும், இடையிடையே பெரிய மரங்கள் இருக்கும் திறந்த வெளிக் காடுகளிலும் காணப்படும்.

**சிட்டுக்குருவி வம்சம்:** (Order PASSERIFORMES)

நம் நாட்டுச் சாதாரணப் பறவைகளில் மூன்றில் ஒரு பங்கு இவ் வம்சத்தைச் சேர்ந்தவையே. இவை யாவும் பிடித்து அமரும் பறவைகள் அல்லது பாடும் பறவைகள் என்று வழங்குபவை. (மேல் நாட்டவர் இப்பறவைகள் கூப்பிடுவது, மெதுவாகப் பேசுவது எல்லாவற்றையுமே மிக வியந்து ரிக்கார்டுகளில் இவற்றின் தொனி களைப் பதித்து வைத்து அனுபவிக்கின்றனர்.) பெரும் எண்ணிக் கையிலுள்ள பல தரப்பட்ட பறவைக் குடும்பங்கள் இவ்வம்சத்தில் அடங்கு மாயினும், எல்லாவற்றிற்கும் பொதுவான சில பண்புகள் உண்டு. காலின் தசை நாண்கள் தலை, அண்ணம் (காற்றுக் குழாயின் மேலுள்ள ஒலிப் பெட்டியின் தசைகளும், ஒலி எழுப்பும் தசை நாண்களும்) இவற்றின் பண்புகள் பொதுவானவை.

சாதாரணமாகக் காணப்படும் சில பறவைகள் மட்டும் இங்கே எடுத்து விளக்கப்படும்.

**மொட்டை வால் குருவிகள் குடும்பம்:** (PITTIDAE) மொட்டை வால் குருவிகள் (Pittas) அல்லது எறும்புத் தின்னிகள் (Ant Thrushes) கண்ணைக் கவரும் அழகுடையவை; தரையில் கிளறி மேயும் பறவைகள். அலகு கனமாகவும், வலுவாகவும் இருக்கும். சற்று நீண்ட வலுவான கால்கள் இருப்பதால் இவை குதித்துக் குதித்து நடக்கும். அதிகமாகப் பறப்பதில்லை. சில பறவைகள் இடம் பெயர்கின்றன.

**இந்திய மொட்டைவால் குருவி:** The Indian Pitta (Pitta brachyura)—(படம் 62): இது ஒரு குட்டைவால் பறவை. பளிச் சென்று தெரியும் நிறங்கள் கொண்டது. நீலம், சிவந்த மஞ்சள்,

பச்சை, கறுப்பு, வெள்ளை இத்தனை நிறங்களும் வெவ்வேறு பாகங்களை அலங்கரிக்கின்றன. வாலடி இரத்தச் செந்நிறம் ஓர் தனி அழகு தருகிறது. பறக்கும் போது ஒரு வட்டமான வெள்ளைப் பட்டை இறகு நுனிக் கருகில் பளிச்சிடுகிறது. இது காட்டாற்றுக் கரைகளிலும், நீரோடைகளை அடுத்தும் காணப்படுகிறது. சிறு புதர்க்காடுகளிலும், மனித சஞ்சாரம் உள்ள இடங்களிலும் காணப்படலாம். பொதுவாகத் தரையிலேயே நடமாடி அலைந்து திரிந்தாலும் இது அடைவது மரக் கிளைகளில் தான். தரையில் தாவி குதித்தே செல்லும். அழுகிய இலைகளைப் புரட்டியும் அலகால் தரையைக் குத்தித் தோண்டியும் இரை தேடும். அப்போது கூழைவால் மேலும் கீழுமாக வேண்டுமென்றே ஆட்டப்படுவது போல் தோன்றும். தொந்தரவு கொடுக்கப்பட்டால் உடனே பக்கத்தில் இருக்கும் மரத்தின் கிளைக்குப் பறந்து சென்று விடும். திரும்பவும் சிறிது நேரத்தில் இறங்கி இரை மேயும். இது சாதாரணமாகக் கூப்பிடுவது உரத்த இரட்டை விசில் **'வீற்-றியு'** அதிகாலையிலும் சூரியன் அடைந்த உடனும் இது கேட்கும். மேகம் சூழ்ந்து மப்பும் மந்தாரமாய் இருக்கும் போது பகலிலும் கேட்கும். இது பத்து செகண்டுக்கு 3 அல்லது 4 கூப்பிடு தொனி வீதம் கேட்கும். இது சுமார் 5 நிமிடங்கள் வரை தொடர்ச்சியாகக் கேட்கும். இது கூப்பிடும் போது தண்ணீர் விழுங்குவது போல் தலையை ஓர் உதறலுடன் பின்னோக்கி உயர்த்தியவாறிருக்கும். பல திசைகளிலிருந்து கொண்டு நான்கைந்து பறவைகள் ஒன்றுக்கொன்று விடை அளிப்பது போல் கூப்பிடும். கூடு: உருண்டை வடிவில் சிறு குச்சிகளாலும் புல்லாலும், காய்ந்த இலைகளாலும், புல்லின் வேர்களாலும், வளையப்பட்டிருக்கும். ஓர் தாழ்ந்த மரக் கிளையின் கவுட்டையில், வட்ட வடிவில் பக்கத் துவாரம் இருக்கும் வண்ணம் இக் கூடு கட்டப்படும். சில சமயம் தரையிலேயே சிறு குத்துச் செடிகளுக்குள் கட்டப்பட்டிருக்கும். 4—6 முட்டைகள் இடும். வெள்ளையாக மினுமினுப்பாக இருக்கும் முட்டையில் மங்கிய ஊதா நிறத்தில் புள்ளிகளும் பொட்டுகளும் மயிர் போன்ற சிறு கோடுகளும் இருக்கும்.

**வானம்பாடிக் குடும்பம் :** (Family ALAUDIDAE) வானம் பாடிகள் (larks) தரை வாழ் சிறிய பறவைகள். இவற்றின் நிறம் இவை வாழும் இடத்தை ஒட்டி இருப்பதால் பார்ப்பவர் கண்ணுக்கு உடன் புலப்படா. சில இனங்களுக்குக் கொண்டை இருக்கும். கூடி

வாழும் இவை வெறுந் தரைகளிலும், புல்வெளிகளிலும் காணப்படும். சில இடம் பெயர்கின்றன. பல இனிமையாகப் பாடும். இப்பாட்டு உயர எழும்பும் போதும், பறக்கும் போதும் கேட்கும்.

**கொண்டை வானம்பாடி :** Crested Lark. (Galerida Cristata) (படம் 63) **:** இது அடைக்கலங் குருவியை விடச் சற்றுப் பெரியது. தலையின் உச்சியிலிருந்து மேலெழும்பும் கொண்டை இப்பறவையை இனஞ் சுட்ட உதவும். இதன் உடலின் மேல் பாகம் செம்மண் தரை நிறத்தில் சற்று வெளுப்பேறி குறுங் கோடுகளுடன் இருக்கும். அடிப்பாகத்தில் வெளுப்பு மண் போன்ற நிறத்தில் தவிட்டு நிறக் கோடுகள் இருக்கும். இவை இரண்டு இரண்டாகத் தூரத் தூர நின்று இரை மேயும். சில சமயம் 4—5 ஒன்றுக வரண்ட புல் தரையில் ஓடிக் கொண்டு இரை மேயும். புல்வகை, களைகளின் விதைகள், சிறு சிறு வண்டுகள், மற்றும் தத்துக் கிளி போன்ற சிறு பூச்சிகள் இவற்றின் உணவாகும். இடையிடையே ஒரு பறவை பறந்து ஒரு கல் அல்லது மண்ணுங் கட்டி மேல் ஏறி உட்கார்ந்து விசிலடிப்பது போல் இனிமையான குரலில் பாடும். சாதாரணமாக அதன் கூப்பிடுதொனி இனிமையான ந்றீ-ஊர் என்பது. முட்டை யிடுங் காலம் ஆண் பறவை சற்று உயரக் கிளம்பி பாட்டுப் பாடும். பாடும் பறவை இறக்கையை விரித்து மெதுவாக அடித்தவாறு இறங்கி ஒரு கல்லிலோ, அல்லது மண் குன்றிலோ அமரும். பாட்டு உண்மையான வானம்பாடியின் பாட்டை விடத் தொனியில் சிறியது ; இனிமையும் குறைவு. என்றுலும் இப்பறவை வட நாட்டில் பாடும் பறவையாக கூட்டில் அடைத்து வளர்க்கப்படு கிறது. இதன் கூடானது ஒரு ஆழமற்ற கிண்ணம் போன்றது. இது முடியாலும் இறகுகளாலும் புல்லாலும் வனையப்பட்டு தரையில் மண் கட்டிக்கு அருகிலோ, புல் கும்பலின் மறைவிலோ இருக்கும். மங்கலான மஞ்சள் நிறத்தில் 3 அல்லது 4 முட்டைகள் கூட்டில் இருக்கும். முட்டையின் மேல் தவிட்டு நிறத்திலும், ஊதா நிறத் திலும் புள்ளிகள் இருக்கும். இதே இனத்தைச் சேர்ந்த இரு வகை வானம்பாடிகள் உண்டு. அவைகளுள் ஒன்று சிறியதும் சற்று அதிகச் சிவந்ததுமான சைக்கொண்டை வானம்பாடி—Sykes's Crested Lark (Galerida deva). இது நெஞ்சில் சில மெல்லிய கருங்கோடுகளுடையது. மற்றது மலபார் கொண்டை வானம்பாடி. (G. Malabarica) இதில் நெஞ்சின் கருங்கோடு அகன்றது. அதிக மானது.

**சப்பட்டைக் குருவி:** Ashycrowned or Blackbellied Finch-Lark (Eremopterix grisea)(படம் 64): இது அடைக்கலங் குருவியை யும் விடச் சிறிய சவுக்கமான உடம்புடைய வானம்பாடி. ஆண் பறவை செம்மண் நிற மேற்பாகமும் கரு நிற அடிப்பாகமும் உடையது. சாம்பல் நிற உச்சியும், வெள்ளைக் கன்னமுமுடையது. ஆனால் பெண் பறவைக்கு உடம்பு முழுவதும் மணல் தரை நிறமே இருக்கும். வறண்ட திறந்த வெளிப் பிரதேசங்களில் இணை இணை யாக அல்லது சிறு கூட்டமாக, பரவலாக நின்று இரை தேடும். அவற்றின் நிறம் தரையுடன் ஒன்றிவிடுவதால் அவை நிற்பது நமது கண்ணுக்கு உடனே புலப்படுவதில்லை. அவை தரையில் சிறிது தூரம் அங்குமிங்கும் குறுநடை போட்டு ஓடி இரை மேயும். உணவு: புல்லின் மணிகள், பலவிதத் தாவர வித்துக்கள், பூச்சிகள். பறக்கும் போது விரைவில் இறக்கையடித்து மிதந்து செல்வது போல் சென்று சிறகடித்தலைச் சிறிது நிறுத்தி நிறுத்தி செல்லும். ஆண் வெகு நேர்த்தியாக இனிமையாகப் பாடும். தரையிலிருக்கும் போதும் பறக்கும் போதும் நீண்ட அதிர்மென் குரல் எழுப்பிப் பாடும். சுமார் 30 மீட்டர் உயரம் வரை சிறகை வேகமாக அடித்துப் பறக்கிறது. அப்போதும் **'கீரா'** என்ற அந்த இன்னிசைக் குரல் தொடர்ந்து கேட்கும். பின் அங்கிருந்து தலை கீழாகச் சாய்வாக இறக்கையை மடக்கி வைத்துக் கொண்டு வேகமாக இறங்குகிறது. தரையைத் தொடுமுன் திரும்பவும் சில மீட்டர்கள் உயரக் கிளம்புகிறது. மறுபடியும் கீழே குப்புற சாய்வாக இறங்குகிறது. திரும்பவும் தரையைத் தொடுமுன் மேலே திரும்ப சில மீட்டர் உயரம் எழுப்பு கிறது. ஒவ்வொரு தடவையும் இறங்கும் போது பாட்டுடன் இறங்கும். இறுதியில் தரைக்கு அருகில் வந்ததும் இறக்கையை விரித்து ஓர் கல்லிலோ அல்லது மண்ணுங் கட்டியிலோ அமர்கிறது. இவ்வளவு செயல்களும் மீண்டும் மீண்டும் அடுத்தடுத்தும் நடக்கும். இது பார்ப்பதற்கு கவர்ச்சியாகவும் இன்ப மூட்டக் கூடியதாகவு மிருக்கும். இவ்வானம்பாடியின் கூடு ஒரு சிறு தட்டுபோன்றது. இது சில சிறு கூழாங் கற்களுக்கு மேல் புல், மூடி, இறகுகளால் வளையப்பட்டிருக்கும். 2-3 முட்டைகள் வெண் மஞ்சள் அல்லது வெண் சாம்பல் நிறத்தில், தவிட்டு நிறத்திலும் லெவண்டர் நிறத் திலும் புள்ளிகள் கொண்டு, இருக்கும்.

**தில்லான் குடும்பம்:** (HIRUNDINIDAE) இதில் தில்லான்களும் மார்ட்டின்களும் அடங்கும் (Swallows and Martins). இவை அதிக

நேரம் பறந்தே திரிந்து, பறக்கும் பூச்சிகளை அகன்ற வாயால் பிடித்துத் தின்னும். இறக்கைகள் நீண்டவை; ஊசி போல் முடிபவை. ஆயினும் முன்னி வௌவாலின் இறக்கைகளை விட அகன்றவை. பல இனங்களில் வால் நன்ருகப் பிளவுபட்டிருக்கும். அவைகள் அழகாக வேகமாய்ப் பறக்கும். சில இனங்கள் இந்தியாவிலேயே முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. வேறு சில வடதுருவ நாடுகளிலிருந்து இடம் பெயர்ந்து வருகின்றன. நம் நாட்டிலேயே தங்கும் இனங்களில் மிகவும் அறிமுகமான இனம், செம்பிட்டத் தில்லான்—Red rumped Swallow (Hirundo daurica) (படம் 65): சிட்டுக்குருவியின் பருமனுள்ள இத் தில்லான் குருவி நன்ருகப் பிளவுபட்ட வாலுடையது. மின்னும் தீய்ந்த கருநீல நிற முதுகும், செம்மஞ்சள் கலந்த வெண்மை நிறமுடைய வயிற்றுப் பக்கமும் கொண்டது. பின் கழுத்தில் செந் தவிட்டு நிற அரைவட்டமும், புட்டத்தில் செந் தவிட்டு நிறமும் இதற்கு அழகு கொடுக்கும் அடையாளங்கள். இப்பறவை இனத்தில் ஒரு பெரும்பகுதி வெளி நாட்டிலிருந்து வரும். அவை சில மாதங்கள் தங்கியிருந்து சென்றுவிடும். இப்பறவைகள் தாம் நவம்பர் டிசம்பர் மாதங்களில் தந்திக் கம்பிகளில் ஆயிரக் கணக்கில் வரிசையாக உட்கார்ந்திருக்கும். இவற்றின் புட்டத்தில் காணப்படும் சிவப்பு மங்கலாகவும், அகலமாகவும் இருக்கும். உடம்பின் அடிப்பாகத்தில் காணப்படும் வரிகளும் பெரிதாக இருக்கும்.

தில்லான்கள் ஆகாயத்தில் உயரப் பறந்து அலையும் சிறு கொசு, ஈக்களையும், வேறு பூச்சிகளையும் பறக்கும் போதே வாயால் பிடித்துத் தின்னும். தரையை ஒட்டிப் பறக்கும் பூச்சிகளையும் தரையை ஒட்டிப் பாய்ந்து பறந்து கவ்விச் செல்லும். இவை கூடி வாழும் பறவைகள். முட்டையிடும் காலந் தவிர மற்றக் காலங்களில் பெருங் கூட்டமாகத் தந்திக் கம்பிகளில் உட்கார்ந்திருப்பதும் முன்னி வௌவால்களுடன் இரை தேடுவதும் யாவரும் அறிந்த காட்சிகளே. இரவிலே பெருங் கூட்டமாக கரும்புத் தோட்டங்களிலும், நாணல் காடுகளிலும் அடையும். தண்ணீருக்குள் நிற்கும் நாணல்களை விரும்பித் தேர்ந்தெடுக்கும். பறக்கும்போது சிலமுறை விரைவாக இறக்கையை அடித்தும், பின் மிதந்தும், வெகு வேகமாகவும் அழகாகவும் செல்லும். நன்ருகப் பிளவுபட்ட வால் பறக்கும் போது திரும்புவதற்கும் இறங்குவதற்கும் உதவுகிறது. முட்டையிடும் காலை சக்காளத்துடன் இச்-இச் என்னும் ஒலி எழுப்பும். இத் தில்லானின் கூடு மலைக்குகைகளில் கல்லில் ஒட்டப்பட்ட கூசாபோல் களி மண்ணுல் செய்யப்பட்டிருக்கும்.

கூட்டின் வாய் கல்லோடு ஒட்டி ஒடுங்கியிருக்கும். முட்டையிடும் அறை அகன்றிருக்கும். உள்ளே இறகுகளால் மெத்தை போல் அமைக்கப்பட்டிருக்கும். 3 அல்லது 4 முட்டைகள் கூட்டில் இருக்கும். இவை சுத்த வெள்ளையாக இருக்கும். இத்துடன் மாரிக் காலத்தில் இடப் பெயர்ச்சி செய்து வந்து சேரும் இன்னொரு தில்லான், ஐரோப்பிய தில்லான்—The Common Swallow or the European Swallow (hirundo rustica). இதன் அடிப் பாகம் இளம் சிவப்பு நிறத்தில் இருக்கும். மேற்பாகம் சிவந்த ஊதா நிறத்தில் இருக்கும். முன் உச்சியும் கழுத்தும் செந்தவிட்டு நிறத்தில் இருக்கும். கழுத்தை யொட்டி நெஞ்சில் அகன்று ஒளிரும் கரு நிறப் பட்டையும் உண்டு. இதன் வாலும் நன்ருகப் பிளவுபட்டதே.

**பருந்துக் குருவிக் குடும்பம்** : (Laniidae) இக் குடும்பத்தில் அடங்கும் பறவைகளை ஆங்கிலத்தில் புச்சர்கள் அதாவது கசாப்பு செய்யும் பறவைகள் என்றழைப்பர். இவை வாழும் இடத்தில் கொன்று தொங்கவிடப்பட்ட பிராணிகள் முள்களிலும் கிளைகளிலும் இருக்கும். தேவைக்கும் அதிகமாகக் கொன்று, தின்றது போக எஞ்சியவைகளைப் பின் தின்னலாம் என்று தொங்கவிடுகின்றன. சாதாரணமாகக் காணப்படும் பெரிய பருந்துக் குருவி, **சாம்பல் பருந்துக் குருவி** —Grey shrike (Lanihs excubitor) (படம் 66): மைனுவின் பருமனுள்ள இப் பறவையின் உடல் வெள்ளி போல் ஒளிரும். வெள்ளைச் சாம்பல் நிறம்; வாலில் வெள்ளையும் கறுப்பும் பட்டை பட்டையாய் மாறி மாறி வரும். அலகிலிருந்து கண் வழியாக அகன்று கருங்கோடு ஓடுகிறது. கரு நிற இறக்கையில் கண்ணுடி போன்ற வெள்ளை வட்டமும் உண்டு; பறக்கும் போது இது பளிச்சிடும். பெரிய தலையும், வளைந்த கனத்த அலகும் இதற்கு வைரி போன்ற ஒரு தோற்றத்தை அளிக்கிறது. வறண்ட திறந்த வெளிக் காடுகளில் தனித்தனியே பறந்தலைந்து இவை இரை தேடும். இப்பறவை ஏதாவது முட் செடியில் அமர்ந்து இருக்கும். தனது இடத்திலிருந்து கீழே அக்கம் பக்கம் ஏதாவது பலிப் பொருள்கள் ஓடுகின்றனவா என்று கூர்மையாகப் பார்த்துக் கொண்டேயிருக்கும்; ஏதாவது தென்பட்டதும் சரேலெனப் பாய்ந்து பிடித்துத் தூக்கி கொண்டு தனது இடத்தில் போய் உட்கார்ந்து, காலால் பற்றிக் கொண்டு கிழித்துத் தின்னும். ஒவ்வொரு பறவைக்கும் தான் உணவு தேடும் வளைவு அல்லது பிரதேசம் உண்டு. இதற்குள் வேறு பறவைகள் வந்தால் இலேசாகிவிடாது. இதன் உணவு வெட்டுக் கிளி, தத்துக்

கிளி, வேறு பெரிய பூச்சிகள், பல்லிகள், சுண்டெலி, மற்றும் சிறு பறவைகள். சில சமயங்களில் சுகவீனமான (தன்னைவிட) பெரிய பறவைகள் கூட இரையாவதுண்டு. சாதாரணமாக இது கூப்பிடுந் தொனி காதுக்கு நாராசம் போலிருக்கும். ஆனால் முட்டையிடுங் காலை இது இனிமையான குரலில் பாடுகிறது. இது வேறு பல பறவைகளின் கூப்பிடு தொனியை ஒத்து இருக்கும். இப் பறவை வேறு பறவைகளின் தொனியை அப்படியே பின்பற்ற வல்லது. கூடு: அடக்கமான ஆழமான கிண்ணம் போல் முள் குச்சிகளாலும் கந்தைத் துணிகளாலும் இறகுகளாலும் வலையப் பட்டிருக்கும். இது சுமாரான உயரத்தில் முள் செடிகளில் கட்டப் பட்டிருக்கும். 3 முதல் 6 வரை முட்டைகள் இடும். இவை பொதுவாக மங்கலான பச்சை நிறத்தில், செந்தவிட்டு நிறத்தில் பொட்டுகளுடன் இருக்கும்.

**செம்முதுகுப் பருந்துக் குருவி** — Rufousbacked shrike: (Lanius schach): இது முந்திய பறவையைவிடச் சற்று சிறியது. முதுகின் பின்புறமும் புட்டமும் கெட்டியான சிவப்பாக இருக்கும். நெஞ்சு, வயிறு எல்லாம் மங்கலான சிவப்பு நிறத்தில் இருக்கும். இது சற்று அடர்த்தியான காடுகளையும் நீர் நிலைகள் கொண்ட இடத்தையும் விரும்பும்.

**மாம்பழக் குருவி** (மஞ்சள் பாலா) குடும்பம் (ORIOLIDAE) நம் நாட்டில் இக்குடும்பத்தின் பிரதிநிதியாக உள்ளது கருந்தலை மாம்பழக் குருவி—Blackheaded Oriole (Oriolus xanthornus) (படம் 67): இது மைனாவின் பருமன் இருக்கும். தங்க நிறத் தலையும், தொண்டையும் நெஞ்சின் மேற்பாகமும் உடைய, மரங்களில் வாழும் பறவை. இதன் இறக்கை மற்றும் வால் ஓரங்கள் கறுப்பாயிருக்கும். ஒளிரும் இளஞ் சிவப்பு நிற அலகும் இரத்தச் சிவப்புக் கண்களும் மறக்க முடியாத அடையாளங்கள். பெண் பறவைக்குத் தலை நிறம் மங்கலான கறுப்பாயிருக்கும். குஞ்சுகளுக்கு முன்தலை மஞ்சளாக இருக்கும்; தலை மீது மஞ்சளான வரிகள் இருக்கும். சாதாரணமாக இது மரங்கள் அடர்ந்த காடுகளில் தனித்தனியாகத் திரியும். பொதுவாக ஒதுங்கித் திரியும் சுபாவமுடைய பறவையென்றாலும், கிராமங்களிலும் பட்டணங்களிலும் பெரிய மரங்களுடைய தோட்டங் களில் சில சமயங்களில், திடீரெனப் பறந்து நுழைவதைப் பார்க் கலாம். சாதாரணமாக இது எழுப்புந் தொனி கரகரப்பான (ச்சீயா அல்லது 'க்வாக்'), மற்றும் புல்லாங்குழலோசையை ஒத்த 'பிலோ'

அல்லது 'பீவோலோ'. உணவு: ஆல், அத்தி, அரசு இவற்றின் பழங்கள்; உண்ணிச் செடியின் பழங்களையும் விரும்பி உண்ணும். பலவகைப் பூச்சிகளையும் பிடித்துத் தின்னும். முள், முருங்கை, இலவு இவை பூக்குங் காலங்களில் அவற்றின் தேனையும் உறிஞ்சும். கூடு அழகாகப் பின்னப்பட்ட ஆழமான சிறு கிண்ணம் போல் இருக்கும். இதற்கு உபயோகப்படும் பொருட்கள் மரப் பட்டையும் சிலந்தி வலையும். பொடிப் பட்டைகளைச் சிலந்தியின் வலையைக் கொண்டே இணைத்துக் கூடமைக்கும். இது தொங்கும் மரக் கிளையில் இலைகளுக்கிடையில் தூங்கு மஞ்சம் போல் 4 முதல் 10 மீட்டர் உயரத்துக்குள் தொங்கும். 2-3 முட்டைகள் வெளுத்த இளஞ் சிவப்பு நிறத்தில், கறுப்பு அல்லது செந்தவிட்டு நிறப் புள்ளிகள் கொண்டு இருக்கும். தற்காப்புக்காக (காகம் பருந்து முதலிய பறவைகள் குஞ்சுகளை திருடக் கூடாது என்பதற்காக) இவை கரிக் குருவி அல்லது கரிச்சான்களின் கூடுகளுக்கு அருகிலேயே தங்கள் கூடுகளையும் கட்டும். கரிச்சான் வேறு பறவைகளை அண்ட விடுவதில்லை.

இக் குடும்பத்தில் மற்றொரு மாம் பழக்குருவி தங்க நிற மாம்பழக் குருவி—The Golden oriole (oriolus oriolus). இது முந்தியப் பறவையைப் போலவே இருக்கும். இக் குருவியின் தலையும் தங்க நிறத்தில் இருக்கும். கண் வழியே ஒரு கருங் கோடு ஓடும். இக் குருவி காஷ்மீர் மற்றும் இமயமலை அடிவாரங்களில் ஏராளமாகக் கூடு கட்டி வாழும். இந்தியாவின் மற்றப் பாகங்களில் மாரிக் காலத்தில் மட்டும் காணப்படும்.

**கரிக் குருவிக் குடும்பம்** Dronoos (Dicruridae) இக்குடும்பம் நீண்ட ஒடுங்கிய உடலுடைய, மைனு, புல்புல் பருமனுள்ள பறவை களைக் கொண்டது. இப்பறவைகள் ஒளிரும் கருநிற இறகுகளுடை யவை. இவற்றின் நீண்ட வால் நன்கு பிளவுபட்டோ, ஓரங்களில் மேல் நோக்கிச் சுருண்டோ, அல்லது கம்பியாக நீண்டு நுனியில் குறகு போலமைந்தோ இருக்கும். மிகவும் சாதாரணமாகக் காணப்படும் பிரதிநிதி கரிச்சான் அல்லது கருவெட்டுவாலி அல்லது கரிக் குருவி —Black drongo (Dicrurus adsimilis) (படம் 68): புல்புல் பருமன் இருக்கும் இக் கரும் பறவையின் வால் நன்குகப் பிளவுபட்டது. இது சாதாரணமாக கிராமப் புறங்களிலும், பயிர் பச்சைகளைச் சுற்றியும் காணப்படுகிறது. இது தோட்டத்தின் வேலித் தூண்களிலும், தந்திக் கம்பிகளிலும் உட்கார்ந்து கொண்டு திடீரெனக் கீழே பறந்து

பாய்ந்து பூச்சிகளை வாயால் கொத்திக் கொண்டு செல்லும். உண்ணும் பூச்சிகளைப் பிடித்த இடத்திலேயே தின்றுவிடும், அல்லது உட்கார்ந்திருக்கும் தூணுக்குக் கொண்டு சென்று கூர்மையான அலகால் பிய்த்து தின்னும். கரிக் குருவி பறந்து கொண்டே தட்டான் பூச்சிகளையும் பிடிக்கும். சில சமயம் தன்னைவிடப் பெரிய பறவைகளையும் விரட்டிப் பிடித்து அவை கொண்டு போகும். உணவைக் கொள்ளையடித்துக் கொண்டு வரும். கூட்டமாகச் சேர்ந்தும் இரைப் பொருளை வேட்டையாடும். மொத்தத்தில் இவை ஏராளமான பூச்சிகளைக் கொன்று தின்பதால் விவசாயிகளுக்கு மிக்க நன்மை ஏற்படுகிறது. இதன் குரல் பலவிதமான அருவருக்கும் தொனிகளைக் கொண்டது. கரிச்சான் கூடு கட்டும் காலத்தில் இரைச்சலிட்டுக் கொண்டேயிருக்கும். கூடு, சிறு குச்சிகள், புல் ஆகியவற்றால் தாறுமாறாக அமைக்கப்பட்ட அடிப்பாகத்தையுடைய ஒரு கிண்ணம் போன்றது. புல் துரும்பு இவைகளை வலையான் கூட்டின் நூல்களை வைத்துச் சேர்த்துக் கட்டியிருக்கும். தனியாக நிற்கும் உயர்ந்த மரத்தின் பரந்து சாயும் நுனிக் கிளையில் கவர் உள்ள இடத்தில் கட்டப்பட்டிருக்கும். முட்டைகள் (சராசரியாக 3 லிருந்து 5 வரை) வெள்ளையாக, செந்தவிட்டு நிறப்பொட்டுகள் கொண்டிருக்கும். கூடு கட்டியிருக்கும் மரங்களின் அருகில் கருடன், பருந்து, காக்கைகள் முதலிய பெரிய பறவைகளும் வரவிடாமல் விரட்டியடிக்கும். இக் குணத்தினால் சாதுவான பல பறவைகள் (புறா மாம்பழக் குருவிகள்) அதே மரத்தில் பாதுகாப்பாகக் கூடு கட்டும்.

இரு வேறு கரிச்சான்களும் உண்டு. ஒன்று சாம்பல் நிறக் கரிச்சான் —Ashy Drongo (D. leucophaeus). மற்றொன்று வெள்ளை வயிற்றுக் கரிச்சான்—White bellied drongo (D. caerulescens). இவை காடுகளில் தான் காணப்படும்.

## மைனாக் குடும்பம் Mynas and Starlings (Sturnidae)

**சாதா மைனா** Common Myna (Acridotheres tristis) (படம் 69): இது புல்புல்லை விடச் சற்றுப் பெரியது. மைனா சுமார் 23 செ. மீ. நீளமிருக்கும். யாவருக்கும் அறிமுகமான கருந்தவிட்டு நிறப்பறவை. இதற்குத் தலையுச்சி கருநிறமாகவும், கால்களும் அலகும் காதை ஒட்டிய இறகற்ற பாகமும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். பறக்கும் போது இறக்கையில் வெள்ளைப் பட்டையொன்று பளிச்சிடும். புறா, சிட்டுக் குருவி, காகம் இவற்றுடன் மைனாவும் மக்கள் வாழும் இடங்களிலும் கூச்சமின்றிப் பழகும். பல தரப்பட்ட உணவையும் சாப்பிடும்.

மேலும் சுலபமாக மனிதனுடன் பழகி விடும். இந்த இரு குணங்கள் இருப்பதால் அது மனிதனுடன் கூடி வாழும் வாழ்கைக்கு ஏற்ற பறவையாகிறது. ஒன்று அல்லது இரண்டு சோடிப் பறவைகள் ஒரு வீட்டு வளாகத்தை சுவீகாரம் செய்து கொள்ளும். தாங்கள் கூடு கட்டி வாழும் அவ்விடத்தை வேறு மைனு, பறவைகள் அடைய விடாமல் சண்டை போட்டுக் காக்கும். ஆயினும் கூட்டமாகச் சேர்ந்து இரை மேயும். புதிதாகத் தண்ணீர்ப் பாய்ச்சிய வயலில் இருந்து நிலப் புழுக்களையும், வெவ்வேறு புற்பூச்சிகளையும் அல்லது அரசம் பழம், அத்திப் பழங்களையும் ஒன்று சேர்ந்து மேயும். மேயும் மாடுகளின் பின்னால் இவை அலைந்தாலது, மாட்டின் கால்கள் இடறிப்பறக்கும் தத்துக் கிளியைப் பிடித்துத் தின்னும். உழவன் கலப்பையைச் செலுத்தும்போது மண்ணிலிருந்து வெளியேறும் வண்டினங்களின் லார்வாக்களையும் பொறுக்கித் தின்னும். அவ்வாறு செய்யும்போது மாட்டுக் காலுக்குள் விழாமல் பக்கத்தில் குதிப்பதும் துள்ளி உயரப் பறப்பதும் இடையில் பறந்து விழும் பூச்சியைப் பிடிப்பதுமாகத் திரியும். கிளி, காகம் இவற்றுடன் மைனுக்களும் பெருங் கூட்டமாகச் சென்று பெரிய மரங்களில் அடையும். மைனு பலவித கூப்பிடு தொனியுடையது. சாதாரணமாகக் கூப்பிடுவது வெகு சுத்தமாகத் திட்டுவது போல் இருக்கும்—'ராடியோ, ராடியோ, ராடியோ' என்று. ஆண் பறவை நிழலில் தங்கி வெயிலில் இளைப்பாறும் போது தனக்குள்ளே பேசிக் கொள்வது போல் கீக், கீக், கீக் கோக், கோக், கோக் குர், குர் என்று குரலெழுப்பியவாறு, நகைப்புக்கிடமான தலைவசைப்புகளைத் தனது பெட்டையைப் பார்த்துச் செய்வது ரசமாக இருக்கும். மைனுக் கூடு பழைய தாள்கள், வைக்கோல்கள், கழிவுத் துணிகள் யாவற்றையும் மரப் பொந்திலோ, சுவர் அல்லது கூரைகளின் ஓட்டைகளிலோ திணித்து, அமைக்கப் பட்டிருக்கும். இவற்றைச் சற்று சரிபண்ணி வைத்து அதில் முட்டையிடும். 4 அல்லது 5 முட்டைகள் அழகான மின்னும் நீல நிறத்தில் புள்ளிகள் இன்றி இருக்கும்.

**பாங்க் மைனு**—Bank Myna (A. ginginianus) இது மேற்குப் பாகிஸ்தான், வடமேற்கு மாகாணங்களில் காணப்படும், சிறிய மைனு. சற்று நீல நிறமாக இருக்கும். காதுக்கு அருகில் உள்ள இறகற்ற பாகம் மஞ்சளாக இல்லாமல் செங்கல் நிறச் சிவப்பாக இருக்கும். இது ரயிலடிகளில் அதிகமாகக் கூடு கட்டும்.

**கறுப்பு வெள்ளை மைஞ** Pied Myna (Sturnus contra) (படம் 70): நாட்டு மைஞவை விடச் சற்று சிறியது. இது நல்ல கட்டான உடலுடைய கறுப்பும் வெள்ளையும் கலந்த மைஞ. கண்ணைச் சுற்றி இறகற்ற ஆரஞ்சு நிறச் சதையுண்டு. அலகு தீர்ந்த ஆரஞ்சு மஞ்சள் நிறத்திலிருக்கும். நாட்டுப் புறங்களில் பயிர் செய்யப்பட்ட வயல்களைச் சுற்றியும் கூட்டங் கூட்டமாகத் திரியும். மற்ற மைஞ போலவே தோட்டங்களிலும் விட்டருகிலும் திரிந்தலைந்தாலும் தனது உணவுப் பிரச்சினை தீர பிற மைஞக்களின் அளவு மனிதனை எதிர் பார்ப்பதில்லை. மற்ற மைஞக்களைப் போல் அவ்வளவு தாராளமாக மனிதருடன் பழகுவதுமில்லை. பலவித உச்சத் தொனிகளில் இது பாடும். இதன் கூடும் மற்ற மைஞக்களிலிருந்து வேறுபடும். பெரிய உருண்டைக் கூடை போல் செடி செத்தைகளையும் குச்சிகளையும் கொண்டு கட்டப்பட்டிருக்கும். கூடுகள் சிறு கிளைகளில் பெரிய மரங்களில் கட்டப்படும். மூன்று நான்கு கூடுகள் ஒரே கிளையில் கட்டப்படலாம். 4—5 முட்டை ஒளிரும் நீல நிறத்தில் இருக்கும். புள்ளிகள் இரா.

**ரோசா மைஞ**—Rosy Pastor or Rose coloured Starling (Sturnus roseus) இது கறுப்பு வெள்ளை மைஞவெனத் தப்பாக எண்ணப்படக் கூடாது. மாரிக் காலத்தில் இந்தியாவுக்கு பெருங்கூட்டமாக வந்து சேரும். இளஞ் சிவப்பு நிறமும், ரோசா நிறமும் கறுப்பும் கலந்த இம் மைஞ போன்ற பறவை, மைஞவின் உருவம், பருமன், அமைப்பு, எல்லாமே கொண்டது. இவை இலவமரத்தின் பூக்களிலும் முள் முருங்கை மரத்தின் பூக்களிலும் ஏராளமாக வந்து விழுகின்றன.

## காக்கைக் குடும்பம் Crows (Corvidae)

பட்டணத்தில் வசிப்பவராயினும் படிட்க்காட்டில் வாழ்பவராயினும் தந்திரம் நிறைந்த **நாட்டுக் காக்கையை** அறியாதவர் இல்லை. இது **வீட்டுக் காக்கை**—House Crow (Crovus splendens) (படம்71) என்று ஆங்கிலத்திலும், அழகிய காகம் என்று இலத்தீன் மொழி விலங்கியல் பிரகாரமும் அழைக்கப்படுகிறது. அரிசிக் காக்கை என்றும், அண்டங் காக்கை என்றும் இரு காகங்களையும் அழைப் பதுண்டு. சாம்பல் நிறக்கழுத்தும் சற்று சிறிய உருவமும், இதை காட்டுக் காகமாகிய முழுதும் கறுப்பாக இருக்கும் முரட்டு அண்டங் காக்கையிலிருந்து வேறு படுத்தும். நாட்டுக் காகம் யாருக்கும் மிகவும் பழக்கமான பறவை. அது கட்டாயமாக நகரத்திலேயே

வாழ வேண்டிய, மனிதனை முழுதும் அண்டி வாழும் பறவை. புத்திக் கூர்மையும் தைரியமும் அபாயத்தை அறிந்து அதைத் தவிர்க்கும் வழிகளும் தெரிந்துவெகு தந்திரமாக நடக்கும் பறவை, காகம். தன் தீய, ஆபத்து நிறைந்த வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்தி வர இக்குணங்கள் அதற்கு உதவுகின்றன. உணவைப் பொறுத்த மட்டில் எதையுமே அது வெறுத்துத் தள்ளுவதில்லை; செத்துக் கிடக்கும் எலியோ, அடுப்படியிலிருந்து அள்ளி எறியும் சிந்திய உணவுப் பொருளோ, மீன் காரியிடமிருந்து சண்டையிட்டு அவளுடைய கடையிலிருந்து திருடிய மீனோ நாம் காணும் போதே நமது சாப்பாட்டு மேசையிலிருந்து களவு செய்து கொண்டு போன முட்டை அல்லது ரொட்டித் துண்டோ எல்லாமே அது விரும்பும் உணவு தான். ஆயினும் இதன் திருட்டுக் குணத்தை ஓரளவு அதன் தோட்டித் தன்மையால் மக்கள் மன்னித்து விடுகின்றனர். என்றாலும் தோட்டத்தில் வளர்க்கும் அழகிய பாடும் பறவைகளை அது துன்புறுத்துவதும், அடை காத்து வெளிவரும் கோழிக் குஞ்சுகளைத் திருட முயற்சிப்பதும், அதற்கு பெருங் கெட்ட பெயரையே உண்டாக்கியிருக்கிறது. வெட்டுக் கிளிகள் போன்று கூட்டமாக வந்து கொள்ளையடிக்கும் பூச்சிகளைக் கொன்றுதின்றாலும், கூட்டமாகச் சென்று தோட்டத்தில் விளையும் கதிர்களையோ, திராட்சையையோ உலாவும் கோழிக் குஞ்சுகளையோ திருடிச் செல்வதைக் கண்டு எத்தனை நாள் பொறுப்பார்கள்? இக் காகத்தின் கூடு அழகற்ற ஒரு குச்சி மேடை எனலாம். சுமார் மூன்று முதல் எட்டு மீட்டர் உயரம் வரை மரக் கிளைகளில் இக் கூடு இருக்கும். மத்தியில் கிண்ணம் போன்ற பாகம் துரும்புகளாலும் கயிறு, சணல், துண்டு முதலியவைகளாலும் வளையப்பட்டிருக்கும். இதனுள் 3—5 முட்டைகள் இடும். இவை நீல நிறத்தில் சில கருந் தவிட்டுப் புள்ளிகளுடன் குயிலின் முட்டையளவு பருமனில் இருக்கும். காக்கைக் கூட்டில் குயில்கள் முட்டையிடுவதுண்டு.

**அண்டங் காக்கை**—The Jungle Crow (C. macrorhynchos) இது அரிசிக் காக்கையை விடப் பெரியது. ஒருவித ஒளிரும் கருநிறங் கொண்டது. கனத்த அலகுடையது. பலமான, கரகரப்பான கா என்ற சத்தமும் உடையது. இது பொதுவாக வாழும் இடம் ஊருக்கு வெளியேயுள்ள காடுகள், சோலைகள், நகருக்கு வெளியே கொட்டப்படும் குப்பை கூளங்களில் உள்ள அழுகிய பொருள்கள் ஆகியவற்றை இக்காகம் உண்ணும்.

**மாங்குயில் பைக்குருவி**—Tree Pie: (Dendrocitta vagabunda) (படம் 72): மைனாவின் பருமனும், ஆனால் அதைவிட வெகு நீண்ட (30 சென்டி மீட்டர்) வாலுமுடைய இப்பறவை செந்தவிட்டு நிற உடலும் சற்று புகை அடர்ந்தது போல் தலையும் கழுத்தும் கொண்டது. வாலின் அகன்ற கறுப்புப் பாகமும், இறக்கைப் பகுதியின் தவிட்டு நிற மூடு இறகுகளும், பறக்கும் போது பளிச்சிட்டு நிற்கும். இது கூடி வாழுந் தன்மையுடையது. கூட்டமாக அடர்ந்த காடுகளில் வாழும். பறந்தலையும் போது கரகரப்பான தொனியில் கீ. கீ. கீ. கீ. கீ. என்று கத்திக் கொண்டே ஒன்றின் பின் ஒன்றாக, தலைவனைப் பின்பற்றிச் செல்லுவது போல் செல்லும். கரகரப்பான அடித் தொண்டைத் தொனி மட்டுமின்றி முட்டையிடுங் காலத்தில் ஆண் பறவை மிக இனிமையான குரலில் மாற்றி மாற்றி '**போ-வோ-லின்ங்க்**' அல்லது **கோ கீலா** என முதுகை வளைத்து, தலையை உள் மடக்கி, வாலைத் தாழ்த்தி, பெண்ணைப் பார்த்துப் பாடும். அத்தி, ஆல் பழுத்திருக்கும் போது மைனா, புல்புல் போன்ற மற்ற பழந்தின்னும் பறவைகளுடன் சேர்ந்து இரை மேயும். சிறு பழங்கள் தவிர பூச்சி, பூச்சியின் லார்வாக்கள் சிறு பல்லிகள் இவையும் இதற்கு உணவாகும். பறவைக் கூடுகளைத் தேடிப் பிடித்து அதிலுள்ள முட்டைகளையும் குஞ்சுகளையும் திருடித் தின்னும். காக்கையின் கூடுகளைப் போல் முள்ளால் கூடு கட்டும். கூடு சற்று ஆழமாக இருக்கும். வேர்களாலும் சிறு குச்சிகளாலும் உட்பக்கம் வளையப்பட்டிருக்கும். கூடு மரத்தின் உச்சியில் இலைகளுக்குள் மறைவாகக் கட்டப்பட்டிருக்கும். முட்டைகள்—4 அல்லது 5—வெண் சிவப்பு நிறமாக இருக்கும். அவற்றின் மேல் செந் தவிட்டு நிறக் கோடுகள் இருக்கும்.

**செஞ்சிட்டுக் குடும்பம்**—(CAMPEPHACIDAE) இக் குடும்பத்தில் குயில், பருந்துக் குருவி (Cuckoo-Shrikes) மற்றும் செஞ்சிட்டுகள் (Minivets) அடங்கியுள்ளன. இவை உடல் ஒடுங்கிய சிறு பறவைகள்; மரத்திலேயே திரியும். கூட்டமாகச் சென்று புழுக்களைத் தின்று வாழும். இவை பிரகாசமான நிறமுடைய பறவைகள்.

**செஞ்சிட்டு**—Scarlet Minivet (Pericrocotus flammeus) (படம் 73): புல்புலை விடச் சற்று சிறிய இப்பறவைகளில், ஆணுக்கு முதுகுப் புறம், கன்னங் கரேல் என்று இருக்கும். நெஞ்சுப் பக்கம் ஆரஞ்சு, சிவப்பு முதல் இரத்தச் சிவப்பு வரை வேறுபடலாம். பெண்ணுக்கும் ஆண் குஞ்சுகளுக்கும் முதுகுப் புறமும், வயிற்றுப் புறமும் மஞ்சளாக இருக்கும். முதுகு சற்று சாம்பல் நிறங் கலந்து இருக்கும். இறக்கை

கறுப்பாக இருக்கும். அதில் இரு மஞ்சள் பட்டைகள் கிடக்கும் ஐந்து அல்லது ஆறு பறவைகளாக மரங்களின் உச்சியில் இலைகளுக் குள் மறைந்து வாழும். பனிக் காலத்தில் இவை முப்பதுக்கும் அதிக மான குழுக்களாகக் கூடி நெருங்கி அமர்ந்திருக்கும். மரக் கிளை யுச்சிகளில் தாவித் தாவித் திரியும். காண்பதற்கு இனிய காட்சியாக இருப்பது இப்பறவையின் இரத்தச் சிவப்பு நிற வயிற்றுப் பக்கம் அடர்ந்த இலைகளுக்கு இடையே ஒளிருவது. உணவு; சிலந்திப் பூச்சி, பூச்சிப் புழுக்கள் மற்றும் இலைகளில் வாழும் புழுக்களை இது கொத்தித் தின்பதுடன் பறக்கும் பூச்சிகளை ஆகாயத்திலேயே கவ்வித் தின்னும். இதன் கூப்பிடு தொனி மெல்லிய **வீட்வீட்,** அல்லது **வீர்ரீ வீர்ரீ.** கூடு வேர்களும் துரும்புகளும் சேர்த்து சிலந்தியின் வலைகளை வைத்து ஒட்டப்பட்ட சிறு ஆழமில்லாத கிண்ணம் போன்றது. இதைச் சுற்றிலும் பாசி, காளான், சிலந்தியின் முட்டைக் கூடுகள் இவற்றை ஒட்ட வைத்து அலங்கரிக்கப்பட் டிருக்கும். தரையிலிருந்து சுமார் 3 மீட்டரிலிருந்து 15 மீட்டர் உயரம் வரை செடிகளின் அல்லது மரங்களின் உச்சிக் கிளைகளில் கட்டப்பட்டிருக்கும். இரண்டு முதல் நான்கு வரை முட்டைகள் இருக்கும். முட்டையின் மேல் வெண் பச்சை நிறத்தில் கருந் தவிட்டு நிறப் புள்ளிகள் இருக்கலாம்.

**சிறு செஞ்சிட்டு:** Little Minivet: (P. Cinnamomeus) இது மற்றொரு வகை உடல் மெலிந்த செஞ்சிட்டு. இந்தியா பாகிஸ்தான் இரு நாடுகளில் அதிகமாகப் பரவியுள்ள இக் குருவியின் ஆண் பறவையில் கருநிறம், சாம்பல் நிறம், இரத்தச் சிவப்பு மூன்றுங் கலந்திருக்கும். பெண் பறவைக்குத் தலை கறுப்பாக இராது. அடிப் பாகமும் சிவப்புக்குப் பதில் மஞ்சள் நிறமாக இருக்கும். இக் குருவி முந்தியதைப் போல் நெருக்கமான காட்டைத் தேடாது. திறந்த வெளிக் காடுகளுக்கு வருகிறது. குத்துச் செடிகள் கொண்ட வரண்ட காடுகளிலும் இதைக் காணலாம்.

**நீலக் குருவிக் குடும்பம்** (IRENIDAE) நீலக் குருவிகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பாகத்தில் காணப்படுகின்றன. இவை மிகவும் சாதாரணமாக **பச்சைப் புல்புல்** என்று அழைக்கப்படும்.

**அயோரா குருவி**—Common Iora (Aegithina tiphia) (படம் 74): இது சிட்டுக் குருவியின் பருமன் உள்ளது. ஒளிருங் கறுப்பும் நல்ல மஞ்சள் நிறமும் இரண்டு இறக்கைப் பட்டைகளும் உடையது ஆண்

பறவை. முட்டையிடாக் காலங்களில் பெண் போலவே இருக்கும். ஆனுல் கறுப்பு வால் மட்டும் மாருமல் இருக்கும். இது முற்றிலும் மரங்களிலேயே வாழும் பறவை. புழுப் பூச்சிகளையே சாப்பிடும். நாட்டுப் புறங்களில் தோப்புகளிலும் சிறு காடுகளிலும் இணை இணையாய், இலைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு புழுக்களைத் தேடித் திரியும். இப் பறவைகள் தங்களுக்குள் விசில் மூலமாகத் தொடர்பு கொள்கின்றன. சௌவ்ஜி என்று இந்தியில் இதற்குப் பெயர். இப் பெயரே இது கூப்பிடும் நீண்ட விசில் தொனியைக் குறிக்கும். கலவி விளையாட்டில், ஆண் பறவை கைதேர்ந்தது. அது இறக்கையைத் தொங்கவிட்டுக் கொண்டு பெண் பறவை முன் ஆடி ஒன்று அல்லது இரண்டு மீட்டர் உயரப் பறந்து இறக்கைகளைச் சிலிர்க்க விட்டுத் திரும்பவும் தான் உட்கார்ந்திருந்த கிளைக்கு ஒரு இறகுப் பந்து போல் வந்து விழும். அதன் பலநிற இறகுகள் பார்ப் பதற்குக் கவர்ச்சியாக இருக்கும். இவ்வாட்டம் நடக்கும் போது மென் குரலில் பேசியும் '*சீச்சீச்*' என்று விசிலடித்தும் மகிழ்ச்சிக் குரல் எழுப்பும். அயோராவின் கூடு மென்புற்களாலும் வேர் களாலும் பின்னப் பட்டு, சிலந்தி வலையால் மிருதுவாக்கப்பட்டிருக்கும். இரண்டு முதல் நான்கு முட்டைகள் வரை கூட்டில் இருக்கும். சற்று வெண்மையான ஊதா நிறமுட்டையில் இளஞ் சிவப்பு கலந்த தவிட்டு நிறத்தில் புள்ளிகள் இருக்கும்

**பஞ்சாப் அயோரா**—Marshall's Iora (Ae. nigrolutea): கச், பஞ்சாப், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், வங்காளம், ஆகிய பிரதேசங்களில் பரவலாகக் காணப்படுகிறது. இதற்கு வால் துணி வெள்ளையாக இருக்கும்.

**பச்சைக் குருவி**—Jerdon's chloropsis (Chloropsis cochinchinensis jerdoni) (படம் 75): இது புல்புல் பருமன் உள்ள பச்சை நிறப் பறவை. நீல நிறத்தில் மீசை போன்ற கோடுகள் உண்டு. கன்னமும் கழுத்தும் கறுப்பாக இருக்கும். அலகு மெல்லியதாகவும் கூர்மை யாகவும் உள் வளைந்தும் கறுப்பாகவும் இருக்கும். சாதாரணமாக இவை இணை இணையாய், அல்லது சிறு கூட்டமாக இரை மேயும். இலைகளுக்கு இடையில் சிறு கிளைகளில் தலைகீழாகத் தொங்கியும், கழைக் கூத்தாடி போல் பல கோணங்களில் ஏறி இறங்கியும் இரை தேடும். இவற்றைப் பார்ப்பதைவிடக் கேட்கத்தான் முடிகிறது. இதன் நிறம் இலைகளுடன் அவ்வளவு அழகாக ஒன்றித்து விடுகிறது. இது பலவிதப் பறவைகளின் குரலையும் பின்பற்றுந் தன்மையுடைய

தாகையால் இது எங்கேயிருக்கிறதென்று கண்டுபிடிப்பது மேலும் சிரமமாகி விடுகிறது. பாக்குச் சிட்டு, புல்புல் கரிக் குருவி, அயோரா, மீன் கொத்தி, குண்டுக் கரிச்சான் (ராபின்) இவைகளின் குரலை ஒன்று மாற்றி ஒன்றாகத் தவறின்றி இது பின்பற்றுவதால் பறவைகளின் யுனைடட் நேஷன் அசெம்பிளி கூட்டம் நடப்பது போல் தோன்றும். மரத்தை நெருங்கிப் பார்க்கும் போதுதான் ஒரே பச்சைக் குருவி அவசரமாகப் பறந்து செல்வது தெரியும். உணவு: பூச்சிகள், சிலந்தி, பழங்கள், பூவின் தேன்.

கூடு சிறு வேர்கள், பாசி, தண்டுகளின் பற்றுக் கம்பிகள் இவற்றால் வனையப்பட்ட ஆழமில்லாத கிண்ணம் போன்றது. தொங்கும் கிளை நுனியில், இலை மறைவில் கட்டப்பட்டிருக்கும். இரண்டு முட்டைகள் கூட்டில் இடப்படும். முட்டை இளஞ் சிவப்பு நிறம். அதன் மேல் நிறைய சிவப்பு புள்ளிகள் இருக்கும்.

இதற்கு நெருங்கிய இனம் **தங்க நெற்றி பச்சைக் குருவி** Goldfronted chloropsis (C. aurifrons) சில சமயம் இரண்டும் கலந்தே காணப்படும். இதன் ஆண் பறவைக்கு நெற்றி தங்க நிறத்தில் இருக்கும். இளஞ் சிவப்பும், கறுப்புங் கலந்த கன்னமும் கழுத்தும் இருக்கும். பெண் பறவையின் நிறம் மங்கலாக இருக்கும்.

**கொண்டைக் குலாத்திக் குடும்பம்: (புல் புல்கள்)** (PYCNONOTIDAE) இக் குடும்பத்தில் மிகச் சுறுசுறுப்பான, உயிர்த்துடிப்புடைய, கொண்டைக் குலாத்திகள் அடங்கும். **சிவப்பு மீசைக் கொண்டைக் குலாத்தி**—Red Whiskered Bulbul (Pycnonotus jocosus) (படம் 76): இது ஒரு துடுக்கான தோட்டப் பறவை; மைனாவைவிடச் சிறியது. உச்சியில் முன்னோக்கி வளைந்த பெரிய கொண்டை உண்டு. உடலின் மேற்பகுதி செம்பட்டையாகவும் அடிப்பகுதி வெள்ளையாகவும் இருக்கும். நெஞ்சின் மேல், கழுத்தின் கீழ், பிளவுபட்ட கறுப்பு ஆரம் இருக்கும். தெளிவான இரத்தச் சிவப்பு மீசை; இரத்தச் சிவப்பு புட்டம். பட்டினத்தின் நடுவில் பழ மரங்களும் அது அடைவதற்கு வசதியான செடி கொடிகளும் இருந்தால் அது காணப்படும் என்றாலும், பொதுவாக அடர்ந்த காடுகளிலும் மலையடிவாரங்களிலும் அதிகமாகக் காணப்படும். இப்பறவைகள் இணை இணையாய்த் திரியுமெனினும் பழங்களுடைய மரங்களில் கூட்டமாக அடைவதுண்டு. இவற்றுக்குப் பிரத்தியேகமான கூவல் தொனி இல்லை; ஆனால் உற்சாகமான, துடிதுடிப்பு மிக்க இதன் குரல் நாள் முழுதும் ஒலித்துக் கொண்டேயிருக்கும். பழங்கள் மட்டுமின்றி பூச்சிகளும்

சிலந்திகளும், புழுக்களும் இதற்கு உணவாகும். செம்புட்டக் கொண்டைக் குலாத்தியை விட இது சுபாவத்தில் சாதுவானது. இளங் குஞ்சுகளாக எடுத்து வளர்த்தால் நன்ருகப் பழகிவிடும். எஜமான் கூப்பிடும் இடம் எல்லாம் அவர் பின்னே பறந்து செல்லும். கூடு : கொண்டைக் குலாத்தி வகைப் பறவைகளின் கூடுகளெல்லாம் ஒரே மாதிரியாக இருக்கும். வேர், புல், மற்றும் சிறு குச்சிகளால் வளையப்பட்ட சிறு கிண்ணம் போலிருக்கும். இது சிறு மரங்களிலும் வேலிகளிலும் மிகவும் வெளிப்படையாகக் கட்டப்பட்டிருப்பதுடன், ஆண் பெண் பறவைகள் இரண்டும் தடபுடலாக வந்து போய்க் கொண்டே இருப்பதால் எளிதில் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. இதனுல் கூடுகளுக்கும் முட்டைகளுக்கும் அதிகமாக அழிவு ஏற்படுகிறது. முட்டைகள் (சராசரியாக 2 லிருந்து 4 வரை) இளஞ்சிவப்பு நிறத்திலிருக்கும். அவற்றின் மேல் ஊதா நிறங் கலந்த தவிட்டு நிறப் புள்ளிகள் அல்லது திண்ணிய சிவப்புப் புள்ளிகள் ஏராளமாக இருக்கும்.

**வெள்ளைக் கன்னம் கொண்டைக் குலாத்தி**—Whitecheeked Bulbul (P. leucogenys) இது வட இந்தியாவில் அதிகமாகக் காணப் படுவது. இதன் கன்னம் வெள்ளையாக இருக்கும். மீசை கிடையாது. வாலடிப் பக்கம் சிவப்புக்குப் பதில் மஞ்சள் நிறமாயிருக்கும். மேற் கொண்டை குஜராத் வகைப் பறவையின் மொண்ணை வட்ட வடிவிலிருந்து காஷ்மீர் வகையின் நீண்டு, நுனி சிறுத்து முன்னேக்கி வளைந்திருக்கும் அமைப்பு வரையில் வேறுபடும்.

**செம்புழைக் கொண்டைக் குலாத்தி**: Redvented Bulbul (P. cafer) (படம் 77): இது சாதாரணமாகக் காணப்படும் புகை நிறங் கலந்த தவிட்டு நிறமுடைய புல்புல். இது புருசு போன்ற கொண்டையுடைய கருந்தலையும் செதில் போல் அடுக்கடுக்கான கருங்கோடுகள் கொண்ட மார்பும் முதுகும், வாலினடியில் புழையைச் சுற்றி இரத்த சிவப்பு வட்டமும் உடையது. சிறு காடுகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் காணப்படும். சில சமயங்களில் காய் கறித் தோட்டத்தில் முக்கியமாக பச்சைப் பட்டாணி முதலியவை களுக்குத் தீங்கு விளைவிக்குமெனினும், இதன் அழகான குரலையும் துடுக்கான பாணியையும் தோட்டக்காரர்கள் விரும்புவர். சிறு பழங்கள் அதன் முக்கிய உணவாயினும் ஈசல், அந்திப் பூச்சிகளையும் உண்ணும். பொதுவான பழக்க வழக்கங்களில் சிவப்பு மீசை புல்புல் போலவே இருந்தாலும் இது தன் வகையில் அதிகமாகச் சண்டை

னோடும் குணமுடையது. அதனாலேயே பறவைச் சண்டைப் போட்டிப் பந்தயக்காரர்கள் விரும்பும் பறவைகளில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது. பந்தயத்தில் நூற்றுக்கணக்கான ரூபாய்களைப் பலர் செலவிடுகின்றனர். பந்தயத்தில் வெல்லும் பறவை நல்ல விலைக்குப் போகிறது. கூடு: மற்ற புல்புல் கூடுகள் போலவே, இதன் கூடும் கிண்ணம் போல், வேர்கள், இலைகள், புல் முதலியவைகளால் வனையப்படும், தாழ்ந்த மரங்களிலும், குத்துச் செடிகளிலும் வீட்டுத் தாழ்வாரத்தில் கிடக்கும் படர்ச் செடிகளிலும் மறைவாகக் கூடு கட்டியிருக்கும். முட்டைகள் சிவப்பு மீசை புல்புல்லின் முட்டைகள் போலவே இருக்கும். சராசரியாக 2—3 முட்டைகள் கூட்டில் காணப்படும்.

**வால் முனைச்சான் குருவிக் குடும்பம்** (MUSCICAPIDAE) இக் குடும்பத்தில் வால் முனைச்சான் குருவி (Flycatchers) பூணியல் (Bablers) தையல் பறவைகள் (Warblers) முதலிய பறவைகள் அடங்கும்.

**வெண்புள்ளி விசிறிவால் குருவி** Whitespotted Fantail Flycatcher (Rhipidura albogularis) (படம் 78): இது மிக்க மகிழ்ச்சியுடன் துள்ளித் திரியும் புகைத்தவிட்டு நிறப் பறவை. பளிச்சிடும் வெண் புருவமும், வெள்ளைப் புள்ளிகளுடைய நெஞ்சும் விலாவும், வெள்ளையான அடி வயிற்றுப் பாகமும் கொண்டது. இது சிட்டுக் குருவியின் பருமனே இருக்கும். இதன் வால் தான் மிக்க கவர்ச்சியான பாகம். விசிறி போல் விரியக் கூடியது. வாலை விரித்து உயர்த்திக்கொண்டு இரு இறக்கைகளையும் கீழே இறக்கி ஆடும் இப்பறவை. சிறு காடுகளில் சாதாரணமாக இருக்கும். இப்பறவை தோப்புகளிலும் தோட்டங்களிலும்-சில சமயம் பட்டணங்கள் மத்தியிலுள்ள வீட்டுத் தோட்டங்களிலும் கூட—வந்தடைகிறது. மனிதர்கள் அதிகமாகவுள்ள இடத்திலும் பயமின்றி இருக்கும். சுலபமாகப் பழக்கக் கூடிய பறவைகளில் இதுவும் ஒன்று. ஒரு இனப் பறவைகள் குறிப்பிட்ட ஓர் இடத்திலேயே அடிக்கடி காணப்படும். இந்த இடத்துக்குள்ளேயே தாழ்ந்த கிளைகளில் தாவியும், ஆடியும், கால் விரலூன்றிச் சுற்றி ஆடியுந் திரியும். அடிக்கடி உயரக் கிளம்பிப் பறக்கும். சிறு ஈக்களையும், வண்டுகளையும் பிடித்துத் தின்னும். அவ்வாறு பிடிக்கும் போது தாடைகள் மோதும் ஓசை பாக்கு வெட்டுவது போல் கேட்கும். இதன் கூப்பிடு தொனி கரகரப்பான **'சக் சக்'** என்ற ஒலி. ஆனால் சில சமயம் மகிழ்ச்சி நிரம்பிய—விசில்

அடிப்பது போல் மேலுங் கீழுமாக ஏறும் இராகத்துடன்—பாடும். கூடு ஒரு சிறு ரசக் கிண்ணம் போல் புல்களாலும், துரும்புகளாலும் வனையப்பட்டு சிலந்திப் பூச்சி வலைகளால் மூடப்பட்டிருக்கும். தொங்கும் சிறு கிளைகளின் கவர்களில், ஒட்டுமா முதலிய சிறு மரங்களின் இலைகளுக்கிடையில் சுமார் 3 மீட்டருக்குள்ளே கட்டப்பட்டிருக்கும். மூன்று முட்டைகள் இளஞ் சிவப்பு நிற முதல் வைக்கோல் நிறம் வரை இருக்கும். அகலப் பாகத்தைச் சுற்றி நுண்ணரிய தவிட்டு நிறப் புள்ளிகள் இருக்கும்.

இதன் நெருங்கிய உறவினம் **வெள்ளை நெற்றி விசிறி வால் குருவி** Whitebrowed Fantail Flycatcher: (R. aureola) இதற்கும் முந்தியதற்கும் உள்ள வேற்றுமை. இதற்கு நெற்றியிலும் உடல் அடிப் பக்கத்திலும் வெள்ளை நிறம் இருப்பதுதான்.

வால் முளைத்தான் குருவியைப் பார்த்தாலே மனம் குதூகலம் அடையும்—Paradise flycatcher (Terpsiphone paradisi) (படம் 79): புல்புல் பருமனை உடைய இப்பறவையை வால் நீண்ட புல் புல் என்றே சிலர் அழைப்பர். வாலின் இரண்டு இறகுகள் நாடா போன்று 25—30 சென்டி மீட்டர் நீளம் வரை வளர்ந்து தொங்கும். வயது வந்த ஆண்பறவை வெள்ளி நிறத்தில் இருக்கும்; இரு வெள்ளைவால் நாடாவும் உண்டு. தலையுச்சியில் கொண்டை உண்டு. அது ஒளிரும் கறுப்பு நிறம். பெண்ணும் இளம் ஆணும் காவி நிறச் சிவப்பாக இருக்கும். அடிப்பாகம் சாம்பல் வெண்மை, கொண்டை கறுப்பு. ஆனால் பெண் பறவைக்கு நீண்ட நாடா இல்லை. இதை ஆங்கிலத்தில் ராக்கட் பறவை, நாடாப் பறவை, விதவைப் பறவை என்றெல்லாம் அழைக்கின்றனர். மூங்கில் நிற்கும் ஓடைக் கரையிலும், சிறு காடுகளிலும் நிழல் தரும் சோலைகளிலும் சோடி சோடியாகவோ இவை தனியாகவோ, அல்லது வேறு பூச்சித் தின்னும் பறவைகளுடனோ காணப்படும். ஆண் பறவை ஆகாயத்தில் பறக்கும் போது சிறு வனதேவதை போல் இருக்கும். பூச்சிகளைப் பின்தொடர்ந்து அதன் வால் நாடாவைப் பறக்க விட்டு மேலும் கீழும் பறந்து வேட்டையாடுவது தனி அழகு தரும், மறக்க முடியா காட்சியாகும். ஆயினும் இவ்வளவு அழகிய பறவைக்கு பாடத் தெரியாதிருப்பது நமக்கு ஏமாற்றம் அளிக்கிறது. அதன் கூப்பிடு தொனி கரகரப்பான அடித் தொண்டையிலிருந்து வரும் **'செ ச் வெ'** என்னும் ஒலியே. ஆயினும் முட்டையிடும் காலத்தில் ஆணும் பெண்ணும் ஓரளவு இனிய தொண்டையில் பாட முயற்சிப்பது போல் பேசும். **உணவு :** முக்கிய

மான உணவு அந்திப் பூச்சி, சிறு ஈக்கள், பறக்கும்போதே இவற்றைப் பிடித்துத் தின்னும். இப்பறவை இந்தியாவின் பல பாகங்களிலும் கூடு கட்டினாலும் காஷ்மீர் பள்ளத்தாக்கு தான் இதற்கு முக்கிய மான கூடு கட்டும் இடம். இயற்கையை அனுபவிக்கும் மக்களுக்கு இப் பறவைகள் இங்கு திரிவது காஷ்மீரின் இயற்கை அழகை மிகவும் அதிகரித்துக் காட்டும். இதன் கூடு அடக்கமான சிறு கிண்ணம் போல் மெல்லிய புல்லாலும் சிறு துரும்புகளாலும் வனையப் பட்டு வெளியே சிலந்தி வலைகளால் ஒட்டப்பட்டிருக்கும். 2 முதல் 5 மீட்டர் உயரம் வரை மரக் கிளைகளின் கவர்களில் கட்டப்பட் பட்டிருக்கும். 3 முதல் 5 வரை முட்டைகள் காணப்படும். இளஞ் சிவப்பு நிறத்தில், செந்தவிட்டு நிறப்புள்ளிகளும் பொட்டுகளும் கொண்டு இருக்கும்.

**பூணியல் உப குடும்பம்** (Babblers-TIMALIINAE) மிகச் சிறியதி லிருந்து நடுத்தர அளவு வரையில் உள்ள பலதரப்பட்ட பறவைகளைக் கொண்டது. இவற்றின் நிறம் சாதாரணத் தவிட்டு நிறத்திலிருந்து மிகப் பளிச்சென்ற நிறங்கள் வரை வேறுபடுகிறது. இந்த உப குடும்பத்தின் சில பிரபலமான பறவைகள் வருமாறு :

**மஞ்சள் கண்ணீ**—Yellow Eyed Babbler (Chrysomma Sinensis) (படம் 80): இப்பறவை கொண்டைக் குலாத்தியைவிட சற்று சிறியது. வால் சற்று நீளமானது. சிறு காடுகளிலும், புதர்க் காடு களிலும் காணப்படும். மேற்பாகம் பாக்கு காவிநிறத்திலும், அடிப் பாகம் வெள்ளையாகவும் இருக்கும். கண் இமைகள் தெளிவான மஞ்சள் நிறமாகவும், கண்கள் கவனத்தைக் கவரும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். 5 முதல் 7 வரையுள்ள சிறு கூட்டங்களாக வளர்ந்த புல்வெளிகளிலும் சிறு முட்செடிகள் உள்ள புதர்களிலும் திரியும். புல் தண்டுகளில் பக்க வாட்டமாக ஏறியும் தலை கீழாக நின்றும் பூச்சிப் புழுக்களைத் தேடும். பதுங்கி ஓடுவதில் இப்பறவை கள் கைதேர்ந்தவை. யாரும் பார்த்து விட்டால் செடிக்குச் செடி தாவி விரைவில் மறைந்துவிடும். கூப்பிடு தொனி தெளிவான உரத்த குரலில் '*சீப்-சீப்-சீப்*' என்று அமைந்திருக்கும். முட்டை யிடுங் காலத்தில் ஆண் பறவைகள் புல் நுனியில் ஏறி நின்று உரத்த கீச்சிடு குரலில் பாடும். உணவு : சிலந்தி, தத்துக் கிளிகள், வேறு பூச்சிகள். பூக்களின் தேனிலும் இவை விருப்பமுள்ளவை; இதற்காக முள் முருங்கை, முள்ளிலவு இவற்றின் பூக்களை வழக்க

மாகத் தேடிச் செல்லும். கூடு: சொர சொரப்பான புல்லால் கட்டப்பட்ட ஆழமான கிண்ணம் போன்றிருக்கும். உள்ளே மிருது வான பொருட்களாலும், வெளியே சிலந்தி வலைகளாலும் மூடப் பட்டிருக்கும். கூடு செடிக் கவர்களில் இடுக்கி வைத்தும், அல்லது வளர்ந்த புல்களின் இடையில் தூளி போலத் தொங்க விடப்பட்டு, தரையிலிருந்து 2 மீட்டர் உயரத்துக்குள் இருக்கும். முட்டை 4 முதல் 5 வரை வெண் மஞ்சள் நிறமாக இருக்கும். அதன் மேல் இளஞ் சிவப்பு தவிட்டு நிறப் புள்ளிகள் இருக்கும்.

**காட்டுப் பூணியல்**—Jungle Babbler: (Turdoides striatus) (படம் 81): இது மைனாவை விடச் சற்று சிறியது. மண்ணைப் போன்ற தவிட்டு நிறமுடையது. பார்ப்பதற்கு அழகற்ற இக்குருவிக்கு வால் சற்று நீண்டு உடலில் செருகி வைத்தாற்போல் இருக்கும். இது எப்போதும் ஏழெட்டு சேர்ந்தே திரிவதால் ஆங்கிலத்தில் 'செவன் சிஸ்டர்ஸ்'—ஏழு சகோதரிகள் — என்று அழைக்கப் படுகிறது. இது ஊருக்கு வெளியிலுள்ள காடுகளில் மட்டுமின்றி ஊருக்குள் நிறைய மரங்களுள்ள தோட்டங்களிலும் காணப்படு கிறது. இக் கூட்டம் நாள் முழுவதும் தத்தித் தத்தி குதித்துக் கொண்டே தரையில் விழுந்து கிடக்கும் காய்ந்த இலைகளையும் அழுகிய இலைகளையும் புரட்டிப் பார்த்து பூச்சிப் புழுக்களை மேயும். முழு நேரமும், கர கரத்த தொண்டையில் அவைகளுக்குள் ஏதோ பேசிக் கொண்டே இரை தேடுவது போல் இருக்கும். ஆனால் சில சமயங்களில் இச் சகோதரிகளுக்குள் சண்டை வந்துவிடும். ஒன்றை ஒன்று திட்டுவது போல், **கியா-புயா** என்று உரத்த குரலில் கத்துவதுடன் நிற்காமல் காலாலும், அலகாலும் ஒன்றை ஒன்று தாக்கும். அப்போது இறகுகளும் பறக்கும். இவ்வாறு நடக்கும் சண்டை நீடிப்பதில்லை. அடிக்கடி சண்டை வருவதுமில்லை. விரைவில் அவை சேர்ந்து கொண்டு, சுமுகமாக இரை தேடப் புறப்படும். வெளியார் தலையீட்டை அவை விரும்புவதில்லை. அப்படி தலையிடும் பறவைகளையோ, பூனைகளையோ எல்லாமாகச் சேர்ந்து தைரியமாக எதிர்த்துச் சண்டையிட்டு விரட்டி அடிக்கும். உணவு: சிலந்தி, கரப்பான் பூச்சிகள், அந்திப் பூச்சிகள், வேறு சிறு பூச்சிகளும் அவற்றின் புழுக்களும், ஆல், அரசு பழங்கள், உண்ணிப் பழங்கள், தானிய மணிகள். பூணியல்கள் முள் முருங்கை மரத்தின் தேனையும், முள் இலவுத் தேனையும் மிகவும் விரும்பு கின்றன; இத் தேனைப் பெறும் முயற்சியில் சம்பந்தப்பட்ட பூக்களி

டையே மகரந்த சேர்க்கை ஏற்படவும் உதவுகின்றன. கூடு மரக்கிளைகளின் கவர்களில் நெருக்கமின்றி துரும்புகளால் வனையப் பட்ட சிறு கிண்ணம் போன்றது. இது தரையிலிருந்து 4—5 மீட்டர் உயரத்துக்குள்ளேயே இருக்கும், 3 அல்லது 4 முட்டைகளே கூட்டில் இருக்கும். முட்டைகள் அழகிய பசுமையான நீல நிறத்தில் இருக்கும். இவை கூட்டமாக கூடு கட்டுதலும் குஞ்சுகளுக்கு இரை கொடுத்தலும் தன் குஞ்சுக்கு மட்டுமின்றி பிற குஞ்சுக்கும் உணவு கொடுப்பதும் பல சமயங்களில் காணப்பட்டிருக்கிறது. இதுவே பொதுவான பழக்கமாக இருக்கலாம். இவற்றின் கூட்டில் கொண்டைக் குயில் முட்டையிடுவதுண்டு.

**(நாட்டுப்) பூணியல்** — The Common Babbler: (Turdoides caudatus) (படம் 82) : புல்புல் பருமனுள்ள இப்பூணியல் காட்டுப் பூணியலைவிடச் சற்று நீண்ட வாலுடையது. அதைவிட உடல் மெலிவானது, ஆனல் அதைப் போலவே 6, 7 கூட்டமாகத் திரியும். சிறு மரங்களிலும் முட்செடிகளிலும் இருப்பதுடன் அடிக்கடி தரை யிலும் தத்தித் தத்தித் திரியும். இதன் மேல் பாகம் காட்டுப் பூணி யலைவிடச் சற்று அடர்த்தியான தவிட்டு நிறமாக இருக்கும். இவை தரையில் வேகமாகத் தத்தி ஓடி புதர்களுக்குள்ளும் முட்செடிகளுக் குள்ளும், பூச்சிப் புழுக்களை வேட்டையாடும். தப்பியோட நேரிடினும் அவை கால்களைத்தான் அதிகமாக நம்பி இருக் கின்றன. வேகமாகத் தாவித் தாவி செடிகளுக்குள் மறைந்து விடுகின்றன. பறப்பதற்கு அவை அதிகம் விரும்புவதில்லை. அவற்றின் கூப்பிடு தொனி கேட்க இனிமையான விசில் சத்தம், அடுத்தடுத்துக் குறுகிய விசில் போல் கேட்கும். ஆனல் தொந்தரவு கொடுக்கப் பட்டால் அல்லது பாம்பைப் பார்த்து விட்டால், ராகத்துடன் **விச்-விச்-விச்-விச்-ரிரி-ரி-ரி-ரி** என்று விசிலடிக்கும் தொனியில் கத்தும். அமைதியிழந்து இறக்கையை வலித்தும் வாலை உயர்த்தியும் அங்கு மிங்கும் தாவும். இடைஞ்சல் தரும் பிராணியை நோக்கி பூணியல் கூட்டம் முழுவதும் கத்தும். உணவு: பூச்சிகள், சிலந்தி, தானியம், மலர்தேன். கூடு: அழகிய ஒடுங்கிய கிண்ணம் போன்றது. புல், சிறு வேர்கள் ஆகியவற்றல் வனையப்பட்டது. பசுமையான நீல நிறமுடைய 3 அல்லது 4 முட்டைகள் கூட்டில் இருக்கும். கொண்டைக்குயில் வகைகள் இக் கூட்டில் முட்டையிடும். அவற்றின் முட்டையும் பூணியல் முட்டை போலவே இருக்கும்.

**பெரிய வெள்ளைப் பூணியல்—Large** grey babbler: (T.malcolmi) சாம்பல் தவிட்டு நிறமுடைய இப்பறவை, வெள்ளை நெற்றியும் வாலின் வெளிப்புறம் வெள்ளை இறகுகளும் கொண்டது. இது பெரும்பாலும் நம் நாட்டின் வறண்ட பகுதிகளில் காணப்படுகிறது. தக்கணத்தில் மிக அதிக எண்ணிக்கையில் காணப்படுகிறது.

அடுத்து வருபவை, **பாடுஞ் சிட்டுகள்** (Warblers). இவை குருவியை விடச் சிறிய வெண்மையான நிறமுடைய பறவைகள். இந்த உப குடும்பத்தில் (SYLVIINAE) சில நிரந்தரமாக இங்குள்ளவை, சில இடம் பெயர்பவை. இவற்றின் பொதுவான இயல்புகளைக் கூறுவது கடினம். சாதாரணமாகக் காணப்படும் இந்த உப குடும் பத்தின் பிரதிநிதிகள் பின் வருமாறு :

**வாலாட்டிச் சிட்டுக் குருவி** Ashy WrenWarbler(Prinia socialis) (படம் 83) : இது சிலேட் சாம்பல் நிற முதுகும் மஞ்சள் கலந்த வெள்ளை அடிப் பாகமும் உடைய சிறு குருவி. இதன் வால் கலக்கமான இறகுகள் கொண்டது. நீளமானது. நுனி கறுப்பும் வெள்ளையும் கலந்த படிப்படியாக இருக்கும். வால் சற்று மேல் நோக்கியே நிற்பதுடன், அடிக்கடி வாலை மேலே எழுப்பிக் குதிக்கும் இப்பறவை. பனிக்காலத்தில் இதன் நிறம் சாம்பலில் இருந்து சற்று தவிட்டு நிறமாக மாறுகிறது. வேலி ஓரமாக குத்துச் செடிகளும் பூண்டுகளும் கொண்ட தண்ணீர்ப்பாங்கான தோட்டங்களில் இது அதிகம் காணப்படுகிறது. ஆட்களைக் கண்டு பயப்படுந் தன்மை யுடையதல்லவாயினும், ஒதுங்கியே வாழ எண்ணும் பறவை ஆதலால் செடிகளுக்குள் மறைவாகத் தாவித் தாவிச் சென்று பூச்சிப் புழுக்களைத் தேடும். அப்போது இடைக்கிடையே வாலை விரித்து உயர்த்திக் கொண்டு **ட்டீ-ட்டீ-ட்டீ** என்னும் மெல்லிய தொனியில் சப்தம் செய்து கொண்டே போகும். ஆயினும் முட்டை யிடுங் காலம் ஆண் பறவை வெளிப்படையாக வந்து செடியின் உச்சியிலோ, அல்லது இலைகளற்ற மறைவில்லாத கிளையில் நின்று கொண்டோ மழைப் பொழிவது போல் மூச்சு விடாமல் பாடும். அது அங்குமிங்கும் குதிக்கும் ; இறக்கையை அடித்துக் கொள்ளும், வாலை அடிக்கடி உயர்த்திக் கொள்ளும். வாலை இவ்வாறு மேலும் கீழும் உயர்த்துவது அதைத் தூக்கிச் சுமக்க இயலாமல் சிரமப் பட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றும். கூட்டில் இருக்கும் போது திடீரென கலைத்து விட்டால் அது பிரண்டு வெளியேறி மின்சாரப் பொறி பறக்கும்போது ஒலிப்பது போல் **டிக்-டிக்-டிக்**

என்று அலகால் சப்தம் இட்டுக் கொண்டு அங்குமிங்கும் குதித்துச் தாவும். கூடு: தையல் பறவையின் கூடு போலவே மடக்கித் தைத்து இருக்கும். ஆனால் பெரிய நீண்ட இலைகள் கிடைக்காவிட்டால் என்றால் துரும்புகளால் கூடை போல் பின்னி சிறு இலைகளை உள் வைத்து சிலந்தி வலையால் ஒட்டப்பட்டிருக்கும். தரையிலிருந்து சுமார் 1½ மீட்டர் உயரத்துக்குள்ளேயே கட்டப்பட்டிருக்கும். முட்டைகள் 3, 4 அழகாக ஊரிரும் செங்கல் சிவப்பு நிறத்தில் இருக்கும். அகன்ற பாகத்தில் ஒரு வட்டமான கறுப்பு வளையம் இருக்கும்.

**இந்தியன் ரென் வாலாட்டிச் சிட்டுக் குருவி**: (Indian Wren-Warbler): (P. subflava) இது முந்திய பறவை போலவே, சற்று சிவந்த நிறமாக, ஆனால் வாலில் வெள்ளைப் புள்ளிகள் இல்லாமல் இருக்கும். நீர் அதிகமற்ற உலர்ந்த பிரதேசங்களை இது அதிகம் நாடுவது இன்னொரு வித்தியாசம்.

**பாக்குச் சிட்டு (தையல் பறவை)**—Tailor Bird (Orthotamus sutorius) (படம் 84): இது சுறுசுறுப்பான ஆலிவ் பச்சை நிறச் சிட்டு. நம் சிட்டுகளில் அதிகப் பிரபலமானது. வயிற்றுப் புறம் வெள்ளை நிறமுடையது. தலையில் துரு நிற உச்சி இருக்கும். உயர்ந்து எழும்பும் வாலில் நடு இறகுகளின் நுனியில் ஊசி போன்று நீண்டு இருக்கும். அது குத்துச் செடிகள் உள்ள தோட்டங்களில் தனிமையாகவோ ஜோடி ஜோடியாகவோ திரியும். ஆள் குடியிருக்கும் பங்களாத்தோட்டத்திலும், தாழ்வாரத்திலும், பயமின்றி, பழகிய பறவைபோல் உள் இருக்கும் ஆட்களுக்கு வெகு அருகிலிருக்கும் செடிகளுக்கும், கொடிகளுக்கும் வந்து புழுப் பூச்சிகளைத் தேடும். இதன் கூப்பிடுதொனி மிக்க மகிழ்ச்சியுடன் எழுப்பும் **டோவிட் டோவிட்** அல்லது **டிக்காடிக்கா டிக்கா** என்பது. இது, பறவையைக் காணுதலர்கள் கூட கேட்டுப் பழகிய தொனியாகும். உணவு: சிறு பூச்சிகள், அவற்றின் லார்லாக்கள், முட்டைகள். தேன் எடுப்பதிலும் இதற்கு மிக்க ஆர்வம் உண்டு. முள் முருங்கையின் அழகிய சிவப்புப் பூக்கள் இவற்றை எப்போதுமே கவருவது உண்டு. தையற்காரப் பறவை என்று பெயர்பெற்ற இப்பறவையின் பெயர் உண்மையிலேயே இதற்குப் பொருந்தும். வெகு அழகாக ஒரு நீண்ட இலையை மடக்கி ஓரத்தைச் சேர்த்துத் தைத்துக் கூடாக்கிவிடும். ஒரு இலை போதாது என்று இருந்தால் இரண்டு மூன்று இலைகளைச் சேர்த்துத் தைத்து கூடு உண்டாகும். தைக்க உதவும் பொருள் பஞ்சு அல்லது

தாவரப் பொருள். நார் போல் இது முறுக்கப்பட்டு, நுனிகளில் முடிச்சுப் போடப்பட்டுத் தையல் உருவாது இருக்கும்படி செய்யப் படுகிறது. குரோட்டன், அத்தி வகைகள், மற்றும் தொட்டிகளில் வளரும் இதர அகல இலைகள் உள்ள செடிகளில், தரையிலிருந்து ஒரு மீட்டருக்குள்ளேயே கூடு கட்டுகிறது. முட்டைகள் மூன்று அல்லது நான்கு சிவப்பு நீலத்தில் அல்லது வெள்ளை நீலத்தில் இருக்கும். அவற்றின்மேல் செந் தவிட்டு நிறத்தில் பொட்டுகள் இருக்கும்.

**குண்டுக் கரிச்சான்** கீழ்க் குடும்பத்தில் (Sub-family TURDINAE) ராபின்களும், த்ரஷ் என்று அழைக்கப்படும் புதர்ச்சிட்டுகளும், சாமாக்களும் அடங்கும். குண்டுக்கரிச்சான் — Magpie Robin (Copsychus saularis) (படம் 85): வெகு சாதாரணமாக யாவருக்கும் தெரிந்த பறவை. ஆண் கறுப்பும் வெள்ளையும் அழகாக அமைந்து எடுப்பாக நிற்கும் பறவை. இதன் வால் சற்று உயர்ந்து நிற்கும். பெண் பறவையில் கருமை நிறம், சிலேட் சாம்பல் நிறத்தில் மாறி யமையும். இவை தனித்தனியே அல்லது இணை இணையாக, நெருக்க மில்லாத காடுகளில் மக்கள் வீடுகளுக்கருகில் காணப்படுகின்றன. முட்டையிடாத காலத்தில் ஆண் பறவை மிக்க அமைதியாக புதர் களுக்குள்ளும் குத்துச் செடிகளுக்குள்ளும் மறைந்து திரியும். அவ் வப்போது முனங்குவது போல் 'சு வீ ஈ' என்றோ அல்லது கரகரப் பாய் 'கிரீர், கிரீர்' என்றோ கூப்பிடும். ஆனால் வேனில் காலத்தில் அதன் இயல்பான குரலில் இனிமையாகப் பாடும். இலைகளற்ற மரத்தின் கிளைகளிலோ ஒரு கம்பத்திலோ அமர்ந்து ஒளிரும் எடுப் பான தோற்றத்துடன் அது பாடும் அழகே தனி அழகு. தன் எல்லைக் குள்ளிருந்து தொடர் சங்கிலி போல் வரும் அதன் பாடல் சாமாவின் இனிமையான பாடலினைப் போன்றே வெகு தூரம் வரை ஒலிக்கும். ஒடுக்கமாக அமர்ந்த இதன் வாலை, பாடுகையில் மேலும் கீழுமாக அசைத்துக் கொண்டேயிருக்கும். ஒடுங்கிய வாலை விரிப்பதும் மேலும் கீழுமாக அசைப்பதும் அதன் பாட்டிற்கு தாளம் போடுவது போல இருக்கும். இது பகல் முழுவதும் விட்டு விட்டுப் பாடிக் கொண்டிருக்கும். இது மாலை வரை தொடரும். ஆண் பறவை இதன் கூட்டினின்று விரட்டப்படும் பொழுதும், முட்டையிடுங் காலத்திலும் சண்டையிடும் பாணியில் திரியும். பெண் பறவையின் முன்னும், எதிரிகளின் முன்னும், வாலை விரித்துச் செங்குத்தாக உயர்த்தியும் மார்புப்புற இறக்கைகளைச் சிலிர்த்தும் அவகை மேலே

உயர்த்தியும் வைத்துக் கொண்டு பெருமையுடன் தலையை நிமிர்த்தி அசைக்கும். பூச்சிகளையே விரும்பி உண்ணும். பட்டுப் பருத்தி, பவள மரங்களில் உள்ள எடுப்பான சிலப்புப்பூக்களின் தேனின் மேல் அலாதி விருப்பு உண்டு. சுவரின் துவாரங்களிலும் கண் காணிப்பு இன்றி விடப்பட்ட தெரு விளக்குகளிலும் புல், வேர்த்தூல்கள், முடி இவற்றால் நல்லதொரு மெத்தை போன்ற கூடு கட்டி வாழும். கூடுகளை நன்றாகப் பாதுகாக்கும். 3 முதல் 5 முட்டைகள் வரை யிடும். அவை இளம் நீல பச்சை நிறத்துடன் சிவந்த மாநிறத்தில் பொட்டுக்கள் கொண்டவையாயிருக்கும்.

**சாமா**—Shama (Copsychus malabaricus) (படம் 86): இது காட்டில் வாழும் குண்டுக் கரிச்சான். கூட்டில் வளர்க்கும் ஒரு பாடும் பறவை. நகரத்தாருக்கும் அறிமுகமானதொன்று. இதன் மேற்பகுதி கருப்பாக இருக்கும். கருப்பு வெள்ளை நீண்ட வாலின் அடிப்புறமாகத் தொடங்கி உடலின் பக்க வாட்டில் வெண் பட்டை யொன்று செல்லும். வயிற்றுப் பாகம் துருவின் நிறத்தது. நிழல் தரும் மரங்களடர்ந்த மலைப் பிரதேசங்களுக்குச் சென்று வாழும். பம்பாய்க்கருகேயுள்ள மாதேரனில் (Matheran) தன் பாட்டுக்களால் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகிறது.

**புதர்ச் சிட்டு**—Pied Bush chat (Saxicola caprata) (படம் 87): இது ஒரு குருவியளவே இருக்கும். ஆண் சிட்டு நல்ல கறுப்பு நிறங் கொண்டது. அடித்தொடை, அடி வயிறு, இறக்கைப் பகுதிகளில் மட்டும் ஒளிரும் வெண் பட்டைகள் இருக்கும். இறக்கைப் பகுதி களில் இவ்வெண்ணிறம் மிகவும் தெளிவாகக் காணப்படும். பெண் பறவை மண்ணிறத்தது. தொடைப் பகுதி துரு நிறத்தது. கிராமப் புறங்களில் இணை இணையாகச் சுற்றித் திரியும். வயல் வெளிகளைச் சுற்றியும், குத்துச் செடிகளின் கிளைகளின் தண்டுகளிலும் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொள்ளும். இங்கிருந்து தரையிலுள்ள வெட்டுக் கிளி களையும், வண்டுகளையும் பாய்ந்து கவ்வும். சில சமயங்களில் பறந்து செல்லும் பூச்சிகளையும் தாவிச் சென்று பிடிக்கும். இதன் கூப்பிடு குரல் அழுத்தமாக **செக்-செக்** என்று ஆரம்பித்து **டிரிவீட்** என்று நலிந்து முடியும். முட்டையிடும் காலத்தில் ஆண் பறவை இந்திய ராபினின் குரல் போலவே **சிக்-சிக்** என்று இரட்டைக் குரல் எழுப்பும். குறுக்கிடும் எதிரிகளை இவ்வாறு விசிலடித்து மிரட்டி விரட்டும். நிலத்திலோ சுவரிலோ புல், உரோமம் இவற்றாலாகிய

கூடு கட்டி வாழும். மூன்று முதல் ஐந்து வெண்ணிற முட்டை களிடும். இவற்றின் மேல் செந் தவிட்டு நிறத்தில் பொட்டுகள் கிடக்கும்.

**ஆரப் புதர்ச் சிட்டு**—The Collared Bushchat (Saxicola torquata) வயற்புரங்களிலும் வளர்ந்த புல் வெளிகளிலும் குளிர் காலங் களில் மிகுதியாகக் காணப்படும். ஆண் பறவையின் கழுத்து கறுப்பு நிறமாக இருக்கும். செம் மஞ்சள் கலந்த தவிட்டு நிற மார்புப் பகுதியையும் தெளிவான வெண்ணிற ஆரம் போன்ற கழுத்துப் பட்டைகளையும் கொண்டது. இறக்கைகளும் வாலடியும் இத்தகைய வெண்ணிறப் பட்டைகளுடன் கூடியவை. பெண் பறவை புதர்ச் சிட்டை ஒத்திருப்பினும் இதன் முதுகுப் புறத்தில் அழுத்தமான வரிகள் இருக்கும்.

**இந்திய ராபின்**—Indian Robin (Saxicoloides fulicata) (படம் 88): இது நம் கிராமப் புறங்களில் தஞ்சம் புகும் சிட்டு வகையிலானது. வேய்ந்த கரைகளிலும், பாதையோரப் புதர் களிலும், கற்களிலும் இருந்து கொண்டு வாலை மேலும் கீழும் வேக மாக ஆட்டிக் கொண்டிருக்கும். தலையைப் பக்கத்திற்குப் பக்கம் திருப்பி இனிமையாகப் பாடிக்கொண்டிருக்கும். ஆண் பறவை எழுச்சி மிக்க பறவை. தவிட்டு நிறமும் ஒளிரும் கறுப்பு நிறமும் கொண்ட இதன் நிமிர்த்திய வாலினடி செந் தவிட்டு நிறமுடையது, இறக்கையிலுள்ள வெண்ணிற வரிகள் மறைந்திருந்தாலும் பறக்கும் பொழுது மிகவும் தெளிவாக வெளிப்படும். பெண் பறவை சாம்பல் கலந்த தவிட்டு நிறமானது; செந் தவிட்டு நிற வாலடிப் புறத்தைக் கொண்டது. இப்பறவை சிறுகச் சிறுக ஓடி ஓடி ஒரு கணம் கறையான் புற்றில் ஏறி நிற்கும். மறு கணம் ஒரு செடியின் உச்சியில் நிற்கும். அடுத்த விநாடியே பூச்சி ஒன்றைக் கொத்தித் தின்னும். உணவு தேடி அலையும் போது வீட்டில் உள்ள ஆட்கள் என்ன செய்து கொண்டிருந்தாலும் கவலைப் படாது. தைரியமாக வீட்டுத் தாழ்வாரத்திலும், பங்களா தாழ்வாரத்திலும் வந்து நிற்கும். ராபின் வழக்கமாகச் சாப்பிடுவது பட்டாம் பூச்சி, புழுக்கள். கறை யானையும் விரும்பும். அதன் கூப்பிடு தொனி ஒரு சில உற்சாகமான ஒலிகளே. இணைசேரும் காலத்திலும் யாராவது திடீரென அதன் பிரதேசத்தில் புகுந்தாலும் நெஞ்சை உப்ப வைத்து முன்னால் தள்ளிக் கொண்டு முழு உயரத்துக்கு நிமிர்ந்து நின்று, வாலை

உயர்த்தி முதுகு மேல் வளைத்து வைத்துக்கொண்டு, இப்பாட்டைப் பாடும். ராபினுடைய கூடு இரும்புகளாலும் புல்லாலுமான கிண்ணம் போன்றது. இதன் உட்புறம் பெரும்பாலும் பாம்புச் சட்டைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இதன் கூடு பொந்துகளிலும், மண் சட்டிகளிலும் கட்டப்படும். முட்டைகள் (2 அல்லது 3) வெள்ளை அல்லது சற்று பச்சை கலந்த வெள்ளை நிறத்தில், செந் தவிட்டு நிறத்தில் பொட்டும் புள்ளியும் கொண்டிருக்கும்.

**அக்காக் குருவி (மலபார் விசிலடிச்சான்)**—Malabar Whistling Thrush (Myiopeneus horsfieldii) (படம் 89): இது மிக்க எழில் வாய்ந்த பெரிய குருவி. மைனாவை விடப் பெரியது, புறாவை விடச் சற்று சிறியது. உடல் முழுவதும் மயூர நீல நிறமுடைய இப்பற வைக்கு அலகும் கால்களும் கறுப்பு நிறம். தோள் பட்டையிலும் தலையிலும் ஒளிரும் கோபால்ட் நீல நிறப் பெரும் புள்ளிகள் உண்டு. இது வாழும் இடம் காட்டாற்றின் கரைகள்: இரு புறமும் பாறை களும், குளிர்ந்த மரங்களும், நீர் வீழ்ச்சிகளும் கொண்ட இடங்கள். இத்தகைய இடங்கள் வீடுகளுக்கு அருகிலிருந்தாலும் அங்கு காணப்படும். இதன் முட்டையிடுங் காலங்களில், உரத்த குரலில் அதிகாலையிலேயே விசிலடித்துப் பாடும். மனிதனின் குரல் போலவே இப்பாட்டு ஒலிப்பதுடன், ஒரு குறிப்பிட்ட இராகமின்றி மனதில் தோன்றியது போலெல்லாம் ஏற்றியும் இறக்கியும் பாடுவது போலி ருப்பதால் இப்பறவையை விசிலடிக்கும் பள்ளிப் பையன் (Whistling school boy) என்று ஆங்கிலேயர் அழைப்பர். இணை சேரும் காலம் தவிர மற்றக் காலங்களில் பாடாது. இக்குடும்பத்துக்கே பொதுவான 'க்ரீ—ஈ' என்ற ஓசையெழுப்பும். உணவு: நீரில் வாழும் பூச்சி இனங்கள். நத்தை நண்டுகளையும் இது பிடித்துத் தின்னும். சுழன்று இழுத்துச் செல்லும் கான் ஓடைகளில் கற்பாறைகளின் மேல் தத்தித் தத்திச் சென்று நீரில் இழுத்து வரப்படும் பூச்சிகளையும் கொத்திச் செல்லும். அப்போது அடிக்கடி வாலை விசிறி போல் விரித்து மேலே தூக்கியும், தரையைத் தொடுமளவுக்குக் கீழே தாழ்த்தியும், குதித்துச் செல்லுவதைப் பார்த்தால் பாறை வெடிப்பு களிலும் புற்களுக்கிடையிலும் மறைந்திருக்கும் இரைப் பொருளை பயமுறுத்த வெளியே ஓடச் செய்ய முயல்வது போலிருக்கும். பாடும் பறவைகளுள் இப்பறவை மிக அதிகமாகப் பறவை வளர்ப்பவர் களால் விரும்பப்படுகிறது. சிறு குஞ்சாக கூட்டிலிருக்கும் போதே எடுத்து வளர்த்தால் இது நன்றாகப் பழகிக் கொள்கிறது. கூடு:

புல், வேர், பாசி, முதலியவற்றால் கச்சிதமாகக் கட்டப்பட்டு களிமண்ணால் பலப்படுத்தப்பட்ட தட்டு போன்றது. இது செங்குத்தான பாறையின் நீர் வீழ்ச்சிக்கு அடியில் அல்லது தட்டு போல் நீண்டு நிற்கும் பாறைக்கடியில் வைக்கப்படும். முட்டைகள் : 3 அல்லது 4. நிறம்: சற்று வெளுத்த மஞ்சள் நிறம் அல்லது பாறையின் நிறம். முட்டையின் மேல் செந் தவிட்டு நிறப் புள்ளிகளும் பொட்டுகளும் இருக்கும்.

**இமாலய விசிலடிச்சான் குருவி**—Himalayan Whistling Thrush (M. temminckii) இமாலய அடிவாரத்தில் காணப்படும் இப்பறவை முந்திய பறவைக்கு நெருங்கிய இனம். இது அசாம், பர்மாவிலும் காணப்படும். இதன் அலகு மஞ்சள் நிறமாக இருக்கும். நெற்றியிலும் தோள்களிலும் புள்ளிகள் இராது.

**வெள்ளைச் சிட்டுகள் குடும்பம் :** (Paridae) இவை நம் அடைக்கலங்குருவி பருமனே இருக்கும். வெகு சுறுசுறுப்பான சிறு குருவிகள் செடிகளில் வாழும் இவற்றின் அலகு குருவியின் அலகு போல் குட்டையாகவும் திண்ணமாகவும் இருக்கும். இமாலய அடிவாரத்தில் அதிகமாக காணப்படும். இவைகளில் தென் இந்தியாவில் மூன்று இனங்களே இருக்கின்றன.

**சாம்பற் சிட்டு (வெள்ளைச் சிட்டு)**—Grey Tit (Parus major) (படம் 90) : இது மிகத் துருதுருப்பான, அடைக்கலங் குருவி போன்ற பறவை. இதன் தலையில் கொண்டை இல்லை. தலையுச்சி ஒளிரும் கருப்பு நிறத்தில் இருக்கும். கன்னம் பளிச்சிடும் வெண்மை; முதுகு சாம்பல் நிறம்; வயிற்றுப் புறம் வெள்ளை. இதில் ஒரு கரும் பட்டை மத்தியில் ஓடும். மரங்களடர்ந்த காட்டுப் புறங்களில் அதிகம் காணப்படும் இப்பறவை, நிரந்தரமான நீர்ப் பசையுள்ள பச்சைக் காடுகளைத் தவிர்க்கிறது. தனித்தனியாகவோ சோடியாகவோ இரை தேடும். சில சமயங்களில் வேறு பூச்சியுண்ணும் பறவைகளுடனும் காணப்படும். பரவி இருந்த இரை மேய்ந்தாலும் ஒன்றுக் கொன்று கீச்சிடுங்குரலில் இச்-இச் என்று கூப்பிட்டுத் தொடர்பு கொண்டேயிருக்கும். கழைக் கூத்தாடி போல் சிறு கிளைகள் நுனியிலும், பூக்களிலும் தலைகீழாக வெல்வாம் தொத்தி நின்று பூக்களைக் கிளறியும், இலைகளைத் தூக்கிப் பார்த்தும், பட்டைகளை நீக்கியும், சிறு பூச்சிகளையும், அவற்றின் வார்வாக் களையும் முட்டைகளையுந் தேடும். தோட்டங்களிலுள்ள செடி

களுக்கு அவற்ருல் ஓரளவு கெடுதல் வந்தாலும் பயிர்களுக்குச் சேதம் விளைவுக்கும் ஏராளமான பூக்களைத் தின்பதால் மொத்தத்தில் பெரும் நன்மையுண்டு. இது வினதகளையும் கொட்டைகளையும் உடைத்துத் தின்னும். முட்டையிடுங் காலத்தில் ஆண் பறவை நீண்ட விசிலில் **வீச்சிச்சி-வீச்சிச்சி-வீச்சிச்சி** என்று பாடும். இதன் கூடு, மூடி, இறகு, பாசம் முதலியவற்ருல் மரப்பொந்துகளிலோ அல்லது கற் சுவரிலுள்ள பொந்துகளிலோ தட்டுபோல் கட்டப்பட்டிருக்கும். 4-6 வெள்ளை அல்லது ஊதா கலந்த வெள்ளை நிறத்தில், செந் தவிட்டுப்புள்ளிகள் கொண்ட முட்டைகள் கூட்டில் இருக்கும்.

**மஞ்சள் கன்னச் சிட்டு**-Yellow-cheeked Tit (Parus xanthogenys) இது சற்று மெல்லிய கறுப்பும் வெள்ளையும் கலந்த முதுகும், நல்ல கூர்மையான கறுப்புக் கொண்டையும், மஞ்சள் நிற வயிற்றுப் புறமும் அதில் ஒரு அகன்ற பட்டையும் கொண்ட சிட்டு. ஏறத்தாழ சாம்பற்சிட்டு உள்ள பிரதேசங்களிலேயே இதுவும் காணப்படும்; ஆனுல் ஈரமான பிரதேசங்களிலும் இதைக் காணலாம்.

**பாக்குச் சிட்டுக் குடும்பம்** : (SITTIDAE) இவை மரங்களில் அல்லது மலையுச்சியில் வாழும் சிறிய பறவைகள். இவை மரக் கிளைகளிலும், அடி மரத்திலும் மலைச் சரிவுகளில் பாறைகளிலும் வேகமாகத் தத்தி ஓடி இடைவெளிகளில் சிலந்திப் பூச்சிகளையும் சிறு பூச்சிகளையும் தேடி அலையும். இவற்றின் வால் சவுக்கமாகவும் அலகு மரங்கொத்தியின் அலகு போலும் இருக்கும். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் காணப்படும் ஒரு இனம் **பாக்குச் சிட்டு**— Chestnutbellied Nuthatch (Sitta castanea) (படம் 91) : இது அடைக்கலங் குருவியை விடச் சிறிய பறவை. உடம்பின் மேற் பாகம் சிலேட்டு நீலமாகவும் அடிப்பாகம் பாக்கு நிறத்திலும் இருக்கும். இதன் அலகு சற்று நீண்டு கூர்மையானது. பெண் பறவைக்கு அடிப்பாகம் சற்று வெளுப்பாக இருக்கும். இப்பறவை மாந்தோப்புகளையும் பெரிய மரங்களடங்கிய தோட்டங்களையுமே விரும்புகிறது. மரங் கொத்தியைப் போல் அடிமரத்திலும் கிளை களிலும் தத்தித் தத்திப் போய் பட்டைகளைத் தட்டி உள்ளே பதுங்கி இருக்கும் பூச்சி, சிலந்தி, புழுக்களை வெளியேற்றும். இவ்விதம் தேடும் போது சில சமயங்களில் கிளைகளின் அடிப் பாகத்திலும் வேகமாகத் தத்தி ஓடுவது ஆச்சரியமாக இருக்கும். வேறு சிட்டுகள் போலவே காட்டு மரங்களின் கொட்டைகளை, அலகைக் கொடுத்துத் தூக்கி அடித்து உடைத்து உள்ளிருக்கும் பருப்பைத் தின்னும். சாதாரண

மாக அது பேசுந் தொனி சுண்டெலி கூப்பிடுவது போல் இருக்கும். ஆயினும் சில சமயம் இரட்டை விசில் அடிப்பது போல் சிப்-சிப் என்று இன்பமான குரலில் கத்தும். முட்டையிடுங் காலத்தில் தான் இவை இணை இணையாகத் திரியும். மற்ற நாட்களில் தனியே சிறு சிறு கூட்டமாக இரை மேயும். சில சமயம் வேறு சிறு பறவை களுடன் சேர்ந்தலையும். இச்சிட்டு இயற்கையாக அமைந்த மரப் பொந்துகளிலோ அல்லது கன்னுன் பறவையின் பொந்துகளிலோ முட்டையிடும். பொந்து உட்புறமாக பாசம், சணல், இலைகளால் பொதியப்படுகிறது. நுழை வாயில் களி மண்ணால் பூசி மூடப்பட்டு ஒரு சிறு துவாரம் மட்டுமே இருக்கும். இரண்டு முதல் ஆறு வரை வெள்ளை முட்டைகள் இடும். இவற்றின் மேல் செம்புள்ளிகள் இருக்கும்.

**வாலாட்டிக் குருவிக் குடும்பம்**—Motacillidae (Pipits and Wagtails) வாலாட்டிகளும் சிறு சில்லைகளும் இக் குடும்பத்தில் அடங்கிய பறவைகள். மெலிந்து அழகிய உடலும் சற்று நீண்டு வாலுமுடையவை. வாலை அடிக்கடி ஆட்டி ஆட்டி நீர்க் கரையிலும் சதுப்பு நிலங்களிலும், புல் தரைகளிலும், சிறு பூச்சிகளையும், புழுக் களையும் பொறுக்கும். இவற்றில் அதிகமான பறவைகள் மாரிக் காலம் இடம் பெயர்ந்து வருபவை. இவற்றுள் சாதாரணமாக எங்கும் காணப்படுவது **வெள்ளை வாலாட்டி**—White Wagtail (Motacilla abla). இது சிட்டுக் குருவியின் பருமன் இருக்கும். அதைவிட மெலிந்த உடலும் நீண்ட வாலும் உடையது. மேற்பாகம் சாம்பல் நிறமாயும், அடிப்பாகம் வெள்ளையாகவும் இருக்கும். சாதாரண மாகக் கழுத்தில் கறுப்பாக ஆடை கட்டியது போல் தோன்றும். இது மாரிக் காலத்தில் மங்கி விடும். இவை இரண்டு அல்லது மூன்று பறவைகளடங்கிய குழுக்களாக, கிட்டக் கிட்ட அடி எடுத்து வைத்து வேகமாக ஓடி அங்கும் இங்கும் திரும்பியும் சுற்றியும் வாலை மேலும் கீழுமாக உயர்த்தியும் தாழ்த்தியும் ஆட்டி ஆட்டிப் பூச்சிகளை விரட்டிப் பிடிக்கும். திறந்த வெளிகளிலும், உழுது போட்ட நிலங் களிலும், கிரிக்கெட் மைதானங்களிலும், கோல்ப் விளையாட்டு மைதானங்களிலும் ஆங்காங்கு நிற்கும் மக்களைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் இரை தேடும். அது பறப்பது ஓர் தனி அழகு—இக் குடும்பத்துப் பறவைகளுக்கே உரிய பாணி; சிறகுகளை மாற்றி மாற்றி அடித்தும் விரித்தும், அலையடிப்பது போன்று மேலும் கீழுமாகப் பறந்து செல்லும். அப்படிச் சிறகடிக்கும் போது **சிக்சிப்**

**சிக்சிப் சிக்சிப்** என்று கூப்பிடும். இப்பறவைகள் பெரும் கும்பலாக இலைகளடர்ந்த மரங்களுக்குள்ளும், நாணல் படுக்கைகளிலும் கரும்புக் கொல்லைகளிலும் அடையும். நம் நாட்டுக்கு வரும் வாலாட்டிகளில் பெரும்பாவானவை நம் நாட்டுக்கும் வடக்கே சென்று வேறு நாடுகளில் தான் கூடு கட்டுகின்றன. வெள்ளை வாலாட்டியில் ஒரு பிரிவு காஷ்மீர் பள்ளத்தாக்கில் கூடு கட்டுகிறது. கூடு: இப்பறவையின் கூடு புல், சிறு வேர்கள், கம்பளி ஆகியவற்றால் கிண்ணம் போல் வளையப்பட்டிருக்கும். ஒரு கல்லுக்கடியிலாவது, செடிக்குள்ளாவது ஓடைக்கரையில் அல்லது ஓடையின் நடுவில் கூழாங் கற்களாலான திட்டிலாவது, பெயர்த்துப் போடப்பட்ட மரத்தின் வேர்க்கடியிலாவது கட்டப்பட்டிருக்கும். 4 முதல் 6 வரை வெள்ளை முட்டைகள் இடப்பட்டிருக்கும். செந் தவிட்டு நிறப் புள்ளிகள் முட்டையில் இருக்கும்.

**சாம்பல் நிற வாலாட்டி**—Grey Wagtail (Motacilla Caspica) (படம் 92): இது மாரிக் காலத்தில் இந்தியாவின் பல மாகாணங்களிலும் காணப்படும். பெரும்பாலும் மலைகளில் ஓடும் நீரோடைக் கரையில் தனியாக இரை தேடி ஓடித் திரியும். வெனிற் காலத்தில் காஷ்மீரிலும் மேற்கு இமாலயப் பாகங்களிலும் கூடு கட்டும். அப்போது ஆணுக்குக் கழுத்தில் கருநிற வளையம் இருக்கும். மாரிக் காலத்தில் இது காணப்படும் போது ஆண் பெண் வேற்றுமை தெரிவது இல்லை. கூடும் அது கட்டப்படும் இடமும் வெள்ளை வாலாட்டியினத்தைப் போலவே இருக்கும். 4 முதல் 6 வரை மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தில் முட்டைகள் இடும். இவற்றிலும் செந் தவிட்டுப் புள்ளிகள் ஏராளமாகக் காணப்படும்.

இந்திய தீபகற்பத்தில் இருக்கும் ஒரே இடம்பெயரா வாலாட்டி வரி வாலாட்டி (வெள்ளை கறுப்பு வாலாட்டி)—Large pied wagtail (Motacilla maderaspatensis) (படம் 92 - அடியில்) இது மற்ற வாலாட்டிகளைவிடச் சற்று பெரியது. புல்புல் பருமன் இருக்கும். ராபின் போல் கறுப்பும் வெள்ளையும் கலந்து இருக்கும். ஆணுக்கு கண் இமை பளிச்சிடும் வெண்மையாக இருக்கும். வாலும் ராபின் வால் போல் எழும்பி நிற்காது. இது இணை இணையாய் கிராமப் புறத்துக் குளங் குட்டைகளின் அருகே இரை மேயும். கூழாங் கற்கள் நிறைந்த காட்டாற்றின் ஓடைக் கரையில் திரிவது இதற்கு மிகவும் பிடிக்கும். இவை யாருக்கும் பயப்படுவதில்லை. ஆட்களைக் கண்டால் கூச்சப்படாமல் வீடுகளுக்கருகில் வந்து வீட்டுக் கூரையில்

கூட நிற்கும். வண்ணன் துறைக்கருகே தைரியமாக இரை தேடும். பல இனிமையான விசில் சத்தங்களை இதனிடம் கேட்கலாம். கூடு கட்டுங் காலத்தில் ஆண் பறவை அழகாகப் பாடும். அது ஒரு பாறை மீது ஏறியோ அல்லது கூரை மீது நின்றே பாடும். அது சில இடங்களில் ராபினுடைய பாட்டுப் போலவே இருக்கும். கூடு : கிண்ணம் போன்ற தட்டு. இது புல், வேர்த் துண்டுகள், கம்பளி ஆகியவற்றால் வளையப்பட்டிருக்கும். நீர்க் கரையிலே கூடு இருக்கும். அல்லது ஏதாவது பாழடைந்த வீட்டருகே இருக்கலாம். பாலத்தினடியில் நீண்டிருக்கும் உத்தரத்தின் மேல் இருக்கலாம். மோட்டுக் கடியில் இருக்கலாம். 3 அல்லது 4 முட்டைகள் இடப் படும். இவை சாம்பல், தவிட்டு நிறம், பச்சை நிறம் இவற்றில் வெள்ளை கலந்து இருக்கும். முட்டைகளின் மேல் பலவிதக் கோடு களும் புள்ளிகளும் தவிட்டு நிறத்தில் கிடக்கும்.

**தவிட்டுக் குருவி இனங்கள் :** (Pipits) இவை வாலாட்டிகள் போலவே உடலமைப்பில் இருந்தாலும் நிறத்தில் சற்று கம்பியாகவே இருக்கும். வானம்பாடியின் நிறமும் சற்று நீண்ட வாலும் சற்று மெலிந்த உடலும் இவற்றின் அடையாளங்கள். இவற்றில் பல மாரிக் காலம் இடம் பெயர்ந்து இந்தியாவுக்குள் வருபவையே. இவ்வாறு வரும் இப்பறவை இனங்களுள் மிகச் சாதாரணமானது **மரத்தவிட்டுக் குருவி**—Tree Pipit (Anthus trivialis) (படம் 93): இது பெண் அடைக்கலங் குருவி போன்றது. ஆனால் அதைவிடச் சற்று நீண்ட வால், நீண்டு மெலிந்த அலகு, மெலிந்து நீண்ட உடல் கொண்டது. தெளிவான தவிட்டு நிறக் கண் புருவம் உண்டு. மேற்பாகம் தவிட்டு நிறத்தில் கறுப்புக் கோடுகள் ஏராளமாகக் கொண்டது. அடிப் பாகம் மஞ்சள் கலந்த வெள்ளை. இது மாரிக் காலத்தில் சிறு இலையுதிர்க் காடுகளிலும் கிராமப் புறங்களிலும் மாந் தோப்புகளிலும் காணப்படும். மற்றும் இதன் வகையைச் சேர்ந்த குருவிகளிலிருந்த தவிட்டுக் குருவியை, அது இரை மேயும் இடத்தை வைத்தே கண்டு பிடித்து விடலாம். இது மரங்களின் நிழலிலேயே மேயும். இலைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு வண்டுகளையும் வேறு சில பூச்சிகளையும் மேயும். இலைகளோடு இலையாய் இது நின்று விடும்போது திடீரென்று பார்ப்பவர்கள் கண்களுக்குப் புலப் படாது. நகர்ந்து செல்லும் போது தான் இதைக் கண்டு பிடிப் பார்கள். துரத்தப் பட்டால் பக்கத்து மரத்துக்குப் பறந்து போகும். சற்று நேரத்தில் திரும்பவும் இறங்கும். பறக்கும் போது மெல்லிய

குரலில் ட்சிப்-ட்சிப் என்று கூப்பிட்டுக் கொண்டே போகும். ஆண் பறவை, பெண் முட்டையிடும் காலை ஆட்டம் ஆடிப் பாடும். இது நம் நாட்டுக்கு வடக்கே தான் இருக்கிறது. இவை இந்தியாவுக்கு வடக்கேயே கூடு கட்டுகின்றன.

நம் நாட்டில் தங்கி வாழும் தவிட்டுக் குருவி ஒன்று உண்டு. அது தான் இந்திய தவிட்டுக் குருவி—Indian Pipit (A. novaeseelandiae) இது இந்தியா முழுவதும் பரவியிருக்கும் குருவி. மலைகளில் காணப் படினும் கூடு கட்டுவது சமவெளியில் தான். தனியாகவோ இரண்டாகவோ தரிசாகக் கிடக்கும் நாட்டுப் புறக் காடுகளில் குடுகுடுவென ஓடிக் கொண்டும், வாலை ஆட்டிக் கொண்டும் இரை மேயும். பறக்கும்போது மெதுவாக பிப்பிட்-பிப்பிட் என்று கூப்பிட்டுக் கொண்டு போவதால் இதை ஆங்கிலத்தில் பிப்பிட் (Pipit) என்றே அழைக்கலாயினர். முட்டையிடுங்காலை ஆண் பறவை சில மீட்டர் உயரம் மேலே பறந்து மெல்லிய கிரீச் தொனியில் பாடிய பின் இரு நிமிடங்களில் தரைக்கு வரும்.

இதன் கூடு ஓர் ஆழமில்லாத தட்டு போன்றது. இது புல், சிறு வேர்கள். மயிர்கள் முதலியவற்றால் வனையப்பட்டிருக்கும். மாட்டுத் தடத்திலோ, சிறு மண் கட்டிக்கு ஓரத்திலோ அல்லது சிறிய குத்துச் செடிக்கருகிலோ கட்டப்பட்டிருக்கும். 3 அல்லது 4 வெளுத்த மஞ்சள் நிற முட்டைகள் கூட்டிலிருக்கும். இவற்றின் அகன்ற பாகத்தில் நெருக்கமாகவும் மற்ற இடங்களில் கவக்கமாகவும் தவிட்டு நிறப் புள்ளிகள் இருக்கும்.

**பூங்கொத்திக் குருவிகள்**—Dicaeidae (Flowerpeckers) இதில் மிகச் சிறிய, மரம் வாழ், குடுகுடு வென்று திரியும் குட்டை வாலுடைய குருவிகள் அடங்கியுள்ளன. இவற்றின் அலகு மெல்லியது. சற்று உள் வளைந்தது. கூர்மையானது; பூக்களுக்குள் நுழையக் கூடியது. பங்களா தேசத்திலும் இந்தியாவின் பல பாகங்களிலும் காணப்படும் ஒரு பூங்கொத்திப் பறவை **திக்கெல்லின் பூங்கொத்தி**—Tickell's Flowerpecker (Dicaeum erythrorhynchos) (படம் 94): இது சுறுசுறுப்பான பச்சை நீலத் தவிட்டு நிறக் குருவி. இந்தியாவிலேயே மிகச் சிறிய குருவி இது தான். இது பெண் தேன் சிட்டுப் போல் தோன்றும்; ஆனால் இதன் அலகு குட்டை யாகவும் மாமிச நிறத்திலும் இருக்கும். உணவு: பூந்தேன், ஒட்டி வாழ் இத்தில் (Viscum, Loranthus) வகைகளின் பழங்கள். ஓலை இத்தில் (Loranthus) பூக்களில் தேனெடுக்கச் செல்கையில் இது

மகரந்தச் சேர்க்கை உண்டு பண்ணுகிறது. இவற்றின் பழங்களை இது முழுமையாக விழுங்கி விடுகிறது. அப்பழங்களின் விதைகள் மலத்துடன் வெளியேற, வேறு செடிகளில் ஒட்டி வேரடித்து முளைத்து தங்கள் வம்ச விருத்தியைச் செய்கின்றன. இப்பறவைகள் ஒரு குறிப்பிட்ட பரப்பினுள்ளேயே சுற்றி வரும். இத்தில் கூட்டத்தில் நுழைந்து நுழைந்து செல்லும் போதும் ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்துக்குப் பறக்கும் போதும் தொடர்ச்சியாக சிக்-சிக்-சிக்-சிக் கென்று கூப்பிட்டுக் கொண்டே செல்லும். இடையிடையே சற்று தொண்டையை மாற்றி கீச்சென்று பாடிக் கொள்ளும். இதன் கூடு தேன் சிட்டின் கூடு போலவே இருக்கும் தொங்கு, கூடுதான். ஆயினும் அதை விடச் சுத்தமான வெளிப்புறம் உண்டு. தரையி லிருந்து 3 முதல் 10 மீட்டர் உயரம் வரையுள்ள கிளைகளில் சற்றுச் சிவந்த நிறமுள்ள இக்கூடு (மிருதுவான நார்கள், தாவரத்துணுக்கு களால் ஆனது) தொங்க விடப்பட்டிருக்கிறது. இரண்டு சுத்த வெள்ளை முட்டைகள் கூட்டினுள் இருக்கும்.

மற்றொரு சாதாரணப் பூக்கொத்தி **தடித்த அலகு பூக்கொத்தி**— Thick billed Flowerpecker (D. agile) இதனுடைய சிட்டுக் குருவி போன்ற தடித்த அலகும் தவிட்டு நிறக் கோடுடைய அடிப்பாகமும் முந்தியப் பறவையிலிருந்து இதைப் பிரித்துக் காட்டும்.

**தேன் சிட்டுக் குடும்பம்** — NECTARINIIDAE (Sunbirds or Honeysuckers) பூவில் தேன் எடுக்கும் சிறு பறவைகள், இவை. சிறு அலகுகளையுடைய இப்பறவைகள் ஒளிரும் நிறங்களுடையவை. இவற்றின் நாக்கு குழாய் போல் தேன் உறிஞ்சுந் தன்மையுடையது. சாதாரணமாகக் காணப்படும் தேன் சிட்டுகளுள் ஒன்று, **ஊதாச் சிட்டு** Purple Sunbird (Nectarinia asiatica) (படம் 95): இதை எண்ணெய்ச் சிட்டு என்று சொல்லுவதுமுண்டு. அடைக்கலங் குருவியைவிட மிகச் சிறிய இப்பறவையில் ஆண், கூடு கட்டுங் காலங்களில் மிக்க பளபளப்பான ஒளிருங் கருநீல நிறமாகத் தோன்று வதால் எண்ணெய்ச் சிட்டு என்று பெயர் வந்தது: 'அக்குள்' களருகே ஆரஞ்சு நிறச் சிவப்பு முடிகளும், தலை முதல் உடல் முழுவதும், வாலடியும், கறுப்பும் ஊதாவும் தீர்ந்த பச்சையும் கலந்த ஒளிரும் நிறமாகவே இருக்கும். மற்ற காலத்தில் பெண் போலவே முதுகு பச்சை நீலத் தவிட்டு நிறமாயும் அழுக்கு மஞ்சள் வயிற்றுப் பாகமும் உடையது. அகன்ற கரும் பட்டை நெஞ்சின் நடுவே ஓடும். இறக்கை கறுப்பாக இருக்கும். தேன் சிட்டுகளின் முக்கிய

ஆணவு பூவிலுள்ள தேன்தான். பூக்களை அடைந்து பலவித நிலைகளில் நின்றும் தேன் எடுக்கும். சோடி சோடியாகச் சேர்ந்து ஓரிடத்தில் நிற்காது பறந்து பறந்து திரியும். சில சமயம் பூவின் முன் பறந்து சிறகடித்து அப்படியே நின்றவாறே நாக்கை நீட்டித் தேன் எடுக்கும். இடைக்கிடையே ஒரு குறுகிய ஒற்றைச் சத்தம்—கிரீச்சிடும் குரலில்—'**விச் விச்**' என்று கூப்பிடும். முட்டையிடும் காலம் ஆண் பறவைகள் இலையற்ற உதிர்த்த கிளைகளில் நின்று இறக்கைகளை அடித்து அங்குமிங்கும் திரும்பிக் குதித்து வாலை விரித்தும் மூடியும் கிரீச்சிடும் குரலில் ***சீ விட்-சீவிட் சீவிட்*** என்று கூப்பிடும். கூடு: தேன் சிட்டுகள் கூடு போன்றே தொங்கும். நீண்ட முட்டை வடிவில், மிருதுவான, புல்லாலும் பல்வேறு துண்டு துணுக்குகளைக் கொண்டும் சிலந்தி வலையைக் கொண்டும் கட்டப்பட்டிருக்கும். வெளிப்புறம் இலேசான பட்டைகளாலும் கம்பளிப் பூச்சியின் விட்டைகளாலும் பொதியப்பட்டிருக்கும். மனிதர் வாழும் வீடுகளுக்கு வெளியேயுள்ள தொங்கும் கொடிகளிலும் சிறு குத்துச் செடிகளிலும் தரையிலிருந்து 3 மீட்டர் உயரத்துக்குள் தொங்கும். 2-3 முட்டைகள் கூட்டுக்குள் இருக்கும். ஒவ்வொரு முட்டையும் வெளுத்த பச்சை நிறத்தில் தவிட்டு நிறக் கோடுகள் கொண்டதாக இருக்கும்.

**ஊதா புட்டத்தேன் சிட்டு**—The purple rumped sunbird (N. zeylonica) இது தென்னிந்தியா முழுவதும் காணப்படும் மற்றொரு பறவை. ஆணின் தலையும் நெஞ்சும் மேல் பாகமும் ஒளிரும் பச்சை, ஊதா, சிவப்பு நிறமாகவும், புட்டம் ஒளிரும் ஊதா நீல நிறமாகவும், நெஞ்சும் வயிறும் பளிச்சிடும் மஞ்சள் நிறமாகவும் இருக்கும். பெண்: முந்திய வகைப் பறவையின் பெண் போலவே இருக்கும். ஆனால் கழுத்தும் கன்னமும் சாம்பல் நிறமுடையவை. அடிப்பாகம் நல்ல மஞ்சள் நிறம்.

மேலே கூறிய இரு வகைப் பறவைக் குடும்பங்களின் நெருங்கிய குடும்பம் **வெள்ளைக் கண்ணிக் குடும்பம்** (Zosteropidae). இக்குடும்பத்தைச் சேர்ந்ததுதான் அழகிய சிறிய வெள்ளைக் கண்ணி — White-eye (Zosterops palpebrosa). (படம் 96). சிறிய சவுக்கமான வாலுடைய பச்சை மஞ்சள் கலந்த முதுகும், தெள்ளிய வெள்ளைக் கண்ணுடியும் (கண்ணைச் சுற்றி வெள்ளை வட்டம்) மெல்லிய கூர்மையான சற்று உள் வளைந்த அலகும் உடையது இது. சுமார் 5 முதல் 20 வரையுள்ள சிறு

கூட்டமாக இவை பெரிய மரங்களுடைய தோப்புகளிலும் தோட்டங்களிலும் இரை தேடிச் செல்லும். இவை தரைக்கு வருவதேயில்லை. முழு நேரமும் மரங்களிலும் குத்துச் செடிகளிலும் இலைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு கழைக் கூத்தாடிகள் போல் எல்லாவித நிலையிலும் கிளைகளில் தொங்கியும் ஏறியும் கவிழ்ந்து கிடந்தும் பூச்சி புழுக்களைத் தேடும். சிலந்தி, பூச்சி, புழுக்கள் தவிர சிறு பழங்கள் மலர்களின் தேன் இவற்றையும் உண்ணும். பூக்களைச் சீண்டுவதால் இவை பர மகரந்தச் சேர்க்கை செய்ய மிகவும் உதவுகின்றன. கூடு கட்டுங் காலம் கூட்டமாக வாழாமல் சிதறி இணை இணையாகச் சேர்ந்து திரியும். ஆண் பறவை அழகிய சிறிய மணிச் சத்தம் போன்ற பாட்டுப் பாடுகிறது. இப்பாட்டு 3 அல்லது 4 செகண்டுகள் நீடிக்கும்—குறைத்த தொனியில் ஆரம்பமாகி, உரத்த குரல் எழுப்பிப் பின் தாழ்ந்துவிடும். வெள்ளைக் கண்ணிகள் வளர்க்கப்பட்டால் நன்றாகப் பழகிவிடும். கூடு: மிகச் சிறிய கிண்ணம் போன்றது. இது சிறு துரும்புகளால் வளையப்பட்டு சிலந்தி வலைகளால் மூடப்பட்ட சிறு மாம்பழக் குருவியின் கூடு போல் தோன்றும். சாயுங் கிளை நுனியிலுள்ள கவரில் தூங்கும் தொட்டில் போல் இக் கூடு சாதாரணமாக 2 அல்லது 3 மீட்டர் உயரத்தில் குத்துச் செடியில் அல்லது சிறு மரத்தில் இருக்கும். புள்ளியற்ற வெள்ளை நீல நிறத்தில் 2-3 முட்டைகள் கூட்டில் கிடக்கும். முட்டையின் அகன்ற பாகத்தில் தீர்ந்த நீல நிறமாயிருக்கும்.

**சிட்டுக் குருவிக் குடும்பம்** (PLOCEIDAE) அடைக்கலங் குருவி எனப்படும் சிட்டுக் குருவியும், தூக்கணாங் குருவியும் இக்குடும்பத்தில் அடங்கும். இவை இரண்டுமே பறவைகளைப் பற்றி அக்கரையில்லாதவர்களுக்கும் தெரிந்த பறவைகள். இவற்றில் முக்கியமானது **அடைக்கலங் குருவி**—House Sparrow (Passer domesticus) (படம் 97): இது இப்போது உலகெங்கும் மனிதர்கள் இருக்குமிடமெல்லாம் பரவிவிட்டது. ஆணிலிருந்து (படத்தில்) பெண் பின்வரும் வேற்றுமையுடையது: மேற்பாகம் தரையைப் போன்ற தவிட்டு நிறத்தில் மஞ்சளும் கறுப்பும் கலந்த நீண்ட கோடுகள் கொண்டிருக்கும். அடிப்பாகம் வெளுப்பாக இருக்கும். உலகில் புதிய பாகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு மக்கள் குடியேற்றம் ஆரம்பித்ததும் முதல் முதலில் அங்கு போய்ச் சேரும் பறவை இது தான். பனிக் காலம் இவை கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து வயல்களிலும் அறுவடையான இடங்களிலும் மேயும். உணவு:

தானியங்கள், தரையில் கிடப்பவற்றைப் பொறுக்கி எடுத்து மேயும். கோதுமை போன்ற தானியங்கள் விளைந்து வரும் போதும் படை எடுத்துக் கதிர்களைக் கொத்தும். இவ்விதம் பயிர்களுக்குக் கணிசமான சேதம் விளைவிக்கும். கிராமங்களில் குதிரை, ஆடு, மாடு இவற்றின் எண்ணிக்கையைப் பொறுத்து இவற்றின் கூட்டம் அதிகரிக்கும். சாணங்களில் செரிக்காமல் வெளியேறும் தானியங்களை சாணத்திலிருந்து கிண்டி மேய்ந்து உண்ணும். இவைகளால் வருங் கேட்டுக்கு இவை ஈடும் செய்கின்றன: ஏராளமான இராப் பூச்சிகளை கதிரிலிருந்தே கொத்தித் தின்பதால் விவசாயிகளுக்கு ஒரு புறம் நன்மைதானே! கூடு கட்டுங் காலம் ஆண் பறவை உரத்த குரலில், கேட்டுப் புளித்துப் போகும் விதத்தில், ஒருவித கரகரத்த சத்தமிட்டுக் கொண்டே இருக்கும். இதையும் பாட்டு என்று சொல்வார்கள். அத் தொனி ட்சி-ட்சி-ட்சி அல்லது ச்சீர் ச்சீர் ச்சீர் என்று கேட்டுக் கொண்டே இருக்கும். இச் சத்தத்துடன் அது புட்டத்தை வளைத்துக் கொண்டும் இறக்கைகளை இறக்கிக் கொண்டும் உடல் இறகுகளை சிலிர்த்துக் கொண்டும் கர்வத்துடன் வாலைச் சற்று உயர்த்திக் குடுகுடுவென நடக்கும். பெருங் கூட்டமான அடைக்கலங் குருவிகள் மாலையில் ஒரு குறிப்பிட்ட முள் மரத்தில் அல்லது இலைகள் நெருங்கிய மரத்தில் அமையும். அடையுமுன் கசாபுசா என்று காதடைக்கும் வண்ணம் சப்தமிட்டுக் கொண்டும் சண்டை போட்டுக் கொண்டும் இருக்கும். சற்று நேரங் கழித்த பின் கொஞ்சம் கொஞ்சமாகச் சத்தம் அடங்கி, அவை தூங்க ஆரம்பிக்கும். கூடு: வைக்கோல், கந்தை, இவைகளை ஏராளமாகச் சேர்த்து ஒரு பொந்துக்குள் திணித்து வைக்கும். அதற்குள் குழியுண்டாக்கி உள் பக்கத்தை இறகுகளால் மிருதுவாக்கி வைத்து 3 முதல் 5 முட்டை வரை இடும். முட்டைகள் பச்சை கலந்த வெள்ளை நிறத்தில், தவிட்டு நிறத்தில் மங்கலாகவும் தீர்ந்த நிறத்திலும் பொட்டுகள் கொண்டிருக்கும்.

**தூக்கணாங் குருவி**—Baya Weaver Bird (Ploceus philippinus) (படம் 98): இக் குருவியைவிட அதன் கூட்டையே அதிகம் பேர் பார்த்திருப்பர். இக் கூடு கூடை போல் பின்னப்பட்டு, நீள குழல் வாய் கீழ் நோக்கி விடப்பட்டு, பயிரிடப்பட்ட தோட்டங்களின் அருகிலுள்ள மரங்களின் நுனியில் தொங்கும். ஆணின் கூடு கட்டும் கால இறக்கையழகைப் படத்தில் பார்க்கலாம். ஆணும் பெண்ணும் முட்டையிடாக் காலங்களில் ஒரே மாதிரியாக இருக்கும். அவைகள் அடைக்கலங் குருவி போலவே தோன்றும். ஆனால் அலகு தடியாக

ருக்கும். வால் குட்டையாக இருக்கும். தூக்கணாங் குருவிகள் ட்டங் கூட்டமாக, திறந்த வெளியில் பயிராகும் நிலங்களை ஒட்டியே ரியும். தானியங்கள் முதிர்ந்து வரும் போது தோட்டங்களில் ட்டமாக வந்து குழுமி கதிர்களிலேயே நின்று கொண்டு கொத்தித் ன்று வெகு சேதத்தை உண்டு பண்ணும். பெருமளவு அவை உள் ாட்டுக்குள்ளேயே இடம் பெயர்ந்து கொண்டு இருக்கும். இப் பயர்ச்சி பருவ மழையையும் தானியங்கள் விளையும் காலத்தையும் பாறுத்து இருக்கும்; அதிகமாக நெல் விளையுங் காலத்தை யாட்டி இருக்கும். பெருமளவில் நாணல் காட்டிலும், கரும்புத் தாட்டத்திலும் இவை அடையும். அதிகமாக மைனா, சிட்டுக் ருவிகளுடன் அடையும். சாதாரண கூப்பிடு தொனி கிளி கூப்பிடு து போல் 'சிட்-சிட்-சிட்' என்று இருக்கும். கூடு கட்டும் ாலத்தில் ஆண் பறவை கூட்டமாகச் 'சீ- - -ஈஈ' என்று ழுத்துப் பாடுவது போல் இருக்கும். இப்பாட்டு கூடு கட்டும் பாதும், கூட்டில் தொங்கும் போதும் கேட்கும். இத்துடன் றக்கையை படபடவென்று அடித்து பெண் பறவைகளை இக் டுகளுக்கு அழைக்கும். இவை கூடு கட்டி முட்டையிட்டு அடை காக்கும் பழக்கம் ஒரு தனி ரகமானது. ஆண் பறவை பரிசையாக பல கூடுகளைக் கட்டிக் கொண்டே போகிறது. ட்டையிடும் பெண் பறவைகள் ஒவ்வொன்றாக வந்து கூடு பாதி டியும் போதே வசப்படுத்திக் கொள்கின்றன. இதன் பிறகுதான் க் குறையான கூடு ஆண் பறவையால் பெண்ணின் சம்மதத்துடன் டித்துக் கொடுக்கப்படும். இவ்விதம் ஒவ்வொரு ஆணும் இரண்டு தல் ஐந்து கூடுகள் வரை கட்டும். ஐந்து குடும்பங்களை ஒரே நரத்திலேயே நடத்தும். கூடுகள் நெல்லின் இலையைப் பொடிப் பாடி வாராகக் கிழித்து பின்னப்பட்டிருக்கும். கூட்டின் நுழை பாயில் நீண்ட கீழ் நோக்கிய, குழாய் போன்றது. இதன் நுனியில் ள்ள துவாரம் கீழ் நோக்கி வட்டமாக இருக்கும். கூட்டினுள் முட்டை அறைக்கு அருகே கும்பம் போலிருக்கும். இதனுள்ளே, களிமண் ஈரமாக இருக்கும் போது எடுத்துக் கொண்டு வந்து ஒட்டப் படுகிறது. இதன் நோக்கம் என்னவென்று புரியவில்லை. முட்டை கள், 2 முதல் 4 வரை, சுத்த வெள்ளை நிறத்திலிருக்கும்.

வரித்தூக்கணாங் குருவியும்—Striated Weaver Bird (P. Manyar) கருந்தொண்டைத்தூக்கணாங் குருவியும்—Black throated Weaver Bird (P. benghalensis) இரு வேறு பறவைகள். இவைகளும் பல

இடங்களில் சாதாரணமாகக் காணப்படுகின்றன. இப்பறவையின் கூடுகள் நீருக்குள் நிற்கும் நாணல்களுக்குள் கட்டப்படுகின்றன.

**சிவப்புச் சில்லை** Red Munia (Estrilda amandava) [படம் 99 (4)] இது சிட்டுக் குருவியை விடச் சிறியது. படத்தில் ஆண் பறவை கூடு கட்டுங் காலத்தில் இருக்கும் நிறத்தில் காட்டப்பட்டிருக்கிறது. பெண் பறவையும் ஆண் பறவையும் கூடு கட்டாத காலங்களில் ஒன்று போலவே இருக்கும்; தவிட்டு நிறம், அங்கு மிங்குமாகச் சில வெள்ளைப் புள்ளிகள், அலகும் புட்டமும் மட்டும் இரத்தச் சிவப்பு. வால் வட்டமாக முடியும்; புள்ளியுடைய சில்லைகளில் கூர்மையாக முடியும். குணங்களிலும் இயல்புகளிலும் சிட்டுக்குருவியையே ஒத்திருக்கிறது. அவற்றைப் போலவே கூட்டமாக இரை மேயப் போகும், புல் வகைத் தானியங்களைத் தின்னும், நாணல்களிலும், சதுப்புகளில், நீண்டு வளர்ந்த புல் வெளிகளிலும் அடையும். **கீச் கீச்** என்று குரலில், பாடுவது போலிருக்கும். இப்பறவை கூடுகளில் வளர்க்கப்படுகிறது. கூடு: புல்லாலான உருண்டைக் கூண்டு. உள் பக்கம் இறகுகளும் மிருதுவான புல்லும் பொதியப் பட்டிருக்கும். இது குத்துச் செடிகளின் அடியில் கட்டப்பட்டிருக்கும். ஒரு ஈட்டில் சாதாரணமாக 4-7 சுத்த வெள்ளை முட்டைகள் இருக்கும்.

**புள்ளியுடைச் சில்லை**—Spotted Munia (Lonchura punctulata) [படம் 99 (3)] இது சிவப்புச் சில்லையின் பருமனையுடையது. ஆனால் வால் நுனி கூர்மையாக முடியும். முட்டையிடாக் காலங்களில் இரு பாலும், குஞ்சும், ஒரே தவிட்டு நிறமாகவே இருக்கும். சுமார் 200-க்கும் அதிகமான பறவைகள் எப்போதும் கூட்டமாகப் பறந்து செல்கின்றன. வயல்களுக்கு அருகிலேயே அவை திரியும். தரையில் இறங்கித் தத்தித் தத்தி புல் விதைகளை மேய்கின்றன. சில சமயங்களில் ஈசல்களை அவை பொந்திலிருந்து வெளியே வரவரக் கொத்தித் தின்னும். தொந்தரவு கொடுத்தால் அருகில் இருக்கும் மரத்துக்கு எல்லாமாகப் பறந்து சென்று மெல்லிய குரலில் **சிறுப் சுறுப்** பென்று கிளர்ச்சியுடன் கூப்பிட்டுக் கொண்டிருக்கும். கூடு: சிவப்புச் சில்லைக் கூட்டைப் போன்றதே. ஆனால் 10 அல்லது 15 மீட்டர் உயரத்தில் பனையின் தலையிலோ ஓலை நுனியிலோ கட்டப்பட்டிருக்கும். 4 முதல் 8 வரை சுத்த வெள்ளையான முட்டைகளிடும்.

**கூம்பு அலகுச் சில்லைக் குடும்பம்**—FRINGILLIDAE (Finches) இவை அடைக்கலங் குருவி போன்ற குருவிகள். ஆனால் யாவும் கம்பு போன்று அடி பெருத்து, குட்டையாக, கூர்மையான நுனியுடைய பலத்த அலகுகள் கொண்டவை. எடுத்துக் காட்டாக சாதாரண இந்தியக் கூம்பலகுச் சில்லை (ரோஜாச் சிட்டு (Common Indian or Hodgson's Rosefinch (Carpodacus erythrinus) (படம் 100) : இது மாரிக் காலம் இந்தியாவுக்கு வரும் பறவை. ஆண் பறவை அழகான ரோஜா நிறத் தலையும், நெஞ்சும் முதுகுந் தோளும் உடையது. பெண் சற்று பச்சை நீலங் கலந்த தவிட்டு நிறமுடையது. இரு பாலிலும் அலகு இவ்வினத்தைச் சேர்ந்ததே. வால் பிளவு பட்டிருக்கும். இறக்கையில் வெளுத்த இரட்டைப் பட்டைகளுண்டு. இங்கிருந்து வேனிற்காலம் வடக்கே புறப்படும் முன் ஆண் பறவை இன்னும் சிவந்த நிறமடைகிறது. இவை சிறு கூட்டங்களாகவே திரியும். (10 முதல் 20 வரை) பயிரிடப்பட்ட தோட்டங்களின் ஓரங்களிலேயே பறந்து சென்று, நிற்கும் பயிர்களில் தானியங்களைக் கொத்தித் தின்னும். உண்ணிச் செடிகள் போன்ற பெருஞ் செடிகளின் சிறு பழங்களையும் தின்னும். அரசு, ஆல் பழுத்தால் அம் மரங்களின் பழங்களையும் தின்னும். முள் முருங்கை போன்ற மரங்கள் பூக்கும் போது அப் பூக்களில் தேனெடுப்பதற்காக வந்தடையும். பூக்களில் தேன் எடுக்கும் போது அலகிலும் முன் தலையிலும் மகரந்தத்துகள்கள் கொட்டப்பட, அவற்றுடன் வேறு பூக்களுக்குச் சென்று பர மகரந்தச் சேர்க்கை உண்டாக்கும். இவற்றின் கூப்பிடு தொனி அழகான மெல்லியலில் ' ட்டுயீ ' என்று கேள்வி கேட்பது போல் அமையும். ஆண் பறவை நம் நாட்டை விட்டுக் கூடு கட்டப் பறக்கு முன் இப்பாட்டு சில நாட்கள் கேட்கும். இவை காஷ்மீரத்திலும் இமாலய மலையடியிலும் கூடு கட்டுகின்றன. கூடு: சிறு கிண்ணம் போல புல்லால் கட்டப்படு சிறு வேர்களாலும் முடிகளாலும் உள்ளே வனையப்பட்டிருக்கும். காட்டு ரோஜா அல்லது அது போன்ற சிறு முட் செடியில் தரையிலிருந்து ஒன்று அல்லது இரண்டு மீட்டர் உயரத்தில் இருக்கும். 3-4 நீல நிற முட்டைகள், இளஞ் சிவப்பு நிறப் புள்ளிகளுடன் காணப்படும்.

சிட்டு வம்சத்தின் இறுதியான குடும்பம் **காட்டுச் சில்லைக் குடும்பம்** (EMBERIZIDAE):

இவைகள் மேற்பார்வைக்குக் கம்பு அலகுச் சில்லைகள் போலவே இருக்கும். அலகு அமைப்பு அவ்வாறு தான். ஆனால் உடல் நீண்ட

தோற்றமுடையது. வாலும் சற்று நீண்டிருக்கும். வாலின் வெளிப்புற இறகுகள் வெள்ளையாக இருக்கும். இது பறக்கும் போது வெளிப்படையாகத் தெரியும். இவற்றில் அதிகமாகத் தெரிந்தவை இரண்டு. **கருந்தலைக் காட்டுச் சில்லை**—Blackheaded Bunting (Emberiza melanocephala), மற்றும் **செந்தலைக் காட்டுச் சில்லை**—Redheaded Bunting (E. bruniceps) (படம் 101): படத்தில் இரு வகையிலும் ஆண் பறவைகளே காட்டப்பட்டுள்ளன. இவை இரண்டுமே அடைக்கலம் குருவியைவிடச் சற்று பெரியவை; இந்தியாவுக்கு பனிக் காலத்தில் இடம் பெயர்ந்து வருபவை. பெண் பறவைகளுள் முந்திய இனத்தது, மஞ்சள் கலந்த தவிட்டு நிறமுடையது. பிந்தியது சாம்பல் கலந்த தவிட்டு நிறமுடையது. அடிப்பாகம் இளமஞ்சள் கலந்த தீர்ந்த மஞ்சள். குளிர் காலத்தில் அவை கூட்டங் கூட்டமாக வருகின்றன. இடையிடையே மரங்களடர்ந்த சிறு காடுகளைச் சுற்றியிருக்கும் நன்செய் புன்செய் வயற்காடுகளில் இறங்குகின்றன. முதிர்ந்து வரும் கேப்பை, சோளம், கோதுமை மணிகளைக் கொத்தித் தின்று வெகு சேதம் விளைவிக்கின்றன. தானியக் கதிர்களை வெட்டுவதுடன் நிற்காது, அறுவடைக்குப் பின்னும் சேர்த்து குவித்து வைத்திருக்கும் தானியக் கதிர்களைத் தின்று சேதம் விளைவிக்கின்றன. பச்சைப் பசேலென்று இருக்கும் மரங்களுக்கு மேல் மஞ்சள் ஒளி வீசக் கூட்டமாகப் பறந்து வந்து உட்காரும்போது மரங்கள் பூத்துக் குலுங்குவது போலிருக்கும். இது ஒரு கண் கொள்ளாக் காட்சி. இங்கு குளிர் காலத்தில் தங்கிருக்கும் போது அவை சிட்டுக் குருவி போலவே கூப்பிடும். என்றாலும் பாடும் தொனி போல் இழுத்து ட்வீட் என்று கூப்பிட்டுப் பறக்கும். இவை கூடு கட்டும் இடங்கள்: மேற்கு ஆசியாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும். கூடு: சிறு கிண்ணம் போன்றது. களைகளின் தண்டுகளையும் நார்களையும் வைத்துக் கட்டப்பட்ட இக்கூட்டின் உட்பாகம் வெள்ளாட்டு மயிர்களால் பொதியப்பட்டிருக்கும். குத்துச் செடிகளுள் தரையிலிருந்து ஒன்றரை மீட்டர் உயரத்துக்குள் கட்டப்பட்டிருக்கும். இக்கூட்டிற்குள் 5 முட்டைகள் இருக்கும். வெளுத்த பச்சை நிறத்திலுள்ள இம் முட்டைகளில் கருந்தவிட்டு நிறத்திலும் லெவண்டர், சாம்பல் நிறங்களிலும் புள்ளிகள் இருக்கும்.

Printed at New Age Printing Press, New Delhi-110055